(1(827)

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

ஏப்ரல் 3.1997 தொகுதி 27
எண் 3.

D
V211,31'N97
N97·27·3
216827

வெளியீடு 13-5-98 Issued 13-5-98

1365 - 98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 3, 1997 – தொகுதி 27 – எண் 3

Thursday the 3rd April, 1997 – Volume 27 – No. 3

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,

Chennai-600 009

[Price Rs. 3.00

1365-98

3-4-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| 1. வினாக்கள்-விடைகள் | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 395-435 |
| 2. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| கோவை, பெரியார் மாவட்டப் பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்ந்திட வெள்ளக்காலங்களில் பவானி ஆற்று நீரை குளம். குட்டைகளில் கால்வாய்கள் மூலம் . நிரப்புதல் | 436-438 |
| 3. பேரவை விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை— | |
| திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கு தீ விபத்து குறித்து நீதிபதி விசாரணை | 438-439 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| தலைஞாயிறு, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்து. | 440-443 |
| 5. தகவல் கோரல்— | |
| தீ மிதித்தல் பற்றி முதல்வர் அவைக்கு வெளியில் கூறிய கருத்துக்கு விளக்கம் | 443-451 |

| | பக்கங்கள் |
|---|---|
| 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. | |
| (அ) கோரிக்கை எண் 29-சமூக நலன் .. | 451-556 |
| (ஆ) கோரிக்கை எண் 12-1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | |
| மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன் | 451,454, 535-552 |
| * மாண்புமிகு புலவர் பூ. ம. செங்குட்டுவன் | 454, 457-458 477, 479, 484, 504, 523-535 |
| திரு. பா வேல்துரை .. | 458-463 |
| திருமதி ஏ. ஆர். வேடம்மாள் .. | 463-468 |
| * திரு. டி. மணி .. | 468-471 |
| * திரு. ஜி.பி. வெங்கிடு | 471-474 |
| திரு. சி. வேலாயுதன் .. | 474-480 |
| * டாக்டர் மு. தேவராஜன் .. | 480-482 |
| * திரு. சொ. கருப்பசாமி .. | 482-485 |
| * திரு. ஏ. கோதண்டம் .. | 485-487 |
| * திரு. எல். சந்தானம் .. | 487-491 |
| * திரு. கே.கே. வீரப்பன் .. | 491-494 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி .. | 495-497 |
| திரு. ம. அப்துல் லத்தீப் .. | 497-507 |
| * திரு. கே. தங்கமணி .. | 507-510 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் .. | 510-516 |
| திரு. ச. அழகிரி .. | 516-522 |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 557 |

216827

Y24,31'N67 M07.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பங்குனி 21, தாது—திருவள்ளுவர் ஆண்டு 2028

### 1997 ஏப்ரல் 3, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்"

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்கு தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணை புரியும்.

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 421. திரு. வெ. அ. ஆண்டமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**421—**

**பவானிசாகரில் சர்க்கரை ஆலை நிறுவுதல்**

***3121 —திரு. வெ.அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு அதிகமாகப் பயிராகும் கோபிச்செட்டிப்பாளையம், குறிப்பாக பவானிசாகரில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 3

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வெ.அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர், சத்தியமங்கலம், கோபிச்செட்டிப்பாளையம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அந்தக் கரும்பை அரைக்க வேண்டுமானால் 100 மைல் தூரம் சென்று அரைக்கவேண்டிய சூழ்நிலையுள்ளதால், லாரி வாடகை அதிகமாக ஆகிறது. அதேசமயத்தில் வெட்டுக்கூலியும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்குள்ள விவசாயிகள் அதிகத் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அதிகமாக கரும்பு விளையும் கோபிச்செட்டிப்பாளையத்தில் ஒரு கரும்பு ஆலை நிறுவப்படுமா என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிபகுதியிலே தற்போது விளைகின்ற கரும்பு, ஆப்பக்கூடலில் அமைந்துள்ள 'சக்தி சுகர்ஸ்' என்ற சர்க்கரை ஆலைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆப்பக்கூடல் 'சக்தி சுகர்ஸ்' சர்க்கரை ஆலையில் அரைவைத் திறன் நாளொன்றுக்கு 4,000 டன் கரும்பாகும். ஒரு கரும்பு ஆலை குறைந்தது 2,500 டன் அரைவைத் திறன் கொண்டதாக அமைய வேண்டும். முழுத்திறனோடு அந்த ஆலை செயல்பட வேண்டுமானால் 4.30 இலட்சம் டன் கரும்பு தேவைப்படும். இதற்கு கரும்பு பயிரிட குறைந்தது 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு வேண்டும். ஆனால் கோபிச் செட்டிப்பாளையத்தில் விளையும் கரும்பு தனியாக ஒரு சர்க்கரை ஆலை அமைக்கக்கூடிய அளவிற்கு போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்ட பெரம்பலூர் சர்க்கரை ஆலை கடந்த மூன்று ஆண்டுகளாக நட்டத்திலே இயங்கிவருகிறது. அதனையறிந்து அதைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 3]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தனித்தனியாக ஒவ்வொரு ஆலையின் மீதும் அக்கறையுள்ளவர்கள், அவர்களே தனி வினா எழுப்பி இருக்க வேண்டும். இது வேறு வினா, எனவே இந்த வினா எழாது. தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் விளையக்கூடிய கரும்பின் அளவு இன்னொரு சர்க்கரை ஆலை அமைக்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஆகவே கொடுமுடி அல்லது மொடக்குறிச்சி பகுதியில் அந்த சர்க்கரை ஆலை அமைத்துக் கொடுக்க முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் ஆண்டுதோறும் சுமார் 40 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. அதில் 17.50 இலட்சம் டன் கரும்பு உற்பத்தியாகிறது. ஆனாலும்கூட, இப்போதுள்ள சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதுபோல், கோபிச்செட்டிப்பாளையத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கின்ற அளவுக்கு அரசிடத்தில் நிதி ஆதாரமும் இல்லை, வேறு வழிவகைகளும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலையை நிறுவ வேண்டுமானால், இப்போது அதிகாரிகள் இவ்வளவு கரும்பு வேண்டுமென்று கணக்கிட்டுச் சொல்கிறார்கள். விவசாயிகள் கரும்பு பயிரிட்டுவிட்ட பின்னர் அதை ஆலைகள் எடுத்துக்கொள்வதில்லை. அதற்காகவே பயந்து விவசாயிகள் கரும்பு பயிரிடுவதில்லை. அதைக் கணக்கிட்டு, புதிய ஆலைகள் நிறுவினால் ஏராளமான விவசாயிகள் கரும்பு பயிரிடத் தயாராக இருக்கிறார்கள். அதை மனத்திலே நிறுத்தி பல புதிய ஆலைகளை நம்முடைய அரசு நிறுவுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை வேண்டுமென்பதிலே இந்த அரசுக்கு இருவிதமான கருத்தில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது

போல ஏராளமான விவசாயிகள் கரும்பு பயிரிட வந்துவிட்டால் பிறகு ஏராளமான மக்கள் அரிசி இல்லாமல் தவிக்க நேரிடும்.

முற்பகல் 9.35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கரும்பு என்று சொன்ன உடனே இனிக்கிறது. திருவாரூர் டிடி. பன்னீர்செல்வம் மாவட்டம் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. கசப்பான செய்தியைச் சொல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திலே கரும்பு ஆலை ஒன்றை அமைக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்வார்களா? அதை மன்னார்குடி பட்டுக்கோட்டை பகுதியிலே அமைப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திலே கரும்பு ஆலை வரும் என்ற இனிப்பான செய்தியைச் சொல்கிறேன். ஆனால் உறுப்பினர் கோருகிறபடி செய்ய முடியாத கசப்பான செய்தியையும் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது போதிய அளவுக்கு கோபி பகுதியிலே கரும்பு பயிரிடாத காரணத்தினால் அங்கே ஆலையை உருவாக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். பல பகுதிகளிலே, கரும்பு ஆலைகள் அமைத்த பின்னாலும்கூட, அங்கெல்லாம் கரும்பை வெட்டுவதற்கான உத்தரவு கொடுப்பதற்கு 1½ ஆண்டுக்காலம் ஆகிறது. கரும்பே இல்லை என்று சொல்லுகிறபோது, இப்படி கரும்பு இருக்கக்கூடிய பகுதிகளிலே கூட 1½ ஆண்டுககாலத்தை கட்டிங் ஆர்டர் கொடுப்பதற்கு எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொன்னால், கரும்பு அதிகமாகப் பயிராகிறது என்ற செய்திதான் அதிலிருந்து தெரிகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் சர்க்கரைக்காக அலையாய் அலைகிறார்கள். ஆனாலும் சர்க்கரை குறிப்பிட்ட அளவுதான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கென்று 30 சர்க்கரை ஆலைகளுக்கு எப்படியாவது ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கெல்லாம் கரும்பு அதிகமாகப் பயிராகிறதோ, அந்தப் பகுதிகளைக் கணக்கிட்டு 30 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு ஆவன



செய்வார்களா என்றும். எங்களுடைய வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் அணைக்கட்டுப் பகுதியில் அதிகமான கரும்பு விளைகிற காரணத்தால அந்தப் பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கிட்டத்தட்ட 30-ஐ எட்டக்கூடிய அளவுக்கு சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் தமிழகத்திலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம்.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் புதிய ஆலைகள் வேண்டுமென்று இந்த மன்றத்திலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1989-90-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை துவங்குவதற்கான ஆயத்தப் பணிகள் முடிந்தபின்னர், பங்குத் தொகையாக 3 கோடி ரூபாயை மக்கள் வசூல் செய்து கட்டியதற்குப் பிறகு சென்ற நிதிநிலை அறிக்கையில் சர்க்கரை ஆலை நிறுவப்படும் என்று சொன்னார்கள் ஆனால் ஓராண்டுக்காலம் ஆகியும் அறிவித்தபடி சர்க்கரை ஆலை வராத காரணத்தால் மக்கள் பெரிதும் வாடுகிறார்கள். ஆகவே, கலைஞர் அவர்களால் துவக்கப்படுமென அறிவிக்கப்பட்ட அந்த சர்க்கரை ஆலையை இந்த நிதி ஆண்டில் துவக்குவதற்குரிய நடவடிக்கையை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கு நான் பதில் அளித்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவையிலே இல்லை என்று கருதுகிறேன். அல்லது பத்திரிகையைப் பார்க்கவில்லை என்று எண்ணுகிறேன். அந்த பதிலுரையிலே குறிப்பிட்டிருக்கிறேன். அறந்தாங்கி சர்க்கரை ஆலைக்கான உரிமம் இஐடி. பாரி நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லி உறுப்பினர் திருநாவுக்கரசும் அதற்காகக் கையைத் தட்டியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

[1997 ஏப்ரல் 3

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிவுற்ற நூற்பாலைகளுக்குக் கடன் தொகை வழங்கி, நலிவுற்ற நூற்பாலைகளை எல்லாம் முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதுபோல, இன்றைக்கு நலிவுற்று கடனில் மூழ்கி இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளுக்கும் அப்படிப்பட்ட கடன் உதவியை வழங்கும் வகையில் எங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை கருத்தில்கொண்டு, அதற்கும் ஒரு கடன் தொகையை வழங்கி, அதை நலிவிலிருந்து காப்பாற்ற அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளுக்கு ஏற்ப, தகுதிகளுக்கு ஏற்ப, அரசு முடிவுகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உற்பத்தியாகும் நெல்லை தமிழக அரசு கொள்முதல் செய்வதுபோல, உற்பத்தியாகும் சர்க்கரையையும் கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகளின் மூலம் வழங்குவதற்கு மத்திய அரசை தமிழக அரசு வற்புறுத்தி ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய கொள்கையின்படி நடைபெறுகின்ற காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 422, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**422—**

**புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக்குதல்**

***4550—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, புதுப்பாளையம் புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?



1997 ஏப்ரல் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியிலுள்ள புதுப்பாளையம், ஒன்றியத்தின் தலைநகராக இருப்பதாலும், கிராமப் பகுதிகளும், மலைப் பகுதிகளும் சேர்ந்து அமையப்பெற்றிருப்பதாலும், செங்கத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் புதுப்பாளையம் உள்ளதாலும், கிராமப்புற மக்களின் பாதுகாப்பு கருதி புதுப்பாளையத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தை இந்த நிதி ஆண்டில் காவல் நிலையமாகத் தரம் உயர்த்தித்தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புறக்காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை 148 ஆக இருந்தது. கடந்த ஆண்டு 1996-97-இல் 14 புறக்காவல் நிலையங்கள், முழுக்காவல் நிலையங்களாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அவ்வாறு மாற்றப்பட்டுள்ளன. இந்த நடப்பு ஆண்டில், எத்தனை புறக்காவல் நிலையங்களை முழுக்காவல் நிலையங்களாக ஆக்குவது என்பது குறித்து அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. காவல் துறை மானியத்தில் அது அறிவிக்கப்படும். அதுவரை மாண்புமிகு உறுப்பினர் காத்திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்கள் அமைய என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புறக்காவல் நிலையங்கள், அந்தப் பகுதிக்குத் தேவையா

என்பதை அங்குள்ள காவல் நிலையங்கள் மூலமாக அறிந்திட வேண்டியிருக்கின்றது. சட்டம் ஒழுங்கு பற்றிய பிரச்சினைகள் என்னென்ன நடைபெற்றன என்று கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவை அதிக அளவிலே இருக்குமேயானல் புறக்காவல் நிலையங்கள் தேவைப்படும். தேவைப்பட்டால் ஒரு பெரிய போலீஸ் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலே இது போன்ற புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்படுவது இயற்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெல்லிக்குப்பம் அ. மணி.

**திரு. நெல்லிக்குப்பம் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், அ. நெல்லிக்குப்பம் தொகுதி, நடுவீரப்பட்டில் உள்ள புறக்காவல் நிலையத்தை முழு காவல்நிலையமாக மாற்றித்தர அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் புறக்காவல் நிலையங்கள் முழுக் காவல் நிலையங்களாக மாற்றப்பட இருக்கின்றன என்பதைக் காவல் துறை மானியத்தின்போது அறிவிக்க இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. பூவேந்தன்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்ச் சமுதாயம் முன்னேறுவதற்கு, தமிழ் மக்களுக்குப் பாதுகாவலராக இருக்க வேண்டுமென்று முதல் காவலராக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், பழனிக்கு உட்பட்ட சுவாமிநாதபுரத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தை—அது மாநில நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்ற காரணத்தினால்—நிரந்தரக் காவல் நிலையமாக அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும், புறக்காவல் நிலையங்களை முழுக்காவல் நிலையங்களாக மாற்றவேண்டுமென்ற கோரிக்கையும் அரசுக்கு வந்திருக்கின்றன. படிப்படியாகத்தான் அவைகளை நிறைவேற்ற வேண்டும். எனினும், பல உறுப்பினர்களுடைய எண்ணம் ஈடேறுகின்ற அளவிற்கு வருகின்ற காவல் துறை மானியத்தில் அவை அறிவிக்கப்பட இருக்கின்றன.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தொகுதியிலுள்ள வி. களத்தூரில் ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு மேலாக புறக்காவல் நிலையம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. தற்போது அதை முழுக் காவல் நிலையமாக மாற்றித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 45 ஆண்டுகளாக இயங்கி வருகிற நேரத்தில், இன்னும் கொஞ்சம் நாள் பொறுத்துக் கொண்டிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 423. திரு. அ. வ. அப்துல் நாசர். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**423—**

### கிளை நூலகம் தொடங்குதல்

***6155—திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பின்னலூரில் புதியதாகக் கிளை நூலகம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வியமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

30-1-1996 நாளிட்ட கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நூட்பவியல் துறை அரசாணை (நிலை) எண் 60-ல் தமிழ்நாட்டில் 625 கிராமங்களில், கிராமப்புற நூலகங்கள் ஆரம்பிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இதில் தென்னார்க்காடு மாவட்டத்தில் 53 கிராமப்புற நூலகங்கள் திறப்பதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது. இந்த 53 கிராமங்களுள் பின்னலூர் கிராமம் இடம்பெறவில்லை. இருப்பினும், அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் ஏதாவதொரு கிராமம் தேவையான நிபந்தனைகளை நிறைவு செய்யாத நிலையில், பின்னலூர் கிராம மக்கள், அந்நிபந்தனைகளை நிறைவேற்றித்தர முன்வருவார்களானால், அவ்வூரில் கிராமப்புற நூலகம் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1997 ஏப்ரல் 3

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நூல்நிலையங்களை அமைப்பதற்கு என்னென்ன நிபந்தனைகள் பின்பற்றப்படுகின்றன? பின்னலூர் கிராமத்தில் சுமார் 5,000-க்கும் அதிகமான மக்கள் வசிக்கின்றார்கள். அந்தப் பகுதியில் விவசாயக் கூலிகளும், ஆதிதிராவிடர்களும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்களுடைய பிள்ளைகள் எல்லாம் நன்றாகப் படித்து அறிவினைப் பெருக்கிக்கொள்ள வேண்டிய ஆர்வத்தில் அந்தப் பகுதி மக்கள் இருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கு நிபந்தனைகளில் ஏதேனும் சலுகையினை அளித்து, புரவலர் தொகையை மட்டும் செலுத்திடும் வகையில் அனுமதி அளித்து அந்தப் பகுதியிலே நூல்நிலையம் அமைக்க அரசு முன்வ(!)மா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் விதிப்பது என்பது ஒரு நூலகத்தை நடத்துவதற்குத் தேவையான வசதிகளைப் பெறுவதற்காகத்தான். அந்த வசதிகள் இல்லாவிட்டால் நூலகம் நடைபெறுவது இயலாத காரியம். எனவே, அந்த நிபந்தனைகூளை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நூலகம் இயங்க வாடகை இல்லாத கட்டிடம் வழங்கப்படுதல் வேண்டும்; பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் பொருட்டு 5 சென்ட் காலி மனை மாவட்ட நூலக அலுவலர் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்; ரூபாய் இரண்டாயிரம் மதிப்புள்ள, அந்த நூலகத்திற்குத் தேவைப்படுகிற தளவாடச் சாமான்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்; 200 உறுப்பினர்கள் அந்தக் கிளை நூலகத்திற்காகச் சேர்க்கப்பட வேண்டும்; மேலும், 1,000 ரூபாய் வீதம் தொகை செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். இவையெல்லாம் ஒரு நூலகத்தினுடைய தேவை என்பதை அந்த கிராம மக்கள் உணர்ந்து அதை வரவேற்கிறார்களா என்ற அடிப்படையை எண்ணிப்பார்ப்பது அவசியமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மங்கலம்பேட்டை பேரூராட்சியில் நூலகம் 30 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. ஆனால், நூலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. நான் கட்டிடம் கட்டுவதற்கான 5



1997 ஏப்ரல் 3]

சென்ட் நிலத்தை வாங்கித்தரத் தயாராக இருக்கிறேன். எனவே, இவ்வாண்டில் நூலகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விருபுகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் ஒப்படை செய்யப்பட்ட நூலகக் கிளைகள் உள்ள ஊர்களில் கட்டிடம் கட்டுவதற்கு அந்தந்த மாவட்ட நூலக நிதியினுடைய அளவைப் பொறுத்து, வரிசைப்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது. அந்த முறையிலே வழங்க வேண்டுமானால் முதலில் நிலத்தை ஒப்படை செய்துவிட்டு, அதற்கு பின்னர் அதுபற்றிக் கேட்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்.

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கிளை நூலகம் துவங்குவதற்கு என்னென்ன விதிமுறைகள் குறிப்பிட்டார்களோ அவை அத்தனையையும் நிறைவுசெய்து, 3 கிளை நூலகங்கள் என்னுடைய தொகுதியிலே தொடங்குவதற்கு மாவட்ட நூலக அதிகாரி அவர்கள் பரிந்துரை செய்தும் இன்னும் அதற்கான உத்தரவு வரப்பெறவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த உத்தரவினை வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதுபற்றி விசாரித்து, நிலவரத்தைப் புரிந்துகொண்டு ஆணையிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 424, திரு. கே. வேணு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**424—**

## கும்மிடிப்பூண்டியில் கலைக் கல்லூரி அமைத்தல்

***6168—திரு. கே. வேணு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் அரசினர் கலைக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ): கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. வேலு. இருக்கையில் இல்லை. அடுத்து. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையில் தெரிவித்துள்ளபடி ஏராளமான தொடக்கப் பள்ளிகள் துவங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக, நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக, உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கல்லூரிகள் துவங்குவதற்கு அறிவிப்பு ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. எனவே. நம்முடைய அரசு கல்லூரி துவங்குவதில் என்ன கொள்கை முடிவு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒரு கல்லூரி தொடங்குவதற்கு பல இலட்ச ரூபாய் செலவு ஆகிற காரணத்தால், கல்லூரியை அரசு தொடங்குவது என்பது ஏறத்தாழ சில ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. மாறாக, நிதிப் பொறுப்பு அரசுக்கு இல்லாமல் சுயநிதி அடிப்படையில் கல்லூரி தொடங்க முன்வருவார்களானால் அந்த வட்டாரத்திலே அப்படிப்பட்ட கல்லூரி அமைக்க தேவை இருக்கிறதா என்ற அடிப்படையில் பார்த்து அப்படிப்பட்ட கல்லூரிக்கு அனுமதி வழங்குவதை அரசு கருதிப்பார்க்கும்.

அதேபோல், தொடக்கப் பள்ளியிலிருந்து மேனிலைப் பள்ளிவரையில் உள்ள அந்தப் பள்ளிகள் சமுதாய முன்னேற்றத்திற்கு அடிப்படைத் தேவையாக இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, ஆரம்பக் கல்வி என்பதைக் கட்டாயம் எல்லாக் குழந்தைகளும் பெற்றாக வேண்டும் என்ற அடிப்படையில் அரசு அதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டு அப்படிப்பட்ட பள்ளிகளை ஏற்படுத்தி வருகிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 425. திரு.ப. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**425—**

## மின் அழுத்தக் குறைவினை நிவர்த்தி செய்தல்

***465 திரு. ப. பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி முழுவதும் குறைந்த மின் அழுத்தம் காரணமாக அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மின் மோட்டார்கள் சரிவர இயங்காத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டைதொகுதி முழுவதும் நிலவும் குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்ய தமிழ்நாடு மின்சார வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது.

**திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 426, திரு. பொ. முருகேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 3

426—

முசரவாக்கம் துணை மின் நிலையம்

**4076—திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, முசரவாக்கம் கிராமத்தில் துணை மின் நிலையத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தை நில மாற்றம் வேண்டி அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்நில மாற்றத்திற்கு ஆணை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

முற்பகல் 9-50

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியினுடைய விவசாய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மின் துறை ஏற்றுக்கொண்டது. மின் துறை அதற்குண்டான நிலத்தை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு அனுப்பி வைத்தது. தற்சமயம் நில மாற்றம் செய்யப்பட்டு, நில மாற்றத்திற்குண்டான பணத்தைச் செலுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மின் துறை ஏற்று, பணத்தையும் செலுத்தியுள்ளது. இப்போது மின் துறை, துணை மின் நிலையம் அமைப்பதற்கான வேலையைத் தொடங்குவதற்குத் தயாரான நிலையில் உள்ளது. எனவே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடப்பாண்டிலே அந்தத் திட்டத்தைத் துவக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சி தொகுதி, முசரவாக்கம் கிராமத்தில் 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நில ஆர்ஜிதம் செய்ய அரசு அனுமதி அளித்தது. காஞ்சி மின் விநியோக வட்ட மேற்பார்வைப் பொறியாளர், நிலத்திற்குண்டான தொகையை



1997 ஏப்ரல் 3]

9-12-1996 அன்று செலுத்தியுள்ளார். துணை மின் நிலையம் அமைக்கும் வேலைகள் இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ. அ. வைதியலிங்கம்.

**திரு. மீ. அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் பேரூராட்சி வளர்ந்து வருகிற பேரூராட்சி. அங்கே இப்படிப்பட்ட ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு இடம் கேட்டு, அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள வழிவகை செய்வார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் நிலத்தினைக் கையகப்படுத்திய பிறகு இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 427, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

427—

குடவாசலைத் தனி வருவாய்க் கோட்டமாக்குதல்

***3690—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலுள்ள குடவாசல், வலங்கைமான், கொரடாச்சேரி ஒன்றியங்களைச் சேர்த்து குடவாசலை தனி வருவாய்க் கோட்டமாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடவாசலைத் தனி வருவாய்க் கோட்டமாக மாற்றும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்க் கோட்டம் அமையத் தேவையான அனைத்து

வசதிகளையும் பெற்று இருக்கிற ஒரு நகரம் குடவாசல். எதிர்காலத்தில், வருவாய்க் கோட்டங்கள் அமைக்கும்போது, குடவாசல் தனி வருவாய்க் கோட்டமாக அமைக்கப்படும் என்ற உறுதிமொழியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய்க் கோட்டம் அமைக்க, மாவட்டச் சீரமைப்பு தொடர்பாக அமைக்கப்பட்ட உயர்நிலை அதிகாரிகள் வல்லுநர் குழு அரசுக்குப் பரிந்துரைக்கவில்லை. அது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. உறுப்பினரின் உணர்வுகளுக்கு எனது பாராட்டுக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 428, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**428—**

## மேட்டூர்-ஆத்தூர் குடிநீர்த் திட்டம்

***1196—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் சில கிராமப் பகுதிகளில் மேட்டூர்-ஆத்தூர் குடிநீர்த் திட்டத்தின்கீழ், குடிநீர் வழங்குவதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி தயார் நிலையில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் விநியோகிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதியில் சில கிராமப் பகுதிகளில் மேட்டூர்-ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவதற்காக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டன. இத்தொட்டிகளின் மூலம் தாரமங்கலம் தொகுதியில் உள்ள சில கிராமங்களுக்குத் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. பின், அக்குழாய்



செல்லும் பாதையில் சில கிராமங்களிலுள்ள மக்கள் குழாய்களின் வால்வுகளை உடைத்து குடிநீர் பெற்றுவரும் சட்ட விரோதச் செயலால் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்போது முத்தம்பட்டி, ஓலைப்பட்டி, தவசம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு, வால்வுகள் மற்றும் குழாய்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மற்ற கிராமங்களுக்குக் குழாய்களை இணைக்கும் பணிகள் மற்றும் வால்வுகளை பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 10 நாட்களுக்குள் அந்தப் பணிகள் முடிந்து, குடிநீர் மக்களுக்கு விநியோகம் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியில், தாரமங்கலம் ஒன்றியம், மேச்சேரி ஒன்றியம், மற்றும் நங்கவல்லி ஒன்றியம் போன்ற பகுதிகளில் எல்லாம் நிலத்தடி நீர் கெட்டுவிட்ட காரணத்தால் "ஃபுளோரைடு வட்டம்" என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதுபோல, சில கிராமங்களுக்குக் குடிநீர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் சில கிராமங்களில் குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. அதேபோல, நங்கவல்லி ஒன்றியத்திலே ஏறத்தாழ 20,000 பேர் மக்கள் தொகை கொண்ட கோனூர் ஊராட்சி மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே கெமிக்கல் தொழிற்சாலை இருக்கிற காரணத்தால் நிலத்தடி நீர் முழுவதும் கெட்டுவிட்டது. ஆகவே, அங்கே குடிநீருக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆற்றோரத்திலே இருக்கக்கூடிய அந்தக் கிராம மக்கள், தண்ணீரைப் பார்க்க முடிகிறதே தவிர, குடிப்பதற்கு இயலாத நிலை இருக்கிறது. ஆகவே, கோனூர் கிராமத்திலே இருக்கக்கூடிய அனைத்து குக்கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் துணைக் கேள்வி தனிப்பட்டது. இருந்தாலும் தாண்டனூர், ரெட்டிப்பட்டி, காட்டுவளைவு, ரெட்டிப்பட்டி ஆதிதிராவிடர் காலனி மற்றும் அருந்ததியர் காலனி, மானந்தாள், நல்லகவுண்டன்பட்டி, கோடக்கள்ளனூர், பள்ளக்காடு, சூரமங்கலம் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் விநியோகக் குழாய்கள் இணைக்கும் பணி துவங்கி நடைபெற்று வருகிறது.

[1997 ஏப்ரல் 3

விரைவாக அந்தப் பணிகள் முடிந்த பிறகு, அந்தக் கிராமங்களுக்குக் குடிநீர் கண்டிப்பாக வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 429, டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**429—**

## சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொழில்கள் தொடங்குதல்

***2003—டாக்டர் க. கிருஷ்ணசாமி :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பின்தங்கிய நிலையில் இருக்கும் ஒட்டப்பிடாரம் தொகுதியில். 'கிராமப்புற சுயவேலைவாய்ப்பு' திட்டத்தின் கீழ். தொழில்கள் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒட்டப்பிடாரம் மற்றும் கயத்தார் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் படித்த, வேலையில்லாத இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் தொழில்கள் தொடங்க அரசிடம் தற்போது திட்டங்கள் எதுவுமில்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் தொகுதி தொடர்ச்சியாக வறட்சிக்கு இலக்காகும் பகுதி. அங்கே படித்த எண்ணற்ற இளைஞர்களும், சாதாரணமாக படித்த பொது மக்களும்கூட வேலையின்றித் தவிக்கின்றார்கள்; விவசாய வேலையிலும் ஈடுபட முடியவில்லை. மேலும், சுயதொழில் தொடங்குவதற்கும் அங்கே போதிய வசதிகளும் நிதி ஆதாரங்களும் இல்லை. எனவே, அந்தப் பகுதியில் தொழில் தொடங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்றும், மீண்டும் அதை மறுபரிசீலனை செய்வார்களா என்றும் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.



1997 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம் ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஒட்டப்பிடாரம் மற்றும் கயத்தார் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு கிராமப்புற சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 'டிரைசம்' திட்டத்தின்கீழ் 1995-96 ஆம் ஆண்டில் மொத்தம் 86 இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் மொத்தம் 130 இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனாலும் அவர்களும் தொடர்ந்து பணிகள் செய்வதற்கான வாய்ப்பு— வங்கிகள் மூலம் கடன்பெற்று பணிகள் செய்கின்ற தகுதி அவர்களுக்கும் உண்டு; அதன்படி அவர்கள் மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 430, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**430—**

## மின் வேலி அமைத்தல்

***3354—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டத்தில் எலிகளின் தொல்லையால் விளைபொருட்கள் வீணாவதைத் தடுக்க மனித ஆபத்தில்லாமல் மின் வேலி அமைத்துக் கொள்ள அனுமதி வழங்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் மு. தேவராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. மலைகள் நிறைந்த பகுதி. அங்கே எலிகள் மற்றும் காட்டு விலங்குகளால் விளைந்த பொருட்களுக்கு ஏற்படும் நாசத்தைத் தடுக்கவும், விளைந்த பொருட்களைக் காப்பாற்றுவதற்கும் இரவு நேரங்களில் விவசாயிகள் தங்கள் வயல் வழியாகச் செல்கின்ற மின்சார லயன்களிலும், லயன் இல்லாத பகுதிகளில்

[1997 ஏப்ரல் 3

மோட்டாரிலும் கொக்கி போன்ற கம்பிகளை கனெக்ஷன் கொடுத்து. அந்த வயலைச் சுற்றி மின்வேலி அமைக்கிறார்கள். அதன் மூலம் அரசாங்கத்திற்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது; அதோடு யார் வேலி அமைக்கிறார்களோ, அவர்களே .அதில் மறந்து மாட்டிக்கொண்டு இறக்க நேரிடுகிறது. அப்படி இறந்தவர்களை அரசுக்குத் தெரியாமலேயே எரித்துவிடுகிறார்கள். அப்படி எண்ணற்ற சாவுகள் அங்கே உண்டு. எனவே, மின் திருட்டைத் தடுக்கவும், இதில் வரும் நஷ்டங்களைத் தடுக்கவும், மனித இழப்பைத் தடுக்கவும், எலிகள் மட்டும் இறப்பதற்கு ஏற்ப குறைவான ஓல்டேஜ் திறனைக் கொண்டு அரசாங்கத்தின் அனுமதியோடு . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன கேள்வியா?

**டாக்டர் மு. தேவராஜன்:** மின்சார வேலி அமைத்து, அதன் மூலம் விவசாயிகளின் கஷ்டத்தைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களின் உயிர்களுக்கு ஆபத்து இல்லாமல். இதுபோன்ற மின் வேலிகள் அமைக்க இயலுமா என்பது ஒரு கேள்வி. இருப்பினும், இதுபற்றிய தொழில் நுட்பத்தை அறிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தோடும், ஹைதராபாத்தில் இருக்கின்ற மத்திய பயிர்ப் பாதுகாப்பு பயிற்சி நிலையத்தோடும் அரசாங்கம் தொடர்பு கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு ஆண்டுதோறும் கோடைப் பருவத்தில் எலி ஒழிப்பு முகாம்கள் உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தி எலிகளால் ஏற்படும் சேதம் குறித்தும் எலிகளைக் கட்டுப்படுத்துவது குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. எலிகளை ஒழிப்பதற்கு ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் எலி ஒழிப்பு முகாம்கள் நடத்தி எலிகளால் ஏற்படும் சேதம் தவிர்க்க வரப்புகளை வெட்டி எலிகளைப் பிடித்தல், கிட்டிகள் மற்றும் பொறிகள் வைத்து எலிகளைப் பிடித்து அழித்தல், எலிகளை உணவாகக் கொள்ளும் பாம்புகளை அழிக்காமல் பாதுகாத்தல், ஆந்தைகள் வளர்த்து எலிகளை ஒழிக்கும் தொழில் நுட்பம் போன்றவை உழவர் வயல்வெளிப் பள்ளிகள் மூலம் விவசாயிகளுக்குச் சொல்லித்தரப்படுகிறது.



1997 ஏப்ரல் 3] முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 431, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**431—**

**வேளாண்மைக் கல்லூரி அல்லது விவசாயப் பண்ணை அமைத்தல்**

***4155—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பூசிமலைக்குப்பம் மாளிகை நகரில் அரசுக்குச் சொந்தமான ஜாகிர் அரண்மனைக் கட்டிடம் உள்ள 200 ஏக்கர் நிலத்தில் வேளாண்மைக் கல்லூரியோ அல்லது விவசாயப் பண்ணையோ அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே நெல் பயிரிடுவதில், தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் உள்ளது. அதிலும் பாசுமதி போன்ற புகழ் பெற்ற நெல், அரிசி வகைகளுக்குச் சொந்தமான ஆரணி தொகுதியில், அரசுக்குச் சொந்தமான பூசிமலைக்குப்பம், மாளிகை நகரில் ஒரு கட்டிடம் உட்பட 200 ஏக்கர் நிலம் தரிசாக உள்ளது. அதைப் பயன்படுத்தி, கடந்த கால கலைஞர் ஆட்சியில் ஐ-ஆர்.8, ஐ-ஆர்.50, பொன்னி போன்ற புதிய நெல் வகைகளைக் கண்டுபிடித்ததைப்போல, அதி நூதன வீரிய விதைகள் போன்றவற்றைக் கண்டுபிடிக்க, அங்கே ஒரு விவசாய ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், பூசிமலைக்குப்பத்தில் 200 ஏக்கரை அடக்கியுள்ள ஜாகிர் அரண்மனைக் கட்டிடம், வேளாண்மைத் துறைக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. அதில் 175 ஏக்கர் வனத் துறைக்கும், 25 ஏக்கர் வருவாய்த் துறைக்கும்

சம்பந்தப்பட்டது. ஆகவே இதுபோன்ற பண்ணைகள் அமைக்கும் உத்தேசம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 432, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**432—**

**வாழ்குடை ஏரியை நவீனப்படுத்துதல்**

***267—திரு. வ. அன்பழகன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு தொகுதியில் உள்ள வாழ்குடை ஏரியை நவீனப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், வாழ்குடை ஏரியில் பழுதுபட்டுள்ள மதகைச் சீரமைக்க ரூ.5.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இப்பணி உலக வங்கியால், நீர் வள ஆதாரத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி, இந்த நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எந்தச் சட்டமன்ற உறுப்பினர் கேட்டாலும், இதுவரை இல்லை என்று பதில் சொல்லியது இல்லை. இந்தக் கேள்விக்கும் நல்லமுறையில் சாதகமான பதிலைச் சொல்லியிருக்கிறார். 1989-லே நமது ஆட்சியிலே தூசிமாமண்டூர் ஏரியை ரூ.1.38 கோடி செலவில் நவீனப்படுத்தியதை இன்றைக்கும் அந்த விவசாயிகள் மறக்கவில்லை. அதேபோல் இந்தப் பகுதி விவசாயிகளும் மன நிறைவு கொள்கிற வகையில் இந்தத் திட்டத்தை விரைவில் செய்து முடிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருந்தால், இருக்கிறது என்கிறோம். இல்லாவிட்டால் இல்லையென்றுதான் சொல்கிறோம். ஆனால் இந்தத் திட்டத்திற்கு ரூ.5.80 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்த நிதி ஆண்டிலேயே அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் என்னுடைய பதிலிலேயே தெரிவித்திருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெ. செல்வம்.

**திரு. ரெ. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை ஒன்றியத்தில் சத்தியமங்கலம், வலையப்பட்டி, சமுத்திரம்பட்டி, மெச்சலூர், கவுண்டம்பட்டி, நந்தியாவரம் வழியாகச் செல்லும் அந்தத் தொடர்புடைய ஏரியை, இந்த ஆண்டு நவீனப்படுத்த அரசிடம் திட்டம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொஞ்சம் கூட மூலக் கேள்வியோடு ஒட்டிவரவில்லை. ஆகவே, தனிக்கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 434, திரு. பே.வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர். (குறுக்கீடு) பரவாயில்லை, வினா எண் 433, அடுத்து எடுத்துக்கொள்ளப்படும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**434—**

**தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

***910—திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேசிய நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலைகளில் தோன்றும் ஆக்கிரமிப்புகள் இத்துறையின் கவனத்திற்கு வந்தவுடன் உடனடியாக அகற்றப்பட்டு வருகின்றன. நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் அகற்றப்பட வேண்டியுள்ளவற்றுக்கு காலதாமதம் ஏற்படுகிறது.

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு, கிருஷ்ணகிரி-சேலம் நெடுஞ்சாலையில் இருக்கும் நிலச் சொந்தக்காரர்களிடத்திலே துறையிலிருந்து பணம் கொடுத்து நிலத்தைப் பெற்றார்கள். கிட்டத்தட்ட 11, 12 ஆண்டுகள் ஆகிறது. இப்போது அங்கே இருக்கின்ற அந்தத் துறையில் இருப்பவர்கள்

[1997 ஏப்ரல் 3

10 ஆண்டுகளுக்கு மேலே சென்றாலே, அதை அரசு வாங்கினாலும் கூட அந்த நிலம் உரியவர்களுக்கே மீண்டும் போய்ச் சேர்ந்துவிடும் என்று சொல்கிறார்கள். அதனாலே ஆக்கிரமிப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன என்று சொல்கின்றார்கள். கடந்த ஆண்டும் இந்த ஆண்டு ஆரம்பத்திலும் மூன்று முறை என்னுடைய பகுதியிலுள்ள கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் இந்த ஆக்கிரமிப்பை ஒழிப்பதற்காகக் கூட்டம் நடத்தியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் ஆங்காங்கே தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்கெனவே நிலம் விற்றவர்களால் மீண்டும் ஆக்கிரமிப்பு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதனாலே இந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் அடிக்கடி தகராறு வருகின்றது. அரசாங்கமே சும்மா இருக்கின்றபோது நீங்கள் ஏன் எங்களை வம்புக்கு இழுக்கின்றீர்கள் என்று சொல்கின்றார்கள். ஆகவே, அரசு துரிதமாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நெடுஞ்சாலைத் துறையினுடைய பொறியாளர்கள் காவல் துறையின் உதவியோடு இதுபோன்ற குற்றச்சாட்டுகள் வருகிறபோது உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியிலே ஆக்கிரமிப்புகள் இருக்குமேயானால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய உதவியோடு நிச்சயமாக அவைகளை அகற்றுவதற்கு விரைவில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.க. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுகிற நேரத்தில் அவர்களுக்கு மாற்று இடம் தரக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகராட்சியினுடைய மேயர் ஆகவும் இருப்பவர்கள். இப்போது சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்காகப் பல்வேறு ஆக்கிரமிப்புகளையும்



1997 ஏப்ரல் 3]

அகற்றிக்கொண்டிருக்கிற முயற்சியிலேயும் ஈடுபட்டிருக்கிறார்கள். கார்ப்பரேஷனில் அவர்களுக்கெல்லாம் இடம் கொடுத்துவிட்டு மீதியிடம் இருந்து. தேசிய நெடுஞ்சாலையில் இருப்பவர்களை அகற்றுகின்றபோது மாநகராட்சியின் மூலமாக இடம் கொடுக்க முன்வந்தால் அவர்களுக்கு இடம் கொடுக்கலாமே தவிர வேறு இடம் இருப்பதாகத் தெரியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகள் சம்மந்தமாக 1980-ஆம் ஆண்டிற்கு முன்னால் பல கட்டிடங்களிலும் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்தவர்கள், அக்கட்டிடத்தினுடைய வரைபடத்தைப் போட்டு, 'இது ஆக்கிரமித்த இடம், அகற்ற வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், எந்தப்பகுதியும் மீட்கப்படவில்லை. மேலும், களியக்காவிளையிலிருந்து நாகர்கோவில் வரையிலும் மிகவும் நெருக்கடியாக உள்ளது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களெல்லாம் போய்வருவார்கள். அது ஒரு சங்கடமான காரியம். அப்படிப்பட்ட புதிய ஆக்கிரமிப்புகள் நகராட்சி எல்லைக்குள்ளே வருகின்றபோது, அது தேசிய நெடுஞ்சாலையினுடைய புறம்போக்கு என்று தெரிந்தும் அந்த நகராட்சி அதிகாரிகள் கட்டிடங்களைக் கட்டுவதற்கு உரிமம் வழங்குகின்றார்கள். அந்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கின்றபோதுதான், இந்த ஆக்கிரமிப்புகளைத் தடை செய்ய முடியும். அந்தவகையிலே தடை செய்யப்படுமா? இல்லையென்றால், ஒரு மாற்றுப்பாதை அந்தப் பகுதியிலே உருவாக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றுமுள்ள சாலைகளிலேயெல்லாம் ஆக்கிரமிப்பு என்பது கடந்த காலங்களிலே மிகவும் அதிகமாகிக் கொண்டிருப்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். அதற்கு முன்பு சாலைப் பணியாளர்கள் இருந்த காலகட்டங்களில் ஒரு ஆக்கிரமிப்பு ஏற்படுகிறபோதே அவர்கள் பொறியாளர்களிடம் எடுத்துச்சொல்லி அவைகள் அகற்றப்படும். சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்படுகிற நிலைமை நிறுத்தப்பட்டுவிட்ட காரணத்தினால், அவைகளில் நிறைய

[1997 ஏப்ரல் 3

கட்டிடங்கள் எழுந்த பிறகே அதிகாரிகளுடைய கவனத்திற்கு வருகிறது. அவர்கள் அதை இடிக்கிறபோது பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. ஆகவேதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கிறபோது அவர்களுடைய முதல் பணியாக, அவர்களுக்கு ஒதுக்கியிருக்கிற 8 கிலோமீட்டர் பகுதியில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுமானால் உடனுக்குடன் அறிவித்து அவைகளை அகற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற பணியும் அவர்களுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, வருங்காலங்களில் ஆக்கிரமிப்புகள் உருவாவதைத் தடுப்பதற்கு இது ஒரு முன்முயற்சியாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்போடு அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற இடங்களில் நிச்சயமாக இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு இந்த அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றியபின் சாலைகளின் இடையிலுள்ள மின்கம்பங்கள் மற்றும் தந்திக் கம்பங்கள் ஆகியவற்றை உடனே மாற்றியமைக்காததால் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. எனவே, அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றியவுடன் அந்த மின் கம்பங்களையும் தந்திக் கம்பங்களையும் சாலையோரத்திலேயே மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல இதுபோன்ற பிரச்சினைகள் ஆங்காங்கே ஏற்படுவது உண்மைதான். நான் தாம்பரம் பகுதிக்குச் சென்றிருந்தபோது இந்தப் பிரச்சினை இருந்தது. உடனடியாக மின் துறையோடு பேசி அவைகளெல்லாம் அகற்றப்பட்டன. ஆகவே, இத்தகைய பிரச்சினைகள் குறிப்பிட்ட இடங்களில் இருக்குமானால் அவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் மின் துறையோடு பேசி உடனடியாக அவைகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 433, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.



1997 ஏப்ரல் 3]

**433—**

### மீனவர் குப்பம் கடல் அரிப்பைத் தடுத்தல்

***1778—திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், கீழையூர் ஒன்றியம் செர்தூர் மீனவர் குப்பம் கடல் அரிப்பால் அழிவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

முற்பகல் 10-10

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செர்தூர் கிராமம் கடலுக்கு மிகவும் அருகிலுள்ள ஒரு மீனவர் குப்பமாகும். இது கடலரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டு 5, 6 குடிசைகள் கடலில் மூழ்கிவிட்டன. இன்னும் 30, 40 குடிசைகள் கடலில் மூழ்கக்கூடிய அபாய நிலையில் உள்ளன. ஆகவே, அதைத் தடுப்பதற்கு, மதில் சுவர் கட்டுவதற்கு அரசு முன்வருமா அல்லது அமைச்சர் அவர்கள் வேறு என்ன நடவடிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செர்தூர் கிராமத்தில் கடலரிப்பைத் தடுப்பதற்கு தற்காலிகமாக ஒரு தடுப்புச் சுவர் ஒரு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 435, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

435— [1997 ஏப்ரல் 3

## பெங்களூருக்குப் பேருந்து இயக்குதல்

*4986—திரு. ச. இராஜரெட்டி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம், தக்கெட்டி, ஹனிஹனஹள்ளி, ஜவாலகிரி, தேன்கனிக்கோட்டை வழியாக ஒரு பேருந்தும், ஜவாலகிரி, தளி, ஆனேக்கல் வழியாக பெங்களூருக்கு ஒரு பேருந்தும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பேருந்துகள் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**THIRU S. RAJAREDDY :** Hon. Speaker, Sir, Thalli is a border constituency. Karnataka border is only 8 k.ms. from Thalli. The passengers have to go to Bangalore daily because it is a business centre. Vegetables have to be transported daily by buses. But, the private bus owners have diverted their buses to more profitable routes. So, I request the Hon. Minister to run more trans-border buses so that people travelling to Karnataka from the border areas can be benefitted.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த மாமன்றத்தில் முன்பு ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோதே இதிலே உள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். குறிப்பாக மற்ற மாநிலங்களோடு பேருந்துகளை இயக்குகிறபோது அரசுக்கு சில பிரச்சினைகள் உருவாகின்றன. மற்ற மாநிலங்களோடு ஏற்பட்டிருக்கிற ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் பேருந்துகளை இயக்க முடியும். உதாரணமாக நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளை கர்நாடக மாநிலத்தில் இயக்கினால் நமக்கு இலாபம் கிடைக்கிறது. நாம் அதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் அவர்கள் அனுமதிப்பதில்லை. உதாரணமாக சென்னையிலிருந்து பெங்களூருக்கு ஒரு பேருந்து இயக்கப்படுமானால், சென்னையிலிருந்து ஒசூர் வரையில், நம்முடைய பார்டர் வரையில் கிலோ மீட்டருக்கு 14



1997 ஏப்ரல் 3]

பைசா நாம் வசூலிக்கிறோம். பெங்களூர் எல்லையில் செல்கிறபோது அவர்கள் விதித்து இருக்கிற கட்டணம் - இப்போது கிலோமீட்டருக்கு 26 பைசாவாக இருக்கிறது. அந்த 26 பைசாவை நாம் வசூலிக்கிறோம். எனவே நம்மைப் பொறுத்தவரையில் இங்கே தமிழக எல்லைக்குள் 14 காசும், கர்நாடக எல்லையில் கிலோ மீட்டருக்கு 26 காசும் வசூலிக்கிறபோது நமக்கு இலாபம். அதைப்போல பெங்களூருக்கு நாம் ஒரு பேருந்தை விட்டால் அவர்கள் ஒரு பேருந்தை விட வேண்டும். அதுதான் ஒப்பந்தம். அவர்கள் அப்படி இயக்குகிறபோது, அவர்கள் கர்நாடக எல்லையில் 26 பைசா பெற்றுக்கொண்டு, நம்முடைய மாநில எல்லைக்குள் ஓட்டுகிறபோது கிலோ மீட்டருக்கு 14 பைசா வாங்கினால் அவர்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. ஆகவே, எங்களால் இயக்க முடியாது. உங்களுடைய பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினால் நாங்கள் அனுமதிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் பேச்சு வார்த்தையிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அவைகள் சுமூகமாகத் தீர்க்கப்படுகிறபோது உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகம் இருக்கிறது. இந்தப் போக்குவரத்துக் கழகத்தைப் புதியதாகத் தொடங்கிய கடந்த கால அரசு புதிய பேருந்துகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தாமல் காரைக்குடி மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தில் பல ஆண்டுகள் ஓடி, பழுதாகி, பயனற்ற வண்டிகளை ஓரளவுக்கு சரி செய்து இந்தப் போக்குவரத்துக் கழகத்திற்குத் தள்ளிவிட்டிருக்கிறார்கள். இதனால் பெரும்பான்மையான பேருந்துகள் ஆங்காங்கே பிரேக் டவுனாகி வழித்தடங்களில் நின்று, பஸ் மறியல் போன்ற போராட்டங்களில் பொது மக்கள் ஈடுபடுகிறார்கள். எனவே, போக்குவரத்துத் துறையில் புதிய சகாப்தம் படைத்த நம்முடைய அரசு இப்போது வழங்கியிருக்கிற புதிய பேருந்துகளில் புதுக்கோட்டை வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகத்திற்கு அதிகப் பேருந்துகளை வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகத்திற்கு

70-க்கு மேற்பட்ட புதிய பேருந்துகள் சமீபத்தில் வழங்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 3,600 பேருந்துகளை வாங்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவைகள் வருகிறபோது அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு மேலும் புதிய பேருந்துகள் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, all the people going from Tamil Nadu to Karnataka are dislodged at Hosur and other border areas. As Karnataka State is not operating buses from there, all our people are stranded in the border areas. Lot of people are suffering. They have to travel in buses just like sheep. That is the problem there. Regarding other areas it is alright. In the border areas people are really suffering a lot. So, may I request the Hon. Minister for Transport to discuss with his counterpart in Karnataka and sort out the problem ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே வருகைபுரிந்தபோதுகூட இதுபற்றி விவாதிக்கப்பட்டது. அவர்களும் இதுபற்றி விவாதிப்பதற்காக அழைப்பினைக் கொடுத்து இருக்கிறார்கள். அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 62 பேருந்துகள் 310 நடைகள் இரண்டு மாநிலங்களின் எல்லைக்கு இடையில் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, நான் முன்பே சொன்ன பிரச்சினைகளையொட்டித்தான் இந்தப் பிரச்சினையும் வருகிறது. ஆகவே, இவைகள் எல்லாம் கட்டணத்தைப் பொறுத்த நிகழ்ச்சியாக இருக்கிற காரணத்தால் அவர்களோடு பேசித்தான் அதற்கான முடிவை எடுக்க முடியும். பேசுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

(முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. நடராஜன்.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் 'டூல் பாக்ஸ்', 'ஜாக்கி' போன்றவை இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ? இதனால் அரசுப் பேருந்துகளின் டயர் பஞ்சர் ஆனாலும்கூட, அந்த வண்டிகள் அப்படியே நிறுத்தப்படுகின்றன. ஸ்பேர் வண்டிகள் வருகின்ற வரையிலும் அப்படியே நிறுத்தப்படுகின்றன. இதனால் பயணிகள் மிகவும் தொல்லைக்கு ஆளாகிறார்கள் எனவே, இந்தப் பொருட்களை வழங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளைத் தவிர, மற்ற பேருந்துகளுக்கு எல்லாம் இந்தக் கருவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. சில பேருந்துகளில் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாம். அவைகள் வேறு மாற்று இடங்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கலாம். ஆனால் பொதுவாக எல்லாப் பேருந்துகளுக்குமே இதுபோன்ற முக்கியமான கருவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கிற கேள்வி மூல கேள்விக்கு சற்று வித்தியாசமானதாக இருந்தாலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புவது, புதுக்கோட்டைத் தேர்தலின்போது அந்தப் பகுதிக்கு விட்ட புதிய பஸ்கள் அனைத்தும் தற்போது ஓடிக்கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை திசை திருப்புகிற நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் கேட்டாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை கூட்டத்திலேயே இந்த வினாவிற்கான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். புதுக்கோட்டை தேர்தலுக்காக புதிய பேருந்துகள் விடப்படவில்லை. 2,176 பேருந்துகள் அறிவிக்கப்பட்டு பல்வேறு போக்குவரத்துக் கழகங்களுக்கும் புதிய பேருந்துகள் வழங்கப்பட்டபோது, அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கான பேருந்துகளை வழங்கியதாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலேயே அறிவித்து, அவைகள் பத்திரிகைகளிலே வந்து இருக்கின்றன. அப்போதுகூட வேறு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் பிரச்சாரமே செய்தார்கள், இந்தப் பேருந்துகள் எல்லாம் தேர்தல் முடிந்தவுடன் உடனடியாக நிறுத்தப்பட்டுவிடும் என்று. மாண்புமிகு உறுப்பினரே வேண்டுமானால் சென்று பார்த்துவிட்டு வரலாம். அப்போது ஓடிய பேருந்துகள் அத்தனையும் இப்போதும் ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை அவரே சென்று பார்த்துவிட்டுக்கூட வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த கால ஆட்சியை இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு)

[1997 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.எல். வெங்கடாசலம்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியிலிருந்து மைசூருக்கு பெங்களூர் வழியாகச் செல்லாமல், பாலக்கோடு, மாரணஹள்ளி, பஞ்சப்பள்ளி, தாணாப்பூர் வழியாக அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இரண்டு பேருந்துகள் கடந்த காலத்தில் இயக்கப்பட்டன. ஆனால் இப்போது அது நின்றுவிட்டது. அதனால் சுமார் 2 மணி நேரம் மிச்சமாகும். ஆகையினால், அந்தப் பேருந்துகளை மறுபடியும் கர்நாடக அரசோடு பேசி, விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, மாநிலங்களுக்கு இடையிலேயான பேருந்துகளைப் பற்றி, பேசித்தான் முடிவு எடுக்கவேண்டும். பேசுவார்களா என்று கேட்டிருக்கிறார். பேசுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 436, திருமதி ஏ.ஆர். வேடம்மாள், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**436 —**

### மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை துவங்குதல்

***2899—திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, வேப்பம்பட்டியில், மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்றினைத் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் முழுவதும் கிராமங்களைக் கொண்ட, விவசாயத்



1997 ஏப்ரல் 3]

தொழிலை மட்டுமே மக்கள் நம்பி வாழும் நிலப்பரப்பை உடையதாகும். இந்தக் கிராமப் பகுதிகளில் வாழும் விவசாயிகளும் மற்றவர்களும் அரசு வங்கிகளுக்குப் போக வேண்டும் என்றால், சுமார் 30, 40 கிலோ மீட்டர் தூரம் போகவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால் பெரும் பாதிப்பும் ஏற்படுகிறது. எனவே, தர்மபுரி மாவட்டத்திற்கு முன்னுரிமை தந்து மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கிளையாவது உருவாக்கித் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, வேப்பம்பட்டியைப் பொறுத்தவரையில், அந்த வேப்பம்பட்டிக்கு அருகில் 10 கிலோ மீட்டர் தூரத்தில் தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் அரூர் கிளையும், 8 கிலோ மீட்டர் தூரத்தில் தீர்த்தமலை கிளையும் அமைந்துள்ளது. மேலும் வேப்பம்பட்டியிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மாம்பட்டி அதியமான் கிராமிய வங்கியும் செயல்பட்டு வருகிறது. அத்தோடு இந்த வேப்பம்பட்டி ஊராட்சியில் 2,750 பேர்களும், பொன்னேரி ஊராட்சியில் 4,163 பேர்களும் இருக்கிற அந்தப் பகுதிக்கு 1,441 உறுப்பினர்களைக் கொண்ட, பங்குத்தொகையாக ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்து ஓராயிரம் கொண்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் இயங்கிக் கொண்டு வருகிறது. இவ்வளவு வங்கிகள் இயங்கும்போது இன்னொரு புதிய வங்கி தொடங்குவதற்கு விதிமுறைகளிலே வழியில்லாத காரணத்தால், இல்லை என்று பதிலைச் சொல்லி இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டுக்கல், மதுரை இரண்டும் ஒன்றாக இணைந்திருந்தபோது, சோழவந்தானிலே நிலவள வங்கி இருந்தது. நிலக்கோட்டைத் தொகுதி மக்கள் எல்லாம் அங்கே சென்று பயனடைந்து வந்தார்கள். இப்போது அது மதுரையோடு சேர்க்கப்பட்டுவிட்ட காரணத்தினால் நிலக்கோட்டை தொகுதியிலே உள்ள மக்கள் வத்தலகுண்டு யூனியனைச் சேர்ந்தவர்கள் கொடைக்கானலுக்கும், நிலக்கோட்டை யூனியனைச் சேர்ந்தவர்கள் திண்டுக்கல்லுக்கும் சென்று நிலவள வங்கிக்கு அலைய வேண்டியிருக்கிறது. ஆகையினால் நிலக்கோட்டை தொகுதியிலே புதியதாக ஒரு நிலவள வங்கியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 3

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உரிய முறையில் ஆய்வு செய்யப்பட்டு, அப்படி நிலவள வங்கி அங்கே அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்குமானால், அதைப் பற்றி அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 437, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**437—**

**குடிசை மாற்று வாரியத்தில் நிபுணர் குழு ஏற்படுத்துதல்**

***6027—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தரமான வீடுகளைக் கட்டுவதற்கு ஒரு நிபுணர் குழு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகள் எந்த வகையில் ஆய்வு செய்து கட்டப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டும் பணி துவங்குவதற்கு முன்பு, கட்டிடங்கள் கட்டப்படும் இடத்தில் அரசுத் துறை பொறியியல் கல்லூரிகளில் உள்ள ஆய்வுக் கூடங்கள் மூலம் மண் பரிசோதனை மற்றும் கடக்கால் வடிவமைப்பு செய்யப்படுகிறது. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளவரும்போது பொருட்களின் தரம், தண்ணீரின் தரம் மற்றும் வேலைத் திறன் ஆகியன செயற் பொறியாளர் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களால் அரசு பொறியியல் கல்லூரிகளின் உதவியுடன் தரப் பரிசோதனை ஆய்வு செய்யப்படுகிறது. இதன்மூலம் கட்டப்படும் கட்டிடங்கள் சீரிய முறையில் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்களால் தொடங்கப்பட்ட இந்த குடிசை மாற்று வாரியம் சிறப்பான முறையில் செயல்பட்டு வரக் கூடிய இந்தக் காலக்கட்டத்தில் திண்டுக்கல் போன்ற நகரங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரங்களுக்கும் அனைத்து பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் குடிசை மாற்று வாரிய வீடுகளை நீண்டகாலத் தவணைகளில் குறைந்த விலையில் வழங்குவதாக தெரிவித்துள்ளார்கள். ஆனால் இந்த வீடுகளிலிருந்து வசூலிக்கப்படுகின்ற வாடகையும், அல்லது கட்டப்படுகின்ற பணமும் நிரந்தரமாக கட்டப்படுவதேயில்லை. கடந்த 23 ஆண்டுகாலமாக ஒவ்வொரு ஆண்டும் குடிசை மாற்று வாரிய வீடுகளைப் பழுதுபார்க்க ரூ. 5 கோடி அரசுக்கு வீணாக விரயமாகிறது. எனவே முதல்வர் உட்பட, சென்னையில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களின் வாயிலாக, அவர்களின் சார்பாக வேண்டி விரும்பி நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த வீடுகளில் வசிக்கின்ற அந்தக் குடியிருப்போருக்கே அவற்றை இலவசமாக வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் குறிப்பிட்டதைப்போல குடிசை மாற்று வாரியம் என்ற திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் தொடங்கப்பட்டது. ஏழை எளியவர்கள் குடிசைகளில் வாழ்கின்ற காரணத்தால் அவர்களுடைய உடல்நலம் பாதிக்கப்படுவது மாத்திரமல்லாமல், நகரத்தினுடைய பொது நலமும், தூய்மையும் பாதிக்கப்படுகிறது என்பதையெல்லாம் கருத்தில்கொண்டுதான், குடிசைமாற்று வாரியம் என்ற திட்டத்தை உருவாக்கி, தொடக்கத்திலே சென்னையிலும், இன்றைக்கு கோவை போன்ற நகரங்களிலும் விரிவுபடுத்தப்பட்டு, மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டிய சூழ்நிலையிலே

[1997 ஏப்ரல் 3

அரசு ஆய்வுகளை நடத்திக்கொண்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்த வரையில் அந்த வீடுகள் - குடியிருக்கின்ற வீடுகள், அவர்களுக்கே சொந்தமாக்கப்படும், அதற்குரிய கட்டணத்தை தவணை முறையிலே அவர்கள் கட்ட முன்வருவார்களேயானால், என்று அறிவிக்கப்பட்டது உண்மை. ஆனால் யாருக்கு அந்த வீடுகள் ஒதுக்கப்படுகிறதோ, உண்மையிலே ஏழைகள் என்று கருதி யாரை அங்கு குடியமர்த்துகிறோமோ, இந்தச் சமுதாயத்திலேயுள்ள சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக, விரும்பத்தகாத செயல்களின் காரணமாக குடியேறியவர்கள் அந்த வீடுகளை மற்றவர்களுக்கு வாடகைக்கு விட்டுவிட்டு, மறுபடியும் குடிசை மாற்று வாரிய வீட்டிற்குப் பக்கத்திலேயே குடிசைகளைப் போட்டுக் கொள்கிறார்கள். இதுதான் இன்றைக்குள்ள சமுதாயப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். இருந்தபோதிலும் மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் குறிப்பிட்டதைப் போல தகுதியானவர்கள்-தகுதியானவர்கள் என்றால் அவர்களுடைய செல்வாக்கை அடிப்படையாக வைத்துச் சொல்லவில்லை. அந்த வீடுகளைப் பெற தகுதியானவர்கள் யார் யார் என்பதைப் பார்த்து, அவர்களிடத்திலே தவணை முறையிலே பணம் பெற்று, அவைகளை வழங்கலாமா அல்லது வேறு வழியில்லையென்றால் அவற்றை யார் யார் உண்மையிலேயே அங்கே குடியிருந்து வருகிறார்களோ, அவர்களுக்கே அதை உரிமையாக்கி விடலாமா என்பதைப் பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 438, திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**438—**

**விசைத்தறிக் கடன் கூடுதலாக வழங்குதல்**

***4798— திரு. சொ. கருப்பசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் நகரப்பகுதி நெசவாளர்களுக்கு விசைத்தறிக் கடன் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 ஏப்ரல் 3]

விசைத்தறிகளுக்கென நபார்ட் வங்கி தறி ஒன்றுக்கு நிர்ணயித்துள்ள உச்சவரம்பான ரூ.34,000/- அளவுக்கு மட்டுமே விசைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி வழங்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடன் பெற்று திரும்பச் செலுத்தியவர்களுக்கு அரசு மீண்டும் கடன் வழங்குமா என்றும், மேலும் வறட்சியின் காரணமாக தொழிலில் நலிவு அடைந்து கடன் பாக்கியுள்ளவர்களுக்கு, அந்தக் கடன் பாக்கி முழுவதும் தள்ளுபடி செய்யப்படுமா என்றும், மேலும் சங்கரன்கோவில் நகரப் பகுதிக்கு நடப்பு நிதியாண்டில் எத்தனை நபர்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அமைச்சர் அறிவிப்பாரா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் பாக்கி தள்ளுபடி செய்யவேண்டும் என்ற அடிப்படையே இதிலே இல்லை. ஏனென்றால், தாட்கோவின் மூலம், நபார்டு வங்கியின் மூலம் ஏற்கெனவே ரூ.12,500 மானியமாகவும், ரூ.12,500 கடனாகவும், உச்சவரம்பாக ரூ.34,000/- வரை கொடுக்கலாம் என்ற நிலை இருக்கின்றது. தற்சமயம் விசைத்தறிச் சங்கங்கள் அனைத்துமே சிறப்பாக, முழுமையாக ஓடுகின்ற அளவுக்கு —தமிழ்நாட்டிலே இன்று நம்முடைய கைத்தறி, ஜவுளித்துறையின் சார்பிலே—அவர்களுக்கு தேவையான வேலையும் தேவையான நூலும் கொடுக்கப்பட்டிருப்பதால், கடன் ரத்து செய்ய வேண்டும் என்ற அடிப்படையே இதிலே இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்ட முறையிலே மாதம் எவ்வளவு என்ற கணக்கைக் குறித்து நீங்கள் தனிக்கேள்வியாக போட்டால், மொத்தக் கணக்கும் விவரமாக அளிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே. எம். விஜயகுமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழில் இந்த நாட்டுக்கு எவ்வாறு தேவையோ, அதைப்போலவே விசைத்தறித் தொழிலும் நமக்கு அவசியம் என்பதை ஏற்று, கைத்தறிக்கென்று ஒதுக்கப்பட்ட 11 ரகத் துணி வகைகளை விசைத்தறிகள் தயார் செய்வதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அரசு தெளிவுபடுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறைக்கு இப்போது 11 ரகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. ஆனால், தற்சமயம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அனைத்து கைத்தறிச் சங்கங்களும் முழுமையாக இயங்குகின்ற பணியிலே இருப்பதை நான் இந்த நேரத்திலே உறுதிப்படுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு மேலும் நமக்குத் தேவையானவற்றைத்தான் நாமே விசைத்தறிக்கு கொடுக்கக் கூடிய சூழ்நிலை இன்று ஏற்பட்டு இருக்கின்றது. ஆகவே, எந்த இடத்திலும் விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் தற்சமயம் மோதல் இல்லாத அளவுக்கு, அந்தச் சட்டம் ஒருபக்கம் இருந்தாலும் சில நேரங்களிலே இடங்களுக்கு தக்க ஆலோசனைகள் கூறப்பட்டு, அது முறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறிகளில் 35 சதவிகிதம் பல்லடம் தொகுதியிலே உள்ளது. கடந்த ஒரு வருடகாலமாக ஜவுளித் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அந்த விசைத்தறியாளர்கள் எல்லாம் கூலி அடிப்படையில் வேலை செய்கிற காரணத்தினால் அன்றாடம் செலவுக்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடனை வசூலிப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் தீவிரமாக இருந்து வருகின்றன. இந்த நேரத்தில் அவர்களுடைய குறுகிய காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றிக் கொடுக்க அரசு முன்வருமா? தமிழ்நாட்டில் தற்பொழுது விசைத்தறிகள் பெரும்பான்மையாகப் பெருகி வருகின்றன. ஏனவே, அதற்கென தனி வாரியம் ஒன்றை அவர்களுடைய நலனுக்காக அரசு அமைக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நான் முழுமையாக இங்கே பதில் சொல்ல இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விசைத்தறிச் சங்கங்கள் கூட்டுறவு முறையிலே செயல்படுகின்ற இடங்களிலே இந்தப் பிரச்சினை இல்லை. வேண்டுமானால், வேறு பகுதிகளிலே கடன் வழங்கியதால் 'ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரிஸ்' என்ற பெயரிலே இந்தப் பிரச்சினைகள் இருக்கலாம். அதனை உறுப்பினர் அவர்கள் நேரிடையாக என்னுடைய கவனத்திற்கு கொண்டுவந்தால் நிச்சயமாக எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு உதவி செய்யப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறித் தொழில் செய்து, ஏழை நெசவாளர்கள் நலிந்த நிலையில் உள்ளார்கள். (குறுக்கீடு)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பெரும் மழையினால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் தமிழக அரசின் சார்பில் உதவிகள் வழங்கப்பட்டன. அதைப்போல என்னுடைய ஆற்காடு தொகுதியில் பாதிக்கப்பட்டிருக்கும் சுமார் 2,000 நெசவுத் தொழிலாளர்களில் 150 பேருக்குத்தான் உதவித் தொகை வழங்கப்பட்டது. அதனால் மானியத்துடன் கூடிய கடன் உதவி நெசவாளர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் நெசவாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் வருவாய்த் துறையின் மூலம் பல இடங்களிலே நெசவாளர்களுக்கு முறையாக வெள்ள நிவாரண நிதியாக வழங்கப்பட்டு இருக்கிறது. அதிலே ஒரு சில பகுதிகளிலே விடுபட்டுப்போய் இருக்கின்ற செய்தியை வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து அங்கே இருந்து பெறப்படுவதுதான் முறையாகும். நெசவாளர் நிதியிலேயிருந்து 1 கோடியே 6 இலட்சம் ரூபாய் இதற்காக வருவாய்த் துறையின் கணக்கில் வெள்ள நிவாரண நிதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்ற அளவிலே நான் என்னுடைய விடையை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 439, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**439 —**

**கூட்டுறவுத் துறை நூற்பாலைத் தொடங்குதல்**

***5157—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 ஏப்ரல் 3

(அ) வேடசந்தூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் அரசு நூறபாலை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வேடசந்தூர் தொகுதியில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதிக்கு அருகில் இருக்கின்ற அழகாபுரி, காசிபாளையம், தேவிநாயக்கம்பட்டி, விடுதலைப்பட்டி, குட்டம், தவிசரிபட்டி, பூம்பூர், வாணிகரை பகுதிகளில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்கிறார்கள். வேடசந்தூர் பகுதியில் அரசு கூட்டுறவுத் துறை மூலம், அந்தப் பகுதியில் இருக்கின்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகிற வகையில் அரசு நூற்பாலை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலம் நூல் உற்பத்தியில்தான் முன்னணியில் இருக்கிறது. ஆனால் நமது மாநிலம் பருத்தி சாகுபடியில் பின்னணியில் இருக்கிறது. நாம் இப்போதே மராட்டியத்திலிருந்தும் ஒரிசாவிலிருந்தும், காட்டன் கார்ப்பரேஷன் ஆஃப் இண்டியாவிலிருந்தும் அப்-கன்ட்ரி காட்டன் என்று சொல்லப்படுகின்ற பஞ்சை வாங்கித்தான் நம்முடைய ஆலைகளை முறையாகச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே புதிய ஆலைகள் அமைக்கும் உத்தேசம் எதுவும் தற்போதைக்கு இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

**திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறிக்கு அதிக அளவில் தேவைப்படும் பத்தாவது நம்பர் போன்ற சிட்டா நூல் வகைகளை ஓப்பன்-என்ட் என்று சொல்லப்படும் இயந்திரம் மூலமாக எந்த நிலையிலும் லாபகரமாக உற்பத்தி செய்யலாம் என்று அறிகிறேன். இந்த ஓப்பன்-என்ட் இயந்திரங்கள் தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் ஏதாவது ஒன்றிலாவது பொருத்தப்பட்டிருக்கிறதா அல்லது இதுசம்பந்தமாக ஏதேனும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.



1997 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விவரம் வருகின்ற மானியக் கோரிக்கையின்போது விவரமாக எடுத்துச் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 440, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.

**440 —**

### வெள்ளக்கோவிலில் அடுக்குமாடி விடுகள் கட்டுதல்

***6361—திரு. மு.பெ. சாமிநாதன் :**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

வெள்ளக்கோவிலில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இன்றைக்குத் தமிழகத்தில் வளர்ந்து வரக்கூடிய நகரங்களில் ஒன்றாக வெள்ளக்கோவில் நகரம் இருக்கின்றது. இந்தப் பகுதியிலே இன்றைக்கு அரசு அலுவலகங்களில் பணி புரிகின்ற அலுவலர்களுக்கு வீடுகள் கிடைக்காத ஒரு சூழ்நிலையில் ஈரோடு மற்றும் கரூர் போன்ற பகுதிகளிலிருந்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைத் தவிர்த்திட அங்கே வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் அடுக்குமாடி வீடுகள் கட்டித்தரக்கூடிய ஆலோசனையை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் கீழ் வெள்ளக்கோவில் வரவில்லை. எனவே, அங்கு வீடு கட்டுவது குறித்து செயற்குறிப்பு இல்லை. நிலம் மற்றும் போதிய கேட்பு இருக்கிறது என்று தெரிந்தால் பின்னர் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

[1997 ஏப்ரல் 3

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கோவை, பெரியார் மாவட்டப் பகுதிகளில் நிலத்தடி நீர் உயர்ந்திட வெள்ளக்காலங்களில் பவானி ஆற்று நீரை குளம், குட்டைகளில் கால்வாய்கள் மூலம் நிரப்புதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. இது பவானி நகரில் வெள்ளப் பெருக்கைப் பொறுத்தது ஆகும். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன் மற்றும் திரு. நா. பெரியசாமி ஆகியோர் என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒரு உறுப்பினர் இது குறித்துப் பேசலாம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொதுவாக கோவை மாவட்டமும், பெரியார் மாவட்டத்தினுடைய பெருந்துறை தொகுதியும் கடுமையான வறட்சிக்கு ஆட்பட்ட பகுதிகள் ஆகும். சமீபத்தில் மத்திய திட்டக் குழு உறுப்பினர், திரு. திம்மையா அவர்கள் தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மிகக் கீழே இறங்கிப் போயிருக்கிற மாவட்டங்களில் கோவை மாவட்டமும் ஒன்று என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதி—குடிநீருக்கும், அதேபோல் விவசாயக் கிணறுகளுக்கும் தண்ணீர் இல்லாமல், வறண்டுபோய் இருக்கின்றது. நான் இங்கே தங்கள் மூலம் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, மேட்டுப்பாளையத்திலிருந்து பெருந்துறைவரையில் இருக்கக்கூடிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்டு இருக்கக்கூடிய 9 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இருக்கக்கூடிய குளங்கள், குட்டைகளுக்கு, பவானி நதியில் வெள்ளம் ஏற்படுகிறபோது வெள்ளத்தில் பெருகி வழிகிற அந்த நீரை வடிய வைப்பதற்குரிய வாய்க்கால்கள் வெட்டி இந்தக் குளங்கள், குட்டைகளில் நீரை நிரப்பவேண்டும் என்பதற்கான ஒரு திட்டம் திட்டப்பட்டு அது 134 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் நடைமுறையில் அமலாக்கப்படாமல் நிலுவையில் நின்று வருவதாக அறிகிறோம். எனவே, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் கோவை, பெரியார் மாவட்டங்களில 2 அம்சங்களைத் தீர்க்க அது பயன்படுத்தப்படும். ஒன்று, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், வறண்ட பகுதியில் கிணறும் வற்றிய நிலையில் நம்பிக்கைகள் எல்லாம் அறுந்து போன நிலையில் காத்து இருக்கிறவர்களுக்கு அந்தக் கிணறுகளில் பாசனத்திற்கு நீர் ஊற்று கிடைக்கும் வகையில் குளங்களிலும், குட்டைகளிலும் நீரை நிரப்ப வேண்டும்.



1997 ஏப்ரல் 3] [திரு. கே. சுப்பராயன்]

அதேபோல், போர்வெல் தண்ணீர் மேலே ரெயிஸ் ஆக வேண்டுமானால் நிச்சயமாக இந்தக் குளங்களுக்கும், குட்டைகளுக்கும் தண்ணீர்விட வேண்டும். எனவே, மாநில அரசு, அதுவும் பவானி நதியில் வெள்ளப் பெருக்கில் மட்டுமே வடிகிற அந்தத் தண்ணீரை வடிக்க—குறிப்பாக இந்த 7 வருடங்களில் 3 முறை வெள்ளம் வழிந்தோடியிருக்கிறது, பல்லாயிரக்கணக்கான ஏக்கர் வாழை நாசம் ஆக்கப்பட்டிருக்கிறது, நாசம் ஆக்கப்படுவதைத் தடுப்பதற்கும், விவசாயக் கிணறுகளில் ஊற்று எடுப்பதற்கும், குடிநீருக்கு போர் வெல்லில் தண்ணீர் ரெயிஸ் ஆவதற்கும் இந்த வெள்ள நீரை வடிக்கிற இந்தத் திட்டத்தை மாநில அரசு மீண்டும் பரிசிலனையில் வைத்துக்கொண்டே இருக்காமல் நடைமுறைப்படுத்துவதற்குரிய காரிய சாத்தியத்தைச் செய்யவேண்டும்.

இதிலே ஒரு சிக்கலைக்கூட மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும் என்று நான் கருதுகிறேன். இதில் குடிநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினையும் வருகிறது, விவசாயக் கிணறும் வருகிறது. எனவே நாங்கள் பாசனத்திற்குச் செய்ய முடியும், குடிநீர்ப் பிரச்சினைக்குச் செய்ய முடியாது என்றும், 134 கோடி ரூபாயை நாங்கள் சுமக்க முடியாது என்றும் சொல்லி நிச்சயம் தட்டிக் கழித்து விடக்கூடாது என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், குடிநீர் வடிகால் வாரியமும் பொதுப்பணித் துறையும் இணைந்து நின்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக விசேஷமான அக்கறையைச் செலுத்துமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமழை பொழிந்து, பவானி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடுகிற வெள்ளத்தை, ஒரு கால்வாய் வெட்டி காரமடை, அவினாசி, அன்னூர், புளியம்பட்டி, பெருந்துறை மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுடைய திருப்பூர் தொகுதியில் பெருமாள் நல்லூரிலிருந்து பட்டம்பாளையம்வரையில் இருக்கிற பகுதிகளுக்கு எல்லாம் தண்ணீர் தா முடியுமா என்று ஒரு முதல் நிலை அறிக்கை ஆய்வு செய்யப்பட்டது. அதன் மூலம் 48 குளங்களுக்கும், 213 குட்டைகளுக்கும் தண்ணீர் தரலாம், 16,360 ஏக்கர் பாசனம் பெறும் என்று ஒரு அறிக்கையை அரசுக்கு அதிகாரிகள் அனுப்பியிருக்கிறார்கள். அதுவும் ஒரு முதல் நிலை அறிக்கை தான். இந்த அறிக்கைக்கு மாவட்ட

[திரு. துரைமுருகன்] [1997 ஏப்ரல் 3

ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையாளர், பிறகு பிளானிங் கமிஷன் இவர்கள் எல்லாம் அப்ரூவல் தரவேண்டும். அவர்கள் அப்ரூவல் தந்ததற்குப் பிறகு விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி ஆரம்பிக்கும். அந்த விரிவான அறிக்கையில் தான் இந்த 134 கோடி ரூபாய்க்கு மிகையாகப் போகுமா, குறைவாகப் போகுமா என்று அவர்கள் கணக்குப் போடுவார்கள். அதற்குப் பிறகுதான் குடிநீருக்கும் சேர்த்து வருவதால் குடிநீர் வடிகால் வாரியம் செய்வதா அல்லது பொதுப்பணித் துறை செய்வதா. அல்லது இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து செய்வதா என்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு செய்வார்கள். எனவே, முதல் நிலை அறிக்கை இப்போது அரசின் ஆய்வில் உள்ளது.

## 3. பேரவை விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

### திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கு தீ விபத்து குறித்து நீதிபதி விசாரணை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்றைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி வழங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள சந்தனமரக் கிடங்கில் 16-3-1997 ஞாயிற்றுக்கிழமை மாலை சுமார் 4 ¾ மணி அளவில் தீ விபத்து ஏற்பட்டு, சுமார் 68 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் எரிந்து சாம்பலாகி விட்டன என 17-3-1997 அன்று பேரவையில் ஓர் அறிக்கை அளிக்கப்பட்டது.

அந்தச் சம்பவம் குறித்து, மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணைத் தொடர்பாக 29-3-1997 அன்று வனத் துறையைச் சார்ந்த சார்நிலைப் பணியாளர்கள் திருவாளர்கள் எஸ். வைத்திலிங்கம் என்ற வனச் சரகரும், கோவிந்தன், கே. லட்சுமணன், சிவானந்தன், கன்னியப்பன் ஆகிய வனக் காப்பாளர்களும், பழனி என்ற சந்தன மரக் கிடங்கு எழுத்தர் மற்றும் கிடங்குப் பணியாளர் வரதன் ஆகியோரும், கோவிந்தன் என்பவருடைய மனைவி திருமதி முத்தம்மாள் என்பவரும் கோவிந்தனுடைய பேரன் சுதாகரன் என்ற சிறுவனும் கைது



1997 ஏப்ரல் 3] [கலைஞர் மு. கருணாநிதி]

செய்யப்பட்டு திருப்பத்தூர் குற்றவியல் நீதிபதி-1 முன்பு ஆஜர்படுத்தப்பட்டு, வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். சிறுவன் சுதாகரன், வேலூரில் உள்ள சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இந்தத் தீ விபத்து சுதாகரன் என்ற சிறுவன், சம்பவ நாளன்று, சந்தனக் கிடங்கிலே அடுப்புப் பற்றவைத்து சோறு பொங்கி விளையாடியதாகவும், அப்போது அருகில் இருந்த ஓலைக் கொட்டகையில் தீப்பற்றி அது சரிந்து சந்தனக் கட்டை மேல் தீ பரவி இருக்கிறது என்றும் முதல் நிலை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அதை அணைப்பதற்கு உதவும் முகத்தான் வந்த காவல் துறையினரையும், பொதுமக்களையும், வனத் துறையைச் சார்ந்த மேற்கூறப்பட்ட வனத்துறைப் பணியாளர்கள் தடுத்திருக்கிறார்கள் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவர்களின் இச்செயலால், தீப்பிடித்த பகுதியிலே இருந்து சந்தனக் கட்டைகளை எடுத்துப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்ல விடாமல் தடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நபர்கள், பெரியதாகத் தீ பரவுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திய குற்றத்திற்காக இ.பி.கோ. 436-இன் கீழும், அரசு அலுவலர்களை கடமையைச் செய்ய விடாமல் தடுத்த குற்றத்திற்காகப் பிரிவு 353-இன் கீழும், பொதுச் சொத்துக்கள் சேதம் விளைவித்தல் தடுப்புச் சட்டப் பிரிவு 3-இன் கீழும் இ.பி.கோ. 201 மற்றும் பிரிவு 285-இன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்கள்.

மேற்படி குற்றவாளிகளின் ஜாமீன் மனு 2-4-1997 அன்று வேலூர் செஷன்ஸ் கோர்ட் நீதிபதியால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

இத்தீ விபத்து காரணமாக அரசுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்பைக் கருதியும், மேலும் உண்மைகள் வெளிவரவும் உயர்நீதிமன்ற அமர்வு நீதிபதியினால் விரிவான முறையில் வெளிப்படையான நீதி விசாரணை ஒன்றை நடத்திட அரசு முடிவு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கான முறையான அறிவிப்பு மிக விரைவில் வெளியிடப்படும். இந்தத் தீ விபத்து தொடர்பாக எந்தவொரு தகவலையும் தெரிவிக்க விரும்பும் எந்தவொரு நபரும் இந்த விசாரணைக்கு உதவக் கூடிய வகையில் விரிவான முறையிலே விளம்பரங்கள் செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 3

## 4. கவன ஈர்ப்பு

### தலைஞாயிறு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலைக் கழிவுநீரால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-இன் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் கொண்டு வருவார்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதிக்கு அருகே உள்ள தலைஞாயிறு என்ற இடத்தில் அமைந்துள்ள...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கவன ஈர்ப்பு வாசகத்தை மட்டும் படியுங்கள்.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, தலைஞாயிறில் உள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் திருவாலி ஏரியில் கலப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, தலைஞாயிறு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவாளர்கள் என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவுச் சர்க்கரை ஆலை 20-1-1987-லிருந்து இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது:-

| | | |
|---|---|---|
| சர்க்கரை | - | 10,500 டன்/மாதமொன்றுக்கு |
| மொலாஸஸ் | - | 30,000 டன்/மாதமொன்றுக்கு |
| பிலடர் கேக் | - | 4,500 டன்/மாதமொன்றுக்கு |
| பகாஸ் (Bagasse) | | 3,000 டன்/மாதமொன்றுக்கு |



1997 ஏப்ரல் 3] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

உற்பத்தி செய்முறையில், கரும்பை அரைத்தல், சாறு பிழிதல், ஆவியாக்குதல், ஸல்பைட்டுடன் சேர்த்தல் மற்றும் படிகங்களாக்குதல் ஆகியவை அடங்கும். தொழிற்சாலை செய்முறையில் நாளொன்றுக்கு 100 கி.லி. வடிகால் கழிவுநீர் மற்றும் 600 கி.லி. தொழிற்சாலை கழிவு நீர் ஆகியவற்றை வெளியேற்றுகிறது. வடிகால் கழிவுநீர் நச்சுத்தடைத் தொட்டியில் சுத்திகரிக்கப்படுகிறது. தொழிற்சாலை, கீழ்க்கண்ட அமைப்புகளைக் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தியுள்ளது.

(1) எண்ணெய் மற்றும் உராய்வு எண்ணெய் (Grease) பிடிப்பான் (Oil and Grease Trap)

(2) சுண்ணாம்பு சலவைத் தொட்டி (Lime dosing tank)

(3) சேகரிப்பு கிணறு (Collection tank)

(4) காற்றிலி குட்டை (Anaerobic Lagoon)

(5) 15 எச்.பி. திறனுள்ள 2 காற்றூட்டிகள் உள்ள காற்றேட்டு தொட்டி (Aeration Tank)

(6) தெளிப்பான் (Clarifier) மற்றும்

(7) கசடு உலர்த்தும் படுகை (Sludge drying bed)

தொழிற்சாலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைத் தொழிற்சாலையின் சொந்த நிலத்திலேயே பாசனத்திற்கு உபயோகிக்க காற்று மற்றும் நீர்ச்சட்டங்களின் கீழ் 31-3-1995 வரை இசைவாணை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வாரியம் விதித்துள்ள நிபந்தனைகளின்படி தொழிற்சாலை நடக்கவில்லை. தொழிற்சாலையால், அருகிலுள்ள திருநகரி வாய்க்காலில் வெளியேற்றப்படும் கழிவுநீர் பற்றி புகார் மனுக்கள் அடிக்கடி பெறப்பட்டுள்ளன. 13-4-1996 மற்றும் 2-5-1996 ஆகிய தேதிகளில் மாவட்ட சுற்றுச்சூழல் நலப்பொறியாளர் தொழிற்சாலையை ஆய்வு செய்தபோது இவ்விவரம் உறுதி செய்து கொள்ளப்பட்டது. தொழிற்சாலை வாரிய இசைவின் நிபந்தனைகளை மீறியதால் இத்தொழிற்சாலைக்கு முகாந்திரம் கேட்டு 13-6-1996 அன்று நோட்டீஸ் அனுப்பப்பட்டது. இத்தொழிற்சாலை தனது 4-7-1996 நாளிட்ட பதிலில், பாசன வாய்க்காலில் கழிவுநீரை வெளியேற்றுவது நிறுத்தப்பட்டதாகவும், சுத்திகரிக்கப்பட்ட, கழிவுநீரை 55 ஏக்கர் நிலத்தில், தொழிற்சாலையின் 25 ஏக்கர் நிலத்திலும், நில உரிமையாளரின் ஒப்புதலுடன்

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1997 ஏப்ரல் 3

அருகாமையிலுள்ள 30 ஏக்கர் நிலத்திலும் பாசனத்திற்கு பயன்படுத்த உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டினை மேம்படுத்துவதாகவும் உறுதியளித்தது.

2. மேம்படுத்தும் பணிகளை தொழிற்சாலை செயல்படுத்துவதன் முன்னேற்றத்தை வாரியம் முறையாக கண்காணித்தது. 31-12-1996 அன்று தஞ்சை மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர் இத்தொழிற்சாலையை ஆய்வு செய்தபோது, முன்னால் கரும்பு அரைக்கப்பட்ட காலத்தில் வெளியேற்றப்பட்ட கழிவுநீர், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்புகளில் சேகரிக்கப்பட்டு, ஆவியாவதற்காக நிலத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது அறியப்பட்டது. செயல்முறைக் கழிவுநீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தாமல், திறந்த வெளியில் ஆவியாவதற்கு வெளியேற்றுவதனாலும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை இயக்காததாலும் வாரியத்தால் 26-1-1997 அன்று விளக்கம் கோரி நோட்டீஸ் அனுப்பப்பட்டது. தனது 3-2-1997 நாளிட்ட பதிலில் 30-12-1996 அன்று தஞ்சாவூர் மாவட்டச் சுற்றுச் சூழல் நலப் பொறியாளரது ஆய்வின் போது எதிர்வரும் கரும்பு அரைக்கும் காலத்திற்காகக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை சுத்தப்படுத்திக் கொண்டிருந்ததாகவும், 24-1-1997 முதல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்ந்து இயக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கழிவுநீரைப் பாசனத்திற்கு மட்டும் பயன்படுத்துவதாகவும் தெரிவித்தது. கழிவு நீர் வாய்க்கால் அடையாமலிருக்க வேண்டுமென, தொழிற்சாலை உரிமையாளருக்கு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் செயல்பாடுகள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் முனைப்புடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். ஆலையின் நிலத்தில் 25 ஏக்கரிலும், தனியாருடைய நிலத்தில் 30 ஏக்கரிலும் பாசனத்திற்காக அந்தக் கழிவு நீர் பயன்படுத்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றுவரை தொடர்ந்து திருநகரி பாசன வாய்க்காலில் கழிவு நீரைத் திறந்து விடுவதால், அப்பகுதி மக்கள் பயன்படுத்தும் குடிநீர் துர்நாற்றம் வீசுகிறது. திருவாலி ஏரியில் கழிவுநீர் கலப்பதால் ஏரியிலுள்ள ஆயிரக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள மீன்கள் தொடர்ந்து செத்து வருகின்றன. கால்நடைகள் தண்ணீர் குடிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, பொது மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் உள்ளடங்கிய ஒரு குழுவை



1997 ஏப்ரல் 3] [திரு. மு. பன்னீர்செல்வம்]

அமைத்து. விசாரித்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி அவர்கள் பெயரால் இருக்கும் இந்த ஆலை வருடந்தோறும் 2,500 டன் அளவுக்கு தன்னுடைய அரைவையைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. தற்போது இந்த ஆலை அரைவையையும் துவக்கியுள்ளது. சர்க்கரை ஆலை என்றால் வடிகூடம் இல்லையென்றால்தான் கழிவுநீர் பிரச்சினை மிகப் பெரியதாக இருக்கும். ஆலை மட்டும் வெளியேற்றும் கழிவுநீர் விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கு தக்க வாய்ப்பும் வசதியும் உள்ளது. கடந்த காலத்திலே ஏற்பட்ட அந்தத் தவறு இப்போது அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, தற்சமயம் 24-1-1997 முதல் அந்த ஆலை தன்னுடைய அரைவையையும் துவக்கியிருக்கிறது. இதன்மூலம் விவசாயத்திற்கு அந்த ஆலையினுடைய கழிவுநீர், ஏறத்தாழ ஆலையினுடைய சொந்த நிலம் 55 ஏக்கர், அதுபோக தனியாருடைய நிலம் ஒரு 30 ஏக்கர், ஆக 85 ஏக்கர் அளவுக்கு பாசனத்திற்கு அது பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதிலே மேற்கொண்டு ஏதாவது தவறு இருக்குமானால் உடனடியாக விசாரித்து, உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### தீ மிதித்தல் பற்றி முதல்வர் அவைக்கு வெளியில் கூறிய கருத்துக்கு விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீ மிதித்தல் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்டது தொடர்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் ஒரு விளக்கம் கோர அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவை நம்முடைய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையை விவாதிக்க இருக்கிறது. அதற்கு முன்பு, இந்த நாட்டு மக்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிய

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1997 ஏப்ரல் 3

ஒரு வார்த்தையின் காரணமாக ஏராளமான பக்தர்கள் மிகுந்த மனவேதனைப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதற்காக உங்களுடைய அனுமதியை நான் வேண்டுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு திருமண விழாவிலே பேசுகின்றபோது, தீ மிதிப்பது என்பது காட்டுமிராண்டித்தனம் என்று ஒரு வார்த்தையைப் பயன்படுத்தி இருக்கிறார்கள். காட்டுமிராண்டித்தனம் ஏராளமாக நம்முடைய இந்து மதத்திலேயும் சரி, முற்ற மதங்களிலேயும் சரி, இருக்கிறது என்பதை பல காரியங்களிலே உதாரணமாக உடன்கட்டையேறுவது என்பதெல்லாம் ஒரு காட்டுமிராண்டித்தனம் என்பதை நாம் அத்தனைபேரும் ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், தன்னைத்தானே வருத்திக்கொண்டு, யாருக்கும் எந்தவிதமான துன்பமும் துயரமும் கொடுக்காமல் தீ மிதித்து, இந்த நாட்டு மக்களும் தானும் வாழ வேண்டும் என்று கடவுளிடம் கோரிக்கை வைப்பவர்கள் எப்படி காட்டுமிராண்டி ஆவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. உதாரணமாக, மகாத்மா காந்திகூட 20,25 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து தன்னையே வருத்திக்கொண்ட நேரத்தில் நாடே அழுது கொண்டிருந்தது. அதைப் போல தீமிதி என்பது பாமர மக்கள் மட்டுமல்ல, நன்கு படித்தவர்கள், உயர்ந்த உத்தியோகத்திலேயிருப்பவர்கள் தீ மிதித்து தங்களை வருத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம், இந்த நாட்டில் ஏராளமான தீய காரியங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அது ஒரு கருவியாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய வார்த்தை ஏராளமான பக்தர்களுடைய மனதைப் புண்படுத்தியிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாரைக் கூப்பிடுகிறேனோ அவர்தான் பேச வேண்டும். நீங்கள் உட்காருங்கள். திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறருக்குத் தீங்கு இல்லாமல் தன்னைத்தானே வருத்திக்கொண்டு அரசிடம் அல்லது இறைவனிடம் கோரிக்கை வைத்து உண்ணாவிரதம் இருப்பது அல்லது பாதயாத்திரை செல்வது போன்ற வழக்கம் அனைத்து சமயங்களிலும் இருந்து வருகிறது. அரசியல் தலைவர்களும்கூட,



1997 ஏப்ரல் 3] [திரு. சி. வேலாயுதன்]

இதுபோன்ற முறைகளைத் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வருகின்றார்கள். எனவே, அரசு நன்மைக்காக அல்லது ஊர் நன்மைக்காக அல்லது மக்கள் செழித்து வாழ வேண்டும், மழை வேண்டும் என்றெல்லாம் வேண்டி இதுபோன்ற வேண்டுதல்களை பக்தர்கள் தொன்றுதொட்டு நடத்தி வருகிறார்கள். எனவே, இந்தப் பன்னாரியம்மன் கோவில் தீ மிதிப்புச் சம்பவத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வார்த்தை ஏராளமான பக்தர்களைப் பெரிதும் வேதனைக்குள்ளாக்கியது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே அறிவிப்பு கொடுத்தவர்கள், கொடுக்காதவர்கள் எல்லாம் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம் உட்காருங்கள். திரு. சுந்தரம், உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) சுந்தரம் உட்காருங்கள், சுந்தரம் உட்காருங்கள். இதை நான்காவது தடவையாகச் சொல்கிறேன். திரு. கே. சுப்பராயன், பேசுங்கள்.

முற்பகல் 10-50

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான விஷயம் என்பதால், ஒரு மிக முக்கியமான அரசியல் கட்சி என்கிற முறையிலே அதனுடைய வியூஸ் என்ன என்று சொல்ல வேண்டிய அவசியம் இருப்பதால் நான் இந்த விஷயத்திலே குறுக்கிட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திருமண விழாவில், தீ மிதிப்பது காட்டுமிராண்டித்தனம் என்று குறிப்பிட்டது குறித்து பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. நான் இந்தப் பிரச்சினையில், குறிப்பாகச் சொல்ல விரும்புவது, கடலில் விழுந்து கரையேறி நின்ற மேதையான விவேகானந்தர் அவர்கள், இந்து சாஸ்திரங்களில் தீயிட்டுப் பொசுக்க வேண்டிய பிசாசுத்தனமான கருத்துக்கள் இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றைத் தீயிட்டுப் பொசுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, பகுத்தறிவு இயக்கத்தில் வளர்ந்ததால், விவேகானந்தர் அவர்களுடைய அளவிற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடவில்லை. விவேகானந்தர் அவர்கள் குறிப்பிட்டதையே அவர்கள் வழிமொழிந்திருக்கிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். (மேசையைத்

தட்டும் ஒலி) எனவே, தயவுசெய்து மதங்களின் பெயரால். மடாலயங்களின் பெயரால், விவேகானந்தரின் பெயரால் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவேகானந்தர் சொன்னபடி தீயிட்டுப் பொசுக்க வேண்டிய பிசாசுத்தனமான கருத்துக்களை உருவாக்காதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில், ஒரு தீ மிதிப்புச் சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னக் கருத்தை ஆதரித்துப் பேசுவதற்காக நான் அன்றே முயற்சி செய்தேன். ஆனால், அன்று நேரம் கிடைக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை அதற்கு நான பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

"மூடப்பழக்க வழக்கம், முடிவுற்ற கண்ணுறக்கம்
ஓடுவது என்றோ, ஒளிவது என்றோ"

என்று பாரதிதாசன் அவர்கள் சொல்லிய கருத்தை வலியுறுத்தி, கடவுள் நம்பிக்கைக்கும், மூட நம்பிக்கைக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. கடவுள் நம்பிக்கை என்பது ஒரு தனிப்பட்ட மனிதனுடைய தனிப்பட்ட விஷயம். ஆனால், மூட நம்பிக்கை என்பது வேறு விஷயம். தீ மிதிப்பது, அதே போல் வேப்பிலையைக் கட்டிக்கொண்டு ஆடுவது, சாஸ்திரத்தின் பெயரால் ஆடுகளையும், மாடுகளையும் பலியிடுவது ஆகிய இவைகள் எல்லாம் காட்டுமிராண்டித்தனம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதைச் சரியான நேரத்திலே சுட்டியிருப்பதை நான் மனதார விரும்புகிறேன், வாழ்த்துகின்றேன், வரவேற்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) திரு. சுந்தரம், நீங்கள் என்ன முதலமைச்சரா? திரு. சுந்தரம் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினை குறித்து இங்கே சில கருத்துக்களை எடுத்துக்கூறி, அதற்கு என்னுடைய விளக்கம் என்ன என்று கேட்டிருக்கிறார்கள். நான் விளக்கம் அளிப்பதற்கு முன்பு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னோடித் தலைவர்களில் ஒருவரான திரு. சுப்பராயன் அவர்கள், அவருடைய கருத்தையும் அவருடைய கட்சியின் கருத்தாக எடுத்துச் சொல்லி, விவேகானந்தரை மேற்கோள் காட்டியிருக்கின்றார். விவேகானந்தரைப் போலவே மகாத்மா காந்தியடிகளும்கூட கோயில்களைப் பற்றி ஒரு வார்த்தையைச்



சொல்லியிருக்கிறார். அதை நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை; தேவையில்லை என்பதால். அது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். கோயில்கள் என்றால் என்ன என்பதுபற்றி காந்தியடிகளே சொல்லியிருக்கின்றார். நான் சாதாரணமானவன் சொல்லிவிட்ட காரணத்தினால், இன்றைக்கு அது பெரிதுபடுத்தப்படுகிறது. மக்கள் அனைவரும் குமுறிக் கொண்டிருப்பதாக திரு. வேலாயுதன் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குமுறலை திரு. வேலாயுதன் அவர்கள் இங்கே சொல்லும்போது சிரித்த முகத்தோடு (சிரிப்பு) சொன்னதுதான் எனக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. நண்பர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், திருமண விழாவில் பேசிய கருத்தை வரிக்கு வரி அப்படியே ஆதரிப்பதாக எடுத்துக் கூறினார்கள். முதலில், திருமண விழாவில் நான் என்ன பேசினேன் என்பதை ஏடுகளிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். பன்னாரி அம்மன் கோவிலிலே நடந்த திருவிழா, இன்று நேற்றல்ல பல ஆண்டுகாலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு நான் அதைப்பற்றி விமர்சிக்கவில்லை, காரணம் விமர்சிக்க வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படவில்லை. அதற்கு முன்பும் நான் விமர்சிக்கவில்லை. பொதுவாக, திராவிட இயக்கத்தினுடைய கொள்கை, தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை— இவைகளில், ஒன்றில் சற்று கடுமையான குரலாக இருக்கும், பெரியாருடைய கொள்கையில் அதை எதிரொலிப்பதில். அண்ணாவினுடைய கொள்கை, அதுவேயானாலும் கனிவாக எடுத்துச்சொல்கின்ற முறையிருக்கும். நான் பெரியாருடைய மாணவனாக, பெரியாருடைய ஈரோடு குருகுலத்திலே இருந்து, அவர்களால் தட்டி வளர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். அறிஞர் அண்ணா அவர்களுடைய கரம் பிடித்து, வளர்ந்த தம்பிமார்களில் நானும் ஒருவன். பெரியார் அவர்கள் பிள்ளையாரை உடைக்க வேண்டுமென்று சொன்னபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள், 'நான் பிள்ளையாரையும் உடைக்க மாட்டேன், பிள்ளையாருக்குத் தேங்காயையும் உடைக்க மாட்டேன்' என்று சொன்னார்கள்.

முற்பகல் 10-55

திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடவுள் கொள்கை என்னவென்று கேட்டபொழுது, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பதுதான் எங்களுடைய கடவுள் கொள்கை என்று அறிஞர் அண்ணா அவர்கள்

எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனால், அண்ணாவைப் பொறுத்தவரையில், என்னைப் பொறுத்தவரையில், இன்னும் கட்சியில் இருக்கின்ற தலைவர்களைப் பொறுத்தவரையில், 'நாங்கள் நாத்திகர்கள்தான், இதைச் சொல்ல நாங்கள் என்றைக்கும் அச்சப்பட்டதும் இல்லை, அச்சப்படப் போவதும் இல்லை.' (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தன்னை ஒரு நாத்திகர் என்று விளம்பரப்படுத்திக் கொண்டவர். பஞ்சாப் சிங்கம் பகவத்சிங், 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்த விகடன் பத்திரிகையில் 'இந்து' திரு. ராம் ஒரு பேட்டி கொடுத்தபோது, தன்னை ஒரு நாத்திகன் என்றே அதில் அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். நாத்திகனாக இருந்தாலும், ஆத்திகர்களுடைய மனதைப் புண்படுத்தக் கூடாது என்பதில், அறிஞர் அண்ணா அவர்களும் நானும் மிகவும் அக்கறை உள்ளவர்கள். அதனால்தான், அறநிலையத் துறை அமைச்சராக, எங்களுடைய அமைச்சர்கள் யார் பொறுப்பேற்றிருந்தாலும் - அண்ணா அவர்கள் காலத்தில் நாவலர் நெடுஞ்செழியன் கொஞ்சகாலம் பொறுப்பு ஏற்றிருந்தார். பிறகு நான் முதலமைச்சராக இருந்தபோது, கோவை கண்ணப்பன் பொறுப்பு ஏற்றிருந்தார்; சுப்பையா பொறுப்பு ஏற்றிருந்தார்; கே.பி.கே. பொறுப்பு ஏற்றிருந்தார்; இப்பொழுது செங்குட்டுவன் பொறுப்பு ஏற்று இருக்கிறார்—இவர்களெல்லாம் ஆலயங்களுக்குச் செல்வதையோ ஆலயங்களில் நடைபெறுகின்ற முறைகளைக் கவனிப்பதையோ, அந்த விழாக்களில் கலந்துகொள்வதையோ என்றைக்கும் தடுத்ததில்லை. ஏனென்றால், அரசின் சார்பில் ஒரு துறை இருக்கும்போது, அந்தத் துறைக்குள்ள அமைச்சர் அங்கே செல்வதில் எந்தவிதமான தவறும் இல்லை என்று அதை நாங்கள் தடுக்கவும் இல்லை, அதைப் பற்றி விமர்சித்ததும் இல்லை; கூடாது என்று அவர்களுக்கு உத்தரவிட்டதும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இதற்கு முன்பு 20 ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை ஓட்டியவனே நான்தான் என்பதை நாடு நன்றாக அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) பக்தர்கள் தங்களுடைய கொள்கையில் இருக்கும்போது, அந்தக் கொள்கைக்கு அவர்கள் எவை தேவை என்று கூறுகிறார்களோ அவைகளையெல்லாம் செய்து கொடுப்பதாக இந்த அரசு இருக்க வேண்டுமென்று எண்ணக் கூடியவன்.

'காட்டுமிராண்டித்தனம்' என்று எதைச் சொன்னேன் என்றால், கலைஞருடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்று நான் தீ மிதிக்கிறேன் என்று ஒரு அமைச்சர் தீ மிதிப்பதோ, சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தீ மிதிப்பதோ 'காட்டுமிராண்டித்தனம்' என்றுதான் நான் குறிப்பிட்டேனே அல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) பன்னாரி அம்மன் பக்தர்களெல்லாம் காட்டுமிராண்டிகள் என்று நான் சொல்லவில்லை, நான் அப்படிச் சொன்னதும் கிடையாது. கடந்த ஆண்டோ அல்லது அதற்கு முன்பு இருந்த ஆண்டுகளிலோ இப்படிப்பட்ட காரியங்களைப்பற்றி இது நல்லதல்ல, நாகரிகம் அற்றவை என்று நான் சொல்லியிருக்கக்கூடும். அது எங்களுடைய அறிவுக்கு ஒத்து வராதது என்று கூறியிருக்கக் கூடும். நாங்கள் அறவே கடவுளை மறுப்பவர்கள் அல்ல. ஒரே கடவுள், அந்த ஒரே கடவுள்—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு மீனாட்சியம்மனாக இருக்கலாம் (சிரிப்பு) நான் அதைத் தடுத்தது கிடையாது. அதைப்போல அவரவர்களுக்கு இஷ்டப்பட்ட ஒரு கடவுளை அவர்கள் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் உண்டு. அவர்களுக்கிடையில்தான் நாங்கள் சிலபேர் நாத்திகர்களாக இருக்கிறோம். அதையும் நான் மறுப்பதற்கில்லை. இருந்தாலும், கடவுள் பெயரால் சில தவறுகள் நடைபெறுவதை நாம் கண் மூடிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போதுகூட எல்லா மதத்திலும் பல காட்டுமிராண்டித்தனமான காரியங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இதுகூட பக்தர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய வார்த்தைதான். (சிரிப்பு) இங்கே பதிவேட்டில் ஏறிவிட்டது. அதை மாற்ற முடியாது, மாற்றவும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். (சிரிப்பு) என் கையில் இருப்பது விடுதலை பத்திரிகை. இந்தப் பத்திரிகையில் படம் ஒன்று வந்திருக்கிறது. கோவை மாவட்டம் காரமடையில் ஆண்டுதோறும் பங்குனித் திருவிழா என்ற பெயரால், பூசாரியினுடைய வாயில் உள்ள வாழைப்பழத்தைப் பெண்கள் தங்கள் வாயால் கவ்வி விழுங்குகிறார்கள். அப்படி விழுங்கினால், பிள்ளை இல்லாதவர்களுக்குப் பிள்ளை பிறக்கும் என்று சொல்கிறார்கள். இதிலே படமே இருக்கிறது. பாருங்கள். பூசாரியினுடைய வாயில் வாழைப்பழம், அந்தப் பழத்தை பூசாரியினுடைய வாயிலிருந்து கவ்வுகிறார்கள். இதை என்னத்தனம் என்று கூறுவது என்பதை பகுத்தறிவு உலகத்தை உருவாக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நாம்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். எனவே, பன்னாரி அம்மன் கோயில் பக்தர்களைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கு என்றும் கிடையாது.

|கலைஞர் மு. கருணாநிதி| [1997 ஏப்ரல் 3

முற்பகல் 11-00

கடந்த காலத்திலே தீ மிதி, காவடி எடுத்தல், கரகம் ஆடுதல், அங்கப்பிரதட்சணம், மண் சோறு சாப்பிடுதல் போன்ற பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஒரு வீட்டிலேகூட தன்னுடைய கொள்கையைத் திணிப்பது கூடாது, என்னுடைய வீட்டிலேயேகூட சில பேர், என்னுடைய சகோதரியாரோ, மற்றவர்களோ தெய்வபக்தி உள்ளவர்களாக இருக்கலாம்; நான் தடுப்பது கிடையாது. இன்னும் சொல்லப்போனால் தந்தை பெரியாருடைய இல்லத்திலேயே அவருடைய சகோதரிகள் அப்படி இருந்திருக்கலாம். அவர் ஒரு கோவிலினுடைய டிரஸ்டியாக இருந்து தீரவேண்டிய நெருக்கடியின் காரணமாக, அவருடைய இல்லத்திலேயே ஒரு கோயில் இருந்தது. அப்போதே அவர் சுயமரியாதை கருத்துகளைச் சொல்கிறபோது, 'உங்கள் வீட்டிலேயே கோயில் இருக்கலாமா' என்றெல்லாம்கூட அன்றைக்குக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் பெரியார் தன்னைப் பொறுத்தவரை, தன்னுடைய கொள்கைகளை மற்றவர்களுக்கு எடுத்துச்சொல்கிற அதே நேரத்தில், யாரிடத்திலும் திணிப்பவராக என்றைக்கும் இருந்ததில்லை. அதை அழுத்தம் திருத்தமாக, வேகமாகச் சொல்பவராகத்தான் இருப்பார். அதைப்போலத்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற நாங்கள், எங்கள் கொள்கைகளை மற்றவர்களுடைய மனதிலே திணிக்க என்றைக்கும் முயற்சித்தது கிடையாது. பக்தி வேறு; இது வேறு. நான் யாரையும் புண்படுத்த வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை; நாடு பண்பட வேண்டுமென்பதற்காகச் சொன்ன வார்த்தையே அல்லாமல் வேறல்ல (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அளவில் என்னுடைய விளக்கம் போதுமானது என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு மாத்திரம் அல்ல, பன்னாரி அம்மனுடைய பக்தர்களுக்கெல்லாம் கூறிக்கொள்கிறேன். அவர்களைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லை. என்னுடைய அமைச்சர், என்னுடைய கட்சி எம்.எல்.ஏக்கள், இந்த ஆட்சி வாழ வேண்டுமென்பதற்காக தீ மிதித்தார்கள் என்றால் அது தேவையில்லை என்பதுதான். ஏனென்றால் எத்தனையோ தீயைத் தாண்டியிருக்கிறோம். ஆகவே இந்தத் தீயைத் தாண்டித்தான், இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி எத்தனையோ காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டது உண்டு. ஜனநாயகத்தை தூக்கி நிறுத்துவோம் என்று குரல் கொடுத்ததற்காக நாங்கள் ஆட்சியை இழந்தவர்கள். ஈழத்தில் இருக்கிற தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த காரணத்தால் விடுதலைப் புலிகளோடு எங்களை சம்பந்தப்படுத்தி, அந்த நேரத்திலே எங்களுடைய



1997 ஏப்ரல் 3] |கலைஞர் மு. கருணாநிதி|

ஆட்சியை இழந்தவர்கள். இப்போது பகுத்தறிவுக்காக ஒரு முறை ஆட்சியை இழக்க வேண்டுமென்றாலும்கூட அதற்கும் தயாராக இருப்பவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயுள்ள நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் விளக்கம் அளிக்க விரும்புகிறேன். யாரையும் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுடைய நோக்கமல்ல. என்னுடைய கட்சிக்காரர்கள், என் பெயரைச் சொல்லி, என்னுடைய ஆட்சி நீடிக்க வேண்டுமென்பதற்காக தீ மிதிப்பது காட்டுமிராண்டித்தனம் என்பதை இன்றைக்கும் சொல்கிறேன். இதை அவர்கள் ஏற்று மன்னிப்பு கேட்டுக் கொண்டுவிட்டார்கள். குமுதம் பத்திரிகையிலே ஒரு தலையங்கம் படித்தேன். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்ற குறளை கலைஞருக்கு ஞாபகப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். நான் உடனே குமுதம் ஆசிரியருக்கு டெலிபோன் செய்து சொன்னேன். உங்கள் முறையைத்தான் பின்பற்றி இருக்கிறேன். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். கடிதோச்சினேன் கொஞ்சம் வேகமான வார்த்தையைப் போட்டு; மெல்ல எறிந்தேன் அவர்களை மன்னித்து என்று அவர்களுக்குச் சொன்னேன். (மேசையைத் தட்டும ஒலி) இதைத்தான் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 29—சமூக நலன்

### (ஆ) கோரிக்கை எண் 12—1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1997-98 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் கோரிக்கை எண் 29—சமூக நலன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 600,04,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2428. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள் இந்தக் கல்வி ஆண்டே கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2427, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2424, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2389, திரு. நா. பெரியசாமி

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2388, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம்



தொகுதியில் விதவைப் பெண்கள், ஏழைப் பெண்கள் அனைவருக்கும் இலவச தையல் இயந்திரங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2413, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டத்தில் பணிபுரியும் மகளிருக்கு விடுதி (Working Women's Hostel) அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2433, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரியில் பணிபுரியும் மகளிருக்கு தங்கும் விடுதி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.600,04,30,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2403, திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உடல் ஊனமுற்றோர் அனைவருக்கும் அனைத்துப் பேருந்துகளிலும் இலவசமாகச் செல்ல ஆணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 600,04,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று பேரவையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவர்களுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 12— 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,89,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1904, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வடாற்காடு அம்பேத்கர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் ஸ்ரீலட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோவில் உயர்ந்த மலையில் அமைந்துள்ளதால் அங்கு ஓர் இழுவை ரயில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

---

@ 559-622 ஆம் பக்கங்களில் இணைப்பு 1—ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1906, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1905, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1890, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், கோட்டூர் கொழுந்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான இடத்தில் செயல்பட்டு வரும் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அந்த இடத்தை இலவசமாக வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1915, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் கோயில் இராஜகோபுரத் திருப்பணிக்கு அரசு கோயில் (வளர்ச்சி) பராமரிப்பு நிதியிலிருந்து நிதியுதவி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2866, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கருமாரியம்மன் கோவில் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதைச் செப்பனிடுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1913, திரு. அ. வ. அப்துல் நாசர்.

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரி தொகுதியில் கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிக்கு விண்ணப்பித்துள்ள அனைத்துக் கோயில்களுக்கும் உடனடியாக நிதி வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1894, திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டிலேயே கலை நுணுக்க வேலைப்பாடுகளில் இரண்டாவது இடத்தை வகிக்கும் நாகூர் சிவன்கோயில் தேர் சீரமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.14,89,16,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1899, திரு. பி. வெங்கடசாமி.

* **திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தெய்வ நம்பிக்கை உள்ளவர்களைத் திருக்கோயில் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும் என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்தும் நேர்வில் அதிக அளவில் பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 14,89,16,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள

கொள்கை விளக்கக் குறிப்புகளை "நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள். தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவைகளுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் 14 பேர் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும் 7 நிமிடத்திற்குள் தங்கள் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முதலில் திரு. பா. வேல்துரை அவர்களை விவாதத்தைத் தொடங்கி வைக்க அழைக்கின்றேன்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலன் மற்றும் அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் தங்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

சமூகநலத் துறையைப் பொறுத்தவரை, 8-ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு திருமண உதவித் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும் என்று அனுமதித்து அரசு புதிதாக உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுமார் 450-லிருந்து 500 பெண்களுக்குத்தான் ரூ.10,000 வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் சுமார் 1,200-லிருந்து 1,500 விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. ஒரு ஒன்றியத்தில் 15-லிருந்து 20 பேருக்குத்தான் அந்தத் திருமண உதவி கிடைக்கின்றது. எனவே, மார்ச் மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரை நடைபெறுகின்ற திருமணங்களுக்கு மட்டுமே இந்த உதவித் தொகை கிடைக்கின்றது. அதற்குப் பின்னால் திருமணம் செய்து கொள்கின்ற அந்த ஏழைப் பெண்களுக்கு இந்த உதவி கிடைப்பதில்லை. எனவே, 'கோட்டா' என்ற முறையிலான இந்தத் திட்டத்தை மாற்றி, அனைத்து ஏழைகளுக்கும் திருமண உதவி என்று நீங்கள் நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

@623-637 ஆம் பக்கங்களில் இணைப்பு 2-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



அதேபோன்று, இரண்டு பெண் குழந்தைகளுக்கு உதவித் திட்டம் என்ற திட்டத்தின்கீழ், நமது ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு உதவி வழங்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். அந்தத் திட்டத்தையும் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, அந்தத் திட்டத்திலே, இறுதியாகத் திருமணத்திற்கு ரூ.20,000 வழங்கப்படுகிறது. அத்துடன் அவர்களுக்கு வேலைவாய்ப்பையும் உருவாக்கித் தருவதற்கானதொரு திட்டத்தை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைப் பெண்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும் கடனுதவி வழங்குகின்றபோது, மானியமாக ரூ.1,000 மட்டும் வழங்கப்படுகிறது. அதனை மாற்றி, அவர்கள் பெறுகின்ற கடனில் பாதித் தொகையினை மானியமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும், விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு திருமண உதவியாக ரூ.2,000 அரசால் வழங்கப்படுகிறது. அதனை ரூ.10,000-ஆக வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோருக்கு தையல் மிஷின் வழங்கும்போது, கடந்த காலத்தில் ஒரு மாவட்டத்திற்கு 25 ஆக இருந்தது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் கடைசியில், எலெக்ஷனை முன்னிட்டு அதனை 100-ஆக உயர்த்தி விட்டுச் சென்றார்கள். ஆனால், நமது ஆட்சி வந்து 90 கொடுத்திருக்கிறார்கள், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே. இதற்காக 400, 500 அப்ளிகேஷன்கள் வருகின்றன. அந்த 400, 500 அப்ளிகேஷன்களிலுமே எவ்வளவு உதவி கேட்டாலும், அதை வழங்குகிற அளவிலே இந்த உதவித் தொகையை அனைவருக்கும் பரவலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை வழங்குவதில் காலதாமதப்படுத்தாமல், உடனடியாக அந்த உதவித் தொகையை வழங்க வேண்டும். ஊனமுற்றவர்களைப் போட்டு இழுக்கடித்து, காலத்தை கடத்துகிறபோது, அவர்கள் விரக்தி அடைந்து விடுகிறார்கள். எனவே, அந்த உதவியை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவைப் பொறுத்தவரையில், இப்போது ஊதியத்தை 200 ரூபாயாக நீங்கள் 'பிக்ஸ்' செய்திருக்கிறீர்கள். சத்துணவு அமைப்பாளர்களாகிய அவர்கள், தங்களையும் 'டி' குரூப் ஊழியர்களாக

ஆக்கி, அரசு ஊழியர்களாக ஆக்கி, ரூ.750/- சம்பள விகிதத்தினை தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அது நியாயமான கோரிக்கை; அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணிக்கொடையாக அவர்களுக்கு குறைந்தபட்சம் 20 ஆயிரம் ரூபாயாக வழங்கினால், அவர்களுடைய குடும்பம் எதிர்காலத்தில் நல்லபடியாக வாழ்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சத்துணவு ஊழியர்களுக்கு மற்ற அரசு ஊழியர்களைப் போன்று டி.ஏ. வழங்கினாலும், 11 சதவிகிதம் குறைவாக வழங்குகிறீர்கள். அந்த 11 சதவிகிதத்தையும் சேர்த்து, மற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல வழங்கினால், அது அவர்களுடைய வாழ்க்கையிலே ஒளி வீசும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சத்துணவு போடுவதிலே பல ஊழல்கள் நடைபெறுவதாக ஆங்காங்கே மக்கள் கூறி வருகிறார்கள். சத்துணவுத் திட்டத்திலே முட்டை போடுவது போன்றவற்றையெல்லாம் தீவிரமாகக் கண்காணித்து, குழந்தைகளுக்கு நல்லமுறையிலே உணவு கிடைக்கிற வகையிலே அரசு நல்ல ஆய்வுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, அறநிலையத் துறையைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அர்ச்சகர்கள், ஓதுவார்கள் இவர்களுக்கெல்லாம் 100 ரூபாய் ஊதியம் அளிக்கப்படுகிறது. இது உண்மையிலேயே, எந்தவகையிலே அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும்? அவர்களுக்கு ஓய்வூதியம் 500 ரூபாயாக அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், சம்பளம் 100 ரூபாய். எனவே, அந்தச் சம்பளத்தை நீங்கள் 500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுகிறேன்.

அறநிலையத் துறையின் மூலமாக திருமண உதவித் திட்டம் என்பதில், 3,000 ரூபாய் வழங்குகிறார்கள். இந்தத் திட்டம் மக்கள் மத்தியிலே எந்தவிதமான வரவேற்பையும் பெறவில்லை. எனவே, இந்த மூவாயிரம் ரூபாய் திட்டத்தை, நீங்கள் ஐயாயிரம் ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே உள்ள சிறிய கோயில்களையெல்லாம் அரசு எடுத்துக் கொண்டு, அந்தக் கோயில்களுக்கு உதவியும் செய்யாமல், அந்த ஊர் மக்கள் அந்தக் கோயில்களை அபிவிருத்தி செய்யவும் விடாமல் ஒரு மோசமான சூழ்நிலை இருப்பதால், நலிவுற்ற கோயில்களை அரசாங்கமே உருவாக்குவது போன்ற ஒரு மோசமான நிலை இருக்கிறது.



எனவே, அந்தக் கோயில்களுக்குத் திருப்பணி செய்ய, ஒன்று, திரும்பவும் பொதுமக்களிடத்திலே, அதாவது கிராம மக்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும்; அல்லது அந்தக் கோயில்களுக்கு ஆண்டுக்காண்டு, அவை பராமரிக்கப்படுவதற்கான ஒரு பெரிய தொகையையாவது அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோயில்களிலே, யானைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்செந்தூரில், 'புருஷோத்தமன்' என்ற ஒரு யானை; 60 வயதுள்ள யானை. அந்த யானை இறந்துவிட்டது. அந்த யானை இறந்தவுடனே மக்களுடைய மனதிலே ஒரு பெரிய கஷ்டம். ஏனென்றால், யானையை, விநாயகருக்கு ஒப்பாக இந்துக்கள் எல்லாம் மதிக்கிறார்கள். எனவே, அந்த யானையை 60 வயதுவரையிலேயும் கோயிலிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற அவசியம் கிடையாது. எனவே, 30 வயது ஆனவுடனேயே யானையை 'பாரஸ்ட்'டிலே ஒப்படைத்துவிட்டு, பழையபடி குறைந்த வயதான ஒரு யானையை வாங்கினால், அந்தக் கோயிலுக்கு அது மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் கூறக் கடமைபட்டிருக்கிறேன்.

அடுத்து அரசு நிலங்கள் ஆக்கிரமிப்பு. அரசாங்க நிலங்களையெல்லாம் ஆக்கிரமித்தால், புல்டோசர்களை வைத்துத் தள்ளி நாம் உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்றிவிடுகிறோம். ஆனால் கோயில் நிலங்கள் எல்லாம்கூட அரசாங்கத்தின் நிலங்கள்தான். அந்தக் கோயில் நிலங்களைக்கூட ஆக்கிரமித்து என்னவெல்லாமோ செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் சொத்துக்களை குத்தகைக்கும் கொடுப்பதில்லை. கோயில் நிலங்களிலே வீடுகளைக் கட்டிக் கொண்டு குடியிருக்கிறார்கள். ஆகவே, கோயில் நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு, அந்த நிலத்தை, அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்கே கிரயம் போட்டுக் கொடுத்துவிட்டால், அது அரசாங்கத்திற்கு பலவகையிலே இலாபகரமாக இருக்கும். அதைப்போல, கோயில் நிலங்களிலே பருவம் செய்பவர்களுக்கு 'மார்க்கெட் ரேட்'-டிலே அந்த நிலத்தை கிரயம் செய்து கொடுத்தால், (மணியடிக்கப்பெற்றது) மிகவும் முக்கியமான விஷயம்., அரசாங்கத்திற்கு சுமார் 500 கோடி அல்லது 1,000 கோடி ரூபாய் வருமானம் வரும். அதுவும் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டிக் கொண்டு, உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் உடனடியாக கிரயம் போட்டு—இப்போது டவுன்ஷிப்களிலே இருக்கிற சொத்துக்களை அவ்வாறு கிரயம் போட்டு — விற்றால், ஏகப்பட்ட நன்மை; அரசுக்கு நிறைய வருமானம் வரும்.

அதேபோல், சேரன்மாதேவி தொகுதியில் கல்லிடைக்குறிச்சி. மானந்தியப்பர் கோயில் நிர்வாகத்திற்குட்பட்ட அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு உடனடியாக திருப்பணி செய்ய வேண்டும். நிறைய மக்கள் வெகு நாட்களாக வேண்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல், மேலச்சேவலில் தேர் ஓடாமல் கடந்த ஆட்சிக் காலத்திலே தேரையெல்லாம் கழற்றிப் போட்டுவிட்டார்கள். அவ்வாறு கழற்றிப் போட்டு, 10 வருடங்கள், 15 வருடங்கள் ஆகியும், அந்தத் தேரைச் சரி செய்யவில்லை. இந்த அரசால் 15 இலட்சம் ரூபாய் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது; அந்தத் தேரை நீங்கள் கண்டிப்பாக இந்த ஆட்சிக் காலத்திலே ஓட விடுவீர்கள் என்று நம்புகிறேன்.

முற்பகல் 11-15

அடுத்து, சேரன்மாதேவியில் உள்ள வைத்தியநாதசாமி கோயில், ஆற்றங்கரையில் அழிந்து கொண்டிருக்கும் அப்பர் கோயில் போன்றவற்றுக்கு உடனடியாக திருப்பணி செய்ய ஆவன செய்ய வேண்டுமாய் நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து. தஞ்சை பெரிய கோயிலை யூனிசெப் உலக நிறுவனமானது உலக நினைவுச் சின்னமாக அறிவித்திருக்கிறது. அந்தக் கோயிலை சுற்றுலாத் துறை கையகப்படுத்தி, அந்தக் கோயிலின் அகழிகளை எல்லாம் சுத்தப்படுத்தி, அதில் தண்ணீர் பெருக்கி, படகுத் துறை அமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் ஏற்பாடு செய்தால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, இராமேஸ்வரம் கோயிலை எடுத்துக்கொண்டால் அங்கே 4 கோபுரங்கள் இருக்கின்றன. வடக்கு மற்றும் தெற்கு கோபுரங்கள் மட்டும் மொட்டையாக இருக்கின்றன. கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. கடந்த 23-ம் தேதியிலிருந்து 28-ம் தேதிவரை அங்கே பெரிய அளவில் உண்ணாவிரதம் எல்லாம் இருந்தார்கள். பல மடத்தவர்கள், இராமகிருஷ்ணா மடம் மற்றும் சிருங்கேரி மடத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அந்த உண்ணாவிரதத்தை ஆசிர்வதித்து கோபுரத்தை கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். கடந்த சில நாட்களுக்கு முன்பாக கோயில் நிர்வாக அதிகாரி கோபுரங்கள் கட்டுவதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும்,





3 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும் என்றும் அறிவித்தார்கள். ஆனால் கமிஷனர் அவர்கள் அப்படி எதுவும் இல்லை என்று சொல்லுகிறார்கள். இராமேஸ்வரம் கோயிலுக்கு உலகம் முழுவதும் பக்தர்கள் இருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் ஒரு மதிப்பீட்டைத் தயார் செய்து, அறிவிப்புக் கொடுத்தால் உலகம் முழுவதிலிருந்தும் அதற்கான நன்கொடை வரும். கோபுரங்கள் இரண்டும் கட்டப்படுமானால் தமிழகமே சுபிட்சமாக வாழும் என்ற ஒரு கல்வெட்டுகூட அங்கே இருக்கிறது. ஆகவே அரசு இதில் உடனடியாக தலையிட்டு அந்தக் கோபுரங்களைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு இந்த அருமையான வாய்ப்பைக் கொடுத்த உங்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திருமதி ஏ.ஆர். வேடம்மாள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கையில் கலந்துகொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், என்னை சட்டமன்ற உறுப்பினராக்கிய தாயுள்ளம் கொண்ட தன்னிகரில்லாத் தலைவர் முதல்வர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெண்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்ட நமது முதல்வர் அவர்கள் இன்று பெண்களுக்காக, மகளிர் நலன் காக்கும் வகையில் பல பயிற்சி நிலையங்களை உருவாக்கியுள்ளார்கள். அதில் பயிற்சி அளித்து உதவித் தொகையும் வழங்குவது சிறப்புக்குரியதாகும். இதனால் எதிர்காலங்களில் இவர்கள் சிறு தொழில் செய்து வருவாய் ஈட்டிட வாய்ப்புள்ளது.

மேலும் ஏழை விதவையரது மகள் திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 2,000 வழங்கப்படுகிறது. இதனை ரூ. 5,000 என்று உயர்த்தி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் ஏழை வீட்டுப் பெண்கள் 8-வது வகுப்பு வரை படித்திருந்தால் ரூ. 5,000 என்று தமிழக முதல்வர் தானைத் தலைவர் அவர்கள் அறிவித்து பல குடும்பங்களில் விளக்கேற்றி வைத்தார்கள். தேர்தல் நேரத்தில் சொன்னதுபோல் அதை ரூ. 10,000-ஆக உயர்த்தி ஏழை

மக்களின் வயிற்றில் பால் வார்த்த தங்களை, பல்லாண்டு வாழ மக்கள் வாழ்த்துகிறார்கள். இத்திட்டத்திற்காக 1997-98-ல் ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதும், 20 ஆயிரம் பேர் அதனால் பயனடைவார்கள் என்று சொல்லியிருப்பதும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

மேலும், டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கர்ப்பிணி பெண்ணிற்கும் ரூ.500 வழங்கப்படுவதும், இந்த ஆண்டு அதற்காக ரூ.581 லட்சங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கதாகும்.

மேலும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவைகள் மறுமணத் திட்டத்தின்படி, விதவைப் பெண்கள் திருமணம் செய்து கொண்டால் ரூ.5,000 வழங்கப்படும் என்பது விதவைப் பெண்களின் வாழ்வில் ஒளியேற்றுவதாக அமைந்துள்ளது.

மேலும், கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்காக அன்னை அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டத்தின் மூலம் ரூ.10,000 வழங்கப்படுவது அந்தப் பெண்ணுக்கு ஒரு பாதுகாப்பாக அமையும் என்பதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம்.

இதைப்போல, ஏராளமான நலத் திட்டங்கள் அறிவித்துள்ளதை. இந்தச் சமுதாயத்தில் ஏழைப் பெண்களை, விதவைப் பெண்களை கை தூக்கிவிட பெரிதும் நமது கழக ஆட்சியில் உதவிகள் செய்யப்பட்டுள்ளதை பெண் சமுதாயம் என்றென்றும் நன்றியுடன் நினைவுகூறும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இதேபோல் சத்துணவுத் திட்டத்தின் மூலம் குழந்தைகளின் நலன் பேண பல திட்டங்கள் நமது கழக அரசால் போடப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். ஊட்டச்சத்து வழங்குதல், முன் பருவக் கல்வி, உடல்நலம் பேணுதல், இலவச சீருடை வழங்குதல், குழந்தைகள் காப்பகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் நமது அரசு உதவி செய்வதானது ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க பெரிதும் துணைபுரிகிறது என்பதை உணர்ந்து மக்கள் பாராட்டுகிறார்கள். மேலும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கு இவ்வாண்டு ரூ.1,138.39 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது மாண்புமிகு முதல்வர் அவர்களின் தாயுள்ளத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 11-20

மேலும், பாலர் பள்ளிகளில் பணியாற்றுகின்ற பாலசேவிகாக்களும், சத்துணவு மையங்களில் பணிபுரியும் அமைப்பாளர்களும், சுமார் 15 வருடங்களாக ரூ.550-க்கு தினக்கூலிகளாகவே பணியாற்றி வருகின்றனர். இதில் பெரும்பாலும். பெண்களும், ஆதரவற்றவர்களும் பணிபுரிவதால், இவர்களை பணி நிரந்தரம் செய்து அடிப்படை ஊதியம் வழங்கிட வேண்டுமாய் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், சத்துணவுத் திட்டத்தில் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறுகிறவர்களுக்கு, ஒட்டுமொத்தத் தொகையாக ரூ.20,000 வழங்கிடவும், முதியோர்களுக்கு வழங்கும் ஓய்வூதியத் தொகையை வழங்கிடவும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்தில் வழங்கப்படும் சோயா மாவு கசப்புத் தன்மையாக உள்ளதால், குழந்தைகள் அதைச் சாப்பிட முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நாங்கள், எங்களுடைய தொகுதியில் உள்ள சத்துணவு மையத்திற்குச் சென்றபோது. இதையே அந்த பகுதியிலுள்ள தாய்மார்களும் வலியுறுத்திச் சொல்கிறார்கள். அதனால், நமது அரசு கண்டிப்பாக இந்தக் கசப்புத் தன்மையான சோயாவை குழம்பில் போடுவதைத் தவிர்த்து பருப்பு வகையினையே வழங்க வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தீபாவளி, பொங்கல், கிருத்துமஸ் போன்ற பண்டிகைகளை சத்துணவு அமைப்பாளர்களும் நல்ல முறையில் கொண்டாட பண்டிகை கால முன்பணமாக அவர்களுக்கு ரூ.1,000 வழங்கி உதவிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு திட்டப் பணியாளர்களுக்கு மருத்துவ வசதியும், மருத்துவப் படியும் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் 1989-ல் முதல்வராக இருந்தபொழுது, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் தொடங்கினார்கள். அதில் 270 பெண்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு, 6 மாவட்டங்களில் தற்போது அவர்கள் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். இதனால் குறிப்பாக கிராமப்புறப் பெண்களின் பொருளாதார முன்னேற்றம் கணிசமாக உயர்வதற்கும் சமூக

[திருமதி ஏ. ஆர். வேடம்மாள்] [1997 ஏப்ரல் 3

விழிப்புணர்வு ஏற்படுவதற்கும் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். இவர்களை இப்பணிக்கு தேர்வு செயயும்பொழுது வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகவே, தேர்வு செய்யப்படுகிறார்கள். இப்பெண்கள் கிராமங்களில் அமைத்துள்ள மகளிர் மன்றங்களுக்கும், வங்கிகளுக்கும் மாதத்திலும், வாரத்திலும் இருமுறை சென்று வருகிறார்கள். மொத்தமாக இவர்கள் ரூ.1,500 தொகுப்பு ஊதியமாகப் பெற்று வருகிறார்கள். மேலும், இவர்களின் பணியை 6 மாதத்திற்கு ஒரு முறை இடைநீக்கம் செய்வதால் இவர்கள் பணித் தொடர்ச்சியும் இல்லாமல் இருக்கின்றார்கள். இவர்களை நிரந்தரப் பணியாளர்கள் எனக் கருதி இவர்களின் வேலைவாய்ப்பு பதிவு எண்ணும் எடுக்கப்பட்டு விட்டதால் இவர்கள் வேறு பணிக்குச் செல்ல முடியாமல் வயதும் அதிகமாகி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) எனவே, இவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து தமிழக அரசு புதிதாகத் துவக்கவிருக்கும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில், இவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இவர்களுக்கு வட்டார ஒருங்கிணைப்பாளர், துணை ஊராட்சி ஒன்றிய அலுவலர் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் 270 பேர்கள் மட்டுமே இருப்பதால், இவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமாய் நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல், பாலசேவிகாக்களாக பணிபுரிபவர்கள், பதவி உயர்வு பெற்று ஊர்நல அலுவலர்களாக நியமிக்கப்படும்போது, நீண்ட தூரங்களில் இவர்களுக்கு பணிமாறுதல் வழங்கி விடுகிறார்கள். இவர்கள் அனைவருமே பெண்களாக இருப்பதால், மாவட்டம் விட்டு மாவட்டம் சென்று பணிபுரிவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இவர்கள் பதவி உயர்வு பெறும்போது, அந்தந்த மாவட்டத்திலேயே பணியமர்த்தினால், பெண்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு கண்டிப்பாக வரும் காலங்களில், இந்தப் பெண்களை அந்தந்த மாவட்டத்திலேயே பணியமர்த்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் மாவட்டங்களில் பணிபுரியும் சமூகநல அலுவலர்கள் — மற்ற மாவட்டங்களைச் சொல்லவில்லை — எங்களுடைய தருமபுரி மாவட்டத்தில் பணிபுரியும் சமூகநல அலுவலர், திட்ட அலுவலர் போன்றவர்கள் ஒரே சமயத்தில் இரண்டு மூன்று மாவட்டங்களுக்கும்



1997 ஏப்ரல் 3] [திருமதி ஏ.ஆர். வேடம்மாள்]

சேர்த்து பணிபுரிவதால், எந்தவிதமான வேலைகளும் நடக்கவில்லை. பொதுமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சென்றாலும்கூட, ஒரே வேலைக்காக நாங்கள் மூன்று, நான்கு மாதங்களாக சென்று கொண்டிருக்க வேண்டிய நிலையிருக்கிறது. அவர்கள் அதனை காதிலே போட்டுக்கொள்ளாமல் விட்டு விடுகின்றார்கள். எனவே, அவர்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பணியமர்த்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்தில் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி மக்களின் குறைபோக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஊட்டச்சத்துப் பிரிவில் பணிபுரிந்த சிலர் அந்தப் பணியினை விட்டு விலகிச் சென்றுவிட்டார்கள். அந்தப் பணியிடங்களில் ஆட்கள் நியமிக்கப்படாமல் அப்படியே காலியாக உள்ளன. கேட்டால், எங்களுக்கு அரசாங்கத்திலிருந்து ஆணை வரவில்லை என்று சொல்லுகிறார்கள். எனவே, காலியாக இருக்கும் ஊட்டச்சத்துப் பணியாளர்கள் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவுபோட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திருமதி வேடம்மாள், உங்கள் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி ஏ.ஆர். வேடம்மாள்:** மாற்றுத் தலைவர் அவர்களே, உரையை சீக்கிரம் முடித்து விடுகிறேன். முஸ்லீம் பெண்கள், கிருத்துவப் பெண்கள் அவர்களுடைய மதச் சம்பிரதாயப்படி திருமணம் செய்து கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் திருமண உதவித் திட்டத்திற்கு மனுக்கள் அனுப்பும்போது அவை நிராகரிக்கப்படுகின்றன. காரணம், அவர்களுடைய திருமணம், முறைப்படி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பெற்றால்தான் திருமண உதவித் திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் உதவித் தொகை தரப்படும் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் மதச் சட்டப்படி திருமணம் பதிவு செய்யப்பட்டால் போதும் என்று அவர்களுடைய மதம் தெரிவிக்கிறது. எனவே, அந்த மனுக்களை நிராகரிக்காமல், முஸ்லீம்களுக்கும், கிருத்துவர்களுக்கும் அவர்களுடைய மதச் சட்டப்படி திருமணம் நடந்தாலும், அந்த உதவித் தொகை வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட பல்வேறு நல்ல திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற நமது கழக அரசை, தமிழகப் பெண்கள் பெரிதும் பாராட்டி, மனநிறைவு கொண்டுள்ளார்கள். இத்தகைய மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு

எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** அடுத்து. திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருக்கோயில்கள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தின்கீழ் 34,213 திருக்கோயில்கள் உள்ளன என்று குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. கோயில்களுடைய தினசரிப் பணி என்று சொல்லும்போது காலையிலே 5 மணியிலிருந்து நிகழ்ச்சிகள் ஆரம்பம் ஆகின்றன. அந்த முதல் வேலை தொடங்கும்போது அங்கே மேளம் அடிக்கின்றவருடைய பணியிலிருந்து ஆரம்பித்து, சாயங்காலம் 7 மணி வரையில் அந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஆனால், ஆலயப் பராமரிப்பு என்று சொல்லும்போது, பெருவாரியான கோயில்களுக்குப் போதுமான வருமானம் இல்லை. அது உண்மையான நிலை. பத்து சதமானம் கோயில்களுக்குத்தான் அதிகப்படியான வருமானம் வந்து கொண்டிருக்கிறது. அப்படி அதிகப்படியான வருமானம் வரும் கோயில்களுடைய நிதியிலிருந்து எஞ்சிய பணத்தை வருமானம் இல்லாத கோயில்களுக்கு முறைப்படி கொடுக்க வேண்டும் என்று கேட்பது முறையான ஒன்றுதான்.

அதேபோன்று, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் கோயில் நிலங்களாகவும், அதைத் தொடர்ந்து மடங்களுக்குச் சொந்தமான நிலங்களாகவும் உள்ளன. அந்த நிலங்களில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் வேலை செய்து வருகிறார்கள். அந்த நிலங்களைப் பொறுத்தவரையில் இடைத்தரகர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கோயில்களுக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொன்னால், அவற்றை இடைத் தரகர்கள்தான் அதிகமாகக் கையாண்டு வருகிறார்கள். அதிலே பயிர் செய்து கொண்டிருப்பவர்கள் யதார்த்தமான விவசாயிகள், வேறு நிலபுலன்கள் இல்லாதவர்கள். அவர்களுக்கு ஒரு ஏக்கரோ, இரண்டு ஏக்கரோ அல்லது மூன்று ஏக்கரோ இன்றைய சந்தை விலையில் விலை நிர்ணயிக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுத்து அந்தப் பணத்தை வசூல் செய்து, அந்தக் கோயில் பெயரிலே வங்கியிலே போட்டு, அதிலிருந்து வருகின்ற வட்டிப் பணத்தை வைத்துக்கொண்டு திருக்கோயில் பணிகளைச் செவ்வனே நடத்த முடியும் என்பது என்னுடைய கருத்தாகும்.



அதற்கடுத்தாற்போல், பல கோயில்களின் பெயரிலே உள்ள கட்டிடங்கள் என்று புள்ளிவிவரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன. ஆனால், அந்தக் கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்படும் வாடகை என்பது மிகவும் குறைவாக உள்ளது. அதிலேயும் இடைத்தரகர்களின் ஈடுபாடும் அதிகமாக உள்ளது. சாதாரணமாக, நம்முடைய கட்டிடங்களின் வாடகை என்று வருகிறபோது, ஒரு கட்டிடத்தின் வாடகை ரூ. 1,000 என்று சொன்னால், கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களின் வாடகை மிகக் குறைவாகத்தான் உள்ளது. இதை ஒழுங்குபடுத்தி, அந்த வாடகை முழுவதையும் சரிவர வசூல் செய்து, அதிலே வரும் இடைத்தரகர்களின் தாகுத் தன்மையை மாற்றினாலே, தரித்திரம் பிடித்த சில கோயில்களுக்கு, ஒன்றும் இல்லாத சாமிகளுடைய திருப்பணிகள், ஆராதனைகள் ஆகியவற்றை நாம் நடத்த முடியும் என்பதை என்னுடைய கருத்தாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அதேபோன்று, கோயில் ஊழியர்களைப் பற்றிக் கூறும்போது 50,000 பணியாளர்கள் இருப்பதாகக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் 50 ஆயிரம் பேர்களாகட்டும், ஒரு இலட்சம் பேர்களாகட்டும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் என்ன என்று பார்த்தால், மாதச் சம்பளம் ரூ. 500 என்றால்கூட, இன்றைய வாழ்க்கை நிலையிலே, விலைவாசி ஏற்றத்திலே அவர்கள் அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, அவர்களுடைய சம்பளத்தை நியாயமான அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும். ஊழியர்களிலே குறிப்பாகச் சொல்லும்போது, கோயில் யானையைப் பராமரிக்கின்ற யானைப் பாகர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலையைப் பார்க்கும்போது, மிகவும் சங்கடமாக இருக்கிறது. மிகக் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆகவே அவர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும். ஒரு மனிதன் வாழ்வதற்கு எவ்வளவு ரூபாய் தேவைப்படுமோ அந்த அளவுக்கு, அவர்களுடைய சம்பளத்திலே மாற்றம் ஏற்படுத்த வேண்டும்.

முற்பகல் 11-30

அடுத்து, கோயில்களிலே நடைபெறுகின்ற கொள்ளையைப் பற்றிக் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவட்டாரில் உள்ள ஆதிகேசவப் பெருமாள் கோயிலில், அனந்தசயனம் என்று சொல்லப்படுகின்ற பிம்பம் முழுமையாக தலையிலிருந்து கால் வரை, அத்தனை பவுனையும் உரித்தே எடுத்துவிட்டார்கள். இப்போது ஓடு

மட்டும்தான் இருக்கிறது. இதிலே எத்தனை கோடி ரூபாய்கள் கொள்ளையடிக்கப்பட்டன; என்ன வழக்குப் பதிவு செய்தார்கள்; யார் யார் இந்தக் கொள்ளையில் பங்குதாரர்களாக இருந்தார்கள்; இப்போது எந்த நிலையில் உள்ளது என்று தெரியவில்லை. அதேபோன்று குழித்துறையிலே உள்ள ஒரு தேவஸ்தானத்தில் யானை ஒன்று இருந்தது; அது இறந்து போனது; அந்த யானைக்கு பிரம்மாண்டமான இரண்டு தந்தங்கள் இருந்தன. அவற்றை அந்த தேவஸ்தானத்தினுடைய அலுவலக அறைக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தார்கள். பிறகு 4 மாதம் 5 மாதம் கழித்துப் பார்க்கிறபோது அந்தத் தந்தங்களைக் காணவில்லை. இது சம்பந்தமாக கடந்த ஆண்டு கூட்டத் தொடரின்போது நான் அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தந்தங்கள் திருடு போனதுபற்றி வழக்கு போடப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகம். அதை யார் திருடினார்கள்......

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எந்த ஆண்டு நடைபெற்றது என்று உறுப்பினர் அவர்கள் சொல்லிப் பேசினால்தான் சரியாக இருக்கும். இல்லையென்றால், இந்த ஆட்சி வந்த பிறகு இது நடைபெற்றதாகப் பொருள் கொள்ள நேரிடும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கடந்த ஆட்சியின்போது நடைபெற்றவை. அந்தக் காலத்தில், கோவில் கொள்ளை என்பது சர்வசாதாரணமான ஒன்றாகும். என்னுடைய உணர்வெல்லாம், அந்த யானைத் தந்தங்கள் அந்தக் காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் கையிலே போயிருக்குமே தவிர வேறல்ல என்பதுதான். ஆகவேதான் இதுபோன்ற நடவடிக்கைகள் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும். இந்தத் துறையைப் பொறுத்தமட்டில், நான் குறிப்பிட்டிருக்கிற விவரங்களின் பின்னணியில், கோயில்களில் மேளம் அடிக்கும் அந்த ஏழைத் தொழிலாளர்களின் சம்பளத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூகநலத் *துறையில் இருக்கக்கூடிய சத்துணவு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற சம்பளத்தில் மாற்றம் வேண்டும். கிராமங்களில் வழங்கப்படுகின்ற சத்துணவில் முறைகேடுகள் நடக்கின்றன. கிராமத்திலே போய்ச் சோற்றை அள்ளிப் பார்த்தால் தெரியும் அதிலே ஒன்றும் இல்லை என்று. ஒன்றுமே இல்லாத மோசமான நிலையை



நேரிடையாகப் பார்த்திருக்கிறேன். அதிலே முறைகேடுகள் நிறைய நடக்கின்றன. எனக்குத் தெரிந்த வரையில்—நான் பல நேரங்களில் பார்ப்பதுண்டு — குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்ற சத்துணவுக்காக வருகின்ற அரிசியைக் கொள்ளையடிப்பதற்கென்றே ஒரு கூட்டம் இருக்கிறது. தனியார் லாரிகளில் அரிசியை ஏற்றி அனுப்புகிறார்கள். அரிசி அந்தத் துறைக்குச் செல்லாமல் அநியாயம் நடைபெறுகின்றது. எனவே அந்தச் சத்துணவு ஊழியர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பளம், பஞ்சப்படி, உரிமைகளைப் பாதுகாப்பது போன்ற சலுகைகளை ஓரளவுக்காகிலும் அவர்களுக்கு அளிக்கின்ற அதே நேரத்தில், அங்கே நடைபெறுகின்ற ஊழல்களையும், முறைகேடுகளையும் களைய வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஜி.பி. வெங்கிடு.

***திரு ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, எல்லோரும் வாழ வேண்டும், உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நல்லோரின் எண்ணத்தைச் செயல்படுத்தி எல்லோருக்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி இந்தத் தமிழகத்தை நகர்த்திச் செல்லும் தன்னிகரில்லா முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் சமூக நலத்துறை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-35

சமூக நலத் துறையின் பணிகள், பலதரப்பட்ட மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையில் இருக்கும் பணிகளாகும். இதிலே வருமானம் வரக்கூடியது ஒன்றும் இல்லை என்று சொன்னாலும் வகையற்றோருக்கு வாழ்வளிக்கின்ற திட்டங்கள் பல இருக்கின்றன. பொதுவாக முற்றிய கதிர்ச் சுமையால் வளைந்து சாயும் பயிர்போல உழைத்து, உழைத்து வற்றிய உடலோடு வலுவிழந்து கிடக்கின்ற, ஓய்ந்து போன விவசாயக் கூலிகளான முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற திட்டமும், கணவன் என்ற பெயரால் வந்த பல காமுகர்களால் கைவிடப்பட்டு, செய்வதறியாமல் தவிக்கும் ஏழைப் பெண்களுக்கு உதவுகின்ற காப்பகங்கள் வைத்து, கனிவோடு தொழில் கற்றுத் தந்து உதவுகின்ற

[திரு. ஜி.பி. வெங்கிடு] [1997 ஏப்ரல் 3

திட்டமும், வறுமைப் பேயை விரட்ட நாட்டில் வழியே இல்லையா? அதற்கு அழிவே இல்லையா? பொருள் இல்லாதார் இல்லை என்னும் திருநாளே இல்லையா? என்று ஏங்கிக் கொண்டிருந்த ஏழைக் குடும்பத்துப் பெண்களுக்கு எல்லாம் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் அவர்கள் நினைவாக இருக்கின்ற திட்டத்தின் மூலம் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் திருமண உதவித் தொகை தந்து காப்பு அளிக்கின்ற முறையும், வாடாத பூ போன்ற மங்கை நல்லாள், மணவாளன் இறந்தபின் மணத்தல் தீது என்று கருதிக் கொண்டிருந்த இந்தச் சமுதாயத்தின் மூடத்தனத்தை முறியடித்து, கைம்பெண்கள் மறுமணம் செய்துகொள்ள முன்வந்தால், அவர்களுக்கு டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவாக அந்தத் திட்டத்தின் மூலம் 5 ஆயிரம் ரூபாய்க்கு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கி, வாழ்வு அளிக்கின்ற அந்த நல்ல முறையும், வேண்டாத சாதியிருட்டு வெளுப்பதற்கு, சாதிமறுப்புத் திருமணம் செய்துகொள்ள முன்வரும் மணமக்களுக்கு அன்னை அஞ்சுகம் அம்மையாரின் திருமண உதவித் திட்டத்தின்கீழ் திருமணச் செலவிற்கு ரூபாய் 3 ஆயிரமும், அவர்களுடைய எதிர்காலத்திற்கு தேசிய சேமிப்புப் பத்திரம் ரூபாய் 7 ஆயிரமும் அளிக்கின்ற அந்த சீரிய திட்டமும், கோரிக்கையற்றுக் கிடக்கும் வேர்ப்பலாவாக, பூஞ்சோலையாக, பாரசக்தியிலே வருகிற கல்யாணியைப் போல சீரற்ற வாழுகின்ற தங்கைகளுக்கு எல்லாம் வாழ்வு அளிப்பதற்கு, விதவைகளுக்கு மறுவாழ்வு இல்லங்களும், பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும், பசி நீங்கவே உணவும் பறந்தோடி வந்திடும் கோடானுகோடி ஏழை மாந்தர்கள் வாடும், சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்தாய் ராஜா, நீ ஏன் பிறந்தாய் என்று கைம்பெண்கள் தங்களுடைய குழந்தைகளை மடியிலே வைத்துக் கதறிக் கொண்டிருந்த அவர்களுடைய கண்ணீரைப் போக்க அவர்களுடைய பிள்ளைகளுக்கு எல்லாம் இந்த அரசு, உனக்கு மாணிக்கப் பாலாடை இல்லை என்றாலும், நல்ல வெள்ளைத் தாளைத் தருகிறேன்; அதில் எழுதுவதற்கு வைர எழுத்தாணி இல்லை என்றாலும், நல்ல எழுதுகோலைத் தருகிறேன் என்று சொல்லி, அந்தக் குழந்தைகளுக்கு எல்லாம் கல்வி தந்து, வயிறார உணவும் தந்து, அவர்களுக்கு உடை தந்து, உறையுள் தந்து — இவற்றின் மூலம் அந்தக் குழந்தைகளும் இந்தச் சமுதாயத்திலே மனிதர்களாக வாழ்வதற்கு வகை செய்த இந்த சமூகநலத் திட்டம் உண்மையிலேயே மிகவும் போற்றிப் புகழத்தக்க ஒன்றாகும்.

இன்னும் எத்தனையோ குறைகள் இருந்தாலும், பிறந்ததைக் காப்போம், இனி பிறக்கப்போவதில் ஊனத்தைத் தடுப்போம் என்ற வகையில்



1997 ஏப்ரல் 3] [திரு. ஜி.பி. வெங்கிடு]

பிறந்த குழந்தைகள், பிறக்கின்றபோது ஊனமாக இருந்தாலும், அவர்களுக்கு உதவி செய்தும், இனி பிறக்கப் போகின்ற குழந்தைகள் ஊட்டமான குழந்தைகளாகப் பிறக்க வேண்டும் என்பதற்காக, கருவுற்ற தாய்மார்களுக்கு மாதம் 125 ரூபாய் என்று 4 மாதங்களுக்கு 500 ரூபாய் வழங்கி அவர்களுடைய கருவிலே வளர்கின்ற குழந்தைகள்கூட உருப்பெற்று ஊட்டச்சத்தோடு வளர வேண்டும் என்று வழங்குகின்ற அந்தத் திட்டங்களும் போற்றுதற்குரியன ஆகும்.

கோடானுகோடி உயிர்களுக்கு ஒரு தந்தை என்றாலே, சிலர் கோட்டையில், பலர் குடிசையில் குடியிருப்பதாலே, கூன், குருடு, நொண்டி, செவிடர், ஊமை பிறப்பதனாலே—இந்தக் குறைகளுக்கே இதுவரையில் முடிவு தெரியலை என்று ஒரு கவிஞன் பாடினான். அப்படிப் பிறந்தாலும், காரணம் எதுவாக இருந்தாலும், காப்பது நம் கடமை என்று கருதிய இந்தத் தமிழக அரசு, கலைஞர் அரசு, அப்படிப் பிறந்த ஏழைக் குழந்தைகளுக்கும், காது கேளாதவர்கள், கண் தெரியாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், மற்ற வகையில் உடல் ஊனமுற்றவர்களுக்கு எல்லாம் மறுவாழ்வு தருகின்ற திட்டங்களை அவர்களுக்கும் கல்வியோடு, எதிர்கால தொழில் கல்வியும் தந்து வாழ்விக்கின்ற திட்டங்களை நிறைவேற்றி வருகின்ற இந்த சமூகநலத் துறை உண்மையிலேயே பாராட்டு பெற்ற துறையாகும். (மணி அடிக்கப்பெற்றது).

ஔவைப்பிராட்டிகூட ஐங்கரனிடத்திலே வேண்டுகிறபோது,

''பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீயெனக்கு
சங்கத்தமிழ் மூன்றும் தா.''

என்று கேட்டது, ஏதோ பண்டமாற்று முறையிலே தமிழைப் பெற்றுக் கொண்டது போலச் சொல்லியிருந்தார்கள். ஆனாலும் இங்கெல்லாம் கைமாறு எதிர்பாராமல் ஏழைக் குழந்தைகள் எல்லாம் இலவசமாக இன்பத் தமிழ்க் கல்வி பெற்று ஏற்றம் பெறுகின்ற அளவில் நம்முடைய தமிழக அரசின் சமூகநலத் திட்டத்தில், ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன்.

பிற்பகல் 11-40

வயது முதிர்ந்தவர்களுக்குத் தருகின்ற உதவித் தொகை, அவர்களுக்கு ஆண் பிள்ளைகள் இருந்தால் அது மறுக்கப்படுகிறது. ஆண் பிள்ளைகள் என்று இருப்பவர்களில் 100-க்கு 90 பேர் தந்தைக்கோ தாய்க்கோ சோறு போடாத பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள். பெண் பிள்ளைகளாவது அழுது கொண்டாவது ஒரு வேளை சோறு போடுவார்கள். ஆண் பிள்ளைகள், இறுதிக் காலத்தில் அவர்கள் என்ன வைத்திருக்கிறார்கள் என்றுதான் பார்க்கிறார்களே தவிர, அவர்களைக் காப்பாற்றுகின்ற முறையில் இல்லை. 100-க்கு 90 பேர் அப்படித்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஆண் பிள்ளைகள் இருந்தாலும், வயது முதிர்ந்து தள்ளாத வயதிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் உதவித்தொகை தருகின்ற அந்த நல்ல திட்டத்தை அருள்கூர்ந்து அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல ஏழைக் குடும்பத்துப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டத்திற்கு 10,000 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். அதற்கு ஒரு வரம்பும் வைத்திருக்கிற காரணத்தாலே அந்தத் திட்டத்தின் பலனைகளை பலபேர் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த வரம்பை நீக்கவேண்டும். அது இயலாது என்றால் வரம்பை நீட்டித்தாவது தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன், இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு மிக்க நன்றி. இடுக்கண் வருங்கால் நகுக என்ற அடிப்படையில் மனதில் வேதனை இருந்தாலும், அதை வெளியே காட்டாமல் அந்தச் சந்தர்ப்பத்தில் நடந்துகொண்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலயத்தினுடைய, அறநிலையத் துறையினுடைய நிலைமைகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் விளக்கமாகப் பேசினார்கள். நேரமில்லாத காரணத்தால், சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்லி அமையலாம் என எண்ணுகின்றேன். ஆலயங்களுக்கு ஏராளமான, அளவுக்கு மீறிய, மிக அதிகப்படியான சொத்துக்களை நம் முன்னோர்கள் எழுதி வைத்திருக்கின்றார்கள். அந்தச்





சொத்துக்களை சரியானபடி பராமரித்தால் ஆலயங்களுடைய அனைத்துப் பிரச்சினைகள் மட்டுமல்ல, மேலும் பல நல்ல தர்ம காரியங்களை - ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள் போன்றவற்றைக் கட்டி நடத்த முடியும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அது ஏன் இந்த அளவுக்கு ஆகிவிட்டது என்று சொன்னால், பல ஆண்டுகளாகப் பிறந்த ஒரு வீட்டில் இருப்பவர்கள், ஒரே குடும்பமாகத் தொடர்ந்து இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தக் குடும்பம் எந்த அளவுக்கு இருக்கும் என்பதைப் போன்று, இந்து சமய அறநிலையத் துறை பல ஆண்டு காலமாகவே, இதில் யார் வேண்டுமானாலும் எந்தக் கொள்ளையையும் அடிக்கலாம், யாரும் அதைக் கண்டுகொள்ள மாட்டார்கள், கேட்க மாட்டார்கள் என்ற அடிப்படையில், பல ஆண்டு காலமாகவே ஆகிவிட்ட காரணத்தால், இந்த அலங்கோல நிலை ஏற்பட்டிருக்கிறது. 1959-ஆம் ஆண்டு இந்துசமய அறநிலையத் துறை சட்டம் பிரிவு 29-ல், ஒவ்வொரு ஆலயத்திற்கும் எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன. அந்தச் சொத்துப் பதிவேடுகள் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டும் என்று எல்லாம் சட்டம் வைத்திருக்கின்றார்கள். ஆனால் 90 சதவீதம் ஆலயங்களில் இந்தப் பதிவேடுகள் இப்போது கிடையாது. சட்டப் பிரிவு 28-ல் பூஜைப் பொருட்கள் வருடத்திற்கு எவ்வளவு தேவை, எண்ணெய், அரிசி மற்றும் இதர பொருட்கள் என்ன தேவை என்று ஒரு கணக்கு வைத்திருப்பார்கள். அவற்றைத் தெளிவாக வைத்திருந்தால், ஆண்டுக்கு ஆண்டு அவைகளை மாற்றவேண்டிய தேவை கிடையாது. இத்தனை லிட்டர் அரிசி, இத்தனை கிலோ எண்ணெய் என்று விலைவாசிக்குத் தகுந்தபடி அது வந்துவிடும் அல்லது மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு ஆலயத்திற்கும் தேவைப்படுகின்ற பொருட்களை லிட்டர் அல்லது கிலோ அளவு வைத்துக் கணக்கிட வேண்டும். அப்படியில்லை என்று சொன்னால், ஆண்டுக்கு பத்து சதவீதம் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அதே சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1982-ஆம் ஆண்டு தனித் துணை ஆட்சியர் ஒருவரை மாவட்டந்தோறும் நியமித்து ஆலயத்தின் சொத்து எவ்வளவு, அதில் எவ்வளவு ஆலயத்தின் கைவசம் உள்ளது, எவ்வளவு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது, யார் யார் கையில் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிக்கையாக்கி 15 வகையான ஏடுகளை, ஃபைல்களை அந்த ஆட்சியாளர்கள் அனைத்து மாவட்டத்திற்கும் அளித்திருக்கிறார்கள்.

அதனுடைய அடிப்படையில் ஒவ்வொரு ஆலயத்திலும் அந்தப் பதிவேடுகளைச் சரியான முறையில் பராமரித்து ஆலயத்தினுடைய சொத்துக்களைக் கவனித்துக்கொண்டால், இந்த அளவுக்கு வறுமை ஆலயங்களுக்கு வந்திருக்காது. ஆனால் வருவாய் நீதிமன்றம்கூட, அதனுடைய அடிப்படையில் ஆலயத்தினுடைய சொத்துக்களை முடக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கின்றது. இதுவரை பாக்கி வசூலிக்கப்படவில்லை. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை எடுப்பதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை. ஆலய சொத்துக்களை மீட்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதுபோன்ற பல சம்பவங்கள் பல வருடங்களாக இருந்திருக்கின்றன.

முற்பகல் 11-45

1956-ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணையும்போது கேரள அரசுக்கும் தமிழக அரசுக்கும் ஆலயங்களைப் பொறுத்தமட்டில் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. 13,70,000 ரூபாய் அந்த ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட ஆலயங்களை நிர்வகிப்பதற்காகத் தமிழக அரசு கொடுக்க வேண்டும் என்ற முடிவு ஏற்பட்டது. ஆனால் இன்றுவரை அதே 13,70,000 ரூபாய்தான் கொடுக்கப்பட்டு வருகின்றது. தற்போதைய விலைவாசி மற்றும் இதர சூழ்நிலைகளையும் கருத்தில்கொண்டு, ஆலயங்களினுடைய தேவைகளையும் கருத்தில்கொண்டு அரசாங்கம் அந்த நிதியை, சூழ்நிலைக்கேற்றாற்போல் கூட்டி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆலயங்களில் வேலை பார்க்கக்கூடிய ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 100 ரூபாய் முதல் 230 ரூபாய் வரைதான் இருக்கின்றது. இதைச் சற்று கவனத்தில்கொண்டு, ஒருவருக்கு மாதச் சம்பளம் இப்படியிருந்தால், அவர் எப்படி நேர்மையாக இருக்க முடியும் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அதேபோன்று, அலுவலகத்தில் வேலை பார்க்கக் கூடியவர்களுக்கு .... (குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ. எஸ். எஸ். இராமன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லாக் கோயில்களிலுமே 'தேவஸ்தானம்' என்று இன்று இருக்கிறபோது, கன்னியாகுமரி அம்மன்



ஆலயத்திலே இன்றைக்கு 'தேவஸ்வம்' என்று அழைக்கப்படுகின்ற அந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால், 'தேவஸ்வம்' என்று கூறுவதால், பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தினுடைய ஆதிக்கம் இன்னும் இருப்பதுபோன்ற ஒரு உணர்வு ஏற்படுகின்ற காரணத்தால், மற்ற கோயில்களைப்போல கன்னியாகுமரி அம்மன் ஆலயத்தையும் 'தேவஸ்தானம்' என்று மாற்றி அதனுடைய நடைமுறையையும் நமக்கு ஏற்றாற்போல மாற்ற வேண்டுமென்று நான் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கன்னியாகுமரி கேரள அரசிலிருந்து பிரிக்கப்பட்டு தமிழகத்திற்கு அளிக்கப்படுகின்றபோது, அது இணைக்கப்படாத தேவஸ்தானம் என்ற பெயரிலேதான் உருவாக்கப்பட்டது. அது தனி நிர்வாகமாக இன்றையதினம் நடைபெற்று வருகிறது. காலப்போக்கில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட ஆலய ஊழியர்களும் இதைத்தான் விரும்புகின்றார்கள் என்பதை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அலுவலகத்தில் வேலை பார்க்கக் கூடியவர்கள், தட்டச்சர் போன்றவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 300-லிருந்து 950 வரை இருக்கிறது. அதை ஒரே சீராக ஆக்கவேண்டும். ஒரே பணிபுரிபவர்களுக்குப் பலவிதமான சம்பள விகிதங்கள் இருக்கின்றன. அதை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும், குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் 15 ஆலயக் காவலர்களை, இரண்டு மூன்று ஆண்டுகள் வேலை பார்த்தவர்களை எந்தக் காரணமும் இல்லாமல், வேலையைவிட்டு நீக்கியிருக்கின்றார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டும். அதேபோன்று, முப்பந்தல் இசக்கி அம்மன் கோவிலில் சுமார் 5 ஆண்டுகளுக்குமேல் வேலைபார்த்த நான்கு பேர்களை வேலையைவிட்டு நீக்கியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அரசு கவனத்தில்கொண்டு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோல, ஆலய தரிசனத்திற்குக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 'இறைவன் முன்னால் அனைவரும் சமம்' என்று பேசுகின்றோம். 'ஒரே தாய் மக்கள்' என்று பேசுகின்றோம். அப்படியிருக்க, ஏழை பணக்காரன் என்ற நிலையை மாற்றிக்கொள்ள, ஆலயத்தில் கட்டணம் வசூலிப்பதை மாற்றுவதன் மூலமாக சமூகநலன், சமூக ஒற்றுமை மனிதநேயம்கூடப் பேணிக் காக்க ஏதுவாக அமையுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

மேலும், தஞ்சை மாவட்டம் சுவாமிமலையில் கடந்த தெப்பத் திருவிழாவின்போது தெப்பக்குளத்தில் ஒருதுளிகூட தண்ணீர் இல்லை. எனவே, தண்ணீரில்லாத தெப்பக்குளத்தில் ஒரு தெப்பத் திருவிழா நடைபெற்றது. அதிலே பல ஊழல்கள் நடந்திருப்பதாகவும் சொல்கிறார்கள். அந்த ஆலயத்தினுடைய சார்பில் 1973 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'கருணை இல்லம்' என்ற ஒன்றை ஆரம்பித்து அங்கு ஏழைகளாக இருப்பவர்களுக்கு கல்வி, உணவு, ஆடை போன்றவற்றை அளித்து வந்தார்கள். பின்னால், கருணை இல்லம் என்றிருந்தது 'அன்பு இல்லம்' என்று மாற்றப்பட்டது. மீண்டும் 1989 ஆம் ஆண்டு 'கருணை இல்லம்' என்று ஆக்கப்பட்டது. அங்கு 37 மாணவர்கள் பயில்கின்றார்கள். அவர்களுக்கு சீரான உணவு, ஆடைகள், புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று குறிப்பிடுகின்றார்கள். அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எங்களது கன்னியாகுமரி மாவட்டத்தில், திருவட்டார் தேவஸ்தானத்தைப் பற்றிச் சொன்னார்கள். எந்த அளவுக்கு ஆலயம் இருக்கின்றது என்று புரிந்துகொள்ள வேண்டும். இரண்டு தடவைகள் கொள்ளை நடந்திருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் ஆலயத்திலிருந்த அந்த அங்கி எவ்வளவு பவுன் என்று கேட்டால் அதிகாரிகளால் எடுத்துச் சொல்ல முடியவில்லை. எவ்வளவு இருந்தது என்று சொன்னால்தானே களவு போனதைக் கணக்கிட முடியும்? அந்த அளவுக்கு நிர்வாகம் இருக்கின்றது. அந்த ஆலயத்திற்கு 'ஆனையடி எஸ்டேட்' என்று 110 ஏக்கர் கொண்ட எஸ்டேட் இருக்கிறது. அந்த 110 ஏக்கர் என்பது குறைந்து குறைந்து, இப்போது கிட்டத்தட்ட 36 ஏக்கர் தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். எந்தவொரு துறையாவது தன்னுடைய துறைக்குச் சொந்தமான இடங்களை விட்டுக் கொடுக்குமா? அல்லது தனி நபர்கள் விட்டுக் கொடுப்பார்களா? எனவே, ஏனோ தானோ என்ற போக்கு, ஆலயம்தானே என்ற ஒரு நிலை இருக்கிறது.



இதற்கு கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை அந்தந்த இடங்களில் அதிகாரிகளாக நியமிக்க வேண்டும். ஒரு டிரைவர் இருக்கிறார் என்றால், அவருக்கு டிரைவிங் தெரியாது என்றால், அவரை நம்பி எப்படி நாம் வாகனத்தில் பயணம் செய்ய முடியும்? அதைப் போல கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆங்காங்கே ஆலயங்களில் நிர்வாகிகளாக வரக்கூடிய காரணத்தால் ஆலயச் சொத்துக்களை கொள்ளையடிக்கிறார்கள், கொள்ளையடிக்க அனுமதிக்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும் என்றால் இறை நம்பிக்கை உள்ளவர்களை மட்டும் அதிகாரிகளாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். எனவே ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் கூறுகிறபோது ஆலயங்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது எந்த ஆட்சியில் நடைபெற்றது? யார் நடத்தியது என்பதை விளக்கமாகச் சொல்ல வேண்டும். தவறான விளக்கங்களைச் சொல்லக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முன்னாலே என்று சொல்லிவிட்டேன். கடந்த ஆண்டுகளில், பல ஆண்டுகளாக என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். இப்போது இந்த ஆட்சி வந்து ஒரு வருடம் தானே ஆகிறது? அது கடந்த ஆட்சிக்காலத்தில் நடந்தவை....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** உரையை முடியுங்கள்.

**திரு. சி. வேலாயுதன்:** விரைவில் முடித்து விடுகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவிலுக்குச் சொந்தமான ஏராளமான தென்னை மரங்களில் உரம் வைத்ததாகக் கணக்கு இருக்கிறது. அப்படி ஒரு செயல் நடக்கவே இல்லை. அதுமட்டுமல்ல, ஆலயச் சொத்துக்களில் மரச்சீனி நட்டதாகக் கணக்கு வைத்திருக்கிறார்கள். அந்த மரச்சீனி நட்டதாக இருக்கக்கூடிய கணக்கிலே பிடுங்கினார்களா, விலைக்கு கொடுத்தார்களா

என்ற வரவு கணக்கே இல்லை. இதுபோன்று பலவிதமான மோசமான நிலைகள் ஏற்பட்டுள்ளன.

ஆலயத்தைச் சுற்றி ஆலயப் பிரகாரத்திற்குள் கடைகளை வைத்து வாடகைக்கு கொடுப்பதால் ஆலயத்தினுடைய பாதுகாப்புக்கு கேடு விளைகிறது, புனிதம் பாதிக்கப்படுகிறது, ஒழுக்கக் கேடு ஏற்படுகிறது. எனவே ஆலயத்தின் உள்ளே கடைகளை வைக்கும் முறையை மாற்ற வேண்டுமென்று அரசை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** போதும், எல்லாம் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. சி. வேலாயுதன்**: மாண்புமிகு மாற்றுந் தலைவர் அவர்களே, ஒரே நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். திருப்பூர் சின்னக்குளம் மாரியம்மன் கோவிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் 27,892 சதுர அடி உள்ளது. அதை நிரவி தியேட்டர் அமைப்பதற்கும், கடைகள் கட்டுவதற்கும் முயற்சிக்கிறார்கள். நிலத்தடி தண்ணீர் இருக்க வேண்டும். அந்தப் பகுதியில் வரக்கூடிய மக்கள் சுத்தமாக நீராடி இறைவனை வழிபட வேண்டும். இவைகளை எல்லாம் கருத்திற்கொண்டு அந்தத் தெப்பக்குளத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். பாரத் மாதா கீ ஜே.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** டாக்டர் மு. தேவராஜன்.

* **டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலன் பற்றிய இந்த மானியக் கோரிக்கையில் தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்துவதற்காக, தமிழ்ச் சமுதாயம் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிர் நலன், குழந்தைகள் நலன், ஊனமுற்றவர்கள் நலன் ஆகியவைகளுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். பொதுவாக சமூகத்தில் பெண்கள் நிலை என்பது அவர்கள் மிகவும் பரிதாபமான நிலையில் இருக்கிறார்கள். பெண்கள் நிலை உயர வேண்டும், பெண்கள் நிலை உயர்ந்தால்தான் இந்தச் சமூகம் உயரும்; பெண்கள் நிலை உயர்ந்தால் தான் இந்தக் கலாச்சாரம் உயரும்; பெண்களுடைய நலன் பாதுகாக்கப்பட



வேண்டும் என்பதில் தலைவர், கலைஞர் அவர்கள் தன்னுடைய இளவயதில், பள்ளிப் பருவத்தை முடிக்காத வயதில் 14 வயது முதல் சமூகம் உயர வேண்டும், பெண்கள் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்பதற்காக, நாம் வாழ்கிற இந்தச் சமூகத்தில் தமிழ்ச் சமுதாயத்திற்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டுமென்று உந்துதல் காரணமாக தமிழ்ச் சமூகம் வாழ்வதற்கு அனைத்து நல்ல காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-55

மகளிர் நலத்திலே அக்கறை கொண்டு மகளிர் கொடுமை, கைம்பெண் நிலை பற்றி 'கோரிக்கையற்று கிடக்குதண்ணே, வேரில் பழுத்த பலா' என்ற தன்னுடைய பாடலின் மூலம் பாரதிதாசன் அவர்கள் தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளார்கள். மேலும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், 'ஆணுக்குப் பெண் நிகர் என்று கொள்வதில் அறிவில் ஓங்கி இந்த வையம் தழைக்கும்' என்று கூறியுள்ளார்கள். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் மூலம் ஏழை விதவைப் பெண்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை சற்று உயர்த்திக் கொடுத்தால் நன்றாக இருக்கும். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டத்தில் எனது தொகுதியில் இருந்து வந்துள்ள அனைத்து விண்ணப்பங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியிலிருந்து 13 விண்ணப்பங்கள்தான் இந்தத் திருமண உதவித் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 500 மனுக்களுக்கு மேல் வந்துள்ளன. எனவே தகுதியுள்ள அனைவருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் திருமண உதவி வழங்கினால் நன்றாகயிருக்கும். (மணியடிக்கப்பெற்றது) அத்துடன், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு திட்டத்தின் மூலம் கருவுற்ற பெண்களுக்கு நான்கு மாதங்கள் உதவித் தொகை கொடுப்பதை வரவேற்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய சிறிய வயதிலே ஏற்பட்ட தாக்கம் காரணமாக, டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு மறுமண உதவித்திட்டம், ஆதரவற்ற பெண்களுக்கு திருமணத் திட்டம் ஆகியவற்றை இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு அறிவித்துள்ளார்கள்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றிய கோரிக்கைகளுக்கு வருகிறேன். என்னுடைய தொகுதியான பெரம்பலூரை, பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டமாக அறிவித்துள்ள நிலையில், பெரம்பலூரில்

குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மேலும், பெரம்பலூரில் எந்த இடத்திற்குச் சென்றாலும் இரசாயனக் கலவையிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பாஸ்பேட், குளோரைடு. அசிலைட் ஸ்டோன் கலந்துள்ளது. இதனால் பெரம்பலூர் தொகுதி மருத்துவமனைகளில் கிட்னி ஸ்டோன் அதிகமாகவுள்ளது. எனவே கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தலைநகர் பெரம்பலூருக்கு வழங்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். பெரம்பலூர் பகுதி வேப்பந்தட்டி ஒன்றியத்தில் ஒரு நீர்த்தேக்கத்தையும், மலையாளப்பட்டி அருகிலே ஒரு நீர்த்தேக்கத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொண்டு, (மணியடிக்கப்பெற்றது) மேலும், விசுவக்குடியில் ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்துத் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல தென்னாற்காடு மாவட்டத்தையும் பெரம்பலூர் மாவட்டத்தையும் இணைக்க கூகையூர் அருகே ஆற்றில் பாலம் கட்டினால் 40, 50 கி.மீ. தூரம் குறையும். ஆகவே அந்தக் கூகையூர் பாலத்தை நிறைவேற்றித் தந்திடுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய பகுதியில், தொண்டமாந்துறை என்ற இடத்தில் பெரிய ஆறு ஓடுகின்றது. மழைக்காலம் வந்தால் அந்த இடம் தீவுத்திடல் போல மாறிவிடுகின்றது. எனவே லோ லெவல் பிரிட்ஜ்-ஆக இருப்பதை ஹை லெவல் பிரிட்ஜாக மாற்றிக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. சொ. கருப்பசாமி.

*** திரு. சொ. கருப்பசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன், இந்து சமய அறக்கட்டளை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதி கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒளி படைத்த கண்ணும், உறுதிகொண்ட நெஞ்சும், களிபடைத்த மொழியும், கடுமைகொண்ட தோளும், தெளிவு பெற்ற மதியும் பெற்று, தேர்ந்த கல்வியும் பெற்று, அறிவில் சிறந்து எதிர்காலத்தில் தாயகத்தைப் பொலிவாக்கும் சிறந்த சிற்பிகளை உருவாக்க டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட புரட்சிமிகு திட்டம்தான் சத்துணவுத் திட்டம். இந்தச் சத்துணவுத் திட்டத்தில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கத் தேவையான அரசு மானியத்தை விலைவாசி உயர்வுக்கு ஏற்ப உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



நண்பகல் 12-00

சத்துணவு அமைப்பாளர்களுக்கு முறையான ஊதிய விகிதத்தை அமைத்து, அடிப்படைச் சம்பளமாக ரூ. 750 ஆக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பணியிலிருந்து ஓய்வு பெறும் சமையலர், உதவியாளர்களுக்கு பணிக்கொடையாக ரூ. 20 ஆயிரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த, சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர், உதவியாளர்கள் அனைவருக்கும் ரூ. 500 மதிப்புள்ள இந்திர விகாஸ் பத்திரத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி அமைப்பாளர்களுக்கும் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குழந்தைகள் நல மையத்தில் பணியாற்றும் அமைப்பாளர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் கிராம சேவிகா, சத்துணவு சூப்பர்வைசர் போன்ற பதவி உயர்வு வழங்கப்படுவதைப் போல, பள்ளிகளில் பணியாற்றும் அமைப்பாளர்களுக்கும் பணி மூப்பு அடிப்படையில் கிராம சேவிகா, சத்துணவு சூப்பர்வைசர் போன்ற பதவி உயர்வுகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்து அறநிலையத் துறையின் சார்பில் பேசுகின்றபோது, அரியும் சிவனும் ஒன்றாக காட்சி தருகின்ற புண்ணிய ஸ்தலமான சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலுக்கு குறையாக இருந்து வந்த யானை இல்லாத குறையை நீக்கிட உத்தரவிட்ட தமிழக அரசுக்கும், தனது சொந்தப் பொறுப்பில் புஷ்பா என்ற யானையை வழங்குவதாக ஏற்றுக்கொண்ட பண்பாளர் திருமிகு சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கும், இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை கோயில் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர வேண்டும். கோயில் அர்ச்சகர்களுக்கு கொடுக்கப்பட்ட கோயில் நிலங்களை விற்று வருவதைத் தடை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்து சமய அறநிலையத் துறையில் ஊழியர்களை நியமிக்கும்போது அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையின்படி நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் கோயில் ஊழியர்களுக்கும் அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோயிலுக்கு வரும் பக்தர்களின் காலணி

பாதுகாப்பிற்காக வசூலிக்கும் கட்டணத்தை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சங்கரன்கோவில், அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோயில் நிலங்களை தற்போது விற்று வருபவர்கள் மீதும் வாங்குபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி அவர்கள் பேசுகின்றபோது. சங்கரன்கோவில் பகுதியில் நிலங்களை விற்றவர்கள் மீதும் வாங்கியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்த ஆட்சியில் எப்போது விற்கப்பட்டது என்பதை விவரத்தோடு இங்கே தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விற்று வருவதாகத் தெரிய வருகிறது. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தெரிய வருகிறது. போக வருகிறது என்றெல்லாம் கூறக்கூடாது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எப்போது. எந்த நிலம், எந்த சர்வே நெம்பரில் யாருக்கு விற்கப்பட்டது என்பதை தயவுசெய்து குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மேலும் கோவில்களுக்கு வருகின்ற பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விபூதி தரமானதாகவும், வாசனை உடையதாகவும். எங்களுடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது எங்களுடைய சங்கரநாராயண சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கு வழங்கப்படும் விபூதி வாசனையில்லாமல குருணையாக இருந்து வருவதை மாற்றி, தரமான, வாசனையுள்ள விபூதியைக் கொடுக்கவேண்டும் என்று பக்தர்கள் சார்பில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்கின்ற தம்பதியர்களுக்கு அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் தற்போது வழங்கும் தொகையை இரட்டிப்பாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்



திட்டத்தின் மூலம் வழங்கப்படும் தொகையை காலதாமதமின்றி உடனடியாக கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

சத்துணவு மையங்களில் சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு நிர்ணயிக்கின்ற குறைந்தபட்ச கல்வித் தகுதியை நீக்கி, விதவைகளுக்கும் கணவனால் கைவிடப்பட்ட கைம்பெண்களுக்கும் முன்னுரிமை கொடுத்து நியமனம் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தற்போது உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மாவட்ட அரசாங்க வக்கீல்கள், அரசாங்க சிவில் வக்கீல்களாகவும், மொத்தம் சுமார் 1,000 பேர் அரசாங்க வக்கீல்களை இந்த அரசு நியமனம் செய்தது. அதில் குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவாகள் 6 நபர்களைத்தான் நியமனம் செய்ததாகத் தெரிய வருகிறது. அதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

பிறபகல் 12-05

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ஏ. கோதண்டம்.

***திரு. ஏ. கோதண்டம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் சமூகநலன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கைகளில் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது திருப்பெரும்புதூர் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான 10 பெரிய கோயில்கள் உள்ளன. இவற்றில் மிகவும் முக்கியமான கோயில்கள் 4. (1) வல்லக்கோட்டை முருகன் கோயில், (2) குன்றத்தூர் முருகன் கோயில், (3) மாங்காடு காமாட்சியம்மன் கோயில், (4) திருப்பெரும்புதூர் இராமானுஜர் அவதரித்த ஆதிகேசவப் பெருமாள் கோயில். இந்த நான்கு கோயில்களையும் காலாண்டுக்கு ஒரு முறை உயர்தர அதிகாரிகள் கண்காணித்திட வேண்டும். அவர்களை அரசு அனுப்பி கண்காணித்திடச் செய்யவேண்டும்.

எனது தொகுதியில் சிறிய கோயில்கள் 34 உள்ளன. அதற்கான கோயில் நிலங்கள் மொத்தம் 944 ஏக்கர் 52 சென்ட் உள்ளது. அந்தக் கோயில்களுக்கு புறம்போக்கு நிலம் என்று 9 ஏக்கர் உள்ளது. எனது தொகுதியில் கோயிலுக்குச் சொந்தமான மனைகள் 406. இந்த மனைகளில்

அனுபவதாரர்களின் எண்ணிக்கை 406 ஆகும். இவர்கள் மாத வாடகையைச் சரியாகச் செலுத்துவதில்லை. எனது தொகுதியில கோயில்களுக்குரிய கட்டிடங்களின் எண்ணிக்கை 111. அந்தக் கட்டிட வாடகைதாரர்களுடைய எண்ணிக்கை 188 ஆகும். கோயில்களுக்குரிய 944 ஏக்கரில குத்தகைப் பயிர் செய்வோரின் எண்ணிக்கை 389 பேர்கள். எனது தொகுதியில கோயில்களின் ஓராண்டுக்கான மொத்த வருவாய் தோராயமாக ரூ. 10 லட்சம் ஆகும். இதுநாள் வரை கோயில்களுக்கு குத்தகைதாரர்கள், மனைதாரர்கள் மற்றும் கட்டிட வாடகையாளர்கள் செலுத்த வேண்டிய நிலுவை பாக்கித் தொகை ரூ. 36,48,256 ஆகும். ஆனால் கோயில்களுக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள மொத்த விஸ்தீரணம் 48 ஏக்கர் 4 சென்ட் ஆகும். இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட துறை உடனடியாக தக்க நடவடிக்கைகளை உயர் அதிகாரிகளைக் கொண்டு எடுத்திட வேண்டுமாய் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதியில குன்றத்தூரில் பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து பணிமனை கட்டுவதற்காக நம்முடைய குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குச் சொந்தமான மலையடிவாரத்தில் சர்வே நம்பர் 1151/1-ல் உள்ள 4 ஏக்கர் நிலத்தை இலவசமாகவோ அல்லது 99 வருட நீண்டகால குத்தகைக்கு விடக் கோரி பல்லவன் போக்குவரத்துத் துறையின் மூலமாக அவர்களை அணுகி முறையிடச் சொன்னார்கள். நான் ஆணையாளர் அவர்களுக்கு கோரிக்கையை எழுதி அனுப்பி வைத்தேன். ஆனால், அவர் அந்தக் கோரிக்கையை நிராகரித்து விட்டார். மேற்படி இடத்தை இன்றைய சந்தை மதிப்பு விலைப்படி கிரயம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் பதில் அனுப்பி இருக்கிறார். ஆனால், பல இடங்களில் கோயில இடங்களை தனியார் ஆக்கிரமித்தும், இதுவரை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், அரசின் இடத்தை, அரசின் போக்குவரத்துக் கழகத்திற்குக் குத்தகைக்கு விட மறுப்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பிற்பகல் 12.10

எனது தொகுதிக்குட்பட்ட 10 பெரிய கோயில்களுக்கும் இரவு நேரக் காவலர்களை நியமிக்க வேண்டும். எனது தொகுதிக்குட்பட்ட பெரிய கோயில்களுக்கு வெளியூர்களிலிருந்து அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிகின்றனர். பக்தர்கள் தங்குவதற்கு விடுதியைக் கட்டித்தர



வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், எனது தொகுதிக்குட்பட்ட வல்லக்கோட்டை முருகன் கோயிலுக்கு அதிக அளவில் பக்தர்கள் வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு சரியான பஸ் வசதியை நம்முடைய நிர்வாகம் செய்துதரவில்லை. கோயில் நிர்வாகமே, அவர்களுடைய கோயில் நிதியிலிருந்து நிதியை எடுத்து, திருப்பெரும்புதூர்-ஓரகடம் 15 கிலோமீட்டர் தூரத்திற்கு சிறிய பேருந்துப் போக்குவரத்தை அமைத்துக்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஏ. கோதண்டம்:** மேலும், போதிய நிதிவசதி அற்ற கோயில்கள் சம்பந்தப்பட்ட திருப்பணியை அறநிலையத் துறையே ஏற்று நடத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.—மேலும் சேதமுற்ற நிலையில் உள்ள கோயில்கள் மற்றும் கோயில் குளங்களை செப்பனிட்டு, சீரமைத்துத் தரும்படி கேட்டுக்கொண்டு, எனது தொகுதியில் உள்ள கோயில்களின் நிலம், கடைகள், மனைகள் ஆகியவற்றின் குத்தகை மற்றும் வாடகை பாக்கி ரூ. 36,48,256. இவற்றை உடனடியாக வசூலித்துத்தர அதிகாரிகளைத் துரிதப்படுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. எல். சந்தானம்.

* **திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநலன் மற்றும் அறநிலையத் துறையின் சார்பிலே இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை முன்வைப்பதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூகநலன் என்பது இன்றைக்கு குறைந்து வருகின்ற ஒரு நிலையிலே தொலைநோக்குப் பார்வைகள் எல்லாம் குறைந்து, தன், தனது என்கின்ற நிலை உருவாகி, சமூகத்திலே நலிவுற்றுக் கிடக்கின்றவர்களைப் பற்றிச் சிந்திக்க முடியாத இந்த நிலையிலும் உலகம் நிலைத்து நிற்கின்றது என்று சொன்னால் அதற்குக் காரணமாக ஒரு தமிழ்ப் புலவன் சொல்லுவான்:

``உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்

[திரு. எல். சந்தானம்] [1997 ஏப்ரல் 3

தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனில்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயல்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

என்கின்ற ரீதியிலே இன்றைக்கு தமிழகத்தின் முதல்வராக இருக்கின்றவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு அழிவே இல்லாத முதுமையே இல்லாத அமிர்தம் கொடுத்தாலும் கூட, அது ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு தன்னலம் அற்ற ஒரு தியாக வாழ்வினை மேற்கொண்டு இருக்கிற காரணத்தினால் அதோடு பிறருக்கு நன்மை சேர்க்கிற காரியங்கள் என்று சொன்னால் உயிரினைக் கொடுத்துக்கூட அதைப் போராடிப் பெறுகின்ற ஒரு நல்ல பண்பினையும், தாம் செய்கின்ற காரியத்தால் பழி வருகிறது என்று சொன்னால் அதற்கு ஈடாக இந்த உலகத்தைக் கொடுத்தாலும்கூட ஏற்றுக்கொள்ளாத ஒரு பண்பினையும் பெற்றிருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு அப்படிப்பட்ட சில சீரிய தலைவர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இந்த உலகம் இன்னும் நிலைத்து நீடு வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதுபோல சமூக நலத் துறையிலே நலிவுற்றிருக்கின்ற பெண்களுடைய வாழ்க்கை முன்னேற வேண்டும் என்பதற்காக இந்த அரசு பல நல்ல நலத் திட்டங்களைத் தீட்டி ஏழை எளிய மக்களுக்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12-15

திருமண உதவியாக கடந்த காலங்களிலே 5,000 ரூபாய் வரை கொடுத்துக் கொண்டிருந்த நிலையினை மாற்றி இந்த அரசு பொறுப்புக்கு வந்தவுடனே 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது இந்த அரசினுடைய நல்ல நோக்கத்தைப் பிரதிபலிக்கின்ற ஒரு திட்டமாக அமைந்திருக்கிறது. அதுபோல இந்தத் திருமணத் திட்டத்திற்கு 10,000 ரூபாய் வழங்குகின்ற நேரத்திலே விதவைகளுடைய மகள்களுடைய திருமணத்திற்கு 2,000 ரூபாய்தான் வழங்கப்படுகிறது என்கின்ற நிலையை இந்த அரசு உணர்ந்து விதவை மகளுடைய திருமணத்திற்கும் 10,000



1997 ஏப்ரல் 3] [திரு. எல். சந்தானம்]

ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல விதவை மறுமணத்திற்கு 5,000 ரூபாய் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விதவைகளின் மறுமணத்தை ஊக்குவிக்கின்ற அரசு என்கின்ற காரணத்தினால் அவர்களுக்கும் 10,000 ரூபாய் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கலப்புத் திருமணம் செய்கின்ற தம்பதியருக்கு 2,000 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது என்ற நிலை இருக்கின்றதை மாற்றி அவர்களுக்கும் ஜாதி பேதம் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அந்தக் கலபபுத் திருமணம் செய்கின்ற தம்பதியருக்கும் 10,000 ரூபாயாக உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் இலவச வேட்டி சேலைகள் வழங்குகின்ற நிலையிலே பல ஊழல்கள் நடைபெற்று எங்கள மதுரை மாவட்டத்தில் எல்லாம்கூட இலவச வேட்டி சேலைகள் பல இடங்களிலே பதுக்கி வைக்கப்பட்டு அவைகளை எல்லாம் பொதுமக்களே எடுக்கின்ற ஒரு அவலமான நிலை இருந்தது. அந்த நிலையை எல்லாம் மாற்றி தரமான வேட்டி சேலைகளை வழங்கி இந்த அரசு பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது. என்றாலும்கூட அது கடந்த காலங்களிலே வழங்கப்பட்டதைக் காட்டிலும் சற்று குறைவாக வழங்கப்பட்டது என்கின்ற நிலையும் இருக்கிறது என்ற காரணத்தினால் வருகின்ற காலத்திலே அந்த இலவச வேட்டி சேலைகளை வழங்குகின்றபோது சற்று அதிகப்படுத்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஊனமுற்றவர்களுக்கு பல நல்ல திட்டங்களை இந்த அரசு வகுத்திருக்கிறது. சென்ற ஆண்டு ரூ. 433 இலட்சம் செலவு செய்த இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ. 11,38.39 இலட்சங்கள் வழங்கியிருப்பது மிகுந்த பாராட்டுக்குரியது. எனவே நலிவுற்ற மக்களுக்கு ஊனமுற்ற மக்களுக்கு உதவி செய்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்றது. ஆரம்பக் காலங்களிலே கலைஞர் அவர்கள்தான் ஊனமுற்றோருக்கு 3 சக்கர வண்டிகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவு அளித்தவர்கள் என்கின்ற காரணத்தினால் அந்த ஊனமுற்றவர்களுக்கு கிடைக்கின்ற நலத் திட்டங்கள் எல்லாம் சற்று தாமதமாக கிடைக்கின்றது என்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் அந்த நலத் திட்டங்கள் எல்லாம் வெகு விரைவாக அவர்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல சத்துணவுப் பணியாளர்கள். சத்துணவுப் பணியாளர்கள்தான் இன்றைக்கு மிகுந்த சிரமத்திலே

வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மிகக் குறைவான சம்பளத்தைப் பெறுகிறார்கள். இன்றைக்கு சத்துணவுப் பணியிலே ஏறத்தாழ பட்டதாரிகள் பி.ஏ., எம்.ஏ. படித்தவர்கள் எல்லாம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வாங்குகின்ற ஊதியம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அவர்கள் பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அரசின் கவனத்திற்கு அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே கருணை உள்ளம் படைத்த தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிவோடு பரிசீலித்து அவர்களை நிரந்தர அரசுப் பணியாளர்களாக ஆக்கி அவர்களுக்கும் உரிய பணி உயர்வினைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12 20

அடுத்த கட்டமாக இந்து அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு இந்துக்களுடைய மன நிலையை அறிந்து அதற்கு ஒரு ஆலோசனைக் குழுவை இங்கே நியமித்து இருக்கிறது. இன்றைக்கு இந்து மதத்தினுடைய பெருமையை உலக நாடுகளுக்கு அறியச் செய்கின்ற அளவுக்கு பெருமை சேர்த்த பெருமை சுவாமி விவேகானந்தர் அவர்களுக்கு உண்டு. சுவாமி விவேகானந்தர் அவர்கள் இந்து மதத்தினுடைய பெருமையை சிக்காகோ மாநாட்டில் எடுத்து உரைத்ததன் பேரில்தான் இந்து மதத்தினுடைய பெருமை உலக அளவில் பரவி நின்றது என்பதை இங்கே அனைவரும் உணர்ந்து இருக்கிறார்கள். அந்த சுவாமி விவேகானந்தர் அவர்களை அந்த சிக்காகோ மாநாட்டுக்கு அனுப்பி வைத்து இந்து மதத்தினுடைய பெருமையை எடுத்துச் சொல்வதற்கு தூண்டுகோலாக இருந்தவர் இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி அவர்கள். அவர்களுடைய குடும்பத்திலிருந்து இந்து அறநிலையத் துறை ஆலோசனைக் குழுவிற்கு ஒருவர் நியமிக்கப்படவில்லை என்பது அந்தப் பகுதி மக்களுடைய பெரும் குறையாக இருக்கிறது. இன்றைக்கும் தமிழகத்தில் உள்ள சிறப்பு மிகுந்த ஆலயங்களில் ஒன்றாக இருக்கிற இராமேஸ்வரம் கோவிலில் இராமநாதபுரம் சேதுபதி அவர்கள் அந்த ஆலயத்தை முன்னேற்றுவதற்காக மிகப் பொறுப்பு வாய்ந்த பங்கினை வகித்து இருக்கிறார்கள். இன்றைக்கும் அவர்கள் நிரந்தர அறங்காவலராக இருக்கிறார்கள். ஆகவே, தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த ஆலோசனைக் குழுவில் அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.



அறநிலையத் துறையில் நிறைய நிலங்கள் இன்றைக்கு இருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற நிலங்களில் 50 சதவீத நிலங்கள் ஏறத்தாழ அறநிலையத் துறை நிலங்களாக இருக்க முடியும் என்பதாக ஒரு கணக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்கள் எல்லாம் யார் கையில் இருக்கிறது என்று சொன்னால் மிக வசதி படைத்தவர்கள் கையில், 10 ஏக்கர், 15 ஏக்கர் நிலத்தை பெற்று இருப்பவர்கள் கையில் அந்த அறநிலையத் துறை நிலங்கள் எல்லாம் இன்றைக்கு இருக்கின்றன. அவர்கள் அதை ஆக்கிரமித்து, அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அறநிலையத் துறை நிலங்களை எல்லாம் ஆய்வு செய்து கணக்கில் எடுத்து அவைகளை இன்றைக்கு இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, விவசாயக் கூலி மக்களுக்கு பிரித்து வழங்கி அந்த நிலங்களின் மூலமாக இந்த ஆலயங்களுக்கு நிரந்தரமாக வருமானம் வருகின்ற சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு அப்படி இருக்கின்ற நிலங்களில் இருந்து உரிய முறையில் குத்தகைகள் கூட இந்த வசதி படைத்தவர்கள் தருவது இல்லை. தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு குத்தகைகள் தராமல் அந்த நிலங்களை எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதிலே கவனம் செலுத்தி இந்த அரசு அந்த நிலங்களை எல்லாம் கையகப்படுத்தி ஏழை, எளிய மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டு நல்ல வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன் நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** அடுத்து, திரு. கே. கே. வீரப்பன்.

***திரு. கே. கே. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களுடைய முன்னேற்றம்தான் இந்தச் சமுதாயத்தினுடைய முன்னேற்றம் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு உணர்ந்த காரணத்தால்தான் இன்றைக்கு பெண்களுக்கு சொத்தில் சம பங்கு என்றும், வேலை வாய்ப்பில் 30 சதவீதம் என்றும், உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவீதம் என்றும், ஆரம்பப் பள்ளிகளில் பெண்களை மட்டும் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்றும் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு பெண்களுடைய திருமண உதவித் திட்டமாக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண

உதவித் திட்டம் என்றும். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம் என்றும். டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமணத் திட்டம் என்றும். அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம் என்றும் ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் என்றும் சொல்லி பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகம் செய்து செயல்படுத்தி ஆற்றலோடு செயலாற்றி வருகிறார்கள்.

இன்றைக்கு இந்த திருமண உதவித் திட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின் கீழ் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. சென்ற நிதிநிலை அறிக்கையில் இதற்காக 10 கோடி ரூபாயை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு ஒதுக்கிய அந்த 10 கோடி ரூபாய் அன்றைக்கு அந்த நிதி போதாத காரணத்தால் நிதி பற்றாக்குறையினால் பல்வேறு மனுதாரர்களுக்கு அந்தப் பணம் கிடைக்காமல், இன்றைக்கு அவர்களுக்குத் தகுதி இருந்தும் கூட அது கிடைக்காமல் இருக்கிறது. அதற்கு அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் சென்ற ஆண்டு கொடுத்த மனு அதோடு முடிந்து விட்டது. இந்த ஆண்டு கொடுப்பவர்களுக்குத்தான் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கின்ற அந்த இருபது கோடியிலே சென்ற ஆண்டு தகுதியிருந்து யார் யாருக்குக் கிடைக்கவில்லையோ அவர்களுக்கு முதலிலே கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

"தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" என்று பன்னாட்டு விவசாய வளர்ச்சிக்கான நிதி நிறுவன உதவியுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் 1989 செப்டம்பர் திங்களிலே இதைத் தொடங்கினார்கள் இதன்கீழே இதுவரை 1,05,077 மகளிர், எட்டு மாவட்டங்களில், அதாவது தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், இராஜாஜி, தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் வைகை வீரன் அழகுமுத்து மற்றும் மதுரை மாவட்டங்களிலே பயன் அடைந்துள்ளார்கள். International Fund for Agricultural Development என்று சொல்லுகின்ற அந்தத் திட்டத்தின் கீழே மொத்தம் இன்றைக்கு 270 மகளிர் மேற்பார்வையாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் 3 ஆண்டிலிருந்து 9 ஆண்டு வரை பணியாற்றி



வருகிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் இளநிலைப் பட்டதாரிகளும். முதுநிலைப் பட்டதாரிகளும் ஆவார்கள். அவர்களெல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் வேலைக்கு எடுக்கப்பட்டவர்கள். அதனாலே வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் எடுக்கப்பட்ட காரணத்தினாலே அங்கே அவர்களுடைய பதிவு எல்லாம் நீக்கப்பட்டு விட்டது அவர்களெல்லாம் ஒரு நிரந்தரப் பணியில்லாமல், அவர்களுக்கு எந்தவிதப் பணி உத்தரவாதமும் இல்லாமல் இருக்கின்றனர். மொத்தம் இருப்பது 270 பேர்தான். நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் 1996-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் படிப்படியாக மாநிலத்திலுள்ள மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளார்கள். அதற்னுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, "பிளாக் ப்ராஜக்ட் கோ ஆர்டினேட்டர்" என்று சொல்லி "டெபுடி பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர்" என்று அந்த ரேங்கிலே அவர்களை அதிகாரிகளாக நியமிப்பதற்கான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே. நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது— ஏற்கெனவே, இவர்களெல்லாம் நல்ல பயிற்சி பெற்றவர்கள். அனுபவம் பெற்றவர்கள். இவர்களில் அரசாங்க வேலைக்குச் செல்லுகின்ற வயது வரம்பையெல்லாம் கடந்து நிறையப் பேர் இருக்கின்றார்கள். ஏற்கெனவே அனுபவம் பெற்ற அவர்களை டெபுடி பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர் என்று அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் இளநிலைப் பட்டதாரிகள், பேல்நிலைப் பட்டதாரிகளாக இருக்கின்றார்கள். ஆகவே அவர்கள் ஒட்டுமொத்தமாக 'கன்சாலிடேட்டட் பே' என்று சொல்லி 1.500 ரூபாய்தான் வாங்குகிறார்கள். சம்பளத்தைப் பொறுத்தவரையில்கூட அவர்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்களுக்குப் பணி நிரந்தரம் வேண்டுமென்பது மிக மிக முக்கியம். ஏற்கெனவே பயிற்சி பெற்றிருக்கின்ற காரணத்தினாலே மற்றப் பகுதிகளுக்கு டெபுடி பிளாக் டெவலப்மென்ட் ஆபீசர் கேடரிலே நியமிக்கின்றபொழுது, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை நியமிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒட்டுமொத்தப் பிரச்சினையான கரும்பு விவசாயிகளின் பிரச்சினையைப் பற்றி மட்டும் நான் இந்த நேரத்திலே தெரியப்படுத்தி முடித்துக் கொள்கின்றேன்.

[திரு. கே. கே. வீரப்பன்] [1997 ஏப்ரல் 3

இன்றைக்கு மாண்புமிகு முதல்வரவர்கள் கருணை உள்ளத்தோடு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கினார்கள். கரும்பு விவசாயிகளுடைய நிலைமையைச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆண்டு அவர்களுக்கு அதிக நிதி. எஸ்.ஏ.பி. என்று சொல்கின்ற அந்த ஸ்டேட் அட்வைசரி பிரைசிலே 5 ரூபாயை மட்டும்தான் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். கருணை உள்ளம் கொண்ட தலைவரவர்கள். சென்ற சீசனிலே வெட்டிய கரும்புக்குப் பணம் கொடுக்க முடியாத நிலைமை இருந்து. 71 கோடி ரூபாய் அளவுக்குப நபார்டிலே கடன் பெற்றுத் தான் அதையெல்லாம் அவர்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், 10 கிலோ மீட்டரிலிருந்து 20 கிலோ மீட்டர் வரை உள்ள வண்டி வாடகையை கருணை உள்ளத்தோடு எடுத்திருக்கின்றார்கள். இப்பொழுது 10 கிலோ மீட்டர் வரை உண்டான வண்டி வாடகையை மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதும். ஆனால் நாம் தேர்தல் அறிக்கையிலே வண்டி வாடகையையும், வெட்டுக் கூலியையும் ஆலையே ஏற்றுக் கொள்ளும் என்று சொல்லியிருந்தோம். இப்பொழுது வெட்டுக் கூலியைப் பற்றிப் பிரச்சினை இல்லை என்றாலும், வண்டி வாடகை இன்றைக்கு 10 கிலோ மீட்டர் வரை என்று இருப்பதையும் நீக்கி அந்த ஒரு கோரிக்கையையாவது அவசியம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் கருணை உள்ளத்தோடு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

8.5 சதவீதம் ரெக்கவரி வருகின்ற அந்தக் கரும்புக்கு 599 ரூபாய் என்று இருக்கின்றது. அதிக ரெக்கவரி வந்தால் அதிகம் கிடைக்கும். ஆனால் அதிக ரெக்கவரி வருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்றால் 16 மாதம், 17 மாதத்திலே கரும்பு வெட்டுகின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே அதிக ரெக்கவரி வருவது இல்லை. ஆகவே, அதையெல்லாம் மனதிலே கொண்டு குறைந்தபட்சம் ஒரு கோரிக்கையையாவது முழுமையாக நிறைவேற்றுகின்ற வகையில் 10 கிலோ மீட்டர் வரை உண்டான வண்டி வாடகையை நீக்கிவிட்டு, ஆலையே அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.



1997 ஏப்ரல் 3]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை மானியத்திலே என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி நான் ஒரு சில கருத்துக்களை எடுத்து முன்வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக, உடல் ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள் ஆகிய, சமூகத்தில் ஒதுக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட பிரிவினர்களுக்கு வழங்கக்கூடிய உதவித் தொகைகள் உரிய காலத்தில் கொடுக்கப்படவில்லை. கொடுக்கப்படுவதில்லை என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். குறிப்பாக, கணவனால் கைவிடப்பட்டோர், விதவைகள், இவர்களுக்கெல்லாம் 4 ஆண்டு காலம், 5 ஆண்டு காலம்கூட காத்திருக்க வேண்டிய சூழ்நிலையிருக்கின்ற ஒரு நிலையை நாம் காண்கின்றோம். எனவே, விண்ணப்பம் கொடுத்து இரண்டு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்குள்ளாகவே இவர்களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், கணவனால் கைவிடப்பட்டோருக்கு 7 ஆண்டுகள் கழித்துத்தான் உதவித் தொகை வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அந்த நிலையில்லாமல், ஓராண்டுக்குள்ளாகவே அதற்கான நிரூபணத்தைக் கொடுத்தால் உதவித் தொகை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பிலே முன்னுரிமை வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டாலும்கூட இன்னும் பல இடங்களிலே அவை புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு சமூக நலத் துறையின் மூலமாக தனியார் துறையிலேயும் தனியாக தொழில் துவங்குவதற்கு ஊக்கம் அளிக்கவும், அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் தொகை பெறுவதில் ஆண்டுக்கு இத்தனை பேர்தான் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, பலபேர் விண்ணப்பித்தும் கிடைக்காமல் அவதியுறக்கூடிய சூழ்நிலையைக் காண்கிறோம். எனவே, அதற்கு ஒரு லிமிட் வைக்காமல் விண்ணப்பித்தவர்கள் எல்லோருக்கும் கொடுப்பதற்கு அல்லது இந்த ஆண்டு கொடுக்கப்படவில்லையென்றால், இந்த ஆண்டு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு அடுத்த ஆண்டு முன்னுரிமை கொடுத்து

வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமாய் இந்த நேரத்திலே நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கலப்புத் திருமணத் தம்பதியினர்களுக்கு சான்றிதழ் வாங்குவதற்காக அவர்கள் நடையாய் நடந்து, எதற்காக கலப்புத் திருமணம் செய்து கொண்டோம் என்று சங்கடப்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிவிடுகிறார்கள். 5 ஆயிரம் ரூபாயைப் பெறுவதற்கு 6 மாதங்கள், ஒரு வருடம், 1½ வருடம், 2 வருடங்கள்கூட காத்திருக்கக்கூடிய சூழ்நிலையையெல்லாம் நாம் கேள்விப்படுகிறோம். எனவே, இதுபோன்ற Red-tapism—காலம் தாழ்த்தக்கூடிய சூழ்நிலைகளை இனிமேலாவது நாம் நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ஆயிரக்கணக்கில் இருக்கின்ற சத்துணவு ஊழியர்களை, அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தக்கூடிய அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் மானியத்திலே சில கருத்துக்களைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இன்னும் நிலப்பிரபுக்களிடத்திலே இருக்கின்றன. அந்த நிலங்களையெல்லாம் ஈவு இரக்கம் இல்லாமல் எடுத்து, ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டும்.

அதேபோல, பெரிய கோவில்களிலே கடை வைப்பதிலும் மற்றும் வியாபாரம் துவங்குவதிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழையெளிய மக்களுக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலமாகத்தான் அவர்களையெல்லாம் கைதூக்கிவிட முடியும்.

அதேபோல வேலைவாய்ப்புக்களிலேயும் இந்து சமய அறநிலையத் துறையிலே பல இடங்களிலே இட ஒதுக்கீடு என்பதே நடைமுறைப்படுத்தப்படாமல், அவையெல்லாம் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன. எனவே, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோவில் நிலங்களை தனியார்கள் ஆக்கிரமிக்கக்கூடிய நிலையை நாம் காண்கிறோம். விளாத்திகுளம் பகுதி கல்லூரணி என்ற கிராமத்தில் 573 ஏக்கர் நிலத்தை—அந்தக் கல்லூரணி கிராமத்திலுள்ள கோயிலுக்குச்



சொந்தமான நிலத்தை, ஒரு தனியார், உப்பளத்திற்குப் பயன்படுத்துகின்ற நிலை இருக்கிறது. அதில் அரசு உடனடியாகத் தலையிட்டு அந்த நிலத்தை எடுத்து அந்த மக்களுக்குக் கொடுப்பதற்கு விரைந்து ஆவன செய்ய வேண்டும். ஏறக்குறைய 15, 16, 20 ஆண்டு காலமாக அந்த மக்கள் அதற்காகப் போராடி வருகிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-35

அதேபோல், இங்கே பகுத்தறிவு ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஆலயங்களிலே எல்லோரும் நுழைந்து, கருவறைக்குள் செல்வதற்கும், அர்ச்சகர்களாக இருப்பதற்கும் சட்ட ரீதியாக உரிமை இருந்தாலும்கூட, நடைமுறையிலே இன்னும் அவ்வாறு இல்லாமல் இருக்கின்றது. எனவே, ஸ்ரீரங்கம் ஆலயம், சிதம்பரம் ஆலயம், பழனி ஆலயம் ஆகியவற்றில் எல்லாம், எல்லாச் சாதியினரும் உள்ளே நுழைந்து, அர்ச்சகர்களாவதற்கும், கருவறைக்குள் நுழைவதற்கும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே வேண்டிக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை ஆகிய இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீது நானும் சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழக்கமான வேகத்தோடு நான் பேச முடியாவிட்டாலும், நீங்கள் விரும்புகிற நேரத்தில் என்னுடைய பேச்சை நிறைவு செய்து கொள்ள முயல்கிறேன்.

பிறப்பதற்கு முன்பு நாம் எப்படியிருந்தோம்?, எங்கேயிருந்து எங்கு வந்தோம்? இறந்த பிறகு எங்கு செல்வோம் என்பது யாருக்குமே தெரியாது. இதுவரையில் ஆண்டாண்டு காலம், ஆயிரமாயிரம் ஆண்டு காலம் இதைப் புரிந்து கொள்வதற்காகச் செய்யப்பட்ட முயற்சியில் யாரும் வெற்றி காணவில்லை. மடங்கள் என்பது அல்லது கடவுள் என்பது நம்முடைய நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. எனவே, கடவுள் எங்கிருக்கிறான், எப்படியிருக்கிறான், யார் அவனைப் பார்ப்பது, யார்

ஆண்டவனோடு பேசியது நேரிடையாக. அவன் நாம் எப்படி வாழ வேண்டும் என்று நமக்கு உணர்த்தியிருக்கிறான் என்பதைத் தெளிவாக இதுவரையிலே யாரும் சொல்லவில்லை. சொன்னவர்கள் உண்டு. ஆனால் அவர்களை ஏற்றுக் கொள்வது அவரவர்களுடைய நம்பிக்கைக்கு அப்பாற்பட்டது. ஆனால், மதம் என்பதும், கடவுள் என்பதும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கும், அவனை மனிதனாக வாழச் செய்வதற்கும், காலங்காலமாக அது பயனுடையதாக இருந்து வந்திருக்கிறது என்பதையும் உலகத்தில் வாழ்கின்ற பெரும்பான்மையோர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, போலீஸ் துறை என்பது அதாவது காவல் துறை என்பது குற்றவாளிகளைக் கண்டுபிடிக்காவிட்டாலும், மனிதனுக்கு, அவனுக்கு உண்மையாகவே மனசாட்சி இருந்தால், கடவுள் நம்பிக்கையின் காரணமாக, யார் தண்டிக்காவிட்டாலும், அவன் நம்மைத் தண்டிப்பான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நல்லவனாக வாழ வேண்டும் அல்லது தவறு செய்திருந்தால் அதற்கு பிராயச்சித்தம் செய்து, தவறுகளைத் திருத்திக் கொண்டு வாழ வேண்டும் என்கின்ற அளவிற்காவது மதங்கள் நமக்குப் பயன்படுகின்றன. எனவேதான், நம்முடைய முன்னோர்கள், 'ஆலயம் இல்லாத ஊரிலே குடியிருக்க வேண்டாம்' என்று சொன்னார்கள். ஆலயங்கள் நமக்கு அறத்தை உணர்த்துகின்றன. அந்த ஆலயத்தில் இருக்கக்கூடிய எதுவோ ஒன்று, அங்கு, எந்த ரூபத்திலேயிருந்தாலும், அவன் நம்முடைய செயலை, செயலைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், கேட்டுக் கொண்டிருக்கிறான். எனவே, அவன் நம்மைத் தண்டிப்பான் என்ற அடிப்படையில் நல்லவனாக வாழ்வதற்கு நமக்கு ஆலயங்கள் நிச்சயமாகப் பயன்படுகின்றன. அவைகளுடைய தோற்றங்கள் வேறுபட்டிருக்கலாம். அவைகளிலே மாற்றங்கள் இருக்கலாம். அவை போதிக்கின்ற போதனைகள் வேறு விதமாக இருக்கலாம். அவை இருக்கலாம். ஆனால், கடைசியாக மனித உள்ளத்தில் தோன்றியிருக்கின்ற உணர்வுகள் ஒன்றுதான் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

பிற்பகல் 12-40

அந்த வகையில் நம்முடைய முன்னோர்கள் தமிழ்நாட்டிலேயும், பாரத தேசத்திலேயும் பல ஆலயங்களைத் தோற்றுவித்து இருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இவை ஏதோ வணங்கக்கூடிய தலமாக மட்டும் இல்லாமல், நம்முடைய மொழி வளர்ச்சிக்காகவும், நம்முடைய பண்பாட்டு வளர்ச்சிக்காகவும் நம்முடைய வரலாற்றோடு ஒன்றிய தலங்கள்தான் இவை என்று இன்றைக்கு கோயில்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மதுரை மீனாட்சி அம்மன்



கோயில் நம்முடைய வரலாற்றோடு ஒன்றிய ஒன்று. இப்படித்தான் தேவாரமாக இருந்தாலும், திருவாசகமாக இருந்தாலும், அந்தாதிகளாக இருந்தாலும், ஆழ்வார்கள் பாடியவையாக இருந்தாலும், அவைகளெல்லாம் நமக்கு அறத்தைப் போதிக்கின்றன. நாங்கள் செய்யாத காரியங்களை நம்முடைய அறநிலையங்கள் செய்கின்றன. ஆலயங்கள் செய்கின்றன. அதை நாம் ஏற்றுக் கொண்டோம். அரசாங்கம் யார் தண்டிக்காவிட்டாலும், ஆண்டவன் தண்டிப்பான் என்ற ஒரு நம்பிக்கை நம்முடைய சமுதாயத்தில் ஒரு பண்பாட்டை, ஒரு அமைதியை, ஒரு அறநெறியை ஏற்படுத்துகின்றன. அதன் காரணமாகத்தான், எதற்காக இல்லாவிட்டாலும், சமுதாயத்தில் சாத்விகத்தைக் காப்பாற்றுவதற்காக அறநிலையங்கள், கோயில்கள் தேவை என்பது உணரப்பட்டு, அவைகளையெல்லாம் நம்முடைய முன்னோர்கள், நம்மை ஆண்ட மன்னர்கள் மிகப் பெரும் முயற்சியோடு ஏற்படுத்தினார்கள். அங்கே தமிழ் வளர்ந்தது. நம்முடைய பாடல்கள் வளர்க்கப்பட்டன. நம்முடைய எண்ணங்களெல்லாம் உயர்த்தப்பட்டன. மனிதர்களெல்லாம் மனிதர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணம் அங்கே காப்பாற்றப்பட்டது. அதாவது இன்றைக்கு நமக்குத் தேவையானது என்னவென்றால், அறநிலையங்களால் நடத்தப்படுகின்ற ஆலயங்கள் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ, அவை இந்து ஆலயங்களாக இருந்தாலும் சரி, முஸ்லீம் ஆலயங்களாக இருந்தாலும் சரி, அல்லது கிறிஸ்துவர்கள், மற்றவர்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஆலயங்களாக இருந்தாலும் சரி, அந்த இடத்தில் மனிதாபிமானம் போற்றப்பட்டால், அது பாராட்டப்பட வேண்டிய, போற்றப்பட வேண்டிய இடம்தான்.

மனிதனுக்கு வருவதற்கு முன்பு எப்படி இருந்தான், மறைந்த பிறகு எப்படி இருப்பான் என்று தெரியாது. 'கண்டவர் யாரும் விண்டிலர், விண்டவர் யாரும் கண்டிலர்' என்பது ஆன்றோர் வாக்கு. உலகத்தில் தெரியாத ஒன்றை, நீ இதுதான் என்று ஏற்றுக் கொண்டு மனித சமுதாயத்தில் மதமாச்சரியத்தை உருவாக்குவது என்பது ஆலயங்கள் போதிக்கின்ற விஷயங்கள் அல்ல. ஆலயங்களுக்குச் செல்லும் போது ஒரு மனிதன் ஆண்டவனை நம்பிச் செல்கிறான். அவன் மனிதனாக மாறவேண்டும். எந்த ஆலயத்தில் ஒரு மனிதன் மனிதாபிமானத்தைப் போற்றவில்லையோ, அவன் அந்த இடத்திற்கு ஆண்டவனைத் துதிப்பதற்குச் செல்கிறான் என்று சொல்வது வெறும் வேஷம். அதிலே உண்மையில்லை. எனவேதான் ஆலயத்திற்குச் சென்றவுடனே அவன் ஒரு முடிவு கட்ட வேண்டும். அவன் கடவுளை வணங்க அங்கே செல்கிறான். கடவுளும் உன்னைப்போல என்றால், ஏன் நீ அவனை வணங்கச் செல்ல வேண்டும். வணங்கத் தேவையில்லை. நீ ஒரு மனிதனாக

இருந்தால்தான் கடவுளை வணங்குவதாக அர்த்தம். எனவே, அந்தக் கடவுளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, நீ வெளியே வந்தபிறகும் அதற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ள வேண்டும். உன்னைப் போன்றவர்களை நீ போற்றினால்தான், நீ கடவுளைப் போற்றுகிறாய் என்று பொருள். அதனால்தான் தந்தை பெரியார் அவர்கள், 'கடவுளை மற, மனிதனை நினை' என்று சொன்னார்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது உடல் நலம் கருதி, விரைவில் பேசி முடிக்கவும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** உடல் நலம் கிடக்கட்டும். எனக்கு மனநலம் இருக்கிறது. உடல் நலம் சரி இல்லையென்றாலும், நீங்கள் நேரத்தைக் கூட்டிக் கொடுத்தால் அதுவும் சரியாக வந்துவிடும் (சிரிப்பு). இந்த நேரத்தில் எனக்குப் பேச எண்ணமில்லை. இருந்தாலும் சில நேரங்களில் பேசித்தான் ஆகவேண்டும். அதற்காகத், தான் உடல் நலம் சரியில்லையென்றாலும், நான் இங்கே வந்திருக்கிறேன். நாம் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். யார் சொல்வதில் உண்மை இருக்கிறது? இந்த அவையைத் தலைமையேற்று நடத்துகின்ற திரு. இராமலிங்கம் அவர்களை இங்கிருந்து பார்க்கின்ற கண்களுக்கு ஒருமாதிரி தெரிகிறது. அங்கிருந்து பார்க்கின்ற கண்களுக்கு வேறுமாதிரி தெரிகிறது. அவர் ஒருவிதத்திலே சொல்கிறார்; இவர் ஒரு விதத்திலே சொல்கிறார். சொல்வது வெவ்வேறாக இருந்தாலும் இருப்பது ஒன்றுதான். இராமலிங்கம்தான் அங்கே வீற்றிருப்பார். எனவே கடவுள் என்பவர் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் கடவுள் நம்மைக் காப்பாற்ற வேண்டும். நாம் கடவுளைக் காப்பாற்றுவதற்காக (குறுக்கீடுகள்) ஒருவனோ, ஒருத்தியோ எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அதைப் பற்றிக் கவலையில்லை. ஒருவனாகவும் இருக்கலாம்; ஒருத்தியாகவும் இருக்கலாம்; எல்லாவற்றுக்கும் மேலாக வேறுவிதமாகவும் இருக்கலாம். அப்பால் இருக்கக்கூடிய அவனுக்கு பால் இருக்கிறதா, இல்லையா? நமக்குத் தெரியாது.

பிற்பகல் 12-45

ஆனால் ஒன்று நிச்சயம். பாலை உற்பத்தி செய்பவன் அவன். ஆண் பாலாக இருந்தாலும், பெண்பாலாக இருந்தாலும், வேறுவிதமாக இருந்தாலும், உற்பத்தி செய்து காப்பாற்றுவதற்குக் காரணம், நாமெல்லாம் மனிதர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக. இதனால்தான் மதங்களெல்லாம் வந்தன. அதைப் போதிக்கின்ற இடங்கள்தான்



நம்முடைய ஆலயங்கள். நம்முடைய ஆலயங்களை நாம் ஆழமாகப் போய்ப் பார்க்க வேண்டும். அந்த ஆலயங்களிலே எவ்வளவு பெரிய தாமம் காப்பாற்றப்படுகிறது என்று. ஆனால் இன்றைக்கிருக்கிற மிகப் பெரிய வேதனை என்னவென்றால் ஆலயங்களிலே திருட்டு நடைபெறுகிறது. ஆண்டவனைத் தூக்கிச் செல்கிறார்கள். உறுப்பினர் திரு. வேலாயுதன்கூட சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவருடைய ஊரிலே மூன்று ஐம்பொன் சிலைகளை எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்று. உற்சவர், பூதேவி, வள்ளியம்மை ஆகிய மூன்று சிலைகளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். போலீஸ் துறை அதற்கு ரூ. 2,200 என்று மதிப்பு போட்டதாம். அந்தச் சிலைகளுக்கு மதிப்பு போடப்பட்டிருக்கிறது. அவன் மதிப்பு போடக்கூடியவனா? அந்த இடத்திலேயிருந்த சிலைகள் மதிப்பு போடக்கூடியவையா? அந்தச் சிலைகளிலேயிருக்கக்கூடிய, அங்கேயிருக்கக்கூடிய சிலைகள் முக்கியமானவையல்ல. அந்தச் சிலைகள் உணர்த்துகின்ற கலைகள். அவைகள் போதிக்கின்ற போதனைகள். விலையற்ற உணர்வுகள். அவை நம்மை மனிதனாக வாழ் என்று நமக்குச் சொல்லும் போதனைகள். அவைகள் கெட்டுக்கெட்ட மனிதனை அந்த ஆண்டவனைச் சொல்கின்றன. இந்தக் கேடுகெட்ட மனிதன் அந்த ஆண்டவனைத் திருடிக் கொண்டு செல்கிறான். அதுவும் ஆலயங்களிலேயே திருட்டு நடக்கிறது என்று சொன்னால், தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய தொகுதியிலே திருவட்டீஸ்வரர் கோயில் இருக்கிறது. அந்த திருவட்டீஸ்வரர் கோயிலிலே ஆறுமுகர் சன்னதி இருக்கிறது. இப்போது என்ன செய்தார்களோ எனக்குத் தெரியாது. கே.பி.கே. அவர்களை வலுக்கட்டாயமாக அங்கே அழைத்துக் கொண்டு போனேன். ஆறுமுகர் சன்னதியிலே ஒரு ஆலமரம் வளர்ந்து அந்தச் சன்னதியை இரண்டாகப் பிளந்து விட்டது. நாங்கள்கூட உள்ளே செல்ல முடியாது. அதை அப்படியே வைத்திருந்தார்கள் என்று சொன்னால் ஆலயங்களுக்கு என்ன மரியாதை தருகிறார்கள்? தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிறகு கே.பி.கே. அவர்களை—அவர் ஆத்திகவாதி என்பது கலைஞர் அவர்களுக்கே தெரியும்—அவரை வற்புறுத்தி அங்கே அழைத்துச் சென்று அதைச் சீர்படுத்தினேன். நைவேத்தியம் நடைபெறுவதற்காக ஆறுகால பூஜைக்கு அவர் அவர்கள் மானியம் வழங்கியிருக்கிறார்கள். அங்கேயுள்ள அந்தப் பட்டை பூராவும் அவர் அந்தக் கோயிலுக்காக வழங்கிய மானியம். அதிலே இப்போது ஒரு வீட்டுமனை கூட இல்லை. அதிலிருந்து வருமானமும் இல்லை. [illegible] கொண்டிருக்கிறார் திருவட்டீஸ்வரர். உலகத்தி[illegible] செய்வதாக ஆனால் அந்த திரு[illegible]

26827. Y 2U,3; N97
N97.27.3
600 008

வழியில்லை. காரணம் என்னவென்றால் அதற்காக வழங்கிய நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக்கூட அவன் ஏற்றுக் கொண்டான். ஏனென்றால் மனிதர்கள்தானே அனுபவிக்கிறார்கள் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறான். ஆக்கிரமித்துள்ளவர்களையெல்லாம் அகற்றுவதற்கு என்ன வழி? நான் கேட்டுக் கொள்வது, நீங்கள் முழுமையாக கோயில் நில ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டாலும் 20 சதவீத நிலங்களையாவது மீட்டுத் தாருங்கள்; உங்களுடைய அரசாங்கத்தின் கஜானாவிற்குத் தேவையான பணம் முழுவதையும் நாங்கள் வக்ஃப் போர்டிலிருந்து, கோயில் அறக்கட்டளைகளிலிருந்து கொடுத்து விடுகிறோம். வரியே போடத் தேவையில்லை. அந்த அளவுக்கு இன்றைக்கு ஆக்கிரமிப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன என்ன பிரயோசனம். இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பக்கத்திலே இருக்கிற கொடைக்கானல். அந்த இடத்திலே நடந்த அநியாயங்கள் அந்தப் பேட்டையையே பாதித்திருக்கிறது. நான் அங்கே வேலி போட்டேன். நான் அங்கே போய் வேலி போட்டவுடனே ** இவன் யார் வேலி போடுவதற்கு என்று சொல்லி தோட்டமன் போடுவதற்கு சில பேர் வந்தார்கள். தோட்டமன் போட்டார்கள். இவன் கோயில் விவகாரத்திலே தலையிடக்கூடாது; இவன் ** என்று சொன்னார்கள். நான் மனிதன். [illegible] தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தொண்டன். அதனால், நான் எல்லோருக்கும் கடமைப்பட்டவன் இந்த மானியத்திலே நான் கேட்கின்றேன் என்றால்..

பிற்பகல் 12-50

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்):** உறுப்பினர் ** என்ற வார்த்தையைத் திரும்பப் பெறலாம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். அவர்கள் சொன்னேன். அவர்கள் சொல்வது எவ்வளவு தவறு என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, சமுதாயத்திலே இப்படியெல்லாம் உணர்வுகள் இருக்கின்றன. இந்தப் பிரபஞ்சமே ஒரு கோயில். இந்த உலகமே ஒரு கோயில். இந்த உலகமே ஆலயம். இந்த உலகமே ஒரு மசூதி. எங்கெங்கு மனிதர்கள் வாழ்கின்றார்களோ அந்த இடங்களெல்லாம் ஆலயங்கள்; அந்த இடங்களெல்லாம் மசூதிகள். எனவே, நான் தயவு செய்து கேட்டுக் கொள்கிறேன். இந்த உணர்வோடு ஆலயங்களை அணுகுங்கள். நிச்சயம்

** உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதால் அகற்றப் பெற்றது.



ஆண்டவன் உங்களுக்குத் தெரிவான். அதை நீங்கள் உணர்வீர்கள். அது ஆலயங்களாக இருந்தாலும், மசூதிகளாக இருந்தாலும், தர்காக்களாக இருந்தாலும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதைப் போல, அவை அயோக்கியர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது. ஒரு தர்காவிலே ஒரு பெரியவருடைய சமாதி இருக்கலாம். அவனைச் சமாதியாக அடக்கிவிட்டு, அங்கே அயோக்கியர்கள் இருந்து கொண்டு, அயோக்கியத்தனம் செய்வதாக இருந்தால், அங்கு சமாதியே தேவையில்லை. அந்த மசூதியே தேவையில்லை. அந்த ஆலயமே தேவையில்லை. மனித உள்ளங்களை, மனிதாபிமானம் இருக்கின்ற உள்ளங்களைக் கோயில்களில் வைத்துக் கும்பிடலாம். ஒரு உண்மையை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கின்றோம். நாம் அனைவரும் ஒரே தாய்க்கும், ஒரே தந்தைக்கும் பிறந்தவர்கள். பல்வேறு ரூபங்களிலே, பல்வேறு நாடுகளிலே, பலவேறு மொழிகளை, பல்வேறு கலாச்சாரத்தைப் பேணி, வேறுவேறாக வாழ்கின்றோமே தவிர, நாம் அனைவரையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எல்லோரும் ஒரே தாய்க்கும், ஒரே தந்தைக்கும் பிறந்தவர்கள். இன்றைக்கு ஜாதி வெறி, மத வெறி, இவை நம்முடைய நாட்டை முன்னேறச் செய்யுமா? உயர்த்துமா? நம்முடைய நாடு சக்தி பெற்று உயர்ந்து நிற்க வேண்டுமானால், நாம் அனைவரும் மனிதாபிமானத்தோடு வாழ வேண்டும். நம்முடைய கோயில்கள், தமிழை வளர்த்த கோயில்கள். நான் மறந்து விடவில்லை. எனவேதான், நான் முஸ்லீமாக இருந்தாலும், கோவியிகளிலே உருவாக்கப்பட்ட தேவாரம், திருவாசகம், திருவந்தாதி போன்ற மகத்தான பாடல்களை நான் நன்கறிவேன். எனவே, காவிரிக் கரையிலே இருக்கின்ற 64 கோயில்களாக இருந்தாலும், திவ்விய க்ஷேத்திரங்களாக இருந்தாலும், சமணக் கோயில்களாக இருந்தாலும், அவைகள் உண்மையாக நடந்தால், அவை பாராட்டப்பட வேண்டிய இடங்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவேதான், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இவை நல்லமுறையிலே நடத்தப்பட வேண்டும். அதேபோல, நாகரிகம். அந்த நாகரிகம். பல கோயில்களை பாலாற்றங்கரை உருவாக்கியிருக்கின்றது. ஒருவன், எங்களுடைய பாலாற்றங்கரையிலே, 'படியளந்த பெருமான்' என்று, படியைத் எல்லோருக்கும் படியளந்துவிட்டு, தலைக்கு வைத்துப் படுத்துக் கொண்டிருக்கிறான். அந்தக் கோவிலைக் கேட்பாரே இல்லை. கோயில், வரலாற்றுச் சிறப்பு மிக்க கோயில். பல்லவன் உருவாக்கிய கோவில். ஆனால், இந்தக் கோயிலை, இன்றைக்குக் கேட்பார் யாரும் இல்லை. ஒருவன் பள்ளி கொண்டிருக்கிறான். பெயரே பள்ளிகொண்டான். அந்தக் கோயிலைப் பார்த்தால், கோயிலாக

இருக்கின்றதே தவிர, அதற்கான பெருமை அங்கே இல்லே. எனவே, இவைகளையெல்லாம் நீங்கள் சீர்படுத்த வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, கோயில்களிலே வேலை செய்கின்றவர்களுக்கு ரூ. 750 தான் சம்பளமா? நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள். உங்களை நான் தயவுசெய்து கேட்டுக் கொள்வது. கோயில்களிலே வேலை செய்பவர்களுக்கு சம்பளம் ரூ. 750 தானா? சம்பளம் ரூ. 500 தானா? இந்து அறநிலையத் துறை மூலம் நியமிக்கப்படுகின்ற நிர்வாகிகளுக்கு ரூ. 6,000 சம்பளம். அந்தக் கோயில் வருமானத்திலே.....

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள், கோயிலிலே வேலை செய்பவர்களுக்கு ரூ. 750 தான் சம்பளமா என்று கேட்கிறார்கள். முதுநிலைத் திருக்கோயில்களில் பணிபுரிகின்றவர்களுக்கு மாத வருமானம் ரூ. 1,500-க்கு மேல் இருக்கின்றது. வருமானம் இல்லாத கோயில்களில்தான் இந்த நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாக் கோயில்களிலும் அந்த நிலை இல்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கும் தெரியும். வருமானம் இல்லாத கோயில்கூட உண்டு. எல்லாவற்றையும் தட்டிலே பார்த்துக் கொள்ளுங்கள் என்று தட்டிவிட்டுப் போய்விடுகிறவர்களும் உண்டு. உங்களுக்குத்தான் தட்டிலே வருகின்றதே, உங்களுக்கு எதற்குச் சம்பளம் என்று குருக்களிடம் சொல்லிவிட்டுப் போகின்றவர்களும் உண்டு. தட்டையே அவர்களுக்குத் தட்டி தட்டிக் கொடுத்துப் விட்டுப் போய்விடுகிறார்கள். ஆனால், அவர்களுக்குச் சம்பளம் இல்லை. அப்பேர்ப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அதை ஏன் உங்களுடைய நிர்வாகத்தைவைத்து பார்க்கக் கூடாது? நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுடைய தலைமையில், மதிப்பீட்டுக் குழுவிலே நானும் இருந்திருக்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது முதலமைச்சராக இருந்த நேரத்திலே, பல பரிந்துரைகளை நாங்கள் வழங்கியிருக்கிறோம். அப்போது நாங்கள் எடுத்த கணக்கு. அப்போதிருந்த கோயில்களுக்கு வர வேண்டிய வாடகைப் பாக்கி மட்டும் 300 கோடி ரூபாய் என்று அந்தக் கமிட்டி அறிக்கை கொடுத்தது. அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? தயவு செய்து பாருங்கள்.



வேண்டுமானால், இன்னொரு குழுவை நியமியுங்கள். இதைச் செம்மைப்படுத்துங்கள். இது இங்கே மட்டும் இல்லை. அங்கேயும் அப்படித்தான். வக்ஃபு போர்டிலேயும் அதே கதிதான். வக்ஃபு போர்டிலே நல்லவர்கள் இருக்கிறார்கள்; இங்கே கெட்டவர்கள் என்றெல்லாம் நான் சொல்லவில்லை. யார் மிகவும் அதிகமாகக் கெட்டவர்கள் என்ற பெயரிலேதான் இரண்டு பேருக்குமுள்ள போட்டி என்ற நிலைமை இருக்கிறது. ஆகையினால், தயவுசெய்து அதை நீங்கள் செம்மைப் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 12-55

நான் ஒன்றை மட்டும் சொல்கிறேன். நான் மனிதன். முதலிலே மனிதன். முஸ்லீமாகப் பிறந்தேன். பிறந்தேன் என்பது, சில நேரங்களிலே விபத்து என்றுகூடச் சொல்கிறார்கள். முஸ்லீம் வீட்டிலே பிறந்தால் முஸ்லீம், இந்து வீட்டிலே பிறந்தால் இந்து, என்ற நிலையிலேதான் இருக்க வேண்டும். இதிலே வெறித்தனம் கூடாது. மதத்திலே அன்பு இருக்கலாம்; பற்று இருக்கலாம்; வெறித்தனம் கூடாது; அதை அழித்து ஒழிக்கின்ற காலம்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய காலம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் கொடுத்த விளக்கம், என்னுடைய உள்ளத்தைத் தொட்டது. என்னுடைய உள்ளத்தை மட்டுமா தொட்டது? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உள்ளத்தையும்தான் தொட்டது. அவருக்கு இருக்கிற கடமை. அந்தக் கடமையின் காரணமாக ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசினார்கள். அது தெரியும் எனக்கு. நேற்று என்ன நடந்தது? அதற்காக இன்றைக்கு என்ன நீங்கள் எழுப்பினீர்கள்? அதற்கு அவர் என்ன பதில் சொன்னார்? தெளிவான பதிலைச் சொல்லியிருக்கிறார். யாருக்கும் மனக்கிலேசம் ஏற்பட வேண்டும், யாரையும் தாக்க வேண்டுமென்பதற்காக அவர் சொல்லவில்லை. எனவே, இந்த நிலையிலே நாம் எல்லாம் ஒன்றாக இருந்து, நம் பணியைச் செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டு, பேசுவதற்கு நிறைய நேரம் தேவை; உடல் நலமும் தேவை. உள்ள நலம் இருக்கிறது; இது ஒருகாலத்திலும் கெடாது. எனவே, உடல் நலம் சரியாக இருந்தால் பேசுவேன்.

சமூக நலன் என்பதிலே ஒன்றை மட்டும் தயவுசெய்து நான் கேட்டுக் கொள்கிறேன். முஸ்லீம் பெண்களுக்கு 'ரிஜிஸ்ட்ரேஷன்' இருந்தால்தான் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, இப்போது ஒரு ஜி.ஓ. போட்டு இருக்கிறீர்கள். இருக்கட்டும். 'ரிஜிஸ்ட்ரேஷன்' செய்து கொள்ளலாம். ஆனால், இதனுடைய விளைவு, சட்ட விளைவு

என்ன என்றால், இன்றைக்கு உலகம் ஒப்புக் கொண்டிருக்கிற. 'முஸ்லீம் பெர்சனல் லா' ஒப்புக்கொண்டிருக்கிற 'நிக்காஹ்'-முறையை நீங்கள் சட்டப்படி வேறுவிதமாக இல்லாமல் ஆக்குகிறீர்கள் என்ற குறை இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான திசை திருப்ப மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுடைய பேச்சின் மூலம் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் நான் குறுக்கிடுகிறேன். பதிவுத் திருமணம் செய்து கொண்டால்தான், மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்படி திருமண உதவி வழங்கப்படும் என்பது. தி.மு.க. ஆட்சியிலே வகுக்கப்பட்ட விதிமுறையல்ல. தி.மு.க. ஆட்சி முதலில் 1989-90-ல் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் திட்டத்தின்படி, எட்டாவது வரையிலேயும் படித்த, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியாக 5,000 ரூபாய் தரப்படும் என்று அறிவித்தது. இடையிலே வந்த கடந்த கால ஆட்சியிலேதான் அவர்கள் பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று விதிமுறை வகுக்கப்பட்டது. அதில், இஸ்லாமிய, கிறிஸ்தவப்பெண்கள் பாதிக்கப்படக்கூடும் என்ற அந்த உணர்வை நான் மதிக்கின்றேன். இப்போது 10 ஆயிரம் ரூபாய் என்று அந்த உதவித் திட்டம் மாற்றப்பட்டு நடைமுறையிலே இருந்து வருகிறது. பதிவுத் திருமணம் செய்து கொண்டால்தான் நிதியுதவியா என்று அவர்கள் கேட்டார்கள். அப்படிக் கேட்கும்போது, இந்த அரசைப் பொறுத்தவரைக்கும் அதுபோலவா என்று சுட்டிக் காட்டினார்கள். அது தவறு. பதிவுத் திருமணம் செய்ய வேண்டும் என்பது தவறல்ல. அது ஒரு முறை. ஆனாலும், இப்போது எந்தத் திருமணமானாலும், சட்டப்படி செல்லும் என்று அண்ணா அவர்களுடைய காலத்திலே ஒரு தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டு, சட்டமாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டாலும், புரோகிதத் திருமணம் செய்து கொண்டாலும், அது சட்டப்படி செல்லும் என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. எனவே, பதிவுத் திருமணம் செய்து கொண்டால்தான் என்பது, கட்டாயப்படுத்தமாட்டாது என்ற ஒரு நல்ல அறிவிப்பை நான் சமூக நலத் துறையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நலத் துறை அமைச்சர், இரண்டு நாட்களாகவே, இதற்காக என்னுடன் பேசி வருகிறார்கள். இடையிலே நான் அதைப்பற்றி கருத்துச் சொல்ல, திரு. லத்தீப் அவர்களுடைய பேச்சைப் பயன்படுத்தியதற்காக, அவருடைய பேச்சிலே இந்த ஒரு பகுதிக்காக நான் மிகவும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.



பிற்பகல் 1-00

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் வழக்கம்போல் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் எதை அறிவித்தாலும், நான் நன்றி சொல்லுகின்ற அளவுக்கு, எல்லோரும் நன்றி சொல்லக்கூடிய அளவுக்குத்தான் பதில் அளிப்பார்கள். வேறுவிதமான பதிலை அளித்தாலும் அதிலும் சில நன்மைகள் அடங்கியிருக்கும். இருந்தாலும், வெளியிலே எனக்கு சொல்லப்பட்டதன் அடிப்படையில் இதுகுறித்துத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டுமென்று பேசினேன். தெளிவான பதில் கொடுத்த முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தெளிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் வேண்டிக் கொள்வதால் இத்துடன் எனது உரையை நிறைவு செய்து கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** திரு. கே. தங்கமணி, இரண்டு அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டும். அதனால் 5 நிமிடத்திற்குள் உங்கள் உரையை முடித்துக்கொள்ள வேண்டும்.

* **திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் அறநிலையத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் கோயில்களில் களவுபோன பொருட்களின் மதிப்பையும், நடவடிக்கை மூலம் அரசு கைப்பற்றியுள்ள பொருட்களின் விவரங்களையும், அது சம்பந்தமாக அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் அறங்காவலர் குழுத் தலைவராக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்ததுபோல் அல்லாமல், தர்ம சிந்தனை நிறைந்தவர்களை அக்குழுக்களின் தலைவர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, கோவில் சிற்பங்கள், ஆபரணங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான உறுதியான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயில் நிலங்கள் சம்பந்தமாக முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு மாநாட்டில், கோயில் நிலங்களில் தொடர்ந்து சாகுபடி

செய்துவரும் சாகுபடியாளர்களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுக்கொண்டு நிலத்தை சாகுபடியாளர்களுக்கு சொந்தமாக்கிவிட்டு அந்தத் தொகையை வங்கியிலே போட்டு அதிலிருந்து கிடைக்கின்ற வட்டியின் மூலமாக ஆலயப் பணிகளைச் செய்யலாம் என்று தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை நானும் இப்போது வலியுறுத்துகிறேன்.

கல்வி நிலையங்கள் கட்டுவதற்கு இடவசதி இல்லாத பகுதிகளில், மிகுதியாக உள்ள இந்து சமய அறக்கட்டளைக்குச் சொந்தமான இடங்களில் கல்வி நிலையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடவுள் வழிபாடு மற்றும் விழாக்கள் நடக்கும்போது மனித நேயத்தைப் பாதுகாக்கின்ற விதத்தில் வழிபாடுகள் நடப்பதற்கும், அதற்கு ஊறு விளைவிப்போர்களை முன்கூட்டியே அடையாளம் கண்டு அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றவகையில் சமூக சிந்தனையில் மாற்றம் கொண்டு வருவதற்கு, மூடப் பழக்கங்களுக்கு எதிராக பகுத்தறிவுக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு ஏற்றவகையில் இதமான பிரச்சாரக் கொள்கையை அரசு அறிவிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

எனது மானாமதுரை தொகுதியில் மேலநெட்டூர் கிராமத்திலுள்ள கோயில் தேர் பல வருடங்களாக பழுதடைந்த நிலையில் ஓடாமல் இருக்கிறது. அங்குள்ள மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற முறையில் அந்தத் தேரை ஓட்டுவதற்கு இந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறை குறித்து குறிப்பிட விரும்புகிறேன். சமுதாயத்தால் கைவிடப்படுகின்ற மக்களை எல்லாம் கண்டறிந்து அவர்களுக்கு எல்லா உதவிகளும் இலவசமாக சென்று அடையவேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டது இந்த சமூக நலத் துறை ஆகும். இந்தத் துறையின் மூலமாக எனது தொகுதியில் சி.எஸ்.ஐ. செவித் திறன் குறைவுடையோர் உயர்நிலைப் பள்ளி ஒன்று இயங்குகிறது. அங்கே மாதச் சம்பளம் வழங்குவதில்கூட சிரமங்கள் ஏற்பட்டு 4 மாதங்களில் ஒரு மாதச் சம்பளம்தான் வழங்கப்படுகிறது. 1988-லிருந்து சுமார் 7 லட்ச ரூபாய் வரை பாக்கியுள்ளதாகத் தெரிகிறது. அந்தப் பாக்கித் தொகையை அளிப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில்



உத்தரவு வழங்குவார்கள் என்று நான் நம்புகிறேன். அதேபோல், தலைமை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் தலைமை ஆசிரியர் பணியிடத்தையும், பள்ளிக்கு மிக அவசரமாகத் தேவைப்படுகின்ற 5 பணியிடங்களையும் நிரப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மதுரை மாநகரிலுள்ள பார்ஸ்டல் இல்லம் தனியார் துறையில் இயங்குகிறது. அதாவது 'மைனர் ஜெயிலில்' இயங்குகிறது. அதை அரசுத் துறையிலே கொண்டு வந்து அங்கே இருக்கக்கூடிய சிறுவர்களுக்கு இழைக்கப்படுகிற குறைபாடுகளை நீக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, எல்லோரும் தெரிவித்ததுபோல் 8-ஆம் வகுப்பு வரை படித்த பெண்கள் அனைவருக்கும் நிபந்தனை இல்லாமல், நிர்ணயம் இல்லாமல் அனைவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

அடுத்து, ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களில் 250 என்ற எண்ணிக்கையை 500ஆக உயர்த்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தாய், தந்தையை இழந்த ஆதரவற்ற குழந்தைகளைப் போல், தாய், தந்தை இருந்தும் உணவும், கல்வியும் கிடைக்காத ஏராளமான குழந்தைகள் வறுமையின் கோரப்பிடிக்கு ஆளாக்கப்பட்டுள்ளன. சென்னை போன்ற பெரிய நகரங்களில், 10-லிருந்து 15 வயதிற்குட்பட்ட சிறார்கள், ஓட்டலிலே வேலை பார்த்துவிட்டு, பாதாள நடைபாதையில் படுத்து உறங்கக்கூடிய காட்சிகள் காணப்படுகின்றன. எனவே, அவர்களுக்கு கல்வியும், உணவும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, அரசு மானியத்துடன் நடத்தப்படும் தொண்டு நிறுவனங்களையும் கண்காணிக்கின்ற நடவடிக்கையினை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இதுபோக, கற்பழிப்பு மற்றும் பாலியல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, சமுதாயத்தால் ஒதுக்கப்படுகின்ற பெண்களுக்கு மகளிர் நல்வாழ்வு மையங்களை தனியாக ஏற்படுத்திட வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மேலும், அரசின் அனைத்து உதவித் தொகைகளையும், இன்றைக்கு இருக்கக்கூடிய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி மற்றும் ஏறிவரும் விலைவாசி ஆகியவைகளைக் கணக்கில் கொண்டு உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல முதியோர் உதவித் தொகையின் வயது வரம்பை

58-ஆக ஆக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். சமூகத்தில் மிக முக்கியமான பிரச்சினை, முதியோர் பாதுகாப்பு. வயது முதிர்ந்தவுடன் இவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லங்கள் ஏற்படுத்த வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, அரசின் உதவித் தொகைக்கு மனுச் செய்த மூன்று மாதத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டுகிறேன். அடுத்தபடியாக, சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக்கவும், சத்துணவுப் பணியாளர்கள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியவர்களையும் அரசுப் பணியாளர்களாக அறிவித்து, அவர்களுக்கு ஊதிய விகிதத்தை ஒரு குறிப்பிட்ட அளவு வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக் கொள்கிறேன். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து ஓய்வுபெறும பணியாளர்களுக்கு பணிக்கொடையாக ரூ. 20,000 வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல சத்துணவுத் திட்டத்தில் பணிபுரிந்து ஓய்வுபெறுவோர்க்கு ஓய்வு ஊதியத்தினை மற்றவர்களுக்கு வழங்குவதுபோல வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பள்ளி சத்துணவு மையம், ஊட்டச்சத்து மையம், அங்கன்வாடி மையம் ஆகியவற்றில் பணிபுரியும் சமையற்காரர்களுக்கும், உதவியாளர்களுக்கும் வேலையில் ஒரே தன்மை உள்ளதால் சம அளவில் சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல சத்துணவுக் கூடங்களிலே இருக்கக்கூடிய பழைய பொருட்களை, அதாவது தட்டு மற்றும் பாத்திரங்களை உடனடியாக மாற்றி நல்ல தரமான பொருட்களை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதும், இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் மீதும் எங்களுடைய கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறோம். சமூக நலத் துறை மானியக் கோரிக்கை நடைபெறுகின்ற இந்த நேரத்திலே, காலையிலே அறிவு நலத்திற்கு வலுவூட்டக்கூடிய ஒரு செய்தி இடம் பெற்றது. எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் அதிலே கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு



இல்லாமல் போய்விட்ட காரணத்தினாலே, இதிலே என்னுடைய கருத்தினையும் இணைத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

இன்றைக்கு தீமிதிச் சம்பவத்தைப் பற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தினை ஒட்டி, இங்கே பல உறுப்பினர்கள். அவர்களுடைய கருத்துக்களை அதன்மீது சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையிலே சொன்னார்கள். அதாவது ஜனநாயகத்தைக் காப்பதற்காக ஒரு முறையும், தமிழ் இனத்திற்காக ஒரு முறையும் இந்த ஆட்சி பறிக்கப்பட்டது. அதுபோல பகுத்தறிவுக்காக ஒரு முறை போனாலும் கவலையில்லையென்று சொன்னது, உண்மையிலேயே, இன்றைக்கு உலகத்திலுள்ள பகுத்தறிவாளர்களுக்கு எல்லாம், அவர்களுடைய நெஞ்சங்களுக்கெல்லாம் இனிப்பான ஒரு செய்தியாக, உறுதியான செய்தியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக, இந்தத் தீமிதி வழக்கமானது, தாய் தெய்வங்கள்-அதாவது அம்மன் கோயில்களிலேதான் நடத்தப்படுகின்றது. வரலாற்று ரீதியாகப் பார்க்கிறபோது, தாய்வழி சமுதாயமாக இருந்த கால கட்டத்திலே மனிதன் புசிக்க வேட்டையாடி, அந்த உணவுகளை, தீ மூட்டி, பொசுக்கி சாப்பிடுவான். அந்த நேரத்திலே, அந்தக் குழுவிற்கு ஒரு பெண்தான் தலைமை தாங்கி நடத்திச் செல்வாள். அவள் மறைந்ததற்குப் பின்னாலே, அப்படி தீ மூட்டிய இடத்திலே இருந்து கொண்டுதான் அவர்கள் வழிபாடு நடத்துவது வழக்கம். அப்போதிருந்த இந்த வழக்கமானது இப்படி வந்திருக்கின்றது. ஆனால், இடையிலே, இதிலே பல மூடக் கருத்துக்கள் நிலவியதன் காரணமாக பல பேரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கம் எல்லாம் மண்மூடிப் போக" என்று பாடிய வள்ளலார் அவர்களுடைய மறைவானது எப்படி இருந்தது என்பது இன்றைக்கு மிகப் பெரிய கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் மறந்து விடக் கூடாது. அதேபோல, நந்தனை எரித்த கதையும் இதே தீமிதியின் மூலமாகத்தான் நடைபெற்றிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. ஆகவே, இந்த நாட்டிலே உள்ள சமயப் பெரியோர்கள் முதற்கொண்டு பகுத்தறிவாளர்கள் வரை அனைவருமே தீமிதிக்கின்ற வழக்கத்தை மூட நம்பிக்கை என்று சாடியிருக்கிறார்கள் என்றுதான் நம்முடைய இலக்கியச் சான்றுகளிலும், நம்முடைய நாட்டிலே உள்ள ஆதாரங்களிலும் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இறிலே தன்னுடைய பெயரைப் பயன்படுத்தி, தன்னுடைய ஆட்சிக்காக செய்யப்பட்டது என்ற இப்படிப்பட்ட மூடத்தனத்தை—அதாவது, இறை நம்பிக்கையை அவர் சாடவில்லை—ஆனால், இந்த நிகழ்ச்சியின் மூலமாக ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட நிகழ்ச்சியில் ஈடுபடுவதாகச் சிலர் சொல்வது என்பது, ஏற்கெனவே இப்படிப்பட்ட கேவலங்களைத் தமிழ்நாட்டில் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கு, வெறும் வாயை மென்று கொண்டிருப்பவர்களுக்கு அவல் போட்டது போல ஆகிவிடக்கூடாது என்பதற்காகத்தான், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு பாதுகாப்புக்காக இந்த விளக்கத்தை அளித்திருக்கிறார்கள்.

ஆனாலும்கூட, எங்களைப் போன்றவர்களுக்கு, அதாவது தெய்வ நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ, அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல் செல்கின்றவர்களுக்கு, உண்மையிலேயே தமிழக முதல்வர் அவர்களுடைய உரையானது மிகவும் பாராட்டக்கூடிய, வரவேற்கத்தக்க அளவிலே இருக்கிறது என்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அதே நேரத்தில் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட ஆண்டவனையே அரவம்படாமல் இன்றைக்கு கிளப்பிக் கொண்டுபோய் வெளிநாடுகளுக்குக் கடத்தி விடுகிற நிலைமை உள்ளது. மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் காலையிலே கோயில் சிலைகள் கடத்தப்படுவது பற்றிய செய்தியினைச் சொன்னதற்காக நான் இதைச் சொல்லுகிறேனே தவிர, யார் மனதையும் புண்படுத்துவதற்காக அல்ல. அப்படிச் சிலைகள் கடத்தப்படுகிறபோது, அத்தகைய கோயில்களிலே சிலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பல நடவடிக்கைகளை, அதாவது எச்சரிக்கை மணி போன்றவைகளையெல்லாம் அங்கே பொருத்துகின்ற நடவடிக்கைகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, அவர்களைப் பொறுத்தவரையில் கோயில்களினுடைய நடவடிக்கைகளுக்கு அல்லது இறை நம்பிக்கையாளர்களுடைய நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்புத் தருவதுபோல, ஊக்கம் தருவதுபோலத்தான் அவருடைய ஆட்சியானது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இப்படிப்பட்ட தீமிதிச் சம்பவம் என்பதை பொதுவாக சைவப் பெரியார்கள் எல்லாம் கூடக் கண்டித்திருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவுறுத்துகிறேன். பெருந்தலைவர் காமராசர் அவர்கள்கூட இப்படிப்பட்ட மூட



நம்பிக்கையை, தீ மிதிப்பது, அலகு குத்திக் கொள்வது போன்றவற்றை மிக வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள் என்பதை நாத்திகம் இராமசாமி போன்ற பெரியவர்கள் எல்லாம்கூடச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இது ஒன்றும் தவறான செய்தி அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) :** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் அலகு குத்திக் கொள்வதையோ அல்லது தீமிதிப்பதையோ எங்கே கண்டித்துச் சொல்லியிருக்கிறார் என்று எனக்கு நினைவில்லை. ஒருவேளை அவர் கண்டித்திருப்பார் என்றால் அதை உறுப்பினர் ஆதாரத்தோடு சொல்லட்டும். ஏனென்றால், விருதுநகரிலே மாரியம்மன் கோவிலிலே நாங்கள் சிறப்பாக விழாக் கொண்டாடுவது உண்டு. அங்கே தீமிதிக்கும் வழக்கமும், அலகு குத்திக் கொள்ளும் வழக்கமும் உண்டு. இதெல்லாம் அடுத்தவர்களுடைய நம்பிக்கையைக் களங்கப்படுத்துவதாகவும், ஊனப்படுத்துவதாகவும்தான் நான் நினைக்கிறேன். அவரவர்களுடைய நம்பிக்கை அவர்கள் கடவுளைக் கும்பிடுகிறார்கள், அவர்கள் கும்பிடட்டும். அதற்காக, இதெல்லாம் மூடப்பழக்கம், காட்டுமிராண்டித்தனம், அப்படி இப்படி என்று பேசுவதெல்லாம் சரியில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. இராமலிங்கம்):** காலையிலே தேவையான அளவு முதல்வர் அவர்கள் விளக்கங்களைத் தந்து விட்டார்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாத்திகம் இராமசாமி அவர்கள் தன்னுடைய பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன். உறுப்பினர் அவர்களுக்கும் நான் எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். காட்டுமிராண்டித்தனம் என்பது பழமையான எண்ணம்தான்.

பெரியார் அவர்கள், காட்டுமிராண்டி மொழி தமிழ் என்று சொன்னபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட, பழமையான மொழி என்றுதான் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அதற்கு விளக்கம் சொன்னார்கள். ஒரு பழைய மொழி என்பதற்காக அந்த காட்டுமிராண்டி என்ற வார்த்தையைப் பெரியார் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். எனவே, காட்டுமிராண்டி என்று

சொல்லப்படுகிற வார்த்தையானது பழமையான ஒரு எண்ணம் அல்லது ஒரு பழமையான நடவடிக்கை என்பதனுடைய அடையாளமே தவிர, கண்டிக்கிற ஒரு வார்த்தையல்ல என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊனமுற்றோர் நலத்திலே இந்த ஆட்சியானது பல நல்ல நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. அதிலே, பார்வையற்றோர் பிரச்சினையை மட்டும் சொல்ல எனக்கு வாய்ப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

என்று சொல்வார்கள். பார்வையற்றோர் என்று சொன்னால் இன்றைக்குப் பார்வையற்றவர்களிலே பெரும்பாலானவர்கள் படித்திருக்கிறார்கள். படிக்காதவர்கள்தான் பார்வையற்றவர்களாகக் கருதப்படுவார்களே தவிர, படிக்கின்றவர்கள் அப்படியல்ல. இன்றைக்குப் பார்வையற்றவர்களிலே ஏறத்தாழ 4,000 பேர்கள் படித்தவர்களாக, வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு, ஏறத்தாழ 10 ஆண்டு காலமாகக் காத்திருக்கிறார்கள். இன்றைக்கு இட ஒதுக்கீடானது ஊனமுற்றவர்களுக்கு, அதாவது, பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவீதமும், பேசும்திறன் இருந்து காது கேளாதவருக்கு ஒரு சதவீதமும், கை, கால் ஊனமுற்றவருக்கு ஒரு சதவீதமும், ஆக, இன்றைக்கு 3 சதவீதம் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

நான் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், இந்த இட ஒதுக்கீடு முறையாக அமலாக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு உயர்மட்டக் குழு, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் குழுவானது இந்த இட ஒதுக்கீட்டினை முறையாக அமல்படுத்துகிறதா என்பதைத் தயவு செய்து கண்காணிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இந்தப் பார்வையற்றோர் இட ஒதுக்கீட்டிலே, பல இடங்கள் இன்றைக்கும் காலியாக இருக்கின்றன. அதாவது ஆசிரியர் தேர்வு வாரியத்தில் தேர்வு செய்யப்பட்டவர்களிலே 15 பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. கண்காணிப்பது முறையாக இருந்தால்தான், பார்வையற்றோருடைய ஒதுக்கீடானது முறையாக அவர்களுக்குப் போய்ச் சேரும்.



பிற்பகல் 1-15

இந்தப் பார்வையற்றோர் இட ஒதுக்கீடானது வேறு யாருக்கும் செல்லாத அளவுக்கு, அவர்களுக்கு மட்டுமே அது ஒதுக்கீடாகச் செய்யப்பட வேண்டும். அப்படி தகுதியான ஆட்கள் கிடைக்கவில்லை என்றால், Carry forward method என்று சொல்லக்கூடிய வகையில் அதை அடுத்த ஆண்டுக்கு பார்வையற்றோருக்கே சேர்த்து வழங்குகிற வகையில் முறைகள் வகுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அரசானது, மத்திய அரசு ஊனமுற்றோருக்கு தந்த கல்வி உதவித் தொகையை நிறுத்தியபோதிலும்கூட, இன்றைக்குக் கூடுதலான நிதியை ஒதுக்கி வழங்கியிருக்கிறார்கள். எனவே இந்த நேரத்திலே அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு பூந்தமல்லியில் உள்ள பயிற்சி மையத்தில் அடிப்படை இயந்திரம் இயக்குதல், மின்கம்பி சுற்றுதல், புத்தகம் கட்டுதல் போன்ற பயிற்சிகளைப் பெறுகிறார்கள். ஆனால் இதுவரையில் அவர்கள் 5 சதவீதம்கூட வேலைவாய்ப்புப் பெறவில்லை. எனவே மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்றைக்கு ஐ.ஏ.எஸ். தேர்வுகளிலே இரண்டு பார்வையற்றவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது, 'ஏ' மற்றும் 'பி' கிரேடு பதவிகளிலே பார்வையற்றோர்களுக்குத் தேர்வு எழுத அனுமதி வழங்கப்படுவதில்லை என்ற குறை சொல்லப்படுகிறது. எனவே 'ஏ' கிரேடு மற்றும் 'பி' கிரேடு போன்ற பதவிகளுக்குத் தேர்வு எழுத அவர்களை அனுமதிப்பதாலே, அவர்களும் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த, சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் அமைக்கப்பட்டிருக்கிற, மாநில மறுவாழ்வுக் குழுவிலே ஊனமுற்றோர்களின் பிரதிநிதிகளும் கட்டாயமாக இடம் பெறுகிற வகையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அதாவது பள்ளியிலே பயிலுகின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்றவற்றில் விலக்கு அளிக்கப்பட்டன. ஆனால், கல்லூரிகளிலும்,

பல்கலைக்கழகங்களிலும் ஊனமுற்றோருக்கு இதுபோன்ற விலக்கு அளிக்கப்படுவதில்லை. அவற்றையும் அரசு கவனத்தில் கொண்டு, கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் போன்றவைகளிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல 1989-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பணியிடங்களைப் பார்வையற்ற பெண்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றே ஒன்று, சத்துணவுக்கூட சமையலர்களைப் பற்றியது. ஏனைய ஊழியர்களுக்கு தனி உயர்வு என்று 20 ரூபாய் தரப்பட்டது. 30-6-1995-ல் 150 ரூபாய் பெற்ற இவர்களுக்கு, மூன்று முறையாக ரூ.10 வீதம் பிடித்தம் செய்த காரணத்தால், ஊதியம் ரூ.120/- ஆனது. இன்றைக்கு இப்படி 10 ரூபாய் பிடித்தம் செய்வதால் ரூ.390/- அவர்களுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே சமையலர்களுக்கும், தனி உயர்வாக ரூ.20 ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. இராமலிங்கம்):** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இறுதியாக அறநிலையத் துறையினுடைய கோயில்களிலே பணி செய்கின்ற ஊழியர்கள் இறந்தால் அந்தப் பணியாளர்களுக்குக் குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தின்படி ரூ.30,000 என்று வழங்கப்படுவதை ரூ.60,000 ஆக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டு, அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திலுள்ள கோயில்களிலே தமிழிலே வழிபாடு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே தமிழகத்திலுள்ள அனைத்துக் கோயில்களிலும் தமிழிலே வழிபாடு நடக்கிற உரிமை கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து நான் விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.செ. இராமலிங்கம்):** திரு. ச. அழகிரி.

பிற்பகல் 1-20

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் இந்து அறநிலையத் துறை சார்பாக தமிழ் மாநிலக்



காங்கிரஸ் கட்சியினுடைய கருத்துகளைக் கூறுவதற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். சமூக நலன் என்பது, சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்காக கடையரிலும் கடையர் என்று சொல்லக்கூடிய கீழ்த்தட்டு மக்களுக்கு அரசாங்கத்தினுடைய பலன்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு துறை. இந்தத் துறைக்கு 600 கோடி ரூபாய் மானியம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தைப் போன்ற ஒரு பெரிய மாநிலத்தில் மேலும் இந்தத் துறைக்கு 400 கோடி ரூபாய் ஒதுக்கி, 1,000 கோடி ரூபாயை அதற்குச் செலவு செய்தால்கூட, அது பயனுடையதாக இருக்கும் என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கு முன்பாக, நான் இந்த அவைக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நேற்று ஒரு திருமண நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பேசுகிறபோது, வணக்கத்துக்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள், பாரதத்தினுடைய பிரதமராக எங்களுடைய தலைவர் மூப்பனார் அவர்கள் வருவதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று, தமிழ், தமிழன் என்கிற உணர்வோடு அவர்கள் ஒரு வார்த்தையைச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய நல்லெண்ண சமிக்ஞைக்காக தமிழ் மாநிலக் காங்கிரஸின் சார்பாக எங்களுடைய நன்றியினை நாங்கள் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறோம்.

அதேபோல், சமூகநலத் துறையின் சார்பாக பாப்புலர் ஸ்கீம்ஸ், அதாவது மக்களைக் கவருகின்ற திட்டங்களை நம்முடைய அரசாங்கம் மேலும் மேலும் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். புதிய பொருளாதாரத் திட்டம் வந்த பிறகு, பல பொருளாதார வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். மானியம் தரக் கூடாது, இலவச வேட்டி-சேலைகள், இலவச அரிசி வழங்குதல், இலவசமாக இதையெல்லாம் கொடுத்தாலும் அவை மக்களுக்குப் பயனுடையதாக இருக்காது; பொருளாதாரத்திற்கு நன்மை பயப்பதாக இருக்காது என்ற ஒரு கருத்து இன்றைக்கு நிலவுகிறது. ஆனால் இந்த இடத்திலே நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நாம் கொண்டுவந்து இருக்கின்ற பல்வேறு திட்டங்கள்—இன்றைக்கு பெரிய பெரிய கார் தொழிற்சாலைகள் எல்லாம் வந்து இருக்கின்றன; தேசிய நெடுஞ்சாலைகள் வருகின்றன; பெப்சி வந்து இருக்கிறது;

கொக்கோ கோலா வந்து இருக்கிறது; இன்னும் பல்வேறு உலக விஷயங்கள் எல்லாம் இந்தியாவிற்குள் வந்து இருக்கின்றன. ஆனால், இவைகளால் சமுதாயத்தினுடைய கீழ் நிலையிலே இருக்கிறவர்களுக்கு, கடையராக இருக்கிறவர்களுக்கு, கடையரிலும் சேரியிலே இருப்பவருக்கு, கூரை வீட்டிலே வாழ்கிறவருக்கு, இல்லாதவருக்கு, இந்தத் திட்டங்களினால் என்ன பயன் என்பதனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வேறுசில பயன்கள், சமுதாயத்தினுடைய மேல் நிலையிலே இருக்கிறவர்களுக்கு இருக்கலாம்; ஆனால் கீழ் நிலையிலே இருக்கிறவர்களுக்கு இவைகள் எல்லாம் சென்றடையவில்லை என்பதுதான் நிதர்சனம். இன்றைக்கு நாம் கொண்டு வந்திருக்கிற குடிநீர்த் திட்டங்கள் கூட காலனி மக்களைச் சென்றடையவில்லை. நாம் போடுகின்ற ஊராட்சி ஒன்றிய சாலைகள் கூட ஆதிதிராவிடர்களுக்கு முழுமையாகச் சென்றடையவில்லை. அவைகளே சென்றடையாதபோது, பெரிய பொருளாதாரத் திட்டங்களினால் மிக எளிய நிலையிலே இருக்கிறவர்களுக்கு நடைமுறை ரீதியாக எந்தப் பயனும் இதுவரை கிடைக்கவில்லை என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மத்தியதர வர்க்கம், மிக உயர்ந்த மத்தியதர வர்க்கம்—இவர்களுக்கு இவைகளினால் பலன் கிடைக்கிறதே ஒழிய, ஏழை எளிய மக்களுக்கு அந்தப் பலன்கள் சென்றடையவில்லை. எனவே, மக்களைக் கவருகின்ற பாப்புலர் ஸ்கீம்ஸ்-திட்டங்களைப் போடுவதிலே நம்முடைய அரசாங்கம் மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும்.

உதாரணமாக, சத்துணவு. அன்றைக்கு வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி. தியாகராயர் அவர்கள் சென்னை மாநகராட்சியிலேமட்டும் ஏழைக் குழந்தைகள் வாழ்கின்ற இடங்களிலே அதை பரிசோதனை செய்து பார்த்தார்கள். அதன்பிறகு பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தமிழகம் முழுவதும் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதன்பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் அதற்கு சத்துணவு என்று மெருகு ஊட்டினார்கள். அதன்பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு முட்டையோடு அந்தச் சத்துணவைக் கொடுத்தார்கள். இது வரவேற்க வேண்டிய திட்டம். ஒரு புள்ளிவிவரத்தை நீங்கள் பார்த்தால் தெரியும். 20 ஆண்டுகளுக்கு முன்பு, 15 ஆண்டுகளுக்கு முன்பு கிராமப்புறங்களிலே பட்டினிச் சாவுகள் இருக்கும், உணவு கிடைக்காமல் முதியவர்கள் இறந்து போவார்கள். இருந்தாலும், அவர்களுடைய குழந்தைகள் அவர்களை விட்டுவிடுவார்கள். ஆனால் பட்டினிச் சாவுகள் இன்றைக்குக் குறைந்து இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், நாம் முதியவர்களுக்கு அளிக்கின்ற அந்த ஒரு வேளை சத்துணவுதான் என்பதனை நான் இங்கே கூறிக்கொள்ள



ஆசைப்படுகிறேன். எனவே அந்தத் திட்டத்தை மேலும் மெருகூட்ட முடியுமா, மேலும் செழுமைப்படுத்த முடியுமா, மேலும் ஆயிரக் கணக்கான மக்களை இந்தத் திட்டத்திற்குள் கொண்டுவர முடியுமா என்பதனை நம்முடைய அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சத்துணவு மையங்களுக்கு விறகு கொடுக்கிறார்கள்; அந்த விறகு அவர்களுக்கு காய்ந்த விறகாகக் கிடைப்பதில்லை. ஏனென்றால், விறகுக்காக 5 பைசா கொடுக்கிறோம். எனவே, எங்காவது கிடைக்கின்ற ஈர விறகுதான் அவர்களுக்கு கிடைக்கிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா சத்துணவு மையங்களுக்கும் கேஸ் சிலிண்டர் ஒன்று வழங்கி, அதன் மூலம் அந்த சத்துணவு மையங்களுக்கு விறகு பிரச்சினையிலிருந்து விடுதலை அளிக்க முடியுமா என்பதனை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல் சத்துணவு மையங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அரிசி, அந்த அரிசி ஒரு அற்புதமான அரிசி. அதேபோல அரிசியைத் தயாரிக்க உலகத்திலே இருக்கிற எந்தத் தொழில் நுட்ப வல்லுனராலும் முடியாது. ஆனால் நம்மால் முடிகிறது. நல்ல நெல்லில் இருந்து இவ்வளவு மோசமான அரிசியை எப்படி உற்பத்தி செய்ய முடிகின்றது என்பதனை அந்த உற்பத்தியாளர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதே நெல்லில் இருந்து நல்ல அரிசி நமக்குக் கிடைக்கிறது. வீடுகளுக்குக் கிடைக்கிறது. ஆனால் சத்துணவு மையங்களுக்குப் போகின்ற அந்த அரிசி மட்டும் அவ்வளவு மோசமான நாற்றத்தோடு இருப்பதற்கு காரணம் பழுப்புக் கலரில், என்ன? ஏன் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அதற்கு ஒரு மாற்றுவழியைக் கண்டுபிடிக்கமுடியாது என்பதனை நான் இந்த நேரத்தில் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

அதேபோல, சத்துணவுத் திட்டத்தின் மூலமாகத் தையல் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்திருக்கின்றோம். மாணவர்களுக்கு, மாணவிகளுக்கு இலவசமாகச் சீருடை வழங்குகின்ற திட்டம். அந்த திட்டத்திற்காக, நாலரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எம்.ஜி.ஆர். காலத்திலே கொண்டுவரப்பட்ட திட்டம். எல்லோருக்கும் சீருடை என்று அவர் ஏற்பாடு செய்து கொடுத்தார். அதாவது இரண்டு செட். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் கிராமப்புறத்திலிருந்து வந்தவர்கள்.

கிராமப்புறங்களில் உள்ள ஏழ்மை நிலை பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குக்கூட கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழைக் குழந்தைகளுக்குக் கால்சட்டை, மேல்சட்டை கிடைப்பது இல்லை. தாவணி கிடைப்பதில்லை. சிரமப்படுகின்றார்கள். எனவே அந்த ஒரு ஆடையைக் கொடுப்பதற்கு பதிலாக மேலும் ஒரு ஆடை, கிராமப்புறங்களில் இருக்கின்ற ஏழை எளிய மாணவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வரவேண்டும். அதற்காக மேலும் ஒரு 5 கோடி ரூபாயை பெரிய தொகை அல்ல—மேலும் 5 கோடி ரூபாயை அதற்காக நாம் செலவு செய்வோமேயானால், அது நன்மை பயக்கின்ற ஒரு திட்டமாக இருக்கும். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கின்றேன். ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது, ஆனால் அதிகாரிகளுடைய நிலையிலே மாற்றம் ஏற்படவில்லை என்று ஒருமுறை நான் சொல்லியிருக்கிறேன். இதோ இதிலேகூட அதற்கான குறிப்பு இருக்கிறது. 1996-97-ஆம் ஆண்டுக்கு, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட சீருடைத் துணிகளின் எண்ணிக்கை 1,20,000. ஆனால் நிதி ஆண்டே முடிந்துவிட்டது. இதுவரை வழங்கப்பட்ட துணிகளின் எண்ணிக்கை வெறும் 8,000 தான் என்பதை நான் நினைவுபடுத்துகின்றேன். இப்படியிருந்தால், வளர்ச்சித் திட்டங்கள் எப்படி வெற்றி பெறும் என்பதனை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அதேபோல, இணை உணவு தயாரிக்கும் திட்டம் என்ற ஒன்றை நாம் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டத்தில் 26 சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இணை உணவு தயாரிப்புத் திட்டம் என்பது, நலிவுற்ற குழந்தைகளுக்கு ஊட்ட மாவு கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். ஆனால் சென்ற ஆட்சியில் எப்படி தனி நபர்கள் அதற்கு விநியோகம் செய்தார்களோ அதேபோல்தான் இன்று வரைக்கும் தனிநபர்கள் விநியோகம் செய்வதாக, அதுவும் திருச்செங்கோடு பகுதியில் இருக்கக்கூடிய ஒரு விநியோகஸ்தர்தான் அதை விநியோகம் செய்வதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. அந்தத் திட்டத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்தால் ஒரு கிலோவுக்கு ரூ.12.50 அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் அதே மாவை தனியார் விநியோகம் செய்தால் அவர்களுக்கு ரூ.16.50 வழங்கப்படுகிறது. எனவே



இதுபோன்ற சிறிய திட்டங்களிலெல்லாம் இடைத் தரகர்களை நுழையவிடாமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தின் கடமை. அந்தத் துறையைச் சார்ந்தவர்களுடைய கடமை. ஏனென்றால், சமுதாயத்தின் மிகக் கீழ் நிலையில் இருக்கக்கூடியவர்களுக்குச் செல்லக்கூடிய இந்தத் திட்டம் எந்தவிதமான தவறும் நடைபெற முடியாத அளவிலே இவைகளை நாம் செழுமைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பெண்களுக்காக ஏராளமான திட்டங்களை நாம் சமூக நலத்துறையிலே செய்திருக்கிறோம். ஆனால் அந்தத் திட்டங்களால் எத்தனை பெண்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைப் பார்ப்போமேயானால், மிகவும் குறைவாக இருக்கிறது. ஏனென்றால் திட்டங்களை அறிவித்த பிறகு அந்த நடைமுறை சரியாக இருக்கிறதா என்பதனைப் பரிசோதனை செய்யக்கூடிய, அவைகளைச் செக் செய்யக் கூடிய ஒரு அமைப்பு நம்மிடம் இல்லை. எனவே, அந்த வகையில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற திட்டங்கள்மூலம் எத்தனை சதவீதம் பலன் அடைந்திருக்கிறார்கள் என்கின்ற ஒரு கணக்கையும் நாம் ஆராயவேண்டும். உதாரணமாக, சத்துணவில் ஒரு முட்டை கொடுக்கிறோம். அதற்குப் பதிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இரண்டு முட்டைகள் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களேயானால் பெரிய தொகை ஒன்றும் செலவாகிவிடாது. அதன்மூலமாக குழந்தைகளுடைய வாழ்க்கைத் தரமும் உடல்நலமும் பேணுவதற்கான ஒரு வாய்ப்பு இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைப் பேசி முடிக்கச் சொல்லவில்லை. அலுவல் நேரத்தை நீட்டிக்கிறேன். நீங்கள் இரண்டு, மூன்று நிமிடங்களில் உங்கள் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கிராமப்புறங்களிலே விதவைகள் இருக்கிறார்கள். அந்த விதவைகளுக்காக நாம் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். என்னுடைய மனதிலே இருக்கிற ஒரு திட்டத்தை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். விதவைகளாக இருக்கிற ஏழைப் பெண்களுக்கு அரசாங்கம் 100 கோழிகளை வழங்கலாம். 100 கோழிகளை வழங்கி, வட்டியில்லாத கடனாகக் கொடுத்து, அவைகளிலிருந்து பெறக்கூடிய முட்டைகளைப் பக்கத்திலேயிருக்கின்ற சத்துணவு மையத்திலே கொடுத்து,

மாதம் ஒன்றுக்கு அவர்கள் அந்த முட்டைகளுக்கான தொகையை பெற்றுக் கொள்வார்களேயானால், விதவைகளுக்கும் ஒரு திட்டம் தயாராகும். கோழி முட்டையை அதிக விலைகொடுத்து வெளியிலே வாங்காமல், அந்தந்தக் கிராமங்களிலே இருக்கிற சத்துணவு மையங்கள் அங்கங்கேயே வாங்குவதற்கான ஒரு வாய்ப்பும் கிடைக்கும். எனவே ஒரு பக்கம் வேலைவாய்ப்பையும் நாம் ஏற்படுத்துகிறோம். இன்னொருபுறம் மலிவு விலையிலே முட்டை பெறுவதற்கான ஒரு வாய்ப்பும் இருக்கிறது. எனவே, அவைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த சமூகநலத் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர்களும், மேதைகளும் பணியாற்றிய இந்த மாமன்றத்தில் மிக மிக சாமான்யமான குடும்பத்தில் பிறந்த என்னை அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையை இரண்டாவது முறையாக அளிப்பதற்கு அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய, உலகத் தமிழ்ச் சமுதாயத்தினுடைய ஒப்பற்ற தலைவர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருப்பாதங்களில் என்னுடைய நன்றியுணர்வினைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான ஆட்சி ஏற்பட்ட பின்பு, 1996-97-ஆம் ஆண்டு இந்த அவையில் தலை சிறந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, நீண்டகாலமாக நடைபெறாமலிருந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களையும், கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களையும் சிறப்பாக நடத்தி முடித்து, புயல், வெள்ளம், வறட்சி போன்ற துயர் துடைப்புப் பணிகளையும் மேற்கொண்டு தன்னுடைய ஜனநாயகக் கடமைகளைத் தூய்மையோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசாக இந்த அரசு இன்றைய தினம் திகழ்கிறது.

1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே தாக்கல் செய்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏழை எளியவர்கள், பாட்டாளிகள், விவசாயிகள், வணிகர்கள், அரசு



அலுவலர்கள் என்று எல்லாத் தரப்பு மக்களுடைய எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுகின்ற வகையிலும், அவர்களுக்கு நம்பிக்கையை உருவாக்குகின்ற வகையிலும் சிறப்பாகத் தாக்கல் செய்ததோடு நடுநிலை நாளேடுகளாலும் பாராட்டப்படக்கூடிய அளவிற்கு அதைச் செய்திருக்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் நிலை எப்படி இருந்தது என்று சொன்னால், ஜனநாயகம் மயங்கிக் கிடந்தது. நீதிகள் தடுமாற்றம் அடைந்தன. நியாயங்கள் ஓரம் கட்டப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தலில் மௌனப்புரட்சி ஏற்பட்டு மகத்தான ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. இருண்ட தமிழகம், மிரண்ட சூழ்நிலை. அநியாயங்களின் மொத்த வியாபாரம், அடிமைத்தனங்களின் உற்பத்திச் சாலைகள், ஒரு விடியலின் தொடக்கம், வைகறைப்பொழுது, வீட்டுப் பறவையின் வசந்த அழைப்புகள், கேள்விக் கணைகள் கிளம்பிய நேரம், கெடுமதியாளர்கள் தொடங்கிய நேரம், விடை கிடைத்தது, படைக் களத்தினில், விடியும்போது ஜீவன் உதித்தது, வெள்ளி முளைத்தது, கிழக்கு வெளுத்தது, உதயசூரியன் ஒளிக்கதிர் வீசினான். (மேசையைத் தட்டும் ஒலி). உதய காலத்து பூபாள ராகத்தை, தாழ்ந்த தமிழகம் தயவாகப் பாடிற்று. வீழ்ந்த தமிழ்க்கொடி விசையேற்றிப் பறந்தது, விவாரங்கள் எல்லாமே தலைகீழாய்ப் போயின.

வரலாற்றுச் சிறப்பு பெற்ற இரண்டு நிதிநிலை அறிக்கைகளை இந்த அவையிலே தாக்கல் செய்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 185-வது பத்தியில் அதைப்பற்றிக் குறிப்பிடுகின்றபோது, "சோழ சாம்ராஜ்யத்தின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில் திருக்குவளை என்ற கிராமத்தில் வேளாண் தொழிலில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ் மொழிப்பற்றும் மிகக் கொண்டு தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும், அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன்பிறப்பாகவும் தன்னை ஆக்கிக் கொண்டுள்ள இந்த அறுபதாண்டு காலப் பொது வாழ்வில் "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்று சொல்லி, 'என்னை கடலில் தூக்கி எறிந்தாலும் தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டுமரமாக மிதப்பேன்' என்று சொல்லி இருக்கிறார் என்று சொன்னால், தமிழ் மக்கள் உயர்வுக்காக எவ்வளவு பெரிய தாக்கங்கள் அவருடைய உள்ளத்திலே இதயச் சுமையாக நிறைந்திருக்கிறது என்பதையும்,

அவருடைய நெஞ்சின் ஆழத்தில் எவ்வளவு பெரிய காயமான உணர்வுகள் இருக்கின்றன என்பதையும் எண்ணிப் பார்க்கிறபோது நம்முடைய நெஞ்சங்கள் எல்லாம் விம்முகின்றன.

பிற்பகல் 1-35

சேர, சோழ, பாண்டியர்கள் இந்த நாட்டை ஆண்டிருக்கிறார்கள். சேரர்கள் இமயத்தில் கொடி நாட்டி சிறப்பு பெற்றிருக்கிறார்கள். பாண்டியர்கள் முச்சங்கம் வைத்து தமிழை வளர்த்து சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். சோழர்கள் நல்லாட்சிக்கு இலக்கணம் வகுத்து சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். இந்த மூவேந்தர்களுடைய சிறப்பையும் ஒருங்கே அமையப்பெற்ற நம்முடைய தலைவர் அவர்கள் தஞ்சையிலே பிறக்காமல் அமெரிக்காவில் பிறந்திருந்தால் ஆபிரகாம் லிங்கன் அங்கே தோன்றியிருக்கி மாட்டார். அடிமை வியாபாரம் அவரால்தான் ஒழிக்கப்பட்டிருக்கும். இலண்டனில் பிறந்திருந்தால் வின்சென்ட் சர்ச்சில் அங்கே தோன்றியிருக்க மாட்டார். இரண்டாம் உலகப் போரை இவர்தான் முடித்து வைத்திருப்பார். கிரேக்கத்தில் பிறந்திருந்தால் சாக்ரடீஸ் அங்கே தோன்றியிருக்க மாட்டார். தத்துவங்களின் தேரோட்டமாக இவர்தான் அங்கே இருந்திருப்பார். துருக்கியில் பிறந்திருந்தால் முஸ்தபா கமால் பாட்ஷா தோன்றியிருக்க மாட்டார். அத்தா துர்க் என்று இவரைத்தான் ஆராதனை செய்திருப்பார்கள். உலக நாடுகள் எல்லாம் இதுவரை சிறப்பித்து இருக்கும். உலக சிந்தனையாளர்கள் எல்லாம் ஒருசேரப் புகழ்ந்த தலைவர் கலைஞர் அவர்களைப் பார்த்து, அவருடைய கால் தூசுகூட பெறாதவர்கள் விமர்சிக்கிற காட்சிகள் வேறெங்கு நடக்கும். இங்கே, தான் நடக்கும் என்று சொல்லி, அந்த ஒப்பற்ற தலைவருடைய..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்பார்கள். இப்போது எந்த மானியத்தில் இருக்கிறோம்? இவ்வளவு நேரம் அமைச்சர் அவர்கள் வர்ணனையிலேயே போய்க் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரம் மானியத்திற்கு வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசியதைப் பொறுமையோடு அமைச்சர் கேட்டுக் கொண்டிருந்தார். நீங்களும் அந்தப் பொறுமையைக் காட்ட வேண்டாமா? (சிரிப்பு) அமைச்சர் பேசுங்கள்.



**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சர், மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய மானியக் கோரிக்கையைத் தொடர்கிறேன். வணக்கத்துக்குரிய மேயர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1996-ல் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் 'திருக்கோயில் ஆலோசனைக் குழு' இந்து சமய அறநிலையத் துறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி வழிகாட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும், அறநிலையத் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், குன்றக்குடி அடிகளார், திருப்பனந்தாள், திருவாவடுதுறை மடாதிபதிகள், திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், பேரூர் சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார், திருமதி சௌந்தரா கைலாசம், நெல்லை மேயர் திருமதி உமா மகேஸ்வரி, மதுரை கருமுத்து கண்ணன் ஆகிய ஆன்றோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அக்குழுவின் முதல் கூட்டம் 4-3-1997 அன்று நடைபெற்றது.

அந்த முதல் கூட்டத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய, இந்த அரசின் அறநிலையத் துறை பற்றிய பொருளார்ந்த முன்னுரை பின்வருமாறு:

"இந்தக் குழுவினுடைய நல்ல ஆலோசனைகளைக் கேட்டு-தொடர்ந்து ஆலோசனை கேட்டு அவ்வப்போது திருக்கோயில் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக இந்த அரசைப் பொறுத்தவரையில் சில தவறான கருத்துக்கள் வெளியிலே இருப்பவர்களிடம் இந்தத் துறை சம்பந்தமாகப் பரப்புவதற்கு வழியிருக்கிறது. காரணம் எதுவென்று நான் கூறத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும். இந்த அரசுக்கு தலைமை தாங்குகின்ற நானும், அமைச்சர்களும், பெரியார் அவர்களாலும், அண்ணா அவர்களாலும் வளர்க்கப்பட்டவர்கள். அப்படியிருந்த போதிலும், என்னைப் பொறுத்தவரையில் பெரியார் வழியிலும், அண்ணா வழியிலும் நான் தொடர்ந்து பாடுபடுகிறவன் என்பதை ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக் கொள்கிறவன் என்பதை நீங்கள் அனைவரும் நன்கறிவீர்கள்.

இருந்தாலும் அவரவர்களுடைய கொள்கையிலே அவரவர்கள் பாடுபடுவதில் இந்த அரசு என்றைக்கும் குறுக்கிடாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்வது மாத்திரமல்ல, செயல் முறையில் இந்த அரசு கடைப்பிடித்து வருகிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். கடந்த காலத்தில் கழக அரசு அண்ணா அவர்கள் தலைமையிலே தொடங்கி, பிறகு நான் பொறுப்பேற்றவுடன் நான் செய்த முதல் காரியம், திருவாரூரில் பல ஆண்டுக் காலமாக ஓடாமல் இருந்த தேரை ஓட வைத்ததும், அதைப்போலவே சென்னையிலே கபாலி கோயில் திருப்பணியை செய்தது மாத்திரமல்லாமல், கபாலி கோயில் திருக்குளத்தை தூர்வாரி சுத்தப்படுத்தியதும், அதுபோலவே இதன் தொடர்பாக பல குடமுழுக்குகள், பல கோயில் விழாக்கள் நடைபெற உதவி செய்தது பற்றி நீங்களே அறிவீர்கள். இப்போதுகூட திருவண்ணாமலையில் எரிந்து விட்ட ஆலயத்தின ஒரு பகுதியைச் சீரமைக்கவும் பல இலட்சம் ரூபாய் இந்த அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் *1-40*

நான் பராசக்தி படத்திலே எழுதியதைப் போல - கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கொள்கை, இந்த அரசின் கொள்கை. இதற்கு எந்தவிதமான கருத்து மாறுபாடும் எங்களிடம் இருக்காது என்பது மிகமிக நிச்சயமாகத் தெரிந்த ஒன்று. அந்த வழியில் ஆலயங்கள் நிர்வகிக்கப்பட அறவழியிலே மக்களைப் பயிற்றுவிக்க இந்த ஆலயங்கள் பயன்பட நாம் நம்முடைய ஒத்துழைப்பை நல்கிட வேண்டும். குறிப்பாக கோயில் கொள்ளைக்காரர்களுக்கு நான் சொல்வது - அங்கேயிருந்து கொண்டே, நிர்வாகத்தில் இருந்து கொண்டே கொள்ளையடிப்பவர்களை அல்ல வெளியிலே இருந்து கொண்டு கொள்ளை அடிப்பவர்களுக்கு ஆலயங்கள்தான் மிகப் பெரும் சாதனமாக இருக்கிறது. கடந்த காலத்தில் நடைபெற்ற கொள்ளைகள் அல்ல, காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலிருந்து கொள்ளையடிக்க கொள்ளைக்காரர்கள் முதலாவதாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இடம் கோயில்கள். அந்தக் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவது மாத்திரமல்ல, அந்தக் கொள்ளைக்காரர்களைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. இப்போதுகூட மைலாப்பூரில் வேதாந்த தேசிகர் கோயிலில் கொள்ளை நடந்தபோது, காவல் துறையினர் மிகச் சாமர்த்தியமாகப் புலனாய்ந்து, குற்றவாளி பிடிக்கப்பட்டபோது, அவன் இன்றைக்குப் புதிதாக கொள்ளையடித்தவன் அல்ல என்பதும் கடந்த ஐந்தாண்டு



காலமாகப் பல இடங்களிலே கொள்ளையடித்து பல வேடதாரியாக வேடம்பூண்டு அதேநேரத்தில் தன்னை ஒரு சிறந்த பக்தனாகவும் காட்டிக்கொண்டு அந்த அக்கிரமங்களைச் செய்திருக்கிறான் என்பது வெளிப்பட்டது. அவனைப் பிடித்ததைப் பாராட்டி அந்தக் கோயில் நிர்வாகிகளும் அங்கேயிருக்கின்ற குருக்கள்மாரும் வந்து மாலையணிவித்து தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். எனவே இத்துறை சார்பில் எல்லா வகையிலும் உங்களுடைய அன்பான ஆலோசனைகளைக் கேட்டு இந்த அரசு திருக்கோயில் விவகாரங்களில் நடைபோடத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

அதுபோல, இன்றையதினம் திருக்கோயிலிலுள்ள நிலங்கள், காலிமனைகள், கட்டிடங்களின் பாதுகாப்பு மற்றும் திருக்கோயில் வருவாயைப் பெருக்குகின்ற வகையில் நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்குச் சொந்தமாக இருக்கின்ற காலிமனைக்குக் கிடைக்கும் மனை வாடகை மிகவும் குறைவாக உள்ளது. பதினான்கு பதினைந்து வருடங்களாக வாடகை பாக்கி உள்ளது. கட்டிடங்கள் வாடகைக்கு விடப்பட்டு அவற்றை காலி செய்ய இயலவில்லை.

ஒய்வு பெற்ற மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள்மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் எங்கெங்கு இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, திருக்கோயிலுக்குச் சொந்தமான காலிமனைகளை வேலிபோட்டுக் காத்திடவும், அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட வேண்டும் என்றும், காலி மனைகளில் வணிக வளாகம், அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட்டு திருக்கோயில் வருமானத்தைப் பெருக்கலாம் என்றும் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் கருத்து நல்கினர். மேலும் நகர்ப்புறங்களில் காலியாக உள்ள திருக்கோயில் இடங்களை, ஆக்கிரமிப்பைத் தவிர்க்கும் பொருட்டும், வருவாயைப் பெருக்கும் வகையிலும், வருவாய் உள்ள கோயில்களின் நிதியைப் பயன்படுத்தி வணிக வளாகம் கட்டுவதற்கும், கோவை, சென்னை போன்ற இடங்களிலுள்ள சில காலி இடங்களில் தனியார் கட்டிடம் கட்டும் குழுவினர் தங்களுடைய சொந்தச் செலவிலேயே வணிக வளாகங்கள் கட்டி, அதிக விழுக்காடு கோயிலுக்கும் குறைந்த விழுக்காடு அவர்களுக்கும் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசைக் கோரியுள்ளனர். இதுபோன்ற கோரிக்கையின் கருத்துக்களை சட்டத்துறையின் பரிசீலனைக்கு அனுப்பி இந்த அரசு ஒரு நல்ல முடிவினை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் நிலங்கள் - குத்தகை மற்றும் வாடகை 9-12-1996 முதல் நடைமுறைக்கு வந்த இந்து சமய அறநிலையத் திருத்தச் சட்டத்தின்படி விதி 79 பி-ன்படி குத்தகைக் காலம் முடிவுற்ற இடத்தை ஒப்படைக்காதவர்கள், ஆக்கிரமிப்பாளர் ஆகியோர் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, குறைந்தபட்ச தண்டனையாக மூன்று மாத சிறைத் தண்டனை பெறச் செய்ய இந்தச் சட்டத்தை முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்தலாமா என்பது குறித்தும், சட்டத் துறையைக் கலந்து பரிசீலிக்கப்படும். திருக்கோயில் நிலங்கள் அனைத்தையும் விற்பதன் மூலம் திருக்கோவில் சொத்துக்களுடைய மதிப்புக்கு பாதிப்பு ஏற்படும். எனவே, மீட்க முடியாத பிரச்சினைகளுக்கு உரிய நிலங்களை மட்டும் சந்தை விலைக்கு விற்க வேண்டும். கோயில் நிலங்களை நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்கக்கூடாது. எனவே மூன்று ஆண்டுக்கொருமுறை குத்தகைதாரரை மாற்ற வேண்டும். விவசாய நிலங்களைப் பொறுத்தவரை, குத்தகைதாரர்களிடம் நிலம் இல்லாமல் வசதி பெற்றவர்களிடம் இருப்பதால், மறைமுகமாக நிலக் குத்தகையை வசதி . பெற்றோர் பெறுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் உரியவர்களிடம் போய்ச் சேருமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனைக் குழுவில் கருத்து கூறப்பட்டது.

தகுதியின் அடிப்படையில் நீண்ட நாள் குத்தகை நிலங்களை எடுத்துக்கொள்வது அல்லது சந்தை விலைக்குக் குறைந்த காலத்திற்கு நியாய வாடகை நிர்ணயக்குழு அமைத்து அக்குழு நிர்ணயிக்கும் வாடகைக்கு விடுவது மற்றும் இந்து சமய அறநிலையத் துறைச் சட்டம் 79-பி பிரிவினை முன்தேதியிட்டு நடைமுறைப்படுத்துவது போன்ற சட்ட சம்பந்தமான முன் மொழிவுகளில் சட்டத் துறையின் கருத்துக்களைப் பெற்ற பிறகு நேர்வுகளை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அனுமதி இன்றி திருக்கோயில் நிலங்கள் விற்கத் தடை — திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள், இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 34-ன்கீழ் மட்டுமே ஆணையரின் அனுமதி பெற்று விதிமுறைப்படி விற்பனை செய்ய இயலும். ஆனால், திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் சில தனிப்பட்ட நபர்களால், சில தனிப்பட்ட நபர்களுக்கு விதிமுறைகளுக்குப் புறம்பாக தன்னிச்சையாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இம்மாதிரியான பதிவுகள், திருக்கோயில் மற்றும் இதர சார் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்குப்



பொருந்தாது என இந்தியப் பதிவுச் சட்டத்திலும் இந்து சமய அறநிலையச் சட்டத்திலும் சட்டத்திருத்தங்கள் கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் அரசின் கவனத்திற்கு வராமல் தன்னிச்சையாக திருக்கோயில் நிலங்களை விற்பனை செய்வதைத் தடுக்கவும், இந்து சமய அறநிலையத் துறை சட்டத்தில் தக்க திருத்தம் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை. அண்மையில் செய்யப்பட்ட இந்து சமய அறநிலையச் சட்டத் திருத்தம் 39/1996 என்பதன் மூலம், அதற்கு முன்பிருந்த சட்டத்தில் அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்களில் இருக்கும் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் இருந்த சில வரம்புகளை, கட்டுப்பாடுகளை அகற்றி, அறநிறுவனங்களுக்குச் சொந்தமான எந்தெந்த நிலங்கள், எந்தெந்த கட்டிடங்கள் எங்கெங்கு ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டு இருப்பினும் அவைகளை வெளியேற்ற இத்துறை இணை ஆணையர்களுக்கு அதிகாரம் அளித்தும், இணை ஆணையர் ஆணையின்படி இடத்தைவிட்டு வெளியேறவில்லையெனில், காவல் துறை உதவியுடன் வெளியேற்றவும், சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இத்திருத்தச் சட்டத்தின்மூலம் சட்டப்படியில்லாத எவரேனும் அறநிறுவனத்திற்கு அல்லது அறக்கட்டளைக்குச் சொந்தமான எந்தவொரு சொத்தினையும் 1996-ஆம் ஆண்டு திருத்தச் சட்டம் 39/1996 அமுலுக்கு வந்த தேதியிலோ அல்லது பின்போ வைத்திருக்கக்கூடாது. மீறினால் சட்டப்படியல்லாத சொத்தினை வைத்திருப்போர்மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்து, 3 மாதங்களுக்குக் குறைவில்லாது 5 ஆண்டுக்காலம்வரை சிறைத் தண்டனையும், இத்துடன் அதிகபட்சம் ரூ.5,000 வரை அபராதமும் தண்டனையாகப் பெற்றுத் தருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் நிலம், மனை மற்றும் கட்டிடத்தை அனுபவித்து வரும் வாடகை செலுத்தும் உண்மை குத்தகைதாரர்களுக்கு பெயர் மாற்றம் செய்து அங்கீகரித்தல். நீண்டகாலமாக கோயில் இடங்களில் உள்ள காலி மனைகள், கட்டிடங்கள் இவைகளை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள், ஆக்கிரமிப்பு வைத்து கட்டிடங்கள் கட்டியிருப்பவர்கள், கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு, வேறு ஒருவர் பெயருக்கு அந்த இடங்களை விட்டுக்கொடுத்துவிட்டு, பகடிகள் வாங்கிக் கொண்டு சென்றிருப்பவர்களுக்கு உண்மையிலே யார் யார்

நடியிருக்கிறார்களோ அவர்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு இந்த அரசு சட்டத்துறையோடு கலந்து பரிசீலித்து, அவர்களுக்கு பெயர் மாற்றம் செய்யலாம் என்ற நடவடிக்கையை எடுக்கக் காத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், திருக்கோயில்களினுடைய வருவாய் 1-7-1995 முதல் 31-1-1996 வரை திருக்கோயில் நிலங்கள் மற்றும் இதா வருவாய் இனங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தொகை கடந்த ஆட்சிக் காலத்தில் 48.18 கோடியாகும். கழக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 1-6-1996 முதல் 31-1-1997 வரை மேற்படி இடங்களிலிருந்து வரவு 51.54 கோடியாக அதிகரித்துள்ளது. ரூ.3.36 கோடி, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்தபின்பு வருமானம் உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், திருக்கோயில்களில் உள்ள திருவாபரணங்கள் மற்றும் விலை உயர்ந்த நகைகளை மதிப்பீடு செய்கின்ற இந்தச் செயலில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 36,253 திருக்கோயில்கள் இருக்கின்றன. இத்திருக்கோயில்களில் 27,122 ஆலயங்களில் மட்டுமே ஆபரணங்கள், விலை உயர்ந்த நகைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் அவ்வப்போது சரிபார்த்து கடந்த ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு-இந்த ஆட்சி வந்த பின்பு - எல்லாக் கோயில்களிலும் உள்ள நகைகளை சரிபார்ப்பதற்காக உத்தரவிடப்பட்டு இருக்கிறது. அந்த நகைகளை சரிபார்க்கும் பணி முடிந்தவுடன், அந்த நகைகள் எல்லாம் எந்த அளவிலே இருக்கின்றன என்பதைப்பற்றி உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில் பாதுகாப்பு. களவுகளைத் தடுக்கும் நோக்கத்தோடு பாதுகாப்புப் படைப் பணியாளர்களை நியமிப்பதில் தனிக் கவனம் செலுத்தி, அதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் இத்துறையில் நடக்கும் களவுகளை கண்டுபிடிப்பதற்காக ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் அளவிலே இந்தத் துறைக்கு பணி மாற்றம் செய்து அவர்களின்கீழே 3 ஆய்வாளர்களை அதற்கு ஒதுக்கி இந்த களவுகளை கண்டுபிடிப்பதற்காக இத்துறையில் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் ஒருகால பூசைத் திட்டத்திற்கு சென்ற ஆண்டு ஆயிரம் கோயில்களுக்கு ஒவ்வொரு கோயிலுக்கும் 25 ஆயிரம் ரூபாய் வீதம் நன்கொடையாக ஊர் பொதுமக்கள் அளிக்கும் 2,500 ரூபாயோடு 22,500 ரூபாயை அரசு நிதியாக அளித்து - ஆயிரம் கோயில்களுக்கு



வழங்கப்படும் என்று தெரிவித்து இதுவரை, 500 கோயில்களுக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. மீதியுள்ள 500 கோயில்களுக்கு ஒருகால பூசை திட்டத்தில் நிதி வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தமிழ் அர்ச்சனை பற்றிச் சொன்னார்கள். தமிழிலே அர்ச்சனை நீண்டகாலமாக நடைபெற்று வந்ததை கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், 1972-ஆம் ஆண்டு தமிழிலே அர்ச்சனை செய்யப்படும் என்று உறுதியாக முடிவு எடுக்கப்பட்டபோது அந்த முடிவை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வழக்குகள் ஒருசிலரால் தொடுக்கப்பட்டு, ஏற்கெனவே அங்கே வழிபாடு செய்து வருகின்ற மொழிகளோடு, தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று தமிழை இரண்டாம்தர நிலையில் வைக்கும் உத்தரவை, ஒரு நிலையை எடுக்கின்ற வகையில் உத்தரவிட்டார்கள். இதை எல்லாம் பரிசீலித்து இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு திருக்கோயிலிலும் ''இங்கு தமிழில் அர்ச்சனை செய்யப்படும்'' என்று தமிழிலும், இங்கு வடமொழிகளில் அர்ச்சனை செய்யப்படும் என்று வட மொழியிலும் எழுதிப் போடுமாறு உத்தரவிட்டுள்ளார்கள். அதை இங்குள்ள தமிழ் மக்கள் எல்லாம் உணர்ந்து, தமிழ்நாட்டிலே இருக்கிற பெரிய கோயில்களுக்கு வழிபாடு செய்யச் செல்கின்ற பக்தர்கள் தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும் என்ற முழக்கத்தை உருவாக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் தமிழில் அர்ச்சனை செய்யக்கூடிய வகையில் கையேடுகள் இந்தத் துறையின் மூலமாக வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

அதைப் போல, தேவாரம், ஒரு தடவை ஆலோசனைக் குழுவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் ஒரு தடவை மதுரைக்குச் சென்றிருந்தபோது மீனாட்சியம்மன் கோயிலைப் பார்க்க நேரிட்டது. அப்போது மீனாட்சியம்மன் கோயிலில் அங்கே ஓதுகின்ற ஓதுவார்கள் தமிழ் இசைகளை, இசைப் பண்ணோடு பாடுகின்றபோது நாத்திகனான என் நெஞ்சையே நெகிழ்ந்து நெக்குருக வைக்கின்ற வகையில் அவர்கள் பண்ணிசைத்தார்கள் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு தேவாரம், திருவாசகம், திருப்புகழ் போன்ற தமிழிசைப் பண்கள் எல்லாம் சிறப்பாக

இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் அந்தத் தமிழிசைப் பயிற்சிப் பள்ளிகளைத் துவக்குகின்ற வகையில் சைவக் கோயில்களில் - 8 கோயில்களில் - (1) சென்னை திருமயிலையில் உள்ள அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில். (2) திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவர் திருக்கோயில், (3) சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில். (4) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், (5) பழனி அருள்மிகு 'தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், (6) மருதமலை அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில். (7) திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் மற்றும் (8) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்களில் சைவ சமய இலக்கியங்களைப் பயிற்றுவிப்பதற்கும் அது போன்று மேலும் 7 கோயில்களில் வைணவ நாலாயிரத்திவ்யப் பிரபந்தம் போன்ற சமய இலக்கியங்களைப் பயிற்றுவிப்பதற்கும் இசைப் பயிற்சிப் பள்ளிகள் புதியதாக துவக்க இருப்பதை இந்த நேரத்திலே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல இசை. அறிஞனையும் அறிவிலியையும் அசைக்க வல்லது இசை. படித்தவனையும் பாமரனையும் தழைக்க வைப்பது இசை. படமெடுத்தாடும் பாம்பையும் மயக்கவல்லது மகுடி இசை.

இசை, "ஏழிசையாய் இசைப்பயனாய்
இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யும்
துரிசுகளுக்குடனாகி நின்றவர்"

என்று மாணிக்கவாசகர் கூறியது போன்று இசைக் கருவிகள், நாதஸ்வரங்கள், கோட்டு வாத்தியங்கள், தவில், மேளங்கள் எல்லாம் மங்கள வாத்தியங்களாக தமிழகத்தில் முழங்கி வந்திருக்கின்றன. அந்த நாதஸ்வர இசையில் துளைக் கருவிகள், தோல் கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் என்று நான்கு வகைக் கருவிகள் இருக்கின்றன. அதில் துளைக் கருவிகளிலே நாதஸ்வர இசைதான் நீண்டகாலமாக மங்கள இசையாக இந்த நாட்டிலே புகழ்பெற்று விளங்கி வந்திருக்கிறது. அந்த நாதஸ்வர இசை, அந்தக் கருவிகளை இசைக்கின்றவர்கள் அருகி வருகின்ற காரணத்தினாலே அந்த நாதஸ்வரக் கலையை பயிற்றுவிக்கின்ற வகையில் ஐந்து கோயில்களில் நாதஸ்வரக் கலைக்கான இசைப் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்தப் பள்ளிகள். (1) பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், (2) திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி



திருக்கோயில், (3) திருவாரூர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், (4) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், (5) திருவானைக்கோயில், அருள்மிகு ஜம்புகேசுவரர் திருக்கோயில். இந்த ஐந்து கோயில்களிலும் நாதஸ்வர இசைக் கருவிகளைப் பயிற்றுவிக்கக் கூடிய பயிற்சிப் பள்ளிகளை, ஒரு கோவிலுக்கு 15 பேர்கள் வீதம், உணவு, உடை, ஊக்கத்தொகைகள் போன்று வழங்கி, இசைப் பயிற்சிப் பள்ளிகளிலே மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல பணியாளர்களின் குறைகளைக் களைய நடவடிக்கை. அறநிலையத் துறையிலுள்ள முதுநிலைக் கோயில்கள், முதுநிலை அல்லாத கோயில்களிலே இருக்கின்ற பணியாளர்களுடைய குறைகளைத் தவிர்ப்பதற்காக அரசு துணைச் செயலாளர். இந்து சமய அறநிலையத் துறை, அரசுத் துணைச் செயலாளர், நிதித் துறை. இணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் அளவில் பணியாற்றி ஓய்வுபெற்றவர் ஆகிய நான்கு பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்து. இந்தப் பணியாளர்களுடைய கோரிக்கைகளிலே, அந்தச் சங்கங்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோயில் சொத்துக்கள் நவீனமயமாக்குதல் என்ற அடிப்படையில் ஓர் அமைப்பு ஏற்படுத்தி, நிலங்கள், மனைகள், கட்டிடங்கள், குத்தகைகள் இவைகளையெல்லாம் தொகுக்க திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, திருக்கோயில் பணியாளர்கள் 50,000 பேர்களுடைய பணி விவரங்களை 'கம்ப்யூட்டர்' கணிப்பொறிகள் மூலம் சேர்த்து வைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

திருக்கோயில்களிலுள்ள ஓவியங்கள், சிற்பங்கள் மற்றும் திருவிழாக்களைப் படம் எடுத்தல், ஒலி, ஒளி நாடா தயாரித்தல் ஆகியவைகளை மேற்கொள்ள முடிவு செய்து, முதற்கட்டமாக, மதுரை, காஞ்சிபுரம், பழனி, திருச்செந்தூர், திருவரங்கம், திருவாரூர் ஆகிய திருக்கோயில்களைத் தெரிவு செய்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலுள்ள அருங்காட்சியகம், கண்கவரும் வண்ணம்

தூய்மையுடனும், காட்சிப் பொருள்களை ஒழுங்குடனும் அமைத்துப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழமையான ஓவியங்களைப் பாதுகாக்கின்ற வகையில் அருள்மிகு மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் பழமையான ஓவியங்கள் அழிவு பெறுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு மூலிகை வண்ணக் கலவை மூலம் ஓவியங்கள் புதுப்பிக்கப்பட்டது மிகவும் சிறப்பாக உள்ளதைக் கருத்தில் கொண்டு, இம்மூலிகை வண்ணக் கலவை மூலம் திருக்கோயில்களில் அழிந்துவரும் பழமையான ஓவியங்களைப் புதுப்பித்துப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல இலவசத் திருமணத் திட்டத்தைத் தொடர்ந்து கடந்த ஆண்டு அறிவித்தோம். அதைப்போன்று இந்த ஆண்டும் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

ஆதரவற்ற குழந்தைகளின் நலன் காப்பதற்கு ஆலயங்களின் சார்பில் கருணை இல்லங்கள் 22 ஏற்கெனவே இயங்கி வருகின்றன. இந்த ஆண்டு புதியதாக 15 கருணை இல்லங்கள் துவங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதைப்போல, நமமுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு முக்கியமான குற்றச்சாட்டினைச் சொன்னார்கள். அறநிலையத் துறைக்கு இருக்கின்ற நிலங்களில் பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள் எல்லாம் நடப்பதாகச் சொல்லி, பல்வேறு முறைகேடுகளை, ஊழல்களை சுட்டிக் காட்டினார்கள். இனிமேல், அந்த உண்மையான புகார்களின் அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பதற்காக 'விஜிலென்ஸ்' விழிப்புப் பணிக் குழு ஒன்று தலைவர் கலைஞர் அவர்களுடைய ஒப்புதலோடு முதன் முறையாக இந்த அறநிலையத் துறையில் அமைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இனிமேல், இந்த விழிப்புப் பணிக் குழு உண்மையாக வருகின்ற புகார்களை விசாரித்து, உரிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களில் நாதஸ்வர, மங்கள இசை மீண்டும் முழங்கச் செய்வதை ஊக்குவித்தல். பழங்காலத்திலே எல்லா கோயில்களிலும், நாதஸ்வர இசை, தவில், தாளம் போன்ற இசைக் கருவிகளை இயக்கும்



இசைக் குழுவினர் இருந்தார்கள். அது அண்மைக்காலத்திலே அருகிவிட்டது. இந்த ஆண்டு புதியதாக நாதஸ்வர இசை இல்லாத 25 கோயில்களுக்கு, நிதிவசதி அற்ற 25 கோயில்களுக்கு, நாதசுர இசைக் கலைஞர்களுக்கு ரூ. 1,000-மும், தவில் கலைஞர்களுக்கு ரூ. 750-ம், தாளக் கலைஞர்களுக்கு ரூ. 500 என்ற வீதத்தில் சம்பளம் வழங்கி, 25 கோயில்களுக்கு அவர்கள் புதியதாக நியமனம் செய்யப்படவிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கிராமப்புறக் கோயில்களுக்கு திருப்பணி செய்ய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத, ஆதிதிராவிடர்கள், மிக மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கு, பழமையான கோயில்கள் சேதமுற்று இருந்தால், நலிந்த கிராமப்புற கோவில் திட்டத்தின் மூலம், இனிமேல் ஆண்டொன்றுக்கு 50 கோயில்களுக்கு திருப்பணி செய்ய நிதியுதவி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே நம்முடைய அருமை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை எடுத்து வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இந்து சமய அறநிலையத் துறையின் செம்மையான நிர்வாகத்திற்கு ஊக்கமேற்றுகின்ற வகையில் எடுத்துக்கொண்டு, உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியக் கோரிக்கையில் 15 அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதிலே, சமூகநலத் துறையைப் பற்றி 13 பேர் விரிவாக கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்கள்.

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

என்று தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியிருக்கின்றார். சமுதாயத்திலுள்ள பெண்கள் நிலை எந்த அளவுக்கு உயர்ந்து இருக்கிறதோ, அந்த அளவுக்குத்தான் சமூகமும், கலாச்சாரமும் உயரும்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1997 ஏப்ரல் 3

என உணர்ந்து பெண்களின் உரிமைக்காக ஏற்புடையதும், குழந்தைகளின் நலனைப் பாதுகாக்கவும், உடல் ஊனமுற்றவர்களுக்கு உறுதுணையாக விளங்கவும் நம்முடைய தமிழக அரசு ஒரு அமைதிப் புரட்சியை உருவாக்கி வருகின்றது. பரந்து, விரிந்த இந்த நாட்டில் சமூக நலப் பணிகளில், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில், தமிழ்நாடு பிற மாநிலங்களிலிருந்து தனித்து, சிறந்து விளங்குகின்றது. கடந்த திங்கள் 22-ஆம் நாள் டெல்லியில் நடைபெற்ற அனைத்து மாநில சமூக நலத் துறை அமைச்சர்களுடைய கருத்தரங்கிலே கலந்துகொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியின் பேரில் சென்று இருந்த நான் இந்த உண்மையை நேரிடையாகக் கண்டறிந்தேன் என்பதிலே மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமூக அநீதிக்குட்பட்ட மக்களின் நலன், மகளிரின் நலன், மழலைச் செல்வங்களின் நலன், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழையெளிய மக்கள் அனைவருடைய நலனையும் கருத்திற்கொண்டு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு திட்டங்கள் தீட்டி. செயல்படுத்திக் கொண்டு வருகின்றது. கடந்த நிதிநிலையறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மகளிர் தொழில் முனைவோர்கள் 250 பேருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரம்புக்குக் குறையாத அளவுக்கு கடன் உதவி தருகின்ற திட்டத்தையும், அதிலே 10 சதவீதம் மானியம் தருகின்ற திட்டத்தையும் அறிவித்திருக்கின்றரார்கள். அதைப் போலவே, பெண் காவலர்களை 1973-ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதல்வராக இருந்த காலக்கட்டத்தில்தான் நியமனம் செய்திருந்தார்கள். இப்போது அந்தக் காவலர்களின் எண்ணிக்கை 2 ஆயிரமாக இருந்துவருகிறது. 30 சதவிகிதம் பெண்களும், இந்தக் காவல் துறையிலே பங்கேற்க வேண்டும் என்ற அடிப்படையில் மேலும் இந்த ஆண்டு 5 ஆயிரம் பெண் காவலர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இது 50 சதவிகிதம் என்ற அளவுக்கு உயர வேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

பிற்பகல் 2-00

சொத்துரிமை, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் பெண்களுக்கு முதன் முதலாக வழங்கினார். வேலைவாய்ப்பிலே 30% முன்னுரிமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் வழங்கினார்கள். எனவே அவருடைய காலத்திலே பெண் இனம் சரிசமமான வாய்ப்பை தமிழகத்தில் பெற்று மற்ற மாநிலங்களுக்கு



1997 ஏப்ரல் 3] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

முன்னோடியாக விளங்குவதிலே நான் மகிழ்ச்சி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மூவலூர் இராமாமிர்தம் அம்மையாருடைய நினைவு திருமண உதவித் திட்டத்தில் 5,000 ரூபாய் முன்பு வழங்கப்பட்டு வந்தது, 10,000-மாக உயர்த்தப்பட்டு 10,000 பெண்களுக்கு என்று குறியீடு நிர்ணயித்து அந்தத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த விண்ணப்பங்கள் கோரி இன்னும் பல்லாயிரக்கணக்கிலே பெண்கள் தங்களுக்கு அந்த உதவித்தொகை கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை இங்கு பேசிய பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே தெரிவித்தபோதுதான் வரும் ஆண்டிலே 20,000 பெண்கள் பயனுறத்தக்க அளவுக்கு அந்தத் தொகையை 20 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனினும் நம்முடைய மனம் திருப்தியடையவில்லை. கடந்த ஆண்டிலே பதிவு செய்தவர்கள் காத்திருக்கிறார்களே அவர்களுடைய நிலை என்னவாகும் என்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நான் கலந்து ஆலோசித்து அவருடைய கனிவான பார்வையின் மூலமாக நல்ல திட்டம் அறிவிக்கப்படும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்காக தனியான கவனத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் செலுத்தி வருகிறார் என்று பல உறுப்பினர்கள் பாராட்டியிருக்கின்றார்கள். தற்போது அண்ணா மாவட்டம் செங்கல்பட்டிலே ஒரு மாவட்ட மறுவாழ்வு மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.. அதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும் மறுவாழ்வு மையங்கள் தொடங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலமாக எந்தெந்த கிராமங்களிலே ஊனமுற்றவர்கள் இருக்கின்றார்கள் என்று நேரடியாகக் கண்டறிந்து அவர்களுக்குத் தேவையான உதவிக் கருவிகளையும் அவர்கள் பயன்படுத்த வேண்டிய பயிற்சியும் அவர்களுக்கு அளித்து, அவர்கள் ஏற்கெனவே அந்த உதவிக் கருவிகளைப் பெற்றிருந்தால் அது பழுதாகியிருந்தால் அதைச் சீர் செய்து தருவதற்கும் அந்த மையங்கள் மூலமாக அவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. எனவே இதிலே காலதாமதம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு இல்லை என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்துகளிலே சாதாரண வழித்தடங்களிலே மாத்திரம் அல்லாமல் விரைவுப் பேருந்து வழித்தடங்களிலும், கண் அற்றோரும் கால்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1997 ஏப்ரல் 3

முடமானவரும் இலவச பயணம் செய்ய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருப்பதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் இத்தகைய சிறப்பான திட்டங்களை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1996-97-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 578 கோடியே, 62 இலட்சத்து, 52 ஆயிரமாக இருந்தது. இந்த ஆண்டு அதனை 600 கோடியே, 4 இலட்சத்து, 30 ஆயிரமாக உயர்த்தி இருக்கிறார்கள்.

அன்னை அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமணத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு 27.70 இலட்சம் ஒதுக்கீடு இருந்தது. இந்த ஆண்டு 55.40 இலட்சமாக உயர்த்தித் தரப்பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கின்ற சத்துணவுத் திட்டத்திற்கு கடந்த ஆண்டு 401 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ரூ. 405.56 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஊனமுற்றோர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்திற்காக கடந்த ஆண்டு ஒதுக்கியதைக் காட்டிலும் 61.97 இலட்சம் ரூபாய் அதிகப்படுத்தி இந்த ஆண்டு ரூ. 1138.39 இலட்சங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஊனமுற்றோர்கள், கண் பார்வையற்றவர்கள் பயன்படுத்தக்கூடிய ப்ரெய்லி புத்தகங்கள் வெளியிடுவதற்காக அரசு மண்டல ப்ரெய்லி அச்சகத்தின் மூலமாக இந்த ஆண்டு 2,000 பார்வையற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் ப்ரெய்லி அச்சகம் மூலம் புத்தகம் வெளியிடுவதற்கு ரூ. 11.41 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வை உள்ளோருக்கான சலுகைகள் 3,000 ரூபாய் ரொக்கப் பணம் கொடுத்து 7,000 ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்பட்டு வந்தது. இதற்காக கடந்த ஆண்டு ஒதுக்கிய நிதி ரூ. 2.70 இலட்சம்தான். ஆனால் இந்த ஆண்டு 100 தம்பதியர்கள் அதிலே பயன்பெறத்தக்க அளவுக்கு 10 இலட்சம் ரூபாய் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுடைய நிலை சமுதாயத்திலே உயர வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு பொருளாதார முன்னேற்றம் தேவை என்பதை தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்தி கூறியிருக்கிறார்கள். பெண்களுக்கு கட்டாயக் கல்வி வேண்டும்; பெண்களைத் தொழிலிலே ஈடுபடச்



1997 ஏப்ரல் 3] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். தந்தை பெரியாருடைய கனவை ஈடேற்றுவதைப்போல வறுமைக் கோட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்துப் பெண்களுக்கும் அதிக வருமானம் கிடைக்கவும் வேலைவாய்ப்பினை பெருக்கவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை நடப்பு ஆண்டிலே 14 மாவட்டங்களிலே இதை ஈடுபடுத்தி 2.40 கோடி ரூபாய் செலவிலே 3 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் பணிகளை ஈடேற்றுவதற்காக 1,418 மேற்பார்வையாளர்களும் 144 அமைச்சுப் பணியாளர்களும் ஒரு வருட காலத்திற்கு நியமிக்கப்பட உள்ளார்கள். இதற்காக 397.59 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தவேண்டும் என்ற எண்ணம் இருக்கிற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 ஆண்டு காலத்திற்கும் இதற்காக 1,440 கோடி ரூபாய் நிதி நிறுவனங்களின் பங்கோடு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-05

பெண்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகவும், அந்தப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என்பதற்காகவும், மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலமாக மதுரை, சேலம், கடலூர் மற்றும் சென்னை ஆகிய 4 இடங்களிலே அங்கன்வாடி மையங்களை உருவாக்குவதற்காக சமூகநல வாரியத்திலிருந்து 135 லட்சம் ரூபாய் மானியமாகக் கேட்டு மத்திய அரசிடம் வேண்டுகோள் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்த்து மகளிர் மேம்பாடு திட்டத்தின் கீழ் 1 லட்சத்து 8 ஆயிரத்து 800 பெண்கள் பயன் அடையும் வகையில் 4,600 சுய உதவி குழுக்கள்— Self Help Group என்பதைப் போல செயல்பட்டு வருவதால் சுழல் நிதி ஒரு கோடி ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்திருக்கிறது.

பொருளாதாரத் துறையில் பெண்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்ற கருத்தில் நலிவுற்ற பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கப்படுவது கடந்த ஆண்டு 2,000 பெண்களுக்கு வழங்கப்படுவதாக

நாம் அறிவிப்பு செய்து இருந்தோம். தற்போது ஏராளமான பெண்கள் தையல் இயந்திரம் வேண்டும் என்று மனு செய்திருக்கிற காரணத்தால் இந்த ஆண்டு மட்டும் அல்ல, இந்த ஆண்டிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் 3,000 தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குக் கூடுதல் செலவு 14.29 லட்சம் ரூபாய் ஆகும்.

மகிளா சமிரிதி யோஜனா-மத்திய அரசின் உதவியுடன் நடைபெறும் மகளிர் சேமிப்புத் திட்டத்தில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் வரை 23.73 லட்சம் மகளிர் தனியாக கணக்கைத் துவக்கி 1,790.75 லட்ச ரூபாய் வங்கியில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை அறிகிறபோது இந்தத் திட்டத்தின் மூலமாக பெண்கள் எந்த அளவுக்கு சேமிப்புப் பழக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. மேலும் மகளிர் நலன் பாதுகாப்புக்காகவும், மகளிர் நிலை குறித்த பொதுவான கருத்து குறித்து நடவடிக்கைகள் எடுப்பதற்காகவும் அரசுக்கு பரிந்துரை செய்வதற்காகவும் 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு அந்த ஆணையத்தின் தலைவராக ஒரு பெண் நீதிபதியை நம்முடைய தமிழக அரசு நியமனம் செய்திருக்கிறது. திருமதி பத்மினி ஜேசுதுரை அவர்களை அந்த ஆணையத்தின் தலைவராகக் கொண்டும், 8 உறுப்பினர்களைக் கொண்டும் அந்த ஆணையம் இயங்கி வருகிறது. இதுவரை இதற்கு தலைவராக இருந்தவர் ஒரு ஆடவர் என்பதை நாம் எண்ணிப் பார்க்கிறபோது பெண்களுக்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு அக்கறைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இது தெளிவாக உணர்த்துகிறது. இந்த உறுப்பினர்கள் பொதுமக்களின் குறைகளைக் கேட்பதுடன் பெண்களால் எதிர்நோக்கப்படும் பல பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வார்கள். பொதுமக்களிடையே பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள் குறித்தும் இந்த ஆணையத்திற்கு முறையீடு செய்யலாம். இந்த ஆணையம் சமூக நல இயக்ககம், சேப்பாக்கத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. இந்த ஆணையத்தினுடைய செலவிற்காக 5.04 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே, சமுதாயத்திலே ஆண்கள் பல இடங்களில் ஒன்றாகச் சந்திப்பதற்கும், பொழுதைப் போக்குவதற்காகவும் பல்வேறு விதமான கிளப்புகள் இருக்கின்றன. ஆனால் பெண்கள் விரும்பின நேரத்திலே



சந்தித்து உரையாடுவதற்கும், பல பொது விஷயங்களை அறிந்து கொள்வதற்குமான வாய்ப்பு மிக மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட வாய்ப்பினை உருவாக்கித் தருவதற்காக மகளிர் நல வாழ்வு மையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. தர்மபுரி, சேலம், விழுப்புரம், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 10 மகளிர் நல வாழ்வு மையங்கள் 2 லட்சம் ரூபாய் செலவில் சத்துணவுக் கூடங்கள் மற்றும் பால்வாடி மையங்களில் அமைக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த மையங்களில் சந்திக்கின்ற பெண்களுக்கு சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், எழுத்தறிவு போன்றவை குறித்து விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்த பயன்படும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 10,091 சத்துணவு மையங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் 4 லட்சத்து 80 ஆயிரத்து 924 குழந்தைகளும், 91,349 கர்ப்பிணி பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்து வருகிறார்கள். சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், உதவியாளர்கள் பணியிடங்கள் காலியிருப்பது குறித்து இங்கே கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்தப் பணியிடங்கள் காலியாக இருப்பின் அவைகள் விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஏழை எளிய நலிவுற்றக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், ஊனமுற்ற பெண்களை அந்தப் பணியிடங்களில் நிரப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில மாவட்ட சமூகநல அலுவலர்கள் 2, 3 மாவட்டங்களுக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டு இருக்கின்ற காரணத்தால் வேலைகள் தாமதப்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். எனவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியே மாவட்ட சமூக நல அலுவலர்கள் நியமிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-10

இந்தச் சத்துணவுக் கூடத்திலே பணியாளர்களாக, அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறவர்களுக்கு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் மூலம் தான் அனுமதி பெறப்பட வேண்டுமா என்று பலர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இது ஏற்கெனவே இருந்த முறை அல்ல. இடையிலே புகுத்தப்பட்ட முறை. எனவே ஏற்கெனவே இருந்த முறைப்படி,

ஓப்பன் அட்வர்டைஸ்மெண்ட் மூலமாக அந்தச் சுற்று வட்டாரத்திலே 5 கிலோ மீட்டர் அல்லது 3 கிலோ மீட்டர் அளவிற்கு இருக்கின்ற பெண்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவர்களை வேலை வாய்ப்பு அலுவலகம் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம், குடும்ப நலக் காப்பீட்டுத் தொகை வழங்குவதற்கு அந்த நியதி அவசியம் தேவை என்று கருதப்பட்டது. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் அன்றையதினம் அறிவிக்கின்றபொழுது, குடும்ப நலக் காப்பீட்டுத் தொகைக்கு இது குறுக்கீடாக இருக்காது என்று தெரிவித்ததை உறுப்பினர்களினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆதரவற்ற குழந்தைகளுக்காக அரசு இல்லங்கள் நடைபெற்று வருகின்றன. 25 இல்லங்கள் தமிழகத்திலே நடைபெற்று வருகின்றன. 5 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை அதிலே அனுமதிக்கின்றோம். முதல் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை அந்தக் குழந்தைகள் அந்த இல்லத்திலே தங்கிப் படிக்கிறார்கள். அடுத்த கட்டப் படிப்புக்கு அவர்கள் அருகில் இருக்கிற மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்குச் சென்று வருகிறார்கள். அந்த குழந்தைகளினுடைய உணவிற்காக மாதம் 200 ரூபாய் செலவிடப்படுகிறது. 5 வயதிலிருந்து 12 வயதுடைய குழந்தைகளுக்கு 100 ரூபாய் என்ற அளவிலே சீருடைக்காக வழங்கப்பட்டு வந்த தொகையை மாண்புமிகு முதல்வரவர்கள் 200 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். 13 வயது முதல் 18 வயது வரையான பெண்களுக்குச் சீருடைக்காக வழங்கப்பட்ட 150 ரூபாயை 300 ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இதன் மூலமாக அரசுக்குக் கூடுதல் செலவு 1 இலட்சத்து 73 ஆயிரத்து 500 ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தாயோ அல்லது தந்தையோ இழந்த பெண்கள் 18 வயது வரை அரசுக் காப்பகங்களிலே வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கல்வி வாய்ப்பு உருவாக்கித் தரப்படுகிறது. பள்ளி இறுதித் தேர்வு எழுதும் முன்பே 18 வயது நிறைவடைந்து விட்டால் அவர்களை இல்லத்திலேயிருந்து வெளியே அனுப்பிவிடுகிற சூழ்நிலை இதுவரை இருந்து வந்தது. ஆனால், இனி அந்தச் சூழ்நிலை தகர்க்கப்படுகிறது. இந்த நிகழ்வினைத் தவிர்ப்பதற்காக மாணவியர் நலன் கருதி, அவர்கள் எந்த வகுப்பு



படிக்க இருக்கின்றார்களோ அது பள்ளியிறுதி வகுப்போ அல்லது ப்ளஸ் 2 வகுப்போ, வயது வரம்பின்றி அவர்கள் தேர்விலே வெற்றி பெறும் வரை அந்தக் காப்பகத்திலே தங்கியிருப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் உத்தரவிட்டு இருக்கின்றார்கள்.

ஸ்வீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக் குழுவின் உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் பயிலும் 10,623 மாணவர்களுக்குக் கால் உறையும், ஷூக்களும் 17 இலட்சத்து 46 ஆயிரத்து 371 ரூபாய் செலவிலே வழங்கப்பட உள்ளன. என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பெண் குழந்தையைப் பெற்று எடுக்கின்றபொழுது பாரதிதாசன் அவர்கள் பாடியது போல,

சோலை மலரே சொர்ணத்தின் வார்ப்படமே
காலை இளஞ்சூரியனைக் காட்டும் பளிங்குருவே
வன்மை உயர்வு, மனித நலம் எல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேச வந்த பெண்ணழகே,
நாயென்று பெண்ணை நவில்வார்க்கும் இப்புவிக்குத்
தாயென்று காட்ட தமிழருக்கு வாய்த்தவளே,
வெண்முகத்தின் நீலம் விளையாடிக் கொண்டிருக்கும்
கண்களே உறங்கு கனியே உறங்கிடுவாய்
அன்னத்தின் தூவி அனிச்ச மலரிடத்து
சின்ன உடலாகச் சித்தரித்த மெல்லியளே,
மின்னல் ஒளியே விலை மதியா ரத்தினமே
கன்னல் பொழிந்து கலந்த கனிச்சாறே

என்று தாய்மார்கள் தாலாட்டுப் பாட வேண்டும். ஆனால், அப்படித் தாலாட்டுப் பாட வேண்டிய தாயே ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்து விட்டால், வதைத்துக் கொலை செய்கின்ற பழக்கம் சமீப காலங்களிலே இருந்து வந்ததை நாம் அறிவோம். அந்த சித்திரவதை நீக்கப்படும் என்பதற்காகத் தொட்டில் குழந்தைகள் திட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்டு, அதனுடைய தொடர்ச்சியாக, சேலம் மாவட்டத்தில் 22 இலட்சம் ரூபாய் செலவிலே ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் ஒரு இல்லம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியில் ஒரு பெண் குழந்தைக்கு மட்டும் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரிலே தங்க மோதிரம் வழங்குகிற ஒரு திட்டத்தை அமல்படுத்தி அதிலே ஊழல்களை நிறையச் செய்திருந்தார்கள். அதனை மாற்றி, நம்முடைய முதல்வரவர்கள் 2 பெண் குழந்தைகளுக்கான பராமரிப்புத் திட்டத்தை அறிவிப்பு செய்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு பெண் குழந்தை மட்டுமே பெற்றெடுத்து, அறுவை சிகிச்சை செய்து கொண்டு, அந்தக் குழந்தைக்கு 3 வயது நிரம்பியிருந்தால் 3,000 ரூபாய் பிக்செட் டெபாசிட்டிலே முதலீடு செய்வதற்குத் தமிழக அரசு முன் வந்திருக்கின்றது. ஒரு குழந்தை பிறந்தால் மட்டும் போதாது; இன்னொரு குழந்தை எதிர்பார்ப்போமே என்று நினைத்து முயற்சி செய்து இரண்டாவது ஆண் குழந்தையாகப் பிறந்து விட்டால் இந்தத் திட்டத்திலே பயன் கிடைக்காது. இரண்டாவதும் பெண் குழந்தையாகப் பிறந்து அறுவை சிகிச்சை செய்து கொண்டார்கள் என்று சொன்னால், முதல் குழந்தைக்கும் 1,500 ரூபாய், இரண்டாவது குழந்தைக்கும் 1,500 ரூபாய் என்று 5 ஆண்டுக் காலத்திற்கு அரசு நிதி நிறுவனத்திலே முதலீடு செய்து அதற்கான பத்திரத்தைப் பெற்றோரிடத்திலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் மேலும் பல ஆண்டுகளுக்குப் புதுப்பித்துக் கொள்ள அந்தப் பெற்றோர்கள் விரும்பினால் அரசு அதற்கும் ஆவன செய்யும். இந்தத் திட்டம் இந்த ஆண்டிலிருந்தே நடைமுறைக்கு வருகின்றது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் பதிவு செய்து கொண்டுள்ள ஒரு குழந்தைக்கு 1,500 ரூபாய் மட்டும் 5 ஆண்டுகளுக்கு பிக்சட் டெப்பாசிட்டாக அரசு நிறுவனத்திலே முதலீடு செய்து வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 2-15

இலவச சீருடைகள் வழங்குகின்ற திட்டம் கடந்த கால ஆட்சியிலே எவ்வளவு முறைகேடாக நடந்தது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான். அந்த நிலைமையை மாற்றுவதற்காக மாணவ



மாணவியர்களுக்கு வழங்கப்படுகின்ற சீருடைக்கான தரம் உள்ள துணிகளை கோ-ஆப்டெக்ஸ், காதி மற்றும் தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் போன்ற அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலே வாங்கித் தைப்பதற்கான அளவையும் அதிகரித்து 55 இலட்சம் ஜோடி சீருடைகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த கால ஆட்சியில் சீருடை தைக்கும் பணி தனியார்வசம் ஒப்படைக்கப்பட்டதால் மிகப் பெரிய அளவில் ஊழல் நடைபெறுவதற்கு ஏதுவாக இருந்தது. தற்போது சீருடை தைக்கும் பணி அந்தந்த மாவட்டத்திலுள்ள தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வழங்கப்பட்டு, தையல் தெரிந்த பெண்கள் இதன் மூலமாகத் தங்களுடைய வருமானத்தை ஈட்டிக்கொள்ளவும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள், அவர்களுடைய பேச்சிலே குறிப்பிட்டுச் சொல்கின்றபோது, சீருடைகள் வழங்குவது தாமதப்பட்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தச் சீருடைகள் வழங்குவதற்கு நிறுவனங்களிடமிருந்து 91.67 இலட்சம் மீட்டர் அளவுக்கு துணி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். கடந்த கால ஆட்சியிலே பல தனியாரிடமிருந்து அவர்கள் வாங்கினார்கள். ஆனால், நம் அரசாங்கம் அரசு நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கு முயற்சித்த காரணத்தினால், மொத்தமாக இந்தத் துணிகளை அவர்களால் தயாரித்து கொடுப்பதிலே தாமதம் ஏற்பட்டது என்பது உண்மைதான். அது மட்டுமல்லாமல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களிலே அதற்குரிய துணிகளை வழங்க வேண்டுமென்ற நிலையிருந்த காரணத்தினால் தாமதமாக வழங்கியிருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது அவர்களிடத்திலே தகவல் தரப்பட்டிருக்கிறது. ப்ராசசிங் செய்வதிலும் ஏற்பட்ட காலதாமதத்தைப் போக்கி முழு அளவிலே உற்பத்தியை நடத்தி ஏப்ரல், மே மாதங்களிலே அவர்கள் தந்துவிடுவார்கள் என்பதைத் தெரிவித்து, ஜூன் மாதத்திலே நிச்சயமாக மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அங்கன்வாடி பணியாளர்கள் பல ஆண்டுகாலமாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் அங்கன்வாடி பணியாளர் நிலை 1, நிலை 2 என்று இரண்டு பிரிவினர்கள் இருக்கிறார்கள். நிலை 1-லே பணியாற்றுகிறவர்கள் மைய அரசினுடைய மதிப்பூதியம் பெறுகிறவர்கள். நிலை 2-ல் பணியாற்றுகிறவர்கள் மாநில அரசின் மதிப்பூதியம் பெறுகிறவர்கள். கடந்த கால ஆட்சியில் மாநில அரசின் மதிப்பூதியம் பெறும் நிலை 2 அங்கன்வாடி பணியாளர்களுக்கு

மூன்று தவணை இடைக்கால நிவாரணம் 75 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இந்த இடைக்கால நிவாரணத் தொகை மைய அரசின் மதிப்பூதியம் பெறும் நிலை 1 அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்படாமல் இருந்தது. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுள்ளத்தோடு பரிசீலித்து மைய அரசு மதிப்பூதியம் பெறும் நிலை 1 அங்கன்வாடி பணியாளர்கள் 10 ஆயிரத்து 85 பேர்களுக்கும், நிலை 1 அங்கன்வாடி உதவியாளர்கள் 10 ஆயிரத்து 85 பேர்களுக்கும். ஆக மொத்தம் 20 ஆயிரத்து 170 பேர்களுக்கு இடைக்கால நிவாரணம் ரூபாய் 75 கிடைக்கும் வகையில் உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 1-1-1996-லிருந்து அமலுக்கு வரும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிலுவைத் தொகையினை வழங்குவதற்காகும் செலவு 2 கோடியே 11 இலட்சத்து 78 ஆயிரத்து 500 ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனால் ஆண்டு ஒன்றுக்கு கூடுதல் செலவு ஒரு கோடியே 81 இலட்சத்து 50 ஆயிரத்து 600 ரூபாய் ஆகும். இனிவரும் காலங்களில் தமிழக அரசு அங்கன்வாடி பணியாளர்களுக்கு வழங்கப்படும் இடைக்கால நிவாரணம் அனைத்தும் இவர்களுக்கும் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் பயிற்சி பெறும் மகளிர் தொழில் பயிற்சி மற்றும் பொருள் உற்பத்தி நிலையங்களிலே இருக்கின்ற பணியாளர்களுக்கு மாதம் உதவித் தொகை 50 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால், சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற அந்தப் பயிற்சியாளர்களுக்கு 30 ரூபாய்தான் வழங்கப்படுகின்றது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம் 50 ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டிருக்கிறார்கள். இதன் மூலம் கூடுதல் செலவு 10 ஆயிரத்து 800 ரூபாயாகும். 45 பயனாளிகள் பயன்பெறுவார்கள்.

ஏழை விதவையினுடைய மகள் திருமண உதவித் திட்டத்தில் இதுவரை 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அதை உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அவர்கள் 8-வது படித்திருந்தால் ரூ. 10 ஆயிரம் உதவித் தொகை நேரிடையாகப் பெறலாம். எனவே, 8-வது வரை படிக்காமல் இருந்தார்கள் என்று சொன்னால் 2 ஆயிரம் வழங்கப்பட்டு வந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 3 ஆயிரமாக உயர்த்தித் தருவதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் கூடுதல் செலவு ரூபாய் 6 இலட்சத்து 30 ஆயிரம் ஆகும்.



அதுபோல விதவையினுடைய மறுமணத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கியிருக்கிறோம். அதையும் உயர்த்த வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். எனவே, அவர்களுடைய திருமணச் செலவிற்காக மட்டும் 2 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம் இனி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அதன் மூலமாக 3 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் மூலமாக இதுவரை 2 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. அதையும் இப்போது 3 ஆயிரம் ரூபாயாக வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் நல்கியிருக்கின்றார்கள். ஐந்து ஆண்டுகள், ஆதரவற்ற பெண்கள் 100 பேருக்கு அந்த உதவித் தொகை கிடைக்குமாறு உத்தரவிட்டிருப்பதனாலே கூடுதல் செலவு 1 இலட்சத்து 70,000 ரூபாய் ஆகும். மகளிர் மேம்பாட்டுத் திட்ட ஊழியர்கள் 270 பேர் பணியாற்றி வருகிறார்கள். பல்லாண்டு காலமாக. அவர்களுக்கு மாற்றுப் பணிக்கு வாய்ப்புண்டா என்று பல உறுப்பினர்கள் கருத்து கேட்டிருந்தார்கள். மாநில அரசின் நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் அவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். இதனால் அவர்களுக்கு மாதச் சம்பளம் 300 ரூபாய் அளவு கூடுதலாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-20

சேவை இல்லங்களிலே மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்திட 15 பேருக்குத்தான் இதுவரை அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இனி வரும் ஆண்டுகளில் 25 பேருக்கு பயிற்சி அளிக்கும் வகையில் உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த உதவித் தொகை, அவர்களுக்கு 150 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்ததை 300 ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதேபோல், செவித்திறன் குறைவு உடையோருக்குப் பயிற்சி தருவோருக்கு, 50 பேருக்கு அனுமதி அளித்தாலும் 25 பேருக்குத்தான் அரசாங்கம் 300 ரூபாய் என்று உதவித் தொகை வழங்கி வந்தது. இனி வருங்காலங்களிலே 50 பேருக்குமே அந்த 300 ரூபாய் உதவித்தொகை வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1997 ஏப்ரல் 3

ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்குவதிலும், மூன்று சக்கர வண்டி கேட்டு அதிகம் பேர் மனு செய்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு 1,000 பேர் என்ற அளவிலே மூன்று சக்கர வண்டி வழங்கினோம். சக்கர நாற்காலி 100 பேருக்கு வழங்கினோம். அனால் இந்த ஆண்டு அதை உயர்த்தித் தரவேண்டும் என விண்ணப்பங்கள் வந்த காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூன்று சக்கர வண்டி 1,500 பேருக்குத் தருவதற்கும், சக்கர நாற்காலி 150 பேருக்கு வழங்குவதற்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஊனமுற்றோருக்குக் கல்வி உதவித் தொகையைப் பொறுத்தவரையில், 1-ஆம் வகுப்பு முதல் 8-ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகையாக ஒரு நபருக்கு 25 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரைதான் ஒரு ஆண்டிற்கு வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஊனமுற்றோர் கல்வி பயிலுகின்ற ஊக்கத்தைப்பெற வேண்டும் என்பதற்காக முதல் வகுப்பிலிருந்து 5-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு 25 ரூபாய் வீதம், 10 மாதங்களுக்கும், 6-ஆம் வகுப்பு முதல் 8- ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூபாய் 75 வீதம் 10 மாதங்களுக்கும் வழங்கலாம் என்று உத்தரவு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பார்வையற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளோருக்கு சலுகை வழங்கியிருக்கிறோம். அதைப் போலவே, ஒரு கையோ, அல்லது காலோ இழந்தவர்களைத் திருமணம் செய்துகொள்கின்ற நபர்களுக்கும் திருமண உதவித்தொகை வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கையோ அல்லது காலோ இழந்த ஐந்து பேருக்கு 5,000 ரூபாய் என்ற அளவிலே 29 மாவட்டங்களிலே 145 பேருக்கு வழங்கப்படும். இதன் மூலமாகப் புதிதாக நிதியொதுக்கீடு 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடும் ஊனமுற்றோர்கள் என்று பல குழந்தைகளும், பெரியவர்களும் இருக்கிறார்கள். அவர்களால் முழுமையாக இயங்க முடியாது. அவர்களை மற்றவர்கள் தூக்கிக் கொண்டுதான் எந்த இடத்திற்கு சென்றாலும் செல்ல வேண்டும்.. அவர்களுக்குப் பராமரிப்புத் தொகை 100 ரூபாய் என்று வழங்கப்பட்டு வந்தது. அது மட்டுமல்லாமல், 1,050 பேர்கள்தான் இதிலே பயனடைந்தார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனை மாநிலம் முழுவதற்கும், அனைத்து மாவட்டங்களுக்கும்



1997 ஏப்ரல் 3] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

என்பதற்காக 2,900 பேருக்கு இந்தப் பயன்கள் கிடைக்குமாறு செய்து, அவர்களுக்கு 100 ரூபாய்க்குப் பதிலாக 150 ரூபாய் வழங்குவதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்திலே பயன் பெறவேண்டும் என்றால், வருமான வரம்பு ரூ.12,000 என்று இருக்க வேண்டும். அதையும் உயர்த்தி ரூ.15,000-ஆக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சுதந்திர தினத்தன்று ஊனமுற்றோருக்காகப் பணியாற்றிய பலருக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த விருதிலே, சமூகநல ஊழியர் ஒருவருக்கும் விருது தருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல் உலக ஊனமுற்றோர் நாளையொட்டி, வழங்கப்படுகின்ற விருதுகளிலும் சமூக நல ஊழியர் ஒருவருக்கு விருது வழங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

சிறந்த மாணவர்கள் என்ற பரிசினை ஊனமுற்றோர் பெறும் வகையிலே முதல் பரிசு இரண்டாம் பரிசு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. மூன்றாம் பரிசு வழங்குவதற்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இந்தத் தருணத்திலே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் பேசுகின்றபோது, முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு இருந்த பரந்த மனப்பான்மையைச் சுட்டிக்காட்டிப் பேசினார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சுதந்திர தினத்தன்று வழங்கிய விருதுகளுக்குப் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்களிடத்திலே நான் எழுப்பினேன். காரணம், கடந்த ஆண்டுகளில் இந்த விருதுகள் அனைத்திலுமே, 'மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி வழங்கும் விருது' என்று குறிக்கப்பட்டிருந்தது. அந்தக் கோப்பிலே நான் அதை மாற்றி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் வழங்கும் விருது' என்று குறிப்பு அனுப்பியிருந்தேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கோப்பினை எனக்குத் திருப்பியனுப்பினார்கள். அதிலே, அவர்கள் எழுதியிருந்தது என்ன என்று பார்த்தேன். அதிலே, தன்னுடைய பெயர் இடம் பெறத் தேவையில்லை என்று குறித்துவிட்டு, 'தமிழக அரசு வழங்கும் விருது' என்றுதான் இருக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று குறிப்பிட்டிருந்தார்கள். கழிப்பறையிலேயிருந்து திருமண மண்டபம்

[திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்] [1997 ஏப்ரல் 3

வரைக்கும், அனைத்து இடங்களுக்கும் தன் பெயர்தான் இருக்க வேண்டும் என்று நினைத்த ஆட்சிக்கு மாறுதலாக, பரந்த மனப்பான்மையுடன், தன்னுடைய பெயரேகூட இருக்க வேண்டாம். தமிழக அரசினுடைய பெயர்தான் இருக்க வேண்டும் என்று சொன்ன கலைஞர் அவர்களுடைய அந்தப் பரந்த மனப்பான்மையை நாம் இன்றைக்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஊனமுற்றோருக்கான மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவில், ஊனமுற்றோர் சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஊனமுற்றோர்களில் முக்கியமாக பார்வையற்றோருக்குச் சேரவேண்டிய விகிதாச்சாரத்தின்படி அவர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கிக்கொள்ள ஏதுவாக, பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை வேலைவாய்ப்புத் துறை, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வாணையம், போக்குவரத்துத் துறை மற்றும் எழுதுபொருள் அச்சுத் துறை போன்ற துறைகளின் உயர்மட்ட அதிகாரிகளுடன் விரைவில் கூட்டம் நடத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அரசுத் துறைகளோடு, தனியார் நிறுவனங்களிலும் ஊனமுற்றோர்கள் வேலைவாய்ப்பைப் பெறும் வகையில், தனியார் நிறுவனங்களுடனும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கலந்து பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

கடந்த ஆட்சியில் ஆடம்பரச் செலவாக எவ்வளவு செய்தார்கள் என்பதை ஒருசில எடுத்துக்காட்டுகளாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாநில ஊனமுற்றோர் கொள்கை வெளியீட்டுக்காக 31-2-1994 அன்று பன்னாட்டு மாநாடு நடத்தியதற்காக 8,42,000 ரூபாயும், பன்னாட்டு பெண்கள் தினம், கலைவாணர் அரங்கில் 9-3-1994 அன்று மகளிர் மேம்பாட்டுக் கழகத்தால் கொண்டாடியதற்காக 8,86,335 ரூபாயும், ஊனமுற்றோர் பன்னாட்டு மாநாடு நடத்தியதற்காக 5-9-1995 அன்று 11,45,853 ரூபாயும் செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த 28-2-1997 அன்று நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கான விழாவில் செய்யப்பட்ட செலவு எவ்வளவு தெரியுமா? ஒரு லட்சம் ரூபாய்கூட இல்லை, வெறும் 80,200 ரூபாய் மட்டுமே அதற்காகச் செலவாகியிருக்கிறது என்று சொல்லும்போது, 'அரசினுடைய தொகை என்பது மக்கள் தந்த வரிப் பணம் என்பதை உணர்ந்து, மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களை



1997 ஏப்ரல் 3] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

அறிவிப்பதிலே நாட்டம் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுபோன்று, கோவை மாவட்டத்தில் மிகப் பெரிய ஊழல் நடந்திருக்கிறது. அதை மட்டும் சொல்லிவிட்டு என் பதிலுரையை நிறைவு செய்யலாம் என்று இருக்கிறேன். 'அன்னை சந்தியா குழந்தைகள் உலகம்' என்ற பொழுதுபோக்கு மையம் 25.19 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் துவங்கலாம் என்று கடந்த அரசு 1993 ஆம் ஆண்டு முடிவு செய்திருந்தது. இதற்காக மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மேற்படி பூங்காவை தனியாக நடத்த இயலாது என்று கூறி, 5 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு விட்டால் அந்த வருமானத்தைக் கொண்டு, தனியாகவோ, அல்லது தனிப்பட்ட நபர்களுடன் சேர்ந்தோ கேளிக்கை வளாகம், அங்காடி போன்றவற்றை குத்தகை அடிப்படையில் அல்லது இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் செய்யலாம் என்று கூறியிருந்தார்கள். அதற்கான ஒப்பந்தப்புள்ளியில் அதிகமான தொகையைக் குறிப்பிட்டிருக்கும் கெனல் வர்த், கல்கத்தா என்ற தனியார் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலத்தை 33 வருடங்களுக்கு குத்தகைக்குக் கொடுத்து, ஒரு வருடத்திற்கு குத்தகைத் தொகை என்று சொல்லி 7.63 இலட்சம் ரூபாயைப் பெற்றிருக்கிறார்கள். 33 வருடங்களுக்குப் பிறகு இந்தக் குத்தகை மீண்டும் புதுப்பிக்கப்படும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த நிபந்தனையை மகளிர் மேம்பாட்டுக் கழகமே நிர்ணயம் செய்திருந்தது. அந்த மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரே அந்தக் குத்தகைப் பத்திரத்தில் கையெழுத்திடலாம் என்றும் வகை செய்யப்பட்டிருந்தது. அதைப்போல ஜெனிஸ் ரெசிடென்சி என்ற நிறுவனத்திற்கு 33 ஆண்டுகளுக்கு 7.65 இலட்சம் ரூபாய்க்கு குத்தகை என்ற அடிப்படையில் அங்காடி கட்டி, அங்கத்தினர்கள் மட்டுமே பயனடையக்கூடிய வகையில் Country club அமைக்கலாம் என்று ஆணையிட்டிருந்தார்கள். மேலும், 10 ஏக்கர் நிலத்தை 'ஜம்போ என்டர்டய்னர்ஸ்' என்ற நிறுவனத்திற்கு இதுபோன்று ஒதுக்கீடு செய்திருந்தார்கள். எந்தக் குத்தகையும் 3 வருடங்களுக்கு ஒருமுறை வெளிச் சந்தையின் விலை உயர்வுக்கேற்ப, உயர்த்துவது வழக்கம். இந்த நிலத்தின் மதிப்பு குறைவாகக் கணக்கிடப்பட்டு ஒரு ஏக்கர் நிலத்தின் விலை 2,17,855 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிலம் கோவை விமான நிலையத்திற்கு மிக அருகில் பிரதானச் சாலையில் இருப்பதால், நிர்ணயிக்கப்பட்ட விலை மிகவும் குறைவு என்று கருதப்படுகிறது. இதனால் அரசுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், மாவட்ட

ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெறவில்லையென்றும், வருவாய்த் துறைக்கு இந்தக் கோப்பு அனுப்பப்படவில்லை என்றும் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலையில் ஊழலுக்கு எந்தவகையிலும் இடம் அளிக்கக்கூடாது என்று இந்த அரசு செவ்வனே நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதுபோன்று, மானாமதுரையில் இருக்கின்ற சி.எஸ்.ஐ. காது கேளாதோர் பள்ளிக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை வழங்கப்படாமல் இருந்ததைக் கண்டவுடன், மாண்புமிகு முதல்வர் அவர்கள், உடனே அது வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். எனவே, இறுதித் துணை மதிப்பீட்டின்போது அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பசும்பொன் தேவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம் அந்தப் பள்ளிக்கு வழங்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சத்துணவுக் கூடங்களில் எரிவாயு அடுப்பு இல்லை, எனவே அவைகள் வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதல் கட்டமாக, மகளிர் பணிபுரியும் சத்துணவுக் கூடங்களுக்கு எரிவாயு அடுப்பு அனுப்பப்பட்டு விட்டது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும் சத்துணவுக் கூடங்களில் பழைய அலுமினியப் பாத்திரங்கள் இருக்கின்றன, அவைகள் மாற்றப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தப் பழைய அலுமினியப் பாத்திரங்களெல்லாம் ஏலம் விடப்பட்டு, அதற்குப் பதிலாக டெண்டர் மூலம் புதிய அலுமினியப் பாத்திரங்கள் வாங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2-30

பேரவை உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். நான் கூறிய விளக்கத்திற்குப் பிறகு, தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தமாட்டார்கள் என்று கருதுகிறேன். வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் நடத்தப்படும் ஐ.சி.டி.எஸ். திட்டம் எல்லா



யூனியன்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா? அது மாத்திரமல்ல. Condensed Course for Deserted Women and Destitute Widows ஆரம்பிப்பதற்கு அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற ஐ.சி.டி.எஸ். திட்டம் மத்திய அரசால் வழங்கப்படுகின்ற மானியத்தை வைத்துக்கொண்டு நடைபெறும் திட்டம். மத்திய அரசு வழங்கினால் மாநில அரசு நடத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### ஆ. கோரிக்கை எண் 29—சமூக நலன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலன். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் பற்றிய 29-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.600,04,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (ஆ) கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பாராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

திரு. அ.வ. அப்துல் நாசர், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது.

"1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் பற்றிய 12-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.14,89,16,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (4-4-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கபெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

134. சென்னை-600 006, 589, அண்ணா சாலை, பார்சன் வளாகம், ஐ.ஜி. பிளாக்-ஏ-ல் உள்ள திருவாளர்கள் இன்டர் கான்டினென்டல் தோல் நிறுவனத்தினர் செலுத்த வேண்டிய வரியினை சில நிபந்தனைகளுக்குட்பட்டு 03-01-1995-முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 18-01-1996-ஆம் நாளிட்ட 26-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

105. மானியக் கோரிக்கை எண் 29 - சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

106. சமூக நலன் பற்றிய செயல்முறைத் திட்டம், 1997-98. (ஆங்கிலம்)

107. மானியக் கோரிக்கை எண் 12 - தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

# இணைப்பு-1

*(**454**-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 29

## சமூகநலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98

## அத்தியாயம்-1

### முன்னுரை

கோரிக்கை எண் 29-ன்கீழ் 1997-98-ம் ஆண்டிற்கு ரூ.600,04,30 ஆயிரங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2 'மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு'

பெண்ணினம் தன் பெண்மையைக் காத்து தாய்மைக்குரிய கடமையை நிறைவேற்றி மனைமாட்சிமை கொண்டதாய் அமைவது சிறப்புக்குரியது. நல்ல பண்புள்ள குழந்தைச் செல்வங்களைப் பெறுவது அதனினும் சிறப்புக்குரியது என்று தெய்வமாக்கவி வள்ளுவர் பாராட்டுகிறார்.

சமுதாயத்தில் உள்ள பெண்கள் நிலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் சமூகமும் கலாச்சாரமும் உயரும் என உணர்ந்து பெண்களின் உரிமைகளுக்கு ஏற்பளித்தும் குழந்தைகள் நலனைப் பாதுகாக்கவும் உடல் ஊனமுற்றோருக்கு உறுதுணையாய் விளங்கவும் அரசு ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கி வருகிறது.

1.3 பரந்து விரிந்த இந்நாட்டில் சமூக நலப் பணிகளிலும் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத்தில் தமிழ்நாடு பிற மாநிலங்களினின்றும் தனித்து சிறந்து விளங்குகிறது.

1.4 சமூக அநீதிக்குட்பட்ட மக்களின் நலனை, மகளிர் நலனை, மழலைச் செல்வங்களின் நலனை, வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள ஏழை எளிய மக்கள் அனைவரின் நலனையும் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அரசு திட்டங்கள் தீட்டிச் செயல்பட்டு வருகிறது.

## அத்தியாயம் - 2

## மகளிர் நலம்

### மகளிர்க்கான பொருளாதார செயல்முறைத் திட்டம்

**2.1. தையல் கூட்டுறவுச் சங்கங்கள்**

மகளிர் நலனுக்காக இம்மாநிலத்தில் 79 மகளிர் தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடையும் 1 முதல் 8 வகுப்பு வரை பயிலும் பள்ளி சிறார்களுக்கு கொடுக்கப்படும். சீருடைகளையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் சிறார்கள் பயில நடைபெறும் பள்ளிகளில் பயில்பவர்களுக்கும், சீருடை தைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இச்சங்கங்களின் மூலம் சுமார் 26,655 மகளிர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர். ஒவ்வொரு உறுப்பினரும் ஓராண்டில் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.500/-லிருந்து ரூ.600/-வரை பொருளீட்ட இயல்கிறது. 1996-97-ம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் மகளிர் மூலமாக 55 இலட்சம் 'செட்' சீருடை தைக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. துணி வெட்டுபவர் மற்றும் உதவியாளர் சம்பளமாகவும் தையல் கட்டணமாகவும் ரூ.4.45 கோடி அனுமதிக்கப்பட்டது.

**2.2. காலணி கூட்டுறவுச் சங்கங்கள்**

38 காலணி கூட்டுறவுச் சங்கங்கள் 2,000 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன.

**2.3. எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள்**

20 எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 1,039 மகளிர் உறுப்பினர்களாக பயனடைகின்றனர். மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் அனைத்துப் பதிவேடுகளும் இச்சங்கங்களால் தயாரிக்கப்படுகின்றன.



**2.4. கயிறு கூட்டுறவுச் சங்கங்கள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நல்லூரில் ஒன்றும், திருநாகேஸ்வரத்தில் ஒன்றுமாக இரண்டு சங்கங்கள் உள்ளன. நல்லூரில் உள்ள சங்கம் பயிற்சி நிலையமாகவும் செயல்படுகிறது. இவ்விரு சங்கங்களினால் சுமார் 150 மகளிர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

**2.5. திரவ சோப்பு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்**

இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. ஒன்று செங்கை-அண்ணா மாவட்டத்திலும் மற்றொன்று திருச்சி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டத்திலும் உள்ளன. இவ்விரு சங்கங்களும் சுமார் 58 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

**2.6. ஜவ்வரிசி மற்றும் அப்பளம் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்**

இச்சங்கம் தருமபுரி மாவட்டத்தில் மத்தூரில் உள்ளது. இதன்மூலம் 35 உறுப்பினர்கள் வேலை வாய்ப்பு பெறுகின்றனர்.

**2.7. இறால் ஊறுகாய் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்**

சென்னை மாவட்டத்தில் இராயபுரத்தில் செயல்பட்டு வருகின்றது. இதனால் சுமார் 30 மீனவ மகளிர் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

**2.8. சாக்குக் கட்டி தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம்**

ஆறு சாக்குக் கட்டி தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 248 பெண்கள் பயனடைகின்றனர். இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் சாக்குக் கட்டிகள் கல்வித் துறையின் மூலம் இயங்கும் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

**2.9. இணை உணவு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்**

இத்துறையின்கீழ் 26 இணை உணவு தயாரிக்கும் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதன்மூலம் 1,900 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இச்சங்கங்கள் மூலம் தயாரிக்கப்படும் இணை உணவு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் மையங்களுக்கு வழங்கப்படுகிறது.

1996-97-ம் ஆண்டில் சுமார் 8,317 மெட்ரிக் டன் இணை உணவு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

**2.10. மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள்**

(அ) 49 பயிற்சி மையங்களும், 6 உற்பத்தி நிலையங்களும் மகளிருக்காக இத்துறையின் மூலம் நடத்தப்படுகின்றன.

(ஆ) 41 தையல் பயிற்சி நிலையங்கள், 4 பனை ஓலை பயிற்சி நிலையங்கள், 2 கம்பளி பயிற்சி நிலையங்கள் ஒரு பாய் முடையும் பயிற்சி நிலையம், ஒரு மூங்கில் கைவினைப் பொருள்கள் பயிற்சி நிலையம் இத்துறையின்கீழ் செயல்படுகின்றன. மேலும் ஒரு சாக்குக் கட்டி உற்பத்தி மையம், இரண்டு மெழுகுவர்த்தி உற்பத்தி நிலையங்கள், ஒரு படுக்கை விரிப்பு மற்றும் துண்டு தயாரிப்பு நிலையம், ஒரு ஆயத்த ஆடை நிலையம், ஒரு துணி பொம்மை தயாரிக்கும் நிலையம் ஆகிய 6 உற்பத்தி நிலையங்கள் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் சுமார் 775 பெண்களுக்கு இப்பயிற்சி நிலையங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. சமூகநலத்துறையின்கீழ் உள்ள தையல் மற்றும் இதர தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவிகளுக்கு சமூகநலத்துறையால் மாதம் ரூ.50/-வீதமும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் மாதம் ரூ.30/-வீதமும் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 'டிரைசம்' திட்டத்தின்கீழ் பயிற்சி பெறுபவர்களுக்கும் மகளிர் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களில் கிடைக்கும் வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள அரசு அனுமதித்துள்ளது.

**2.11. ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம்**

ஆண்டு வருமானம் ரூ.12,000-க்குக் குறைவாகப் பெறும் ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ.2,000 வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 20 வயதிலிருந்து 30 வயதிற்குள் இருத்தல் வேண்டும். ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே இவ்வுதவியினைப் பெறமுடியும். 1997-98-ம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ.21 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.12. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் 8-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களுக்கு திருமண உதவியாக ரூ.10,000/-வழங்கப்படுகிறது. ஆனால் பழங்குடியினர் மகளிர் 5-ம் வகுப்பு படித்திருந்தால் போதுமானது. இத்திட்டம் மகளிரின் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு வலுவான தூண்டுதலாக அமையும் என அரசு கருதுகிறது. மாநிலம்



முழுவதும் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களிலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதற்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

திருமணம் செய்யும் காலத்தில் மணப்பெண் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் அவரது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சிகளில் மாநகராட்சி ஆணையரும், ஊரகங்களில் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களும், நகராட்சிகளில் நகராட்சி ஆணையரும், நகரியத்தில் தனி அலுவலரும் ஒப்புதல் வழங்கவும், அந்தந்த மாவட்ட சமூகநல அலுவலர்கள் இதற்கான தொகையினை பெற்று வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் சீரிய முறையில் செயல்பட இவர்கள் பொறுப்பானவர்கள் ஆவார்கள். மாநில அளவில் சமூகநல இயக்குநர் திட்ட செயலாக்கத்திற்கு பொறுப்பானவர். இத்திட்டத்தின்கீழ் 1997-98-ல் ரூ. 2,000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 20,000 ஏழை மகளிர் பயனடைவர்.

**2.13 டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டம்**

வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு பேறுகாலத்திற்கு முன் இரு மாதங்களிலும் பேறு காலத்திற்குப்பின் இரு மாதங்களிலும் அவர்களது வருமானத்தை ஈடுகட்ட ஆதரவாக இத்திட்டத்தின்கீழ் நிதி ஆதரவு வழங்கப்படும். விண்ணப்பதாரர் திருமணத்தின்போது 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். மொத்த ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். பேறு காலத்தின்போது குழந்தை பிறந்தாலும், இறந்தாலும் ரூ. 500 மொத்தமாக (மாதம் ரூ. 125 வீதம் 4 மாதங்களுக்கு) வழங்கப்படும். துணை மருத்துவ செவிலியரது சான்றிதழ் பெற்றவர், இந்நிதியுதவி பெறத் தகுதியுடையவர் ஆவார். ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், நகரியங்கள் மற்றும் மாநகராட்சிகள் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அதிகாரம் உடையவை ஆகும். கருவுற்ற பெண்களுக்கு கிராம மருத்துவ செவிலியர் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் மூலமாக இத்தொகை வழங்கப்படும். மாநில அளவில் இத்திட்டத்தின் சீரிய செயலாக்கத்திற்கு சமூகநலத் துறை இயக்குநர் பொறுப்பானவர். இத்திட்டத்திற்கென 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 581 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுமார் 2 இலட்சம் தாய்மார்கள் இத்திட்டத்தின்

மூலம் பயன்பெறுவர். இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகையாக ரூ. 500 பெறும் கருவுற்ற பெண்கள் அனைவருக்கும் நான்கு மாதங்களுக்கு சத்துணவு மையத்தில் தினமும் ஒருமுறை சத்துணவு இலவசமாக வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

**2.14. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டம் (விதவை மறுமணத் திட்டம்)**

விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, தம்பதியருக்கு நிதியுதவி வழங்குதல் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விதவையின் மறுமணத்தின்போது தம்பதியர் இருவரது பேரிலும் ரூ. 5,000-க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்படுகிறது. இத்திட்ட உதவி 20 வயது முதல் 30 வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. பயனடைவோர் அல்லது அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குள் இருத்தல் வேண்டும். 1997-98 ஆம் ஆண்டுக்கு சுமார் 196 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ. 9.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.15. ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் திட்டம்.**

ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்குக் குறைவாக உள்ள குடும்பங்களிலுள்ள 20 வயது முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட ஆதரவற்ற பெண்கள் திருமணத்திற்கு பயனாளி ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 நிதியுதவி அளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 65 ஆதரவற்ற பெண்கள் பயனடைவர்.

**2.16. அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம்.**

இத்திட்டம் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிறது. கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு திருமணச் செலவிற்காக ரூ. 3,000 மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ. 7,000-மும் ஆக மொத்தம் ரூ. 10,000 வழங்கப்படுகிறது. தம்பதியர் இருவரது ஆண்டு வருமானம் ரூ. 12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். 1997-98 ஆம் ஆண்டு 554 தம்பதியர் பயன்பெறும் வண்ணம் ரூ. 55..0 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**2.17. இலவச தையல் இயந்திரம் வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,000 தையல் இயந்திரங்கள் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்ற ஆண், பெண் இருபாலருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்கள் முறைப்படி தையல் தொழிலை சுயவேலை வாய்ப்பாகக் கொண்டு தங்களது வருமானத்தை உயர்த்திக் கொள்கிறார்கள். 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 14.29 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

***2.18* விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்குதல்**

இலவச பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் இத்திட்டம் ரூ. 12,000-க்குக் குறைவாக ஆண்டு வருமானம் பெறும் விதவைகளின் குழந்தைகள் பயன்பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. 1996-97 ஆம் ஆண்டிலிருந்து எல்லா ஏழை விதவையரின் குழந்தைகளுக்கும் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கவும் உதவித் தொகையினை ரூ. 50 முதல் ரூ. 600 வரை உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்கென ரூ. 4.30 இலட்சம் 1997-98-க்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.19. சேவை இல்லங்கள்**

(அ) தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், சேலம், திருநெல்வேலி, காரைக்குடி ஆகிய 6 இடங்களில் சமூக நலத்துறை சேவை இல்லங்களை நடத்தி வருகின்றது. ஏழை விதவைகள், கணவரால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் ஆதரவற்றோருக்கு கல்வி வசதி அளிப்பதே இவற்றின் நோக்கமாகும். படிப்பைத் தொடர ஆர்வம் இல்லாதோருக்கு தையல், பூ வேலை, துணி நெய்தல் மற்றும் பொம்மை தயாரித்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் மற்றும் பூவேலையில் ஓராண்டு பயிற்சி முடித்தவர்கள், அரசின் தொழில்நுட்பத் துறையால் நடத்தப்படும் தேர்வுகள் எழுதத் தகுதி உடையவராவார்.

(ஆ) சேவை இல்லங்களில் பயிலும் உள்ளுறை பெண்களுடன் இரண்டு குழந்தைகள் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ந்து 3 ஆண்டு காலம் மேற்படி இல்லத்தில் இருக்கலாம். உள்ளுறை உணவுக்காக மாணவிகளுக்கு மாதம் ரூ. 150-ம் குழந்தைகளுக்கு ரூ. 120-ம் வழங்கப்பட்டு வருகிறது. சீருடைக்காக மாணவிகளுக்கு

ரூ. 150-ம் குழந்தைகளுக்கு ரூ. 100-ம் வழங்கப்படுகிறது. ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு மாணவியர்களுக்கு ரூ. 35 வீதமும் 6 ஆம் வகுப்பிலிருந்து 8 ஆம் வகுப்பு மாணவியர்களுக்கு ரூ. 50 வீதமும் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு ரூ. 90 வீதமும் பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. உணவுக்காக பெரியவர்களுக்கென வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையான ரூ. 150-ஐ ரூ. 210 ஆகவும், குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையான ரூ. 120-ஐ ரூ. 165 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 1997-98-ல் ரூ. 101.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தாம்பரம் மற்றும் கடலூர் இல்லங்களில் கலைப் பாடங்களைக் கொண்ட மேல்நிலை வகுப்புகள், ஒப்புதல் அளிக்கப்பட்ட 60 உள்ளுறைவோருடனும், தஞ்சாவூர் சேவை இல்லத்தில் அறிவியல் பாடங்களுடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட மேல்நிலை வகுப்புகள் 60 உள்ளுறைவோருடனும் நடத்தப்படுகின்றன. புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக ஒவ்வொரு உள்ளுறைவோருக்கும் வருடத்திற்கு தலா ரூ. 190 வழங்கப்படுகின்றது. உடல் ஊனமுற்றோருக்காக தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்குகிறது. இப்பிரிவில் 30 பெண்களும் 20 குழந்தைகளும் உள்ளனர்.

(ஈ) தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவை இல்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து செயலகப் பிரிவு இயங்குகிறது. ஒவ்வொன்றிலும் 20 பயிற்சியாளர்களுக்கு ஒரு வருட பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சிக்குப்பின் அவர்கள் அரசு தேர்வு எழுதலாம். சேவை இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ள தையல் பிரிவில் பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும், ஓராண்டு பயிற்சிக் காலத்தில், தலா ரூ. 500 வழங்கப்படுகிறது.

(உ) இத்துறையில் சேவை இல்லங்கள் மூலம் 10 ஆம் வகுப்பு தேறிய மகளிர் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்காக பரிந்துரை செய்யப்படுகிறார்கள். பயிற்சிக்காலம் ஒன்றரை ஆண்டு ஆகும். இதுவரை சுமார் 2,000 மகளிர் இப்பயிற்சிக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்கள். தொழிற்பயிற்சி பாடங்களுடன் மேல்நிலை வகுப்புகள் காரைக்குடி, திருநெல்வேலி மற்றும் தாம்பரம் சேவை இல்லங்களில் 1994-95 ஆம் ஆண்டில் துணி மற்றும் வடிவமைப்பு செவிலியர் மற்றும் ஆய்வகத் தொழில் நுட்பப் பயிற்சி ஆகியவை



துவக்கப்பட்டன. 1995-96-ல் கணிப்பொறி பயிற்சி தஞ்சை சேவை இல்லத்திலும், செவிலியர் பயிற்சி கடலூர் சேவை இல்லத்திலும், துணி மற்றும் வடிவமைப்பு பயிற்சி சேலம் சேவை இல்லத்திலும் துவங்கப்பட்டது. இதன்மூலம் ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் 30 பெண்கள் பயனடைவர். 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 24.54 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் 6 சேவை இல்லங்களுக்கு பெட்ரோலிய வாயு அடுப்பு வசதி செய்து கொடுக்கும் பொருட்டு ரூ. 2.92 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.20. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்

(அ) அரசு நிதி உதவியுடன் காந்தி கிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவிகாஸ்ரமத்திலும், ஈரோட்டிலுள்ள கஸ்தூரிபாய் தேசிய நினைவு அறக்கட்டளையிலும் மற்றும் மதுரையிலுள்ள சேவாஸ்ரமத்திலும் சேவை இல்லங்கள் தொடங்கி நடத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் 120 மாணவிகளுக்கும் மதுரை மற்றும் ஈரோட்டில் உள்ள சேவை இல்லங்களில் தலா 40 மாணவிகளுக்கும் இரண்டாண்டு குறுகிய கால பத்தாம் வகுப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 75 வீதம் உதவித்தொகை வழங்கப்படுகிறது. ஒரு பட்டதாரி ஆசிரியர், ஒரு தமிழ் ஆசிரியர் ஆகிய இருவருக்கான ஊதியத்தொகை ஒவ்வொரு சேவை இல்லத்துக்கும் மானியமாக வழங்கபபடுகிறது. சமூகத்தில் மிகவும் பின்தங்கிய மகளிருக்காக தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பிரிவு நடத்தும் சென்னை "ஸ்திரி சேவா மந்திர்" என்னும் நிறுவனத்திற்கு மானியம் வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.65 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.21. பணிபுரியும் மகளிர் விடுதிகள்

பணிபுரியும் பெண்களுக்கு அவர்களது பணியிடத்திற்கு அருகாமையிலேயே பாதுகாப்புடன்கூடிய சிக்கனமான உறைவிடம் தேவைப்படுகிறது. பணிபுரியும் பெண்களில் குறிப்பாக ரூ. 3,000-க்கு மிகாமல் மாத வருமானம் பெறும் நடுத்தர வருவாய் வர்க்கத்தினரின் பாதுகாப்பு மற்றும் நியாயமான வாடகையுடன் கூடிய இருப்பிடத்தினை தெரிவு செய்யும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் அரசு, சென்னையில் இரண்டும், கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, ஒசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஒன்று வீதமும்

[1997 ஏப்ரல் 3

எட்டு பணிபுரியும் பெண்கள் விடுதிகள் ஏற்படுத்தியுள்ளது. இந்த விடுதிகளில் உள்ள மொத்த இருப்பிட வசதி 415 ஆகும். இவ் விடுதிப் பணியாளர்களான கண்காணிப்பாளர், இரண்டு சமையலர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவாளர் ஆகியோர் ஊதியத்திற்கான மொத்த செலவையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. உணவுச் செலவு, கட்டிட வாடகை, மின்கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் உள் உறுப்பினர்களிடமிருந்து சம அளவில் ஈடு செய்யப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 18.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிற்கு 8 மகளிர் விடுதிகளுக்கு பெட்ரோலிய எரிவாயு அடுப்பு வசதி செய்து கொடுப்பதற்கு ரூ. 3.23 இலட்சமும், பழைய கட்டில்களுக்கு பதிலாக புதிய கட்டில்கள் வாங்குவதற்கு ரூ. 2.50 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.22. பணிபுரியும் மகளிர் விடுதி கட்ட நிதியுதவி அளித்தல்**

தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிடம் கட்டுவதற்கான மொத்த செலவில் 75% மத்திய அரசால் மானியமாக வழங்கப்படுகிறது. மொத்த மதிப்பீட்டில் 15% அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைந்த தொகையோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. மீதித் தொகையை நிறுவனமே ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தை பயன்படுத்த விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்ட சொந்தமாக நிலம் வைத்திருக்க வேண்டும். இந்நிறுவனங்கள் மாநகராட்சி/நகராட்சியின் முன் அனுமதி பெற்றிருக்க வேண்டும். இதே பணிக்காக பிற அரசிடமிருந்தோ உதவிகள் பெற்றிருத்தல் கூடாது. கட்டிடம் கட்டப்படும் நிலத்தின் மதிப்பில் 50% மத்திய அரசால் மானியமாக அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் 1996-97 வரையில் 63 பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டிற்கு பணிபுரியும் மகளிர் இல்லக் கட்டிடம் கட்டுவதற்கான மானியத் தொகைக்கென ரூ. 0.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.23. மகளிர் மன்றங்கள்**

(அ) ஊரக மகளிரை ஒன்றாகக் கொண்டுவர ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் தமிழ்நாடெங்கும் 11,520 மகளிர் மன்றங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒரு வழிநடத்துனர்



1997 ஏப்ரல் 3]

நியமிக்கப்படுகிறார். இம்மகளிர் மன்றங்கள் ஊரகப் பெண்களிடையே கல்வியைப் பரப்பவும் பெண்களைக் காக்கும் சட்டங்களைக் குறித்த ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களது பொழுதுபோக்கு நேரத்தை பயிற்சி நேரமாக மாற்றி, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தவும் பாடுபடுகின்றன. முகாம்கள் நடத்தவும், பெண்களுக்கு உணவுகளைப் பதப்படுத்துவது, குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புற சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், கல்வி சுற்றுலாவிற்காகவும், சமூகக் கல்வியின் கீழ் புத்தகம் வாங்கி வழங்குதல், ஆகியவற்றிற்காகவும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 13,000 ஒவ்வொரு வருடமும் சமூக நல நிதியாக வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டுக்கு ரூ. 49.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மகளிர் மன்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்கு தலா ரூ. 2,000 வீதம் பரிசு வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்காக ரூ. 1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.24. வழிகாட்டி மையம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட சமூக நல அலுவலகத்தில் வழிகாட்டி மையம் இயங்கி வருகிறது. இவ்வழிகாட்டி மையம், முக்கியமாக, விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் ஆகியவர்களுக்கு அரசு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வங்கி கடன் பெற்றுத் தருகிறது. வழிகாட்டி மையம், கணவனை இழந்த கைம்பெண்களுக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதிய நிலுவை, ஆயுள் காப்பீட்டுத்தொகை மற்றும் பிராவிடண்ட் பண்ட் தொகை ஆகியவை கிடைப்பதற்கு இதர துறைகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களுக்கு வழிகாட்டி உதவி புரிகிறது. இதுவல்லாமல் பெண்கள் மற்றும் குழந்தைகளை, அரசு சேவை இல்லங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அனாதை குழந்தைகள் நலமையம் ஆகியவற்றில் சேர்க்க உதவி செய்கிறது.

**2.25. மகிளா சம்ரிதி யோஜனா (மகளிர் சேமிப்புத் திட்டம்)**

மகளிர் சேமிப்புத் திட்டம் கிராமப்புற மகளிர் நலனுக்காக மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. கிராமப்புற மகளிரிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் மத்திய அரசினால் ஆரம்பிக்கப்பட்டது.

[1997 ஏப்ரல் 3

1996 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய ரூ. 23.47 இலட்சம் கணக்குகள் துவக்கப்பட்டு ரூ. 1790.75 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

2.26. தமிழ்நாடு மகளிர் ஆணையம்

மகளிர் நலன் பாதுகாப்புக்காகவும் மகளிர் நிலை குறித்த பொதுவான கருத்து குறித்து நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யவும் 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டது.

இவ்வாணையம் தற்பொழுது ஜஸ்டிஸ் திருமதி பத்மினி ஜேசுதுரை அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்குகிறது. இவ்வாணையம் உறுப்பினர் செயலர் மற்றும் 8 இதர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இவ்வுறுப்பினர்கள் பொதுமக்களின் குறைகளைக் கேட்பதுடன் பெண்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளைக் குறித்து ஆராயவும் கூடுகிறது. பொது மக்களிடமிருந்து பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து மனுக்கள் பெறப்படுகின்றன. 1997-98 ஆம் நிதியாண்டில் ரூ. 5.04 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.27. சமூக நல வாரியம் குடும்ப ஆலோசனை மையங்களை அமைத்தல்

குடும்பத்தினுடைய ஸ்திரத்தன்மையை பாதுகாக்கவும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்திடவும் குடும்ப ஆலோசனை மையங்களை அமைத்திட அரசு முடிவெடுத்துள்ளது.

குடும்ப ஆலோசனை மையத்தினுடைய குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. (அ) சட்டத்திற்குட்படாத குடும்பப் பிரச்சினை.

(ஆ) ஒரு பெண் கொடுமைப்படுத்தப்பட்டு பின் ஆதரவு கோருதல். ஆனால், அப்பெண் சில சமூகத் தடைகள் காரணமாக சட்டத்தின் உதவியை நாடாதது.

2. தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளால் துன்புறும் பெண்களுக்கு உரிய ஆலோசனை வழங்குதல், சட்ட உதவி மற்றும் மறுவாழ்வு உதவிகள் வழங்குதல்.



1997 ஏப்ரல் 3]

3. பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு, காவல் துறையினர் தரப்பில் பாரபட்சமான அல்லது அசட்டையான போக்கு இருப்பின், அதுகுறித்து தனிப்பட்ட முறையில் விசாரணை செய்து, பெண் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல், மற்றும்

4. இதே துறையின் கீழ் இயங்கும் அரசு சார்பற்ற நிறுவனம் மற்றும் சட்டம் அமலாக்கும் நிர்வாக இயந்திரம், அதாவது காவல்துறை மற்றும் அது தொடர்புடைய துறையினரிடையே கிரியா ஊக்கியாக செயல்படுதல்.

இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டு ரூ. 66,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.28. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாடு மகளிரை மேம்படுத்தும் குறிக்கோளுடன், தமிழ்நாடு அரசால், டிசம்பர் திங்கள் 1983 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகத்தின் பங்கு மூலதனத்தில் மத்திய அரசும் அங்கம் வகிக்கிறது. இன்றைய தேதியில் மாநில அரசும் மற்றும் மத்திய அரசும் முறையே ரூ. 40.00 இலட்சம் பங்கு மூலதனமாக இக்கழகத்திற்கு வழங்கியுள்ளன. இந்நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 1,10,190 ஏழை மகளிரை பயனடையச் செய்துள்ளது. அவர்களில் 70,342 மகளிர் மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ. 64.16 கோடியில் ரூ. 40.36 கோடி மானியமாகவும் மற்றும் மீதமுள்ள ரூ. 23.80 கோடியை வங்கிக் கடனாகவும் 31-3-1996 ஆம் ஆண்டு முடிய பெற ஏற்பாடுகள் செய்து உதவி புரிந்துள்ளது.

மேலும் இந்நிறுவனம் 1997-98 ஆம் ஆண்டில் சுமார் 12,889 ஏழை மகளிருக்கு மொத்த மதிப்பீட்டுத் தொகையான ரூ. 17.12 கோடியில் ரூ. 9.37 கோடி மானியமாகவும் மீதமுள்ள ரூ. 7.75 கோடி வங்கிக் கடனாகவும் வழங்கி உதவத் திட்டமிட்டுள்ளது.

2.29. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்

பன்னாட்டு விவசாய வளர்ச்சிக்கான நிதி நிறுவன உதவியுடன் செப்டம்பர் திங்கள் 1989 ஆம் வருடம் தொடங்கப்பட்ட தமிழ்நாடு

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 1,05,077 மகளிர், எட்டு மாவட்டங்களில் அதாவது தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், இராஜாஜி, தென்னாற்காடு வள்ளலார், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், வைகை வீரன் அழகுமுத்து மற்றும் மதுரை மாவட்டங்களில் பயனடைந்துள்ளனர். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கூட்டுடன் 4,447 மகளிர் குழுக்கள் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளனர். 75 பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற ஏழை பெண்கள் ரூ. 735.37 இலட்சம் சேமிப்பு செய்து, சுழலச் செய்து தங்களுக்குத் தேவையான சிறு கடன்களைப் பெற்றுள்ளனர். மேலும் அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புக்களை மேற்கொள்ள வங்கிக் கடனாக ரூ. 5,290.96 இலட்சம், இந்திய வங்கியின் மூலம், இத்திட்டத்தின் கீழ் பெற உதவி அளிக்கப்பட்டுள்ளது.

ஜூலை திங்கள் 1996 ஆம் ஆண்டில் இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்ினை படிப்படியாக மாநிலங்களில் உள்ள மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தும் என அறிவித்துள்ளது. இதன் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 1,440 கோடி ஆகும் (நிறுவன நிதி உதவி சேர்த்து). இதன் மூலம் ஐந்து வருடங்களில் குறைந்தது 10 இலட்சம் பெண்கள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இம்மகளிர் திட்டத்தில், பல்வேறு திட்டங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல் செயல் கொள்கையாகும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம், மகளிருக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், சிறப்பு மத்திய திட்டம் போன்ற திட்டங்களில் சேவைகளை ஒருங்கிணைத்தல் இந்த மகளிர் திட்டத்தின் செயற்கொள்கையாகும். இந்த மகளிர் குழுக்கள் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்டு, அதன் மூலம் கிராம ஏழைக் குடும்பங்களுக்கான அரசு உதவிகளுக்கு இப்பெண்கள் நுழைவு வாயிலாக அமைகிறார்கள். இந்திரா மகளிர் திட்டம் இத்திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்.

மத்திய அரசு தமிழகத்திற்கு இதுவரை 1,560 இந்திரா மகளிர் கேந்திரங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறாக மேலும் 2,000



இந்திரா மகளிர் கேந்திரங்கள் அமைப்பதற்காக ரூ. 1 கோடி கோரி மத்திய அரசை அணுக உத்தேசித்துள்ளது. மகளிர் மேம்பாட்டிற்கு இது பேருதவியாக இருக்கும்.

## 2.29. மகளிர் நல வாழ்வு மையங்கள்

மகளிர் மேம்பாட்டிற்கான மற்றொரு முன்னோடித் திட்டம் மகளிருக்கான நலவாழ்வு மையங்கள் அமைத்தல் ஆகும். அரசாங்கத்தின் எந்தவொரு அமைப்பின் கீழும் இதுவரை மகளிருக்கு பொழுதுபோக்கு அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை. நமது சமுதாயத்தில் ஆண்கள் சந்திப்பதற்கும், பொது விஷயங்களைக் கலந்து உரையாடுவதற்கும், விளையாடுவதற்கும் பல இடங்கள் உள்ளன. ஆனால் ஏழை மகளிருக்கு அத்தகைய வசதிகள் எளிதாகக் கிடைப்பது இல்லை. ஆதலால், இந்நிறுவனம், மகளிர் சிந்திப்பது மற்றும் பொழுதுபோக்குவதற்கான தேவையை உணர்ந்து அதற்கான அரசு அங்கீகாரத்தையும் பெறவுள்ளது. முன்னோடித் திட்டமாக தருமபுரி, சேலம், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா 10 மகளிர் நலவாழ்வு மையங்கள் என்ற விகிதத்தில் 50 மகளிர் நலவாழ்வு மையங்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த இம்மையங்கள் ரூ. 2 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளன. மையங்கள் சத்துணவுக் கூடங்கள் மற்றும் பால்வாடி ஆகிய இடங்களில் நிறுவப்படவுள்ளன. ஏனெனில், மகளிர் இக்கூடங்களில் எந்தவொரு தடங்கலுமின்றி வந்துபோக மற்றும் பொழுதுபோக்க ஏதுவாகும். மேற்கூறிய மையங்கள் மூலமாக சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலம், எழுத்தறிவு போன்றவைகள் பற்றி விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

மகளிருக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டத்தின்கீழ் 420 மகளிர் ரூ. 15 இலட்சம் திட்ட தொகையில் 1997-98-ஆம் ஆண்டில் பயனடையத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மகளிருக்கு சுய தொழில் மேற்கொள்ள மற்றும் வேலை வாய்ப்புகள் அதிகமுள்ள துறைகளில் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

## அத்தியாயம்-3

### குழந்தைகள் நலம்

3.1. குழந்தைகள் உடல் நலத்தையும், சத்துணவு பெறும் நிலைமையையும், நன்கு பாதுகாத்து, அவர்களின் மனத்திறனை, மன ஆற்றலை வளர்க்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. நோயாலும் சத்துணவு பற்றாக்குறையாலும் ஏற்படும் இளம் வயது இறப்பினைக் குறைத்து நமது மாநிலத்தில் ஒருங்கிணைந்த சத்துணவும், உடல் நலம் பேணும் வசதிகளும் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களின்கீழ் குழந்தையின் உடல் வளர்ச்சியை அவ்வப்போது கவனித்தல், அவசியமாயின் அருகிலுள்ள மருத்துவ மையங்களுக்கு அனுப்பி பரிசோதனை செய்தல், இணை சத்துணவு வழங்குதல், முன் பருவக்கல்வி வழங்குதல் ஆகிய பணிகள் அடங்கும். சத்துணவு மருத்துவம், முன்பருவக்கல்வி வழங்குதல் ஆகியவை மறுக்கப்பட்ட நிலையில் வாழும் குழந்தைகளுக்கு, இவைகளை முழுமையாக வழங்க முயற்சிகள் எடுப்பதற்கு அரசு தீர்மானித்து உள்ளது.

### 3.2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 1-7-1982 முதல் ஊரகப் பகுதிகளிலும், 15-9-1982 முதல் நகர்ப்புறங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. தற்போது 29,282 குழந்தைகள் நல மையங்களும், 37,480 ஊரகப் பள்ளி சத்துணவு மையங்களும், 1978 நகர்ப்புற சத்துணவு மையங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் 103 குழந்தை நல மையங்கள் மலைவாழ்பகுதி மக்கள் நலனுக்காக நடத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் முக்கியமான மூன்று நோக்கங்கள்:

1. ஊட்டச்சத்து வழங்குதல்.
2. முன்பருவக்கல்வி.
3. உடல்நலம் பேணுதல்.



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் 849 குழந்தை நல மையங்கள் தவிர மீதம் உள்ள அனைத்து குழந்தை நல மையங்களும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழோ அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழோ கொண்டு வரப்பட்டுள்ளன. மேற்கூறிய திட்டத்திற்கு 1997-98-ஆம் நிதியாண்டுக்கு ரூ. 405.56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு திட்டத்தின் கீழும் சத்துணவு மையங்களின் எண்ணிக்கை, பயன் அடைந்தோர் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ. எண் | திட்டம் | மைய எண்ணிக்கை | பயனடைபவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள். | தாய்மார்கள் மற்றும் முதியோர் (ஓய்வூதியத் தொகை பெறுபவர்) | மொத்தம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| குழந்தை நல சத்துணவு மையங்கள்: | | | | | |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் | 10,091 | 4,80,924 | 91,349 (கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்) | 5,72,273 |
| 2. | தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் | 18,342 | 6,39,163 | 1,25,237 (முதியோர்) | 7,64,400 |
| 3. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், நகர்ப்புற குழந்தை நல மையங்கள். | 849 | 37,919 | .. | 37,919 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பள்ளி மையங்கள் (ஊரகம்) | 37,480 | 58.69.510 | .. | 58.69.510 |
| 5. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப்பள்ளி மையங்கள் (நகர்ப்புறம்). | 1,978 | 4.56.206 | .. | 4.56.206 |
| | மொத்தம் | 68,740 | 74.83.722 | 2.16.556 | 77.00.308 |

**3.3. இந்திய அரசின் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டம்**

இத்திட்டம் 15-8-1995 முதல், இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின்கீழ் உள்ள கல்வித் துறை மூலமாக, தமிழகத்தில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம், ஆரம்பப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவசமாக அரிசி வழங்குகிறது.

3.4. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் பயனடையும் சுமார் இரண்டு இலட்சம் கர்ப்பிணி பெண்களுக்கு சத்துணவு மையங்கள் மூலமாக இலவச சத்துணவு 4 மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**3.5 பசிப்பிணி போக்கும் திட்டம்**

வறுமையை ஒழிக்கவும் மக்களில் பல்வேறு தொகுதியினருக்குத் தேவைப்படும் சத்துணவை வழங்கவும், ஏற்கெனவே பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டத்தின்கீழ் வராத பிரிவினரைக் கண்டறிந்து அவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் ஏழ்மையால் ஏற்படும் பசிக்கொடுமையை அறவே களைய பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றைப் புதிதாக டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் நிறுவனத்துடன் செயலாக்கப்படும்.



**3.6. இலவச சீருடை வழங்குதல்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு ஜோடி இலவச சீருடை ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 55 இலட்சம் ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. சீருடைக்குத் தேவையான துணிகள் மாவட்ட சமூகநல அலுவலர்களுக்கு வழங்கப்படுகிறது. சமூகநலத் துறையின்கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீருடை தைக்கப்பட்டு கல்வித் துறை அதிகாரிகளின் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம் 1995-96-ஆம் ஆண்டில் ரூ. 4536 இலட்சம் செலவில் 55 இலட்சம் பள்ளிச் சிறார்கள் பயன் பெற்றனர். 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 4536 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.7. தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்**

ஆண்வாரிசு வேண்டுமென்ற மனப்பான்மையைக் குறைக்கவும், பெண் சிசுவதையைத் தடுக்கவும், குடும்பக் கட்டுப்பாட்டினை ஊக்குவிக்கவும், பெண் கல்விக்கு வழி செய்யும் வகையில் தமிழக அரசு இந்தத் திட்டத்தை 1-4-1992 முதல் அமல்படுத்தி வருகிறது.

1997-1998 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ரூ. 4 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண் சிசுக்கொலையைத் தடுத்தல், பெண் குழந்தைகளுக்குத் தொடர்ந்து ஆதரவளித்தல், "சிறிய குடும்பமே சிறந்தது" என்ற கோட்பாட்டை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட இத்திட்டத்தினகீழ் இதுவரை 26.905 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**3.8. தொட்டில் குழந்தை திட்டம்**

சேலம் மாவட்டத்தில் ஒரு சில வகுப்பினரிடையே நடைபெறும் கொடுமையான நிகழ்ச்சியான பெண் சிசுவதை நடைமுறையில் உள்ளது என்பதை அறிந்த அரசு, உடனடி நடவடிக்கையாக அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார மையம் மற்றும் அனாதைக் குழந்தைகள் பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் தொட்டில்களை வைத்துள்ளது. மேலும் பெண் குழந்தைகளை வளர்க்க விரும்பாத பெற்றோர்கள் அக்குழந்தைகளை தொட்டிலில் வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 134 பெண் குழந்தைகள் பெறப்பட்டு அதில் 46 குழந்தைகளை குழந்தைகள் இல்லாத இந்திய தம்பதியர் தத்து எடுக்க வகை

செய்யப்பட்டுள்ளது. 12 குழந்தைகள் அவர்களுடைய பெற்றோர்களால் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டனர். 8 தன்னார்வ நிறுவனங்கள் மூலம் 40 குழந்தைகள் வளர்க்கப்படுகின்றனர். மேலும் 36 குழந்தைகள் பிறப்பிலேயே ஏற்பட்ட குறைபாடுகளால் இறந்துவிட்டனர்.

**3.9. ஜப்பானிய அரசின் உதவிகொண்டு தொட்டில் குழந்தைகள் இல்லம் கட்டுதல்**

இத்திட்டத்தின் செயல்பாடுகளையும் நோக்கத்தினையும் அறிந்த ஜப்பானிய அரசு ரூ. 22 இலட்சம் நிதியுதவி அளித்து, சேலம் மாவட்டத்தில் இத்திட்டம் இயங்க கட்டிடம் கட்டுவதற்கும் திட்டம் நல்லமுறையில் இயங்குவதற்குத் தேவையான பொருட்கள் வாங்கவும் வழிவகை செய்துள்ளது. இதற்கான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. விரைவில் செயல்படவுள்ளது.

**3.10. பெண் சிசுவதையைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்**

பெண் குழந்தைகளைக் கருவிலோ அல்லது பிறந்தவுடனோ கொன்றுவிடுகிறார்கள் என்பது ஒரு சமூகப் பிரச்சினையாகக் கருதப்பட்டு இதற்கான உடனடி நடவடிக்கையாக மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி வட்டத்தில் கேசவர்களைபுதூரில் ஒரு மூதாய், இரண்டு ஆயாக்கள் அடங்கிய பெண் குழந்தைகளுக்கான வரவேற்பு மையம் ஒன்று அமைக்கப்பட்டது. இது இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது. தங்களால் பெண் குழந்தைகளை வளர்க்க இயலாத பெற்றோர்கள், தங்கள் பெண் குழந்தைகளைக் கொல்வதைத் தவிர்த்து இம்மையத்தில் விட்டுச் செல்லலாம். இதுவரை 50 குழந்தைகள் இம்மையத்தில் பெறப்பட்டு இந்திய குழந்தை நலச் சங்கத்தால் பராமரிக்கப்படுகின்றன. இம்மைய வசதி இல்லையெனில் இந்தக் குழந்தைகள் ஒரு வேளை சிசுவதை கொடுமைக்கு ஆளாகியிருக்கலாம். சொந்த பெற்றோர்கள் நிராகரித்த இக்குழந்தைகளின் எதிர்காலம் ஒளிமயமாய் அமையும் என்று கருதி குழந்தைகளை நம் நாட்டிலேயே உள்ள குழந்தைகள் இல்லாத தம்பதியருக்கு தத்து கொடுக்கப்பட்டு உள்ளனர்.

**3.11. வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகம்**

வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் பெரும்பாலும் புழுதியில் விளையாடிக் கொண்டும்



பள்ளிக்குச் செல்லாமலும் இருக்கின்றனர். இதற்குக் காரணம் தமக்கு இளையவர்களைப் பார்த்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இவர்கள் பள்ளிக்குச் செல்வது இயலாததாகிறது. இதனைத் தடுக்கவும் இவர்கள் சமூக விரோத செயல்களில் ஈடுபடாமல் தடுக்கவும், அரசு, தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில், 17 குழந்தைகள் காப்பகங்களை 1993-94-ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. இது தவிர மேலும் 25 குழந்தைகள் காப்பகங்கள் 1995-96-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இக்காப்பகங்கள் சமூக நல வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் மன்றங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. 117 காப்பகங்கள் நடத்த 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 23.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1997-98 ஆம் ஆண்டிற்கு 50 புதிய குழந்தைகள் காப்பகங்கள் துவங்க ரூ. 13.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.12. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்**

(அ) சமுதாயத்தில் நலிவுற்ற குழந்தைகள், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் அது தொடர்பான நோய்களைச் சமாளிப்பதற்காக ஒருங்கிணைந்த முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டமே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் பணிகள் கருவில் உள்ள குழந்தையிலிருந்து தொடங்கி 6 வயது ஆகும் வரை அக்குழந்தைக்குத் தேவையான சத்துணவு, சுகாதாரம் மற்றும் உடல், மன வளர்ச்சிக்கான தேவைகளையும் கருத்தாகக் கவனிப்பதே ஆகும். இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் முக்கிய பணிகள் இணை ஊட்டச்சத்து, முறைசாரா முன் பருவக் கல்வி, மருத்துவச் சோதனை, நோய்த் தடுப்பு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மற்றும் மேல் மருத்துவ பரிசோதனைக்கு வழி செய்தல் ஆகும்.

(ஆ) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் முதன் முதலில் 1975-76-ஆம் ஆண்டு சென்னை நகரத்திலும், தளி மற்றும் நிலக்கோட்டை வட்டாரங்களிலும் தொடங்கப்பட்டது. இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு தற்போது 42 நகர்ப்புற திட்ட மற்றும் 2 மலைப்புற பகுதித் திட்டம் உட்பட தமிழ்நாட்டில் மொத்தம் 111 பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றில் 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு (சிடா) உதவியுடன் செயல்பட்டு வருகின்றன.

(இ) ஒவ்வொரு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பகுதியும் ஒரு இலட்சம் மக்கள் தொகையை உள்ளடக்கியதாகும். ஒவ்வொரு திட்டப் பகுதியும் ஒரு குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் தலைமையில் ஒரு மருத்துவ அலுவலர், நான்கு மேற்பார்வையாளர்கள் மற்றும் 4 துணை மருத்துவச் செவிலியர்கள் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராம மற்றும் மலைப்புறப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலம் சுகாதாரப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் அங்கன்வாடிகள் என்று அழைக்கப்படும் 100 குழந்தை நல மையங்கள் செயல்படுகின்றன.

(ஈ) குழந்தைகள் நல மையங்கள் மூலம்தான் இத்திட்டப் பணிகள் கவனிக்கப்படுகின்றன. சுமார் 1,000 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஒரு குழந்தை நல மையம் என்ற விகிதத்தில் மையங்கள் அமைக்கப்படுகின்றன. இத்திட்டப் பகுதியில் 2 முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 40 பேருக்கும், 0 முதல் 2 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 30 பேருக்கும், கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் 30 பேருக்கும் ஆகமொத்தம் 100 நபர்கள் ஒவ்வொரு திட்டப் பகுதியிலும் பயன்பெறுகின்றனர். இப்பணிகள் ஒவ்வொரு மையத்தின் மூலமும் செயல்படுகின்றன.

| | |
|---|---|
| மொத்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டங்கள் | 111 |
| நகர்ப்புறப் பகுதி | |
| கிராமப்புறப் பகுதி | 42 |
| மலைப்புறப் பகுதி | 67 |
| மையங்களின் எண்ணிக்கை | 2 |
| | 10,091 |

**3.13. சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி ஆணைக்குழு உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்**

அண்ணா, புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களிலுள்ள 47 திட்டங்கள் சுவீடன் நாட்டு உதவியுடன் 1989 முதல் செயல்படுகின்றன.

இத்திட்டத்திற்கான முதல் கட்டம் 30-6-1993 உடன் முடிவுற்றது. இரண்டாம் கட்டமாக 1-7-1993 முதல் தொடங்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.



இத்திட்டம் கூடுதல் முதலீட்டின் மூலம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் அளிக்கப்படும் பணிகளை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் முக்கிய உறுப்புகள்:

- தரமான ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணிகள்
- அங்கன்வாடி மையங்களுக்கு உபகாரணங்கள்
- ஊக்கத்தொகை மற்றும் வருவாய் பெருக்கும் பணிகள்
- மேலாண்மை மற்றும் தகவல் திட்டம்
- இரண்டாம் அங்கன்வாடிப் பணியாளர்களுக்குச் சம்பளம்
- தலைமை அலுவலகத்திற்குக் கூடுதல் பணியிடங்கள்

இரண்டாம் கட்டமாக 1-7-1993-ல் அண்ணா, எம்.ஜி.ஆர்., நீலகிரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 46.00 கோடிகள். இரண்டாம் கட்டத்திற்கான ஒப்பந்தம் செயல்முறையில் உள்ளது.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் சிடா திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 6 வயதிற்குட்பட்ட 6 இலட்சம் குழந்தைகளும், 1.5 இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடைந்துள்ளார்கள்.

| திட்ட மதிப்பீடு 1996-97 | மத்திய அரசு | மாநில அரசு | வெளிநாட்டு உதவித் திட்டம் |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 1234.07 | 1488.51 | - |
| சிடா-ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் | 874.33 | - | 1184.01 |

**3.14. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்கள்** [1997 ஏப்ரல் 3

(அ) 5 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக தமிழ்நாட்டில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் 25. இத்துறையின்கீழ் இயங்கி வருகின்றன. மேற்படி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 250 ஆகும். ஆத்தூர், திக்கணங்கோடு, வேலூர், திருநெல்வேலி மற்றும் சிக்கல் ஆகிய இடங்களில் உள்ள இல்லங்களில் மட்டும் இவ்வெண்ணிக்கை ஒவ்வொன்றிலும் 100 ஆகும் எவ்வித ஆதரவும் இல்லாத குழந்தைகள் 21 வயது வரை இல்லங்களில் இருக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இவ்வில்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், உடை, பாட நூல், குறிப்பேடுகள், மருத்துவப் பாதுகாப்பு மற்றும் கல்வி ஆகியவை அளிக்கப்படுகின்றன.

இல்லத்திலேயே 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. 6-ஆம் வகுப்பு முதல் குழந்தைகள் அரசு உயர்நிலைப் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளுக்கு உயர்கல்வி பயில அனுப்பப்படுகின்றனர்.

(இ) உணவிற்காக ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 200 செலவிடப்படுகிறது. 5 வயதில் இருந்து 12 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ. 100-ம் 13 முதல் 18 வயதுடைய குழந்தைகளுக்கு ரூ. 150-ம் உடைக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. படுக்கைப் பொருட்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 வீதமும் வழங்கப்படுகிறது.

(ஈ) 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 35 வீதமும், 6 முதல் 8 வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 50 வீதமும், 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 90 வீதமும், மேல்நிலை வகுப்புகளில் பயிலும் குழந்தைகளுக்கு ரூ. 190 வீதமும் பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்கி வழங்கப்படுகின்றன. பெண் கைதிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அனைத்து அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களிலும் தையல் மற்றும் இதர தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 272.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் அரசு நடத்தும்



1997 ஏப்ரல் 3]

22 ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க ரூ. 12.00 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு நடத்தும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்களுக்கு மரச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 2.50 இலட்சங்களும், தஞ்சாவூரிலும், மானாமதுரையிலும் ஆதரவற்ற குழந்தைகளுக்காக புதிய கட்டிடம் கட்ட ரூ. 24.00 இலட்சங்களும், 1997-98-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.15. பராமரிப்பும் பாதுகாப்பும் தேவையான குழந்தைகளுக்கு மத்திய மாநில அரசின் நலத் திட்டம்**

(அ) ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து தனது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வில் அவர்களை வாழ வைக்கும் நோக்கத்துடன் 1974-75-ல் மத்திய அரசால் 'குடில் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டது. 25 குழந்தைகளைக் கொண்ட பிரிவு ஒரு குடில் ஆகும். ஒவ்வொரு குடிலும் ஒரு இல்லத்தாயின் பொறுப்பில் இருக்கும். இவ்வில்லத் தாய் தனது குடிலில் உள்ள குழந்தைகளை தம் குழந்தைகளைப் போல் பாவித்து அவர்களுக்கு போதிய உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி முதலியன வழங்கி அறிவுரை கூறி வழிகாட்டியாக நடத்திக் கொள்வார்.

(ஆ) ஆதரவற்ற குழந்தைகளின் பராமரிப்பிற்கும், அதற்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் வழங்கியுள்ளது. மொத்த செலவில் 80 சதவிகிதத்தை அரசு மானியமாக வழங்குகிறது. மீதி 20 சதவிகிதத்தை அந்தந்த நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த 80 சதவிகித மானிய தொகையினை மாநில அரசே 1-4-1992 முதல் முழுவதுமாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் உணவு, உடை முதலியவற்றிற்காக மாதம் ரூ. 250 வீதம் மானியம் கணக்கிடப்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 231.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3.16. தமிழக அரசு 15 அம்ச குழந்தைகள் நலத்திட்டம்**

15 அம்ச குழந்தைகள் நலத்திட்டம் தமிழக அரசினால் 1993-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் துவக்கப்பட்டது. இதற்கான மாநில அளவிலான செயல் திட்டம், குழந்தைகள் நலனுக்காக அனைத்து இனங்களையும் அதாவது தாய் சேய் நலம், ஊட்டச்சத்து, கல்வி, பெண்களின் திருமண வயது, குழந்தை பிறத்தலில் போதிய இடைவெளி,

குழந்தைத் தொழிலாளர், ஊனமுற்ற குழந்தைகள் நலன். குடிதண்ணீர், [1997 ஏப்ரல் 3
கழிப்பிட வசதி போன்றவற்றை உள்ளடக்கியது. தமிழகத்திலுள்ள
குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக தமிழக அரசு
மேற்கொண்டுள்ள ஈடுபாட்டினை மாநில செயல் திட்டம் காட்டுகின்றது.

1995-1998 மற்றும் 2000 ஆண்டுக்கான இலக்கு ஒவ்வொரு
அம்சத்திற்கும் நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைவதற்காக
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அளவிலும்
மாவட்டங்கள் அளவிலும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு இத்திட்டம்
செயல்பட்டு முன்னேற்றத்தினை மாவட்டாட்சியாளர்கள் மாவட்ட
அளவில் ஆய்வு செய்கின்றனர். மாநில அளவிலும் இத்திட்டச்
செயல்பாடு குறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

பல்வேறு துறைகளில் ஒதுக்கப்பட்டுள்ள வரவு செலவினத் திட்ட
ஒதுக்கீட்டிலேயே சம்பந்தப்பட்ட துறைகள் 15 அம்ச திட்டச்
செயல்பாட்டிற்கான செலவினங்களை மேற்கொள்ளும்.

**3.17. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2 (உலக வங்கி உதவியுடன்)**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2 உலக வங்கியின்
இயக்குநர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சிக் கடன்
5-12-1990 முதல் அமலுக்கு வந்துள்ளது. இத்திட்டம் 7 ஆண்டுகளுக்கான
செயல்பாட்டுடன் தொடங்கப்பட்டு 31-12-1997-ல் முடிவடைய உள்ளது.
இத்திட்டம் மத்திய அரசு உதவியுடன் செயல்படும் ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் வட்டாரங்களைத்
தவிர 318 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. ஏற்கெனவே,
இத்திட்டத்தின் முதல் பகுதியின்கீழ் உள்ள 122 வட்டாரங்களும் இதில்
அடங்கும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2 மூலம்
தாய் சேய் நலம், ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் முன்பருவக்கல்வி
ஆகிய பணிகள் கிராம அளவில் அளிக்கப்படுகின்றன. சத்துணவு
மையங்கள் மூலம் கிராம அளவில் தாய் சேய் நலம் மற்றும் மூன்று
- ஐந்து - வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முன்பருவக்கல்வி
அளிக்கப்படுகின்றது. இதற்கென பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு
அவர்களின் செயல்பாடுகள் மேற்பார்வை செய்யப்படுகின்றன.
இக்குறிக்கோளை அடைவதற்கு போதிய வசதிகளும், உபகரணங்களும்
அளிக்கப்படுகிறது. போதுமான பயிற்சி மற்றும் புதிய மேற்பார்வை
முறை ஆகியவற்றின் மூலம் தாய் சேய் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப்



பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு திட்டத்தின் செயலாக்கம் சீர்திருத்தப்படுகிறது. ஊட்டச்சத்து, உடல்நலக் கல்வி பற்றிய தொடர்புப் பணிகளுக்காகவும் திட்டத்தில் மக்கள் பங்கை அதிகரிக்கச் செய்யவும் நவீன உபகரணங்களுடன் கூடிய ஒரு தகவல் தொடர்பு மையம் இத்திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

2. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் வருமாறு

(1) தாய் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் கர்ப்பம் தரித்த நாளிலிருந்து ஊட்டச்சத்து நிலையை உயர்த்தி, குழந்தை உயிர்வாழ்தல் மற்றும் குழந்தை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்.

(2) 0-5 வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை கீழ்க்கண்ட வழிமுறைகள் மூலம் மேம்படுத்துதல்;

(அ) மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்துக் குறையினைத் தவிர்ப்பது.

(ஆ) தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்தவும், தவிர்க்கவும், நோய்த்தடுப்பு மற்றும் பயனுள்ள திட்டத்தைச் செயல்படுத்துவது.

(இ) குறிப்பிட்ட சில ஊட்டச்சத்து பற்றாக்குறை நோய்கள் வராமல் காப்பது.

(3) மூன்று முதல் ஐந்து வயதுக் குழந்தைகளுக்குப் பயனுள்ள முன்பருவக்கல்வி அளிப்பது.

(4) தனி நபர் மற்றும் சமுதாய நலத்தை மேம்படுத்த தாய்மார்கள் குடும்பம் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் செயல்திறத்தை அதிகரித்தல்.

(5) சுகாதார நலக் கல்வி அளித்தல் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களை திட்டமிடுவதிலும், செயல்படுத்துவதிலும், மதிப்பீடு செய்வதிலும், சமுதாயத்தில் ஈடுபாட்டை கிராம அளவில் அதிகப்படுத்துதல்.

(6) மேற்கூறிய சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் மற்ற நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான மனித ஆற்றலை மேம்படுத்துதல்.

(7) மாநிலத்திலுள்ள ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரத் திட்டங்களை சரிவர நிறைவேற்றத் தேவையான செயல் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

[1997 ஏப்ரல் 3

3. இத்திட்டத்தின் கடைசி கட்டமான இவ்வருடத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அவை உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பொருள்களும் வழங்கலும் | 30.00 |
| இயந்திரமும் வாகனமும் | 32.00 |
| மருந்துகள் | 300.00 |
| உணவு | 1953.54 |
| மொத்தம் | 2315.54 |

4. **திட்ட ஒதுக்கீடு:**

இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு கீழ்க்கண்டபடி ரூ. 321.34 கோடிகளாகும்:

| | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | ஊட்டச்சத்துப் பணிகள் | 154.72 |
| 2. | சுகாதாரப் பணிகள் | 51.21 |
| 3. | பயிற்சி | 11.24 |
| 4. | தொடர்பு | 5.99 |
| 5. | திட்ட மேலாண்மை | 8.48 |
| 6. | தொடர்பு மற்றும் பயிற்சி மையம் | 1.82 |
| 7. | முறைப்படுத்துதல் மற்றும் மதிப்பாய்வு | 2.34 |
| 8. | இதர எதிர்பார்ப்புச் செலவினங்கள் | 85.54 |
| | மொத்தம் | 321.34 |

5. **முன்னேற்றம்**

இம்மாநிலத்தில் 10 மாவட்டங்களில் 1982-ஆம் ஆண்டு முதல் 1990 வரை நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மூலம் 23.30 இலட்சம் குழந்தைகள் மற்றும் 19.50 இலட்சம்



1997 ஏப்ரல் 3]

கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பயனடைந்தார்கள். 1991 ஜனவரியில் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2ல் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் சிடா திட்டங்களின்கீழ் இயங்கி வரும் அண்ணா, எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை, நீலகிரி மாவட்டங்கள் தவிர மாநிலம் அனைத்திலும் உள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் (சுமார் 74 சதவிகிதம்) பயன்பெறுவார்கள். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் தற்போது 19 மாவட்டங்களில் - மதுரை, காமராசர், திண்டுக்கல், மன்னர் திருமலை, சிதம்பரனார், தருமபுரி, பெரியார், கோவை, சேலம், தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், வடாற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை—சம்புவராயர், திருச்சி, தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத் மற்றும் கன்னியாகுமரியில் பயனடைவோரின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

1996-97-ஆம் ஆண்டில் திட்டச் சாதனை (டிசம்பர் 1996)

| | | டிசம்பர் 1996 |
|---|---|---|
| 1. | குழந்தைகளின் எண்ணிக்கை (0.36 மாதங்கள்) | 14,22,849 |
| 2. | வளர்ச்சி கண்காணிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை (எடை எடுக்கப்பட்டவை) | 13,60,755 |
| 3. | வளர்ச்சி கண்காணிக்கப்பட்ட குழந்தைகளின் விழுக்காடு | 96% |
| 4. | ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை (இயல்பு நிலை மற்றும் நிலை-1ல் உள்ள வளர்ச்சி பற்றாக்குறை நிலை-2, நிலை-3 மற்றும் நிலை-4) | 3,68,815 |
| 5. | வளர்ச்சி கண்காணிக்கப்பட்ட குழந்தைகளின் விழுக்காடு இணை உணவு பெறும் ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகளின் விழுக்காடு | 27% |
| 6. | இணை உணவு பெறும் கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எண்ணிக்கை | 3,06,140 |
| 7. | மொத்த குழந்தைகள் (37-60 மாதங்கள்) | 6,35,087 |

[1997 ஏப்ரல் 3

### அத்தியாயம் 4

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

4.1. 1992-ஆம் ஆண்டுக்கு முன்வரை ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணிகள் அனைத்தும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வந்தன. ஊனமுற்றோர்க்கென உள்ள தனிப்பட்ட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டும், இதற்கென தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தவும் வேண்டி சிறப்புத் திறனும், கூடுதல் வசதியும் கொண்டதுமான ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, 1992-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

### ஊனமுற்றோரின் தொகை

மாதிரிக் கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையில், ஊனமுற்றோர் இரண்டு விழுக்காடு ஆகும். 1991-ஆம் ஆண்டு தேசிய கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் 2 விழுக்காடு என்பது 11,12,766 ஆகும். ஊனமுற்றோர் வகைவாரியான விவரம் பின்வருமாறு:

| வரிசை எண். (1) | ஊனத்தின் வகை (2) | ஊனமுற்றோரின் எண்ணிக்கை (இலட்சத்தில்) (3) | விழுக்காடு (4) |
|---|---|---|---|
| 1. | பார்வையற்றோர் | 2.12 | 19.2 |
| 2. | பேசும் திறன் அற்று காதுகேளாதோர் | 2.25 | 20.5 |
| 3. | கை, கால் ஊனமுற்றோர் | 6.47 | 58.8 |
| 4. | மனவளர்ச்சி குன்றியோர், தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் மற்றும் இதர வகை ஊனமுற்றோர் | 0.16 | 1.5 |
| | மொத்தம் | **11.00** | **100.00** |



1997 ஏப்ரல் 3]

### உயர்ந்து வரும் நிதி ஒதுக்கீடு

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென 1990-91-ஆம் ஆண்டில் ரூ. 433 இலட்சங்கள் என்று இருந்த நிதி ஒதுக்கீடு, அதிகரிக்கப்பட்டு 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 1,138.39 இலட்சங்கள் என்று உயர்ந்துள்ளது. ஊனமுற்றோர் நிலையை உயர்த்த, ஊனமுற்றோர் நலனில் அரசு கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையினை, ஆண்டுக்காண்டு நிதி ஒதுக்கீடு உயர்ந்து வருவதைக் கொண்டு அறியலாம்.

### 4.2. ஊனமுற்றோருக்கு சிறப்புக் கல்வி

ஊனமுற்றோருக்கென நிறுவப்பட்டுள்ள சிறப்புப் பள்ளிகள் மூலம், அவர்களுக்கு சிறப்புக்கல்வி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் விவரம் பின்வருமாறு:

| வரிசை எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் — மானியம் பெறும் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் — மானியம் பெறாத பள்ளிகள் | நகராட்சி பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | பார்வையற்றோருக்கான பள்ளி | 11 | 11 | 25 | .. | 47 |
| 2. | பேசும் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர் பள்ளி | 10 | 19 | 39 | 2 | 70 |
| 3. | மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி | 1 | 13 | 33 | .. | 47 |
| 4. | கடுமையாக கை, கால் பாதிக்கப்பட்டோருக்கான பள்ளி | 1 | 13 | 36 | .. | 50 |
| 5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | .. | 1 | 2 | .. | 3 |
| | மொத்தம் | **23** | **57** | **135** | **2** | **217** |

அரசு சிறப்புப் பள்ளிகள் நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| பார்வையற்றோருக் கானது | பேசும் திறன் குறைந்து செவித் திறன் இழந்தோர்க்கானது | கடுமையான கை, கால் ஊனமுற்றோர்க் கானது | மனவளர்ச்சி குன்றியோர்க் கானது |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி | தஞ்சாவூர் | மதுரை | சென்னை |
| திருச்சிராப்பள்ளி | தருமபுரி | | |
| தஞ்சாவூர் | புதுக்கோட்டை | | |
| சேலம் | காஞ்சிபுரம் | | |
| மதுரை | சேலம் | | |
| கடலூர் | ஈரோடு | | |
| சிவகங்கை | விருதுநகர் | | |
| நாகர்கோயில் | உதகமண்டலம் | | |
| கோயம்புத்தூர் | சென்னை | | |
| புதுக்கோட்டை | | | |
| தருமபுரி | | | |

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இலவசமாக சிறப்புக் கல்வியுடன் உணவு, தங்குமிடம் ஆகியன வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு இரண்டு ஜோடி சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த சிறப்புப் பள்ளிகள் மூலம் 8,726 ஊனமுற்ற குழந்தைகள் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். 1997-98-ஆம் ஆண்டிற்கு சிறப்புக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 475 இலட்சங்களாகும்.

பேசும் திறன் குறைந்து, செவித்திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கு என 20 முன்பருவப் பள்ளிகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. செவித்திறன் குறைந்த குழந்தைகள் 200 பேர் இப்பள்ளிகளின் மூலம் சிறப்புக் கல்வி பெறுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் நிதியாண்டிற்கு ரூ. 30.31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**4.3. ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை**

ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவ, மாணவிகளுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக கல்வி உதவித் தொகை ஓராண்டிற்கு நபர் ஒருவருக்கு ரூ. 25-லிருந்து ரூ. 100 வரை அவர்கள் பயிலும் வகுப்பிற்கேற்ப மாநில அரசால் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் 12,500 ஊனமுற்ற குழந்தைகள் இத்திட்டத்தால் பயனடைகின்றனர்.

9-ஆம் வகுப்பு முதல் மேற்படிப்பு பயிலும் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ. 85-லிருந்து ரூ. 240 வரை மாதாமாதம் அவர்கள் கல்வி பயிலும் வகுப்பிற்கேற்ப வழங்கப்பட்டு வந்தது. 1993-94-ஆம் ஆண்டிலிருந்து இதற்கென வழங்கப்பட்ட உதவித் தொகையை மத்திய அரசு நிறுத்திவிட்டது. 1997-98-ஆம் நிதி ஆண்டில் சுமார் 18,625 ஊனமுற்ற மாணவ, மாணவியர் உதவித் தொகை பெறும் வகையில் ரூ. 42.00 இலட்சங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.4. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி**

பார்வையற்றோர்க்கான சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வுகளில் வினாக்களுக்கு இவர்கள் வாய்மூலம் சொல்லும் பதிலினை அவ்வாறே எழுத பார்வையுள்ள உதவியாளரை வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறார்கள்.

பார்வையற்ற மாணவர்க்கு தேர்வு எழுத உதவிபுரிபவருக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ. 15 வீதம் உதவித் தொகையை இத்துறை வழங்கி வருகிறது. இந்த உதவித் தொகையைப் பெறும் பள்ளிகள் பின்வருமாறு:

(1) பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை.

(2) பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

(3) பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப்பள்ளி, சென்னை.

(4) பார்வையற்றோருக்கான புனித லூயிஸ் மேல்நிலைப்பள்ளி, சென்னை.

[1997 ஏப்ரல் 3

சுமார் 200 மாணவர்கள் இத்திட்டத்தினால் ஆண்டுதோறும் ரூ. 0.25 இலட்சம் செலவில் பயனடைந்து வருகிறார்கள்.

### 4.5. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, பூவிருந்தவல்லி வளாகத்தில் பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டுத் தரும் மண்டல பிரெய்லி அச்சகம் இயங்கி வருகிறது. இந்த அச்சகம் மூலம் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்றோருக்கு இலவசமாக பிரெய்லி புத்தகங்களை அச்சிட்டு வழங்கி வருகிறது. சுமார் 2,000 பார்வையற்ற மாணவர்கள் பயன்பெறும் வகையில் 1997-98-ஆம் நிதி ஆண்டிற்கு ரூ. 11.42 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.6. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பார்வையற்றோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் மண்டல பயிற்சி மையம் ஒன்று பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கி வருகிறது. இந்தப் பயிற்சியில் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆசிரியர்கள் பயிற்சிக்காக சேர்க்கப்படுகிறார்கள். இதற்கான செலவினம் மத்திய அரசிடமிருந்து மீளப் பெறப்படுகிறது.

மாநில அரசும் ஒரு சிறப்புப் பயிற்சிப் பிரிவினை நடத்துகிறது. இதில் 15 ஆசிரியர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெறுகிறார்கள். 1997-98-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின்கீழ் ரூ. 6.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சென்னை "சிறுமலர் காதுகேளாதோருக்கான மேல்நிலைப்பள்ளி" மூலம் பேசும் திறன் இழந்து காது கேளாதவர்களுக்கு கல்வி கற்பிக்கும் 25 ஆசிரியர்களுக்கு சிறப்பு ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அரசு மற்றும் அரசு மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சி பெறாத 10 ஆசிரியர்கள் இப்பயிற்சியில் சேர்க்கப்படுகிறார்கள். இதற்காக 1997-98-ஆம் ஆண்டில் ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மனவளர்ச்சி குன்றியோருக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி, தமிழக அரசு மானியத்துடன் சென்னை பாலவிஹார் பயிற்சிப் பள்ளி என்னும் தனியார் சேவை நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 3]

15 ஆசிரியர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி பெறுகிறார்கள். இதற்காக 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 0.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.7. ஊனமுற்றோருக்கான பயிற்சி

கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாதோருக்கு பயிற்சி அளிப்பதற்காக ஒரு சிறப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தற்போது, பேசும் திறன் இழந்து, காது கேளாத 16 மாணவர்கள் "பொருத்துநர்" பிரிவில் பயிற்சி பெற்று வருகின்றனர். 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 0.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு கீழ்க்கண்ட தொழில் பிரிவுகளில் திருத்தியமைக்கப்பட்ட பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(1) பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)

(2) மின்கம்பி சுற்றுபவர் (ஓராண்டு காலம்)

(3) புத்தகம் கட்டுபவர் (6 மாத காலம்)

ஒவ்வோர் ஆண்டும் 30 பார்வையற்றோர் இந்நிலையத்தில் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி பெறும் மாணவர்களுக்கு இலவசமாக இருப்பிடம், உணவு, இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 14.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.8 நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம்

முட்டுக்காட்டில் இயங்கி வந்த ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம் மாற்றப்பட்டு தற்போது கிண்டியில் இயங்கி வருகிறது. இந்த நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடத்தில் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் மடக்குக் குச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

[1997 ஏப்ரல் 3

1996-97-ஆம் ஆண்டில் இந்த நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம் மூலம் 1,000 மூன்று சக்கர வண்டிகளும், 100 சக்கர நாற்காலிகளும், ரூ. 42.77 இலட்சம் செலவில் உற்பத்தி செய்யப்பட்டன. 1997-98-ஆம் நிதியாண்டிற்கு ரூ. 38.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பல்வகை ஊனமுற்றோருக்கான தேசிய நிலையம் ஆரம்பிப்பதற்கென நவீன பயிற்சி மற்றும் உற்பத்திக் கூடம் இயங்கி வந்த முட்டுக்காடு இடத்தை மத்திய அரசின் வசம் ஒப்படைக்கும்படி அரசு ஆணையிட்டுள்ளது.

**4.9 பார்வையற்ற பெண்களுக்கான தொழிற் கூடத்துடன் கூடிய அரசு மறுவாழ்வு மையம், பூவிருந்தவல்லி**

18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) பார்வையற்ற, ஆதரவற்ற அனாதைப் பெண்கள், இந்த இல்லத்தில் சேர்க்கப்பட்டு சாக்குகட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும், இவர்களுக்கு ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் இவர்களுக்கு இவ்வில்லத்திலேயே வேலை அளிக்கப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் படுக்கை விரிப்புகள், துண்டுகள், கட்டுத்துணிகள் மற்றும் சாக்குக்கட்டிகள் அரசு மருத்துவமனை மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 4.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 40 பார்வையற்ற பெண்கள் இவ்வில்லத்தில் பயிற்சி பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

**4.10 பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதோரை சிறப்புத் தொழில் பழகுநராக அமர்த்துதல்**

பூவிருந்தவல்லி பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும், சென்னை கிண்டியில் இயங்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற பார்வையற்ற மற்றும் காது கேளாதவர்கள், அரசு மற்றும் அரசு சார்பு மற்றும் தனியார் நிறுவனங்களில் சிறப்புத் தொழில் பழகுநராக மாதம் ரூ. 400 வீதம் உதவித் தொகையுடன் சிறப்புத் தொழில் பயிற்சியில் அமர்த்தப்படுகின்றனர். தொழில் பழகும் காலம் ஒரு ஆண்டு முடிந்தபின் அவர்கள் பயிற்சி பெற்ற அதே நிறுவனத்தில் காலியிடம் எழும்போது நிரந்தரப் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 0.40 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



1997 ஏப்ரல் 3]

**4.11 ஊனமுற்றோருக்காக மூன்று சதவீத இட ஒதுக்கீடு**

அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள்/பயிற்சியிடங்களில் 3 சதவீதத்தை ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில் 1 சதவீதம் பார்வையற்றோருக்கும், 1 சதவீதம் பேசும் திறன் இழந்து காது கேளாதோருக்கும், 1 சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

3 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதை கண்காணிக்கவும், ஊனமுற்றோருக்கென உள்ள இட ஒதுக்கீட்டை குறையாமல் அவர்கள் பெற்றுக் கொள்வதை உறுதி செய்யும் வண்ணம் குறுகிய காலம் மற்றும் நெடுங்கால திட்டத்தை வகுக்கவும், மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**4.12 வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை**

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு நிவாரணத் தொகை கீழ்க்குறிப்பிட்டவாறு 5 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை இதில் எது முன்னரே அதுவரை வழங்கப்படுகிறது.

(அ) வழங்கப்படும் நிவாரணத் தொகையின் விவரம் (மாதமொன்றுக்கு):

1) பட்டதாரிகள்/ முதுநிலைப் பட்டதாரிகள் ரூ. 250/-

2) 10 ஆம் வகுப்பு/ மேல்நிலை வகுப்புத் தேர்ச்சி ரூ. 200/-

3) இதர வகுப்புகள் ரூ. 150/-

ஆ) வயது 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

1996-97-ஆம் ஆண்டில் இதன் மூலம் 1,156 ஊனமுற்றோர்கள் பயனடைந்துள்ளனர். 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.13 சுய வேலைவாய்ப்பு**

கல்வித் தகுதியோ, தொழில் திறனோ அற்ற ஊனமுற்ற நபர்களை, வருமானம் தரக்கூடிய பணியில் அமர்த்த முடியாத பட்சத்தில், அவர்கள் சுய வேலைவாய்ப்பில் ஈடுபடும் பொருட்டு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள். ரூ. 1,000/- அல்லது மொத்த கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. 1997-98-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 1,500 ஊனமுற்ற நபர்கள் பயனடையும் வண்ணம் ரூ. 8.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.14 ஊனமுற்றோருக்கு இலவச உபகரணங்கள் வழங்குதல்**

ஒவ்வொரு ஆண்டும் ஊனமுற்றோருக்கு இத்துறை மூலம் இலவசமாக மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், காதொலி கேட்கும் கருவிகள், கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக்குச்சி ஆகியன வழங்கப்படுகின்றன. இத்திட்டங்களினால் 1996-97-ஆம் நிதியாண்டில் பயன்பெற்ற பயனாளிகளின் விவரமும் 1997-98-ஆம் நிதியாண்டில் இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் பின் வருமாறு:

| வரிசை எண் | உபகரணங்களின் விவரம் | 1996-97-ஆம் ஆண்டில் பயன் அடைந்தோர் விவரம் | 1997-98-ஆம் ஆண்டில் பயன்பெற உள்ளோர் | 1997-98-ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | மூன்று சக்கர வண்டிகள் | 1,900 | 3,195 | 89.62 |
| 2. | சக்கர நாற்காலிகள் | 200 | 249 | 3.68 |
| 3. | காதொலிக் கருவிகள் | 1,827 | 2,063 | 12.00 |
| 4. | கருப்புக் கண்ணாடி மற்றும் மடக்குக்குச்சிகள் | 2,445 | 1,935 | 2.90 |
| 5. | சோலார் பாட்டரிகள் | 1,200 | 2,615 | 10.46 |
| | மொத்தம் | **7,572** | **10,057** | **118.66** |



**4.15 பார்வையற்றோரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கான சலுகைகள்**

கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் போன்றே பார்வையற்றவரை திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

1. பாராட்டுச் சான்றிதழ்
2. திருமணச் செலவிற்காக ரொக்கத் தொகை ரூ. 3,000/-
3. தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ. 7,000/- க்கானது.

இத்திட்டத்திற்காக 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் 100 தம்பதியர்கள் பயனடைவார்கள்.

**4.16 உடல் ஊனமுற்றோர்களுக்கு பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய பயணச்சலுகை (அரசு கழகப் பேருந்துகளில்) வழங்குதல்**

இதுவரை தமிழகத்திலுள்ள அனைத்து பார்வையற்றோருக்கும் மாநில அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (இராஜீவ்காந்தி போக்குவரத்துக் கழகம் மற்றும் திருவள்ளூர் போக்குவரத்துக் கழகம் தவிர) இலவசமாக அனைத்து இடங்களுக்கும் அவரவர் வசிக்கும் மாவட்டத்திற்குள் பயணம் செய்ய இலவச பயணச்சலுகை வழங்கப்பட்டு வந்தது. இந்தச் சலுகை பார்வையற்றவர்களுக்கு முழுச் சலுகையாகவும், மற்ற ஊனமுற்றவர்களுக்கு 50 சதவிகித சலுகையாகவும் 30 கி.மீ. வரை கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது இச்சலுகை 100 கி.மீ. வரை பயணம் செய்ய அரசு அனுமதித்துள்ளது.

1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ. 60.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த நிதியாண்டிலிருந்து பேருந்துகளில் சாதாரண வழித்தடங்களில் மாத்திரமல்லாமல் விரைவுப் பேருந்து வழித்தடங்களிலும் கண்ணற்றோர், கால் முடமானோர் ஆகிய ஊனமுற்றோருக்கு இலவசப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

[1997 ஏப்ரல் 3

**4.17 கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித்தொகை**

75 சதவீதத்திற்கும் கூடுதலாகக் கடுமையாக ஊனமடைந்து தனது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் மாத வருமானம் ரூ.1,000/-க்கு மிகைப்படாமல் உள்ள ஊனமுற்ற குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடைவோர் அரசின் வேறு எந்தத் திட்டத்தின் வாயிலாகவும் பயனடையாதவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் மூலம் 1050 நபர்கள் பயன் பெற்று வருகிறார்கள். 1997-98-ஆம் நிதியாண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 30.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.18 செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம், மதுரை**

கடுமையான கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்கான அரசுப் பள்ளியில் பயிலும் ஊனமுற்ற குழந்தைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்கை அவயவங்கள் பொருத்தும் துணை நிலையம் ஒன்று மதுரையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையத்தின் மூலம் ஊனமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ அறுவை சிகிச்சை, இயற்பியல் சிகிச்சை மற்றும் உபகரணங்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1997-98-ஆம் நிதியாண்டில் ரூ. 14.07 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**விருதுகள்**

(அ) சுதந்திர தின விழாவன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் விருதுகள்:

(1) ஊனமுற்றவர்களை அதிக அளவில் பணியல் அமர்த்திய தொழிலதிபர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு விருது.

(2) ஊனமுற்றோருக்கு சிறப்பாக சேவை புரிந்த மருத்துவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு விருது.

(3) ஊனமுற்றோருக்காக சிறப்பாக சேவை புரிந்த தொண்டு நிறுவனத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு விருது.

(4) ஊனமுற்றோருக்காக சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சியருக்கான மாண்புமிகு முதலமைச்சர் சிறப்பு விருது.



1997 ஏப்ரல் 3]

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளன்று கடைபிடிக்கப்படும் சர்வதேச ஊனமுற்றோர் தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்:

(1) ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய சிறந்த தொழிலதிபருக்கான மாநில விருது.

(2) ஊனமுற்ற சிறந்த தொழிலாளர்களுக்கான மாநில விருது.

(3) ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும்/பயிற்சியளிக்கும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருது.

(4) ஊனமுற்றோருக்கு கல்வி கற்பிக்கும் சிறந்த ஆசிரியர்களுக்கான மாநில விருதுகள்.

(5) பள்ளி இறுதித் தேர்வு மற்றும் மேல்நிலை வகுப்பில் மாநிலத்திலேயே முதல் மற்றும் இரண்டாவது மதிப்பெண் பெற்ற பார்வையற்ற, காதுகேளாத மாணவர்களுக்கு மாநில விருது மற்றும் பரிசுத் தொகை.

**4.19 மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்கள்**

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மறுவாழ்வு அலுவலர் தலைமையில் மாவட்ட மறுவாழ்வு அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையில் மாவட்ட பிரதிநிதியாக மாவட்ட மறுவாழ்வு அலுவலர் அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒரங்கிணைப்புடன் ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு திட்டப் பணிகளை நிறைவேற்றி வருகிறார்கள். 1997-98-ஆம் நிதியாண்டிற்கு ரூ. 50.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.20 மாவட்ட மறுவாழ்வு மையம்**

மாவட்ட மறுவாழ்வு மையம் ஒன்று ஊனமுற்றோரை கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு உதவிகளை வழங்கவென செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது பின்வரும் காலங்களில் பயிற்சி மற்றும் மனித வள மையமாகச் செயல்படுத்தப்படும். இதுவரை இத்திட்டப் பகுதியில் 11,364 ஊனமுற்ற நபர்கள் கண்டறியப்பட்டு அதில் 6,674 ஊனமுற்ற நபர்களுக்கு தேவையான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக, 1997-98-ஆம் நிதியாண்டில் ரூ. 13.83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[1997 ஏப்ரல் 3

மேலும், தமிழ்நாட்டில் வரும் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் மறுவாழ்வு மையங்கள் தொடங்கப்படும். இம்மையங்கள் மூலம் கிராமப்புறங்களிலுள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, தேவைப்படுபவர்களுக்கு மாவட்ட மருத்துவமனையில் மருத்துவச் சிகிச்சை வழங்கப்படும். அவர்களுக்குத் தேவையான உபகரணங்களை அளித்து, அவற்றைப் பயன்படுத்த அவர்களுக்குப் பயிற்சியும் அளித்து, உபகரணங்கள் பழுது அடைந்தால் அவை சீர் செய்யப்பட்டு அவர்களுக்கு அளிக்கப்படும். அரசு அளிக்கும் ஊனமுற்றோர்க்கான நலத் திட்ட உதவிகள் இவர்களுக்கு முறைப்படி உடனே கிடைப்பதற்கும் இந்த மறுவாழ்வு மையங்கள் உதவி புரியும்.

4.21 இளம்பிள்ளை வாத மறுவாழ்வுத் திட்டம்

இளம்பிள்ளை வாத நோய் வராமல் தடுக்கவும், இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் 1989ஆம் ஆண்டிலிருந்து இந்த ஒருங்கிணைந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு திட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதுவரை 7 கட்டங்கள் நிறைவு பெற்று 1996-97-ஆம் ஆண்டில் எட்டாவது கட்டம் நிறைவேற்றப்படவுள்ளது. இத்திட்டமானது 310 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டு அதில் 58,108 நபர்கள் பயனடைந்துள்ளனர். 1997-98-ஆம் நிதியாண்டில் ரூ. 100.48 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இளம்பிள்ளைவாத நோய் வராமல் தடுப்பது மற்றும் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தில் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகள், அறுவை சிகிச்சைகள், இயற்கைமுறை உடற்பயிற்சி, இலவசமாக மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, உதவி உபகரணங்கள் அக்குள் கட்டை ஆகியவை வழங்கியும் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்தல், கல்வி-உதவித் தொகை அளித்தல், தொழிற்பயிற்சி அளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல், சுயவேலை வாய்ப்புக்கு அரசு மானியத்துடன் வங்கிக் கடனுக்கு பரிந்துரைத்தல், முதியோர் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் பராமரிப்பு உதவித்தொகை வழங்குதல் ஆகியன மூலமும் உதவப்படுகிறார்கள். மருத்துவ அறுவை சிகிச்சைகள் அனைத்தும் மாவட்ட தலைநகர மருத்துவமனைகளின் மூலம் செய்யப்படுகிறது.



1997 ஏப்ரல் 3]

4.22 ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக மாநிலக் கொள்கை

ஊனமுற்றோர் தமது வாழ்வில் தன்னிறைவு பெற்றவர்களாகவும், சுயமரியாதையுடனும், சமூகத்தில் வாழவும் அவர்களுக்கென உள்ள மறுவாழ்வு உதவிகளை எளிதாக அடைய வேண்டும் என்பதனை குறிக்கோளாகக் கொண்டு ஊனத்தைக் கண்டறிதல், பதிவு செய்தல், ஊனத்தை கணித்தல் மற்றும் நிவாரணத்தை வழங்குதல் ஆகியவைகள் அடங்கிய ஒரு திட்டம் தொலைநோக்கு எண்ணத்துடன் தயாரிக்கப்பட்டு கடந்த 3-12-1994 அன்று ஊனமுற்றோர்க்கான மாநிலக் கொள்கையாக வெளியிடப்பட்டது. இக்கொள்கையின் நோக்கமானது ஊனத்தை முன்னதாகவே கண்டறிதல், அவர்களின் மருத்துவம், தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளை ஒருங்கிணைந்த வகையில் அளிப்பதே ஆகும். இதன்மூலம் ஊனமுற்றோர் தன்னிச்சையாக குடிமக்களாகவும், சமுதாயத்தின் ஒருங்கிணைந்த அங்கமாகவும் செயல்பட ஏதுவாகும்.

4.23 மாநில மறுவாழ்வுக் குழு

ஊனமுற்றோருக்கான மாநிலக் கொள்கையை மாநிலத்தில் திறம்படச் செயல்படுத்த ஊனமுற்றோர் மறுவாழ்விற்கான இந்தியச் சட்டம் 1992-ன்படி மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழகத்தில் மாநில மறுவாழ்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மறுவாழ்வுக் குழுவில் தலைவர் தவிர, ஒரு துணைத் தலைவர், 14 அரசு அதிகாரிகள் மற்றும் 13 தன்னார்வ இயக்கங்கள்/நிறுவனங்கள் ஆகியோர்கள் உள்ளனர்.

இந்த மறுவாழ்வுக் குழு தக்கவகையில் ஒத்துழைப்பை நல்கி ஊனமுற்றோர்க்கென உள்ள மறுவாழ்வுத் திட்டங்களை திறம்பட செயலாக்கவும், ஊனமுற்றோர்க்கான மாநிலக் கொள்கையை நன்கு செயல்படுத்தவும் ஒத்துழைப்பை நல்குவர்.

## அத்தியாயம் 5

## தமிழ்நாடு சமூக நல வாரியம்

5.1 தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்கள் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.

[1997 ஏப்ரல் 3

வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:

(1) சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து உயர்வடையச் செய்தல்.

(2) தனியார் சேவை நிறுவனங்கள் பணித் திறனை வளர்ப்பதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

(3) உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்

5.2 தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடமிருந்து நிதி உதவி பெற்று, தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகள், ஊனமுற்றோர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட நிதியுதவி செய்யப்படுகிறது.

5.3. 1742 தொண்டு நிறுவனங்களுக்கு ஏப்ரல் 1996 முதல் 1997 மார்ச் முடிய ரூ. 260.80 இலட்சங்கள் நிதியுதவி செய்யப்பட்டுள்ளது.

## அத்தியாயம்-6

## சமூக பாதுகாப்புத் துறை

6.1. தமிழக அரசு, சமூக பாதுகாப்புத் துறை வழியே புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்கள் மற்றும் தவறிழைத்த சிறார்களின் நலனுக்காக பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச்சட்டம் மற்றும் 1956-ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் அமைந்துள்ள நிறுவனங்கள் சமூக பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

வாழ்க்கைக் களத்தில் இறங்குமுன்னர் பயிற்சியும், பக்குவமும் பெறுவதுடன், இன்றியமையாமையை உணர்ந்து, சிறார்களின் நலனுக்கென அமைந்துள்ள இல்லங்களிலே கேடில் விழுச் செல்வம் கல்வியுடன், நலிவுறும் வாழ்க்கைக்கு ஊன்றுகோலனையத் தொழிற்கல்விப் பயிற்சியும் வழங்கப்படுகிறது.



1997 ஏப்ரல் 3]

### 6.2. 1986-ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழமைந்த நிறுவனங்கள்

(அ) வழி தவறி, ஆதரவிழந்த நிலையில் வந்தாரை பாதுகாத்துப் பொறுப்பேற்கும் கூர்நோக்கு (குறுகிய கால) இல்லங்கள் 14 ஆகும். இவற்றுள் 11 அரசினராலும், 3 தனியாராலும் நடத்தப்படுகின்றன. புறக்கணிக்கப்பட்ட ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக் குழுமங்கள் மூலமாகவும் தவறிழைத்த சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலமாகவும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர். தனியார் கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்புச் சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் மற்றும் பாலமந்திர் ஆகியவை அரசின் மானிய உதவியுடன் இயங்கி வருகின்றன.

(ஆ) இளைஞர் நலக்குழுமங்கள் மற்றும் இளைஞர் நீதிமன்றங்களினால் நிறுவனங்களுக்குக் கல்வி மற்றும் நன்னெறிப் பயிற்சிக்கென அனுப்பப்படும் சிறார்களுக்கென 1986-ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ், மாநிலத்தின் 22 இளைஞர் மற்றும் 8 இளைஞர் இல்லங்கள் உள்ளன. அவற்றில் 2 சிறப்பு இல்லங்கள் மற்றும் 8 இளைஞர் இல்லங்கள் அரசினராலும், 13 இளைஞர் இல்லங்கள் அரசின் மானிய உதவியுடன் தனியாராலும் நடத்தப்படுகின்றன. தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மூலம் சிறப்பு இல்லங்களிலும் ஆதரவற்ற சிறார்கள் இளைஞர் நலக்குழுமங்கள் மூலம் இளைஞர் இல்லங்களிலும் சேர்க்கப்படுகின்றனர். மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென சென்னை, பாலவிஹார் நிர்வாகத்தின் கீழ் ஓர் இளைஞர் இல்லம் இயங்கி வருகிறது.

(இ) இவ்வகை நிறுவனங்களின்றி சிறார்களின் முன்னேற்றத்திற்குத் தக்கது எனக் கருதும் நிறுவனங்களின் பொறுப்பில் ஒப்படைக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

### 6.3. இளைஞர் நலக் குழுமங்கள்

1986-ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச்சட்ட பிரிவுகளின் கீழ்வரும் புறக்கணிக்கப்பட்ட சிறார்கள் தொடர்புள்ள வழக்குகளை விசாரிக்க 13 இளைஞர் நலக்குழுமங்கள் இயங்கி வருகின்றன. ஒரு தலைவர் மற்றும் அலுவல் சார்பற்ற 5 உறுப்பினர்களைக் கொண்டு (மகளிர் ஒருவர் உட்பட) இந்த இளைஞர் நலக் குழுமங்கள் இயங்கி வருகின்றன.

### 6.4. இளைஞர் நீதிமன்றங்கள்

சென்னை நகரில் பன்னிரெண்டாவது பெரு நகர நீதிமன்ற நடுவர், மாவட்டங்களில் தலைமைக் குற்றவியல் நீதிமன்ற நடுவர், குற்றவியல் நீதிமன்ற நடுவர், குற்றவியல் முதல் வகுப்பு நடுவர், உட்கோட்ட தவறிழைத்த சிறார்களின் வழக்குகளைத் தீர்வு செய்து வருகின்றனர்.

### 6.5. 1956-ஆம் ஆண்டில் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் அமைந்த நிறுவனங்கள்

(அ) 1956-ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு மகளிர் காப்பகங்கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு இல்லங்கள் புகலிடம் தந்து பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளிக்கின்றன. இத்துறையின் கீழ் 6 மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் சென்னையில் இரண்டும், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் இயங்கி வருகின்றன.

(ஆ) நீதிமன்ற விசாரணைக் காலத்தில், மகளிருக்கு புகலிடம் அளித்து பராமரிக்க ஏதுவாக, ஆறு மீட்பு இல்லங்கள், அரசினர் மகளிர் காப்பகங்கள், பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து இயங்குகின்றன. இவை தவிர மணமாகாத தாய்மார்களுக்கு என இரண்டு இல்லங்கள் தொண்டு நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் நடத்தப்படுகின்றன.

### 6.6. கல்விப் பயிற்சி

அனைத்து சிறப்பு/ இளைஞர் இல்லங்களிலும் 8-ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கல்பட்டு, அரசினர் சிறப்பு இல்லம் மற்றும் சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லங்களிலும் பள்ளி இறுதி வகுப்புவரை கல்வி அளிக்கப்படுகின்றன. உயர் கல்வியில் நாட்டமும் தகுதியும் உள்ள இல்லவாசிகள் இல்லத்தில் தங்கும் காலத்தைப் பொறுத்து வெளியில் உள்ள மேல்நிலைப்பள்ளி, கல்லூரி/ தொழில் நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிறுவனங்களில் சேர்த்து பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். பள்ளிக்கல்வி மட்டுமல்லாது முறைசாராக் கல்வி மூலமும் இல்லவாசிகளுக்கு கல்வி அளிக்கப்படுகிறது.





### 6.7. தொழிற்பயிற்சி

(அ) சிறார்களுக்கிடையே தன்னம்பிக்கையினை மேம்படுத்தும் நோக்கில் சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் சிறப்பு/இளைஞர் இல்லங்களில் இல்லவாசிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தச்சு, புத்தகம் கட்டுதல், இயந்திரத் தச்சு, கொத்து வேலை, தையல் மற்றும் பூவேலை, சோப்பு தயாரிப்பு, தோட்டம் மற்றும் வேளாண்மை, நெசவு, இசைக்கருவி பயிற்சி, பாய் நெசவு, மாட்டுப்பண்ணை, கருமாரப்பணி மற்றும் உலோகப் பணி.

(ஆ) இவை மட்டுமன்றி பின்வரும் செயல் திறன் வளர்ச்சித் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:-

1. மெழுகுவர்த்தி தயாரிப்பு.
2 பனை நார் பொருட்கள் தயாரிப்பு.
3. காகித பொம்மைகள் தயாரிப்பு.
4. பனை ஓலைப் பொருட்கள் தயாரிப்பு.
5. மின்விசை மாவு ஆலை.
6. இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர தானியங்கி வாகனங்கள் பழுதுபார்ப்பு.
7. வீட்டு மின் அலகுப்பணி.
8. தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பு.
9. ஸ்கிரீன் பிரிண்டிங்.
10. பனியன் தயாரிப்பு.

(இ) மேற்காணும் தொழில் அலகுகளில் சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லம் மற்றும் தஞ்சாவூர் அரசினர் இல்லங்களில் உள்ள தையற் தொழிற்கூடங்களும், செங்கல்பட்டு, சிறப்பு இல்லத்தில் நெசவு தொழிற்கூடமும், தஞ்சாவூர், இராணிப்பேட்டை இளைஞர் இல்லங்களில் தச்சு தொழிற்கூடங்களும் நவீன இயந்திர மயமாக்கப்பட்டுள்ளன. இராணிப்பேட்டை, அரசினர் இளைஞர் இல்லத்தில் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் துவக்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(ஈ) மகளிர் காப்பகங்கள்/ பெண்கள் பிற்காப்பு நிறுவனங்களில் தையல் மற்றும் பூவேலை, பாய் நெசவு மற்றும் கை நெசவு ஆகியவற்றில் பயிற்சி வழங்கப்படுகிறது. சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில் இல்லவாசிகளுக்கு மின் சலவையகம் மூலம் பயிற்சி வழங்கப்படுகிறது. மேற்குறிப்பிட்ட தொழிற்கூடங்களில் இல்லவாசிகள் பயிற்சி பெறுகிறார்கள்.

(உ) சிறார்களுக்கான பிற்காப்பு நிறுவனங்களில் புத்தகம் கட்டுதல், கருமாரப்பணி மற்றும் வேளாண்மை ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இந்நிறுவனங்களில் 20 இல்லவாசிகள் படிப்பு உதவித் தொகையுடன் பயிற்சி பெறுகிறார்கள்.

(ஊ) சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு இல்லத்தில் குழந்தைகள் காப்பகம் ஒன்று இயங்கி வருவதுடன் 15 மாணவிகள் இப்பிரிவில் பயிற்சி பெறுகிறார்கள். சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கு மனையியல் பயிற்சி அளிக்கப்படுகிறது. இளைஞர்/ சிறப்பு இல்லத்தில் பயிற்சி பெற்று வீடேகிய முன்னாள் இல்லவாசிகள் தங்குவதற்காக ஒரு பிற்காப்பு விடுதி ஒன்று சென்னை, அரசினர் இளைஞர்/சிறப்பு இல்ல வளாகத்தில் ஆரம்பித்து நடந்து வருகிறது. 30 இல்லவாசிகள் பயன்பெறுவார்கள்.

### 6.8. இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

சென்னை, மதுரை, வேலூர், தருமபுரி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனியார் நிர்வாகத்தில் இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நிலையங்கள் இளைஞர் நலக்குழுமங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் பரிந்துரைக்கப்படும் சிறுவர்/சிறுமியரின் மனநிலையை ஆராய்கின்றன.

### 6.9. பிற்காப்பு நிறுவனங்கள்

இளைஞர் மற்றும் சிறப்பு இல்லங்களில் பயிற்சி முடிந்து வெளியேறும் சிறுவர்களின் பராமரிப்புக்கான மூன்று பிற்காப்பு இல்லங்கள் உள்ளன. இவற்றில் இரண்டு சிறுவர்களுக்கான இல்லங்கள் ஆத்தூர் (செங்கல்பட்டு- அண்ணா மாவட்டம்) மற்றும் மதுரையிலும் பெண்களுக்கான ஓர் இல்லம் வேலூரிலும் (வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம்) உள்ளது. கல்விப் பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சி பெற்றுவரும் இல்லவாசிகள் பயிற்சியை முழுமையாக முடித்து வெளியேற ஏதுவாக, அவர்கள்



முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியும் வண்ணமும், அவர்களின் இல்ல நீக்க நாட்களுக்குப் பிறகு மேலும் மூன்று ஆண்டுக்காலம் பிற்காப்பு இல்லங்களில் தங்கி பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இல்லவாசிகள் நிறைவான கல்வி அல்லது தொழிற்பயிற்சி பெற வேண்டும் என்பதே ஆகும். இவ்வகையான ஏற்பாட்டின் மூலம் பயிற்சி பெற்ற இல்லவாசிகள் தன்னம்பிக்கையுடன் இல்ல நீக்கம் பெற வழி ஏற்படுகிறது.

### 6.10. மறு வாழ்வு நடவடிக்கைகள்

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகள் மறுவாழ்வுக்கு மிகுந்த முன்னுரிமை தரப்படுகிறது.

(1) ஆதரவற்ற பெண்களுக்கு திருமண ஏற்பாடு வழங்கும் திட்டம் மூலம் சமூகப் பாதுகாப்புத் துறை 14 பெண் இல்லவாசிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு உள்ளது.

(2) இத்துறையில் தமிழ்நாடு தேர்வாணையத்தின் வரம்புக்குட்படாத பதவிகளில், முன்னாள் இல்லவாசிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டமும், திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்கு அவர்களின் திருமண நாள் செலவாக ரூ. 300/-ம் புதுவாழ்வு துவங்க உதவித் தொகையாக ரூ. 1,000/-ம் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) மகளிர் காப்பகங்களிலிருந்து விடுவிக்கப்படும் பெண்கள் சுயவேலைவாய்ப்பு பெற 'ஒழுக்கநெறி பிறழிய மகளிருக்கான தமிழ்நாடு நலநிதி' ஏற்படுத்தப்பட்டு அதிகபட்சமாக ரூ.5,000/-ம் வரை நிதியுதவி அளித்து, கறவைமாடுகள், சிறு கடைகள், தையற்கடை போன்றவை வைத்து சொந்தமாக தொழில் செய்து முன்னேற வகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுகாறும் 124 பெண்கள் மறுவாழ்வு பெற்றுள்ளனர்.

### 6.11. இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள்

(அ) தொழிற்பயிற்சி பெறும் இல்லவாசிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.

அரசினர் இளைஞர் சிறப்பு இல்லங்களில் தொழிற்பயிற்சி பெறும் இல்லவாசிகளில் திறமைவாய்ந்த இல்லவாசிகளுக்கு முறையே மாதம்

ரூ.50/- மற்றும் ரூ. 30/- வீதம் ஊக்கத்தொகை அளிக்கும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் ரூ. 0.65 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் 150 இல்லவாசிகள் பயன்பெற்று வருகின்றனர்.

(ஆ) சிறார்கள் நலனுக்காக குடும்ப உதவித்திட்டம்

வறுமையின் காரணமாக இளைஞர் இல்லங்களுக்கு அனுப்பப்படும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு உதவும் வண்ணம் சிறார்களை இயல்பாகவே அவர்களது பெற்றோர்/உறவினரிடம் ஒப்படைத்து அவர்களது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான சிறார்கள் ஒரு குழுவின் மூலம் தேர்வு செயயப்பட்டு அவர்களின் பராமரிப்பு, கல்வி, உடல்நலம் இவற்றுக்கென ஓர் இல்லவாசிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம் உதவி வழங்கப்படுகிறது. 1997-98-ல் இத்திட்டத்திற்கான மதிப்பு ரூ.1.00 இலட்சம் ஆகும். பயன்பெறும் இல்லவாசிகள் 100.

(இ) சிறுவர்கள் பிச்சையெடுத்தலை ஒழித்தல்

சிறார்கள் பிச்சை எடுக்கும் நிலையினை கருத்திற்கொண்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது.

குறிப்பிட்ட பகுதிகளில் துயருறும் சூழலில் பிச்சை எடுக்கும் குழந்தைகள் குறித்த தகவல்களை சேகரித்தல், புதிய இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் துவங்குதல் மற்றும் இளைஞர் வழிகாட்டி நிலையங்களை வலுப்படுத்துவதற்காக இந்திய குழந்தைகள் நலச் சங்கத்தின் கீழ் ஒரு இளைஞர் வழிகாட்டி நிலையம் சென்னையில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

6.12 சாலையோர சிறார்களுக்கான இரவு விடுதிகள்

(அ) தெருவோர சிறார்களின் நலன் குறித்து, தமிழக அரசு சிந்தித்து அவர்களுக்கு முதற்கட்டமாக இரவு விடுதிகளை அமைக்கலாம் என திட்டம் வகுத்தது. இவ்வகை சிறார்கள் தங்கள் வாழ்க்கையை பெரும்பாலும் நடைபாதை ஓரங்களிலும், பேருந்து நிழற்குடைகளிலும் கழிக்கின்றனர். இந்நிலை அவர்களை சமூக விரோதிகளிடம் தொடர்பு ஏற்படுத்தி குற்றவாளிகளாக மாற வழிசெய்கிறது. சமூகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இச்சிறார்களுக்கு இத்தங்கும் புகலிடங்கள் மறுவாழ்வு வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன.



(ஆ) இத்திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களால் அரசின் மானிய உதவியுடன் 13 புகலிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 இல்லங்கள் சென்னையிலும், 2 மதுரையிலும், 1 சேலத்திலும், 1 விழுப்புரத்திலும், 1 வேலூரிலும், 1 கோவையிலும் நடைபெறுகின்றன. இவற்றுள் 6 தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டு வரும் 7 புகலிடங்கள் இந்திய அரசின் மானிய உதவியும் எஞ்சியுள்ள 6 புகலிடங்கள் தமிழக அரசின் மானிய உதவியும் பெறுகின்றன. தமிழ்நாடு அரசு இவ்வில்லங்களுக்கு ஆண்டுக்கு தலா ரூ. 40,000/- ஒட்டுமொத்த மானியமாகவும், ரூ.7,500/- முறைசாராக்கல்வி மற்றும் தொழிற்கல்விக்கென்றும் மற்றும் ஒரு இல்லவாசிக்கு ஒரு நாளைக்கு தலா ஒரு ரூபாய் வீதம் உணவு செலவின மானிய உதவியும் வழங்குகின்றது.

சாலையோரச் சிறார்களுக்கு இரவு நேரங்களில் இப்புகலிடங்கள் பாதுகாப்பாக அமைந்துள்ளன. சுமார் 2,100 சிறார்கள் தொழிற்பயிற்சி மற்றும் முறைசாராக் கல்வி ஆகியவை வழங்குவதின் மூலம் பயன்பெறுகின்றனர்.

திருச்சி நகரில் சாலையோர மற்றும் பணிபுரியும் சிறார்களுக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் கீழ் இரண்டு அனாதை இல்லங்கள் துவங்கப்பட்டு நடைபெறுகின்றன.

6.13 இடர்பாடுகள் தலையீட்டு மையம் ஆரம்பித்தல்

குழந்தைகளை தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் புறக்கணித்தலை தடுக்கும் நோக்குடன் தன்னார்வு நிறுவனங்களின் கீழ் இடர்பாடுகள் தலையீட்டு மையம் ஒன்றைத் துவங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. சமூக நோக்குள்ள நபர்கள், குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப்படும் நிகழ்வுகளை அறிய நேரிட்டால் இம்மையத்தில் முறையிடலாம்.

இம்மையம் தலையிட்டு அக்குழந்தை தவறாகப் பயன்படுத்தப்படுதலை தடுக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், அக்குழந்தைக்கு தற்காலிகமாக புகலிடம் மற்றும் பாதுகாப்பு அளிக்கிறது. பெற்றோருக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குகிறது. பொது மக்களிடையே குழந்தைகள் தவறாக பயன்படுத்துதல் சார்ந்த விழிப்புணர்வு ஏற்படுத்த பிரச்சாரம் மேற்கொள்கிறது. இத்திட்டத்தில் 100 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்.

### 6.14 சிறப்பு பராமரிப்பு மையங்கள்

ஆதரவற்ற அனாதைச் சிறார்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளிக்கும் வகையில் 10 சிறப்பு பராமரிப்பு மையங்கள் (சிறுமியர்க்கு 5, சிறுவர்களுக்கு 5) துவங்கப்பட்டு நடந்து வருகின்றன.

சென்னை அரசினர் பெண்கள் சிறப்பில்லத்தில் 5 மையங்களும், இராணிப்பேட்டை அரசினர் இளைஞர் இல்லத்தில் 5 மையங்களும் தன்னார்வு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. திட்ட மதிப்பு ரூ. 1.20 இலட்சம், 100 சிறார்கள் பயன்பெறுகிறார்கள். சிறுவர்களைப் பராமரிக்க இல்லத்தாய்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 6.15 பயிற்சி பெற்ற இல்லவாசிகளுக்கு நிதியுதவி

அரசினர் இளைஞர்/சிறப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் பல்வேறு தொழில் மையங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் இல்லவாசிகளுக்கு மொத்த உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தியுள்ளது. ரூ.0.64 இலட்சம் செலவில் 45 இல்லவாசிகள் பயன்பெறுகின்றனர்.

### 6.16 திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

சமூக பாதுகாப்புத் துறையின் கீழ் இயங்கும் இல்லங்கள் மற்றும் குழந்தைகள் நலனில் இயங்கும் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடுகளையும் அவைகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் அடிப்படைத் தேவைகளை ஆய்வு செய்யவும் மேம்பாடு குறித்து பரிந்துரை செய்யவும் ஒரு திட்ட வளர்ச்சி மற்றும் கணிப்பாய்வுப்பிரிவு யூனிசெப் நிறுவனத்தின் 100% உதவியுடன் சமூக பாதுகாப்புத் துறை இயக்ககத்தில் 1992-ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

1993-ம் ஆண்டு முதல் இக்கணிப்பாய்வுப் பிரிவின் செலவினத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. 1986-ஆம் ஆண்டில் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் வரும் இல்லவாசிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்வது தவிர, கருத்தரங்குகள், பயிற்சிகள் மற்றும் துயருறும் சூழ்நிலையிலுள்ள சிறார்களின் நலனைக் குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் போன்றவை இக்கணிப்பாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



## அத்தியாயம்-7

## முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

7.1 இந்தத் திட்டம் முதியோர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட இனங்களின் கீழ் இத்திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:

(1) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல் அமல்படுத்தப்படுவது)

(2) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1-11-1974 முதல் அமல்படுத்தப்படுவது)

(3) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல் அமல்படுத்தப்படுவது)

(4) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம் (21-8-1981 முதல் அமல்படுத்தப்படுவது)

(5) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை திட்டம் (25-4-1986 முதல் அமல்படுத்தப்படுவது)

### 7.2 முதியோர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

#### (அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம்

கண்பார்வையற்றோர், தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயம் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நபர்கள் உதவித்தொகை பெற குறைந்தபட்ச வயதுவரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயதுவரம்பு 65 ஆகும். இத்திட்டம் 1-4-1962 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

#### (ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்

1974-ஆம் ஆண்டு 'முதியோர் உதவித்தொகை திட்டம்' ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. உடல்ஊனம் 50 சதவிகிதம் அளவும் அதற்கு மேலும் உள்ள, ஆதரவற்ற உடல்ஊனமுற்றோர் 55 வயது நிரம்பியவர் மட்டும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறத் தகுதி உடையவர் ஆவர். 1975-ல் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுவோர் வயது 45 ஆகக் குறைக்கப்பட்டது. 1975 ஆம் ஆண்டில் அரசின் உத்தரவின்படி இந்த குறைந்தபட்ச வயதுவரம்பு கண்பார்வையற்றோருக்குப் பொருந்தாது.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியாளர், மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அக்குழுவானது. ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டி பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு வயது வரம்பின்றி அதனை வழங்கும். இத்திட்டம், 1982 முதல் தொழுநோயாளிகளும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

**(இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம்**

இந்தத் திட்டம் 1975 முதல் ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. முதலில் பயனாளிகளுக்குக் குறைந்தபட்ச வயது வரம்பு 45 என ஆணையிடப்பட்டது 1978-ம் ஆண்டு வயதுவரம்பு 40 ஆக்கப்பட்டது. 1990-ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட வயது வரம்பை நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டத்தில் கூறப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

**(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்**

இத்திட்டம் 21-8-1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமலாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**(உ) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம்**

25-4-1986 முதல் 30 வயது நிரம்பிய, கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அமலாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கணவருடன் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாமல் எவ்வித தொடர்பும் இல்லாமலும் அல்லது நீதிமன்றத்திலிருந்து விவாகரத்து சான்றிதழ் பெற்றவரும் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதி உடையவர்கள் ஆவர்.

**7.3 உதவித் தொகை வழங்கும் முறை**

மேற்கண்ட திட்டத்தின் கீழ் உதவித்தொகை ஒப்பளிப்பு அதிகாரம் கோட்டாட்சியருக்கு அளிக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பளிக்கும் அதிகாரம் நலிந்தோர் நலம் வட்டாட்சியர்களுக்கு 1989 முதல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதியோர் உதவித்தொகை பெறும்



நபர்களுடன் நேரடியாகத் தொடர்புள்ள அலுவலர்களுக்கு அரசு இந்த அதிகாரத்தை வழங்கி, தேவையான நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்குவதில் தாமதத்தைத் தவிர்த்து உதவி செய்துவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகை பெறுபவர்களின் முகவரிக்கு சிறப்பு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டணச் செலவையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. முதியோர் உதவித்தொகை பட்டியல்கள் எழுதி வழங்கும் முறைகளில் உள்ள வேலைப் பளுவைக் குறைப்பதுடன் அதில் ஏற்படும் பிழைகளைத் தவிர்க்கும் நோக்கத்துடன் அரசு கணிப்பொறி மூலம் பண அஞ்சல் தொகையினை அனுப்ப அனுமதி வழங்கியுள்ளது.

7.4 முதியோர் உதவித் தொகை உயர்வு இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 75/- லிருந்து ரூ. 100/- ஆக 1-7-1995-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

**7.5. முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கு இலவச கைத்தறி வேட்டி/சேலை வழங்குதல் குறித்த விவரம்**

(1) ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாளன்று உதவித்தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறிப் புடவையும் 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வந்தது. 1991-ஆம் ஆண்டு முதல் தீபாவளிக்கும் வேட்டி/புடவை வழங்க அரசு உத்தரவிட்டது. ஆனால், 1992-93-ஆம் ஆண்டு முதல் முதியோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வருடத்தில் பொங்கல் மற்றும் தீபாவளி ஆகிய இரு பண்டிகை நாட்களுக்கு மட்டிலும் இலவச வேட்டி மற்றும் புடவை, முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

(2) சத்துணவுக் கூடத்தில் மதிய உணவு வழங்குதல்.

அனைத்து முதியோர் உதவித்தொகை பெறுபவர்களுக்கும் நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக சத்துணவுக் கூடங்களில் வழங்கப்படுகிறது.

(அ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடாத முதியோர் உதவித்தொகை பெறுவோருக்கு வாரந்தோறும் நபருக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் மதிய சத்துணவு சாப்பிடும் முதியோர் உதவித்தொகை பெறும் நபர்களுக்கு வாரந்தோறும் நபருக்கு அரை கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

[1997 ஏப்ரல் 3

முதியோர் உதவித் தொகை பயன் அடைவோர் எண்ணிக்கை

| | |
|---|---|
| (1) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் | 3,02,649 |
| (2) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம். | 57,240 |
| (3) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம். | 2,25,035 |
| (4) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம். | 60,948 |
| (5) கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை திட்டம். | 36,906 |
| மொத்தம் | 6,82,778 |

7.6 முதியோர் இல்லங்கள்

வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்கள் மற்றும் ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்கள் ஆகியவர்களில் அன்றாட வாழ்க்கையில் உணவு, உறைவிடம் இன்றி துயருறுவோர் பலர் உள்ளனர். இவர்களுடைய துயர் களைய தனியார் தொண்டு நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்தி தற்போது உள்ள 10 இல்லங்களில் 280 முதியோர்கள் தங்கிப் பயன் பெறுகின்றனர். இதற்காக 1997-98-ல் ரூ. 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொகுப்புரை

மகளிர் மேம்பாட்டிற்கும், மழலையர் வளர்ச்சிக்கும், ஊனமுற்றோர் உயர்வுக்கும், நலிந்தோர் நலனுக்காகவும் பாடுபடும் இத்துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு, அத்திட்டங்களின் பயன்கள், உரியவர்களை உரிய காலத்தில் அடைவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்று இம்மாமன்றத்தில் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



1997 ஏப்ரல் 3]

இணைப்பு-1

நடைமுறையில் உள்ள முக்கிய திட்டப் பணிகள்

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | மகளிர் நலம் | |
| 1. | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியில் இருந்து உதவி பெறும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் | 1,200.00 |
| 2. | வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள கருவுற்ற மகளிருக்கு ரொக்க உதவி | 581.00 |
| 3. | வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள பெண்களின் திருமணத்திற்காக உதவி | 2,000.00 |
| 4. | சேவை இல்லங்களும், இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பும் | 103.31 |
| 5. | பணி மையங்களும் உற்பத்திப் பிரிவும் | 96.49 |
| 6. | மகளிர் மன்றங்கள் | 51.33 |
| 7. | கூட்டுறவு சங்கங்களுக்கான கண்காணிப்புப் பிரிவை ஏற்படுத்துதல். | 57.34 |
| 8. | பெண்களுக்கான வழிகாட்டி நிலையங்கள் | 18.05 |
| 9. | அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம் | 55.40 |
| 10. | ஏழை விதவையாது மகள்களின் திருமணத்திற்காக திருமண உதவித் தொகை | 21.00 |

[1997 ஏப்ரல் 3

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 11. | ஆதரவற்ற விதவைகளுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 14.29 |
| 12. | பணிபுரியும் மகளிர்க்கான இல்லங்களை நடத்துதல் | 18.99 |
| 13. | பெண்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம் | 1,200.00 |
| 14. | தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் நல இல்லங்கள் | 10.00 |
| 15. | விதவை மறுமணத்தை ஊக்குவிக்க சேமிப்பு சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் | 9.80 |
| 16. | தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 6.40 |
| 17. | தையல் மையங்கள் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டத்தின் கீழ் தொடங்குதல் | 3.83 |
| 18. | வாழ்க்கை தொழிற்பயிற்சி பெற ஏழை மகளிருக்கு நிதியுதவி | 22.30 |
| 19. | ஏழை விதவைகளின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நிதியுதவி | 4.30 |
| 20. | ஆதரவற்ற பெண்களுக்கு திருமண நிதியுதவி | 1.30 |
| 21. | தமிழ்நாடு மகளிர் ஆணையம் | 5.04 |
| | **குழந்தைகள் நலம்** | |
| 1. | தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம் | 400.00 |
| 2. | ஆதரவற்ற குழந்தைகள் காப்புத் திட்டத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி | 491.27 |



1997 ஏப்ரல் 3]

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 3. | கிராமப்புற பணிக்களுக்கான சமூக நல நிறுவனங்களுக்கு உதவுவதற்காக சமூக நல வாரியத்திற்கு மானியம் | 10.00 |
| 4. | வேலை செய்யும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள் காப்பகம் | 36.73 |
| | **ஊனமுற்றோர் நலம்** | |
| 1. | ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு நிதியுதவி | 215.70 |
| 2. | பார்வையற்றோர் பள்ளி | 182.26 |
| 3. | இளம்பிள்ளை வாத நோய் ஒழிப்பு ஒருங்கிணைந்த திட்டம் | 100.48 |
| 4. | காது கேளாதோருக்கான பள்ளிகள் | 102.56 |
| 5. | ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் திட்டம் | 73.27 |
| 6. | மண்டல மறுவாழ்வு மையம் | 11.19 |
| 7. | உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவி தொகைகள் | 42.00 |
| 8. | அண்ணா மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை நடத்துதல் | 38.40 |
| 9. | வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து இருக்கும் வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பின்மைப் படி | 22.00 |
| 10. | காது கேளாதோருக்கான முன் பருவப் பள்ளி | 30.31 |
| 11. | பார்வையுற்றோருக்கான மறுவாழ்வு | 32.35 |

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 12. | கடுமையான ஊனமுற்றோருக்கான பராமரிப்புப் படிகள் | 30.50 |
| 13. | உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுப் பணிகளுக்கான முன்னோடித் திட்டம் செயல்படுத்துதல் | 13.83 |
| 14. | கடுமையான கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி | 14.07 |
| 15. | பார்வையற்ற வயது வந்தோருக்கான இலகு ரக பொறியியல் கல்வித் திட்டம் | 14.63 |
| 16. | அரசு மண்டல பிரெய்லி அச்சகம் | 11.42 |
| 17. | மன வளர்ச்சி குன்றியோருக்கான நிலையம் தொடங்குதல் | 9.15 |
| 18. | உடல் ஊனமுற்றோருக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் | 8.00 |
| 19. | மன வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி | 7.39 |
| 20. | காது கேளாதோருக்காக புதிய பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல் | 15.91 |
| 21. | பார்வையற்றோருக்கான புதிய பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல் | 9.29 |
| 22. | உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியம் | 6.47 |
| 23. | பார்வையற்றோரின் ஆசிரியர்களுக்கான மண்டலப் பயிற்சி மையங்கள் | 6.49 |





| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 24. | காது கேளாதோருக்கான பயிற்சி மையங்கள் | 4.00 |
| 25. | அரசு அங்கீகாரம் பெற்ற ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு உதவி | 3.00 |
| 26. | காது கேளாதோருக்கான கல்வி கற்பிப்பதில் பயிற்சியளிக்க தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 3.00 |
| 27. | பார்வையற்றோரை திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்கு சலுகைகள் | 10.00 |
| 28. | உடல் ஊனமுற்றோருக்கான சாக்குக் கட்டி தயாரிப்பு சங்கங்களை ஏற்படுத்துதல் | 3.00 |
| 29. | சென்னை, பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்திலும், கிண்டி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திலும் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்களுக்கும், காது கேளாதோருக்கும் சிறப்பு தொழில் பழகுநராக சேர்த்து பணி பயிற்சி அளித்தல் | 0.40 |
| 30. | ஊனமுற்றோருக்கான இலவச பயணச் சலுகைத் திட்டம் | 60.00 |
| 31. | பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவி | 0.25 |
| 32. | ஒயர் நாற்காலி பின்னும் பார்வையற்றோர்க்கான பணியிடங்கள் உருவாக்குதல் | 3.03 |
| 33. | காது கேளாதோருக்காக தொழில்நுட்ப பட்டயப் பயிற்சிக்கு 5 இடங்கள் ஒதுக்கீடு | 0.15 |
| 34. | ஊனமுற்ற சட்டப் பட்டதாரிகளுக்கு நிதியுதவி | 0.15 |

## இணைப்பு-2

### 1997-98-ஆம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகளின் விவரப் பட்டியல்

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| | **சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை** | |
| | இயலாமையுற்றோருக்குப் புது வாழ்வளித்தல் | |
| 1. | கடுமையாக இயலாமையுற்ற குழந்தைகளுக்குப் பராமரிப்பு படி வழங்கும் திட்டத்தின்கீழ் பயனடையும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் | 18.50 |
| 2. | இயலாமையுற்றோர் புதுவாழ்வு இயக்கத்திற்கு அம்பாசிடர் கார் ஒன்று வாங்குதல் | 4.70 |
| 3 | பார்வையற்றோர் பயன்படுத்தும் கைக்கடிகாரங்களை இலவசமாக வழங்குதல் | 3.50 |
| 4. | பதினான்கு வயதிற்கு மேற்பட்ட உரிய வயதடைந்த மன வளர்ச்சி குன்றிய மகளிருக்கு புதுவாழ்வு இல்லம் தொடங்குதல் | 12.87 |
| 5. | தஞ்சாவூர், மானாமதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு அனாதை இல்லங்களுக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல் | 24.00 |
| 6. | தமிழ்நாட்டில் பணிபுரியும் மற்றும் நோயுற்ற தாய்மார்களின் பயனுக்காக 50 குழந்தைக் காப்பகங்கள் தொடங்குதல் | 13.09 |
| 7. | இருபத்திரண்டு அரசு அனாதை இல்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல் | 12.00 |
| 8. | ஆறு அரசு சேவை இல்லங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல். | 2.92 |
| 9. | பணிபுரியும் மகளிர் இல்லங்கள் எட்டுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்குதல் | 3.23 |



| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 10. | அரசு அனாதை இல்லங்களுக்கு அறைகலன்கள் வழங்குதல் | 2.50 |
| 11. | எட்டு பணிபுரியும் மகளிர் இல்லங்களுக்கு பழைய கட்டில்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றுக்கு பதிலாகத் புதியனவற்றை வழங்குதல் | 2.50 |
| 12. | சமூக நல வாரியத்தால் அமைக்கப் பெற்று அரசு சாரா அமைப்புகளால் நடத்தப்படவுள்ள ஆலோசனை மையங்கள் அமைத்தல் | 0.66 |
| 13. | மகளிர் மேம்பாட்டிற்காக ஒருங்கிணைந்த மனமகிழ் மையங்களை ஏற்படுத்துதல் | 2.03 |
| 14. | திருச்சி அரசு கண்காணிப்பு இல்லத்தில் பெரிய துயிற்கூடம் ஒன்றும், சமையலறைக் கட்டிடமும் கட்டுதல் | 3.40 |
| 15. | இராணிப்பேட்டை மல்லிப்புதூர் அரசு இளங்குற்றவாளிகள் இல்லத்திலும், செங்கற்பட்டிலுள்ள அரசு தனி இல்லத்திலும் சென்னையிலுள்ள அரசு இளங்குற்றவாளி/ பெண்கள் தனி இல்லத்திலும் உள்ள சமையலறைக் கட்டிடத்திற்கு தனி பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளுதல் | 4.00 |
| 16. | சென்னையிலுள்ள அரசு இளங்குற்றவாளி/ பெண்கள் தனி இல்லத்திற்கு கையால் மற்றும் மின்சாரத்தால் இயக்கப்படும் படிப்பெருக்கிக்கு வகை செய்தல் | 0.44 |
| | **சமூகப் பாதுகாப்பு** | |
| 17. | சமூகப் பாதுகாப்பு இயக்ககத்திற்கு கணிப்பொறி ஒன்று வாங்குதல் | 1.04 |
| 18. | தெருவில் அலைந்து திரியும் குழந்தைகளுக்காக இரவு தங்குமிடங்கள் தொடங்குதல் | 6.55 |
| 19. | குழந்தைகள் தவறாகப் பயன்படுத்தப் படுவதையும் புறக்கணிக்கப்படுவதையும் தடுப்பதற்காக அரசு சாரா அமைப்பின்கீழ் இடர்பாடுகள், தலையீட்டு மையத்தை வலுப்படுத்துதல் | 1.69 |

[1997 ஏப்ரல் 3

| தொடர் எண் (1) | திட்டப் பணிகளின் விபரம் (2) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 20. | இளங்குற்றவாளிகள்/தனி இல்லங்களில் கல்விப் பிரிவுகளுக்கு அறைகலன்கள் மற்றும் பொருத்திகளுக்கு வகை செய்தல் | 3.42 |
| 21. | இளங்குற்றவாளிகள் நல வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மதிப்பூதியத் தொகையை அதிகரித்தல் | 4.57 |
| 22. | நான்கு இடங்களில் இளங்குற்றவாளிகள் நல வாரியங்களையும், 4 இடங்களில் கண்காணிப்பு இல்லங்களையும் தொடங்குவதன் மூலம், அரசு சாரா அமைப்பின்கீழ், இளங்குற்றவாளிகளுக்கான நியாயம் வழங்கு அமைப்பு முறையை வலுப்படுத்துதல் | 6.72 |
| 23. | இளங்குற்றவாளிகள் இல்லத்திலிருந்து வெளியே அனுப்பபட்ட/புறக்கணிக்கப்பட்ட குழந்தைகளின் வேலைவாய்ப்பிற்கான தொடக்கச் செலவிற்கான சுழல் நிதி | 1.00 |
| 24. | கோயம்புத்தூர், விடுதலையான கைதிகள் உதவிச் சங்கத்தின் கீழ் இயங்கும் கண்காணிப்பு இல்லத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் | 5.25 |
| | **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்** | |
| 25. | பெண்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சித் திட்டம் | 15.00 |
| | மொத்தம் | 155.58 |



1997 ஏப்ரல் 3]

# இணைப்பு-2

**(*458*-ஆம். பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

**மானியக் கோரிக்கை எண்12**

## தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு

**1997-98**

*"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ்வார்"*

மலர்போன்ற மனத்தில் நிறைந்தவனைப் பின்பற்றுவோரின் புகழ்வாழ்வு, உலகில் நெடுங்காலம் நிலைத்து நிற்கும் என்ற அரிய கருத்தினை உள்ளத்தில் நிறுத்தி தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிறுவனங்களையும், வரலாற்று கருவூலமாகவும், கலைப் பேழைகளாகவும் திகழும் திருக்கோயில்களையும் போற்றிப் பாதுகாத்திட இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பு நிர்வாகமும்

தமிழகத்திலுள்ள பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்களும், இந்து சமய மற்றும் சமண நிறுவனங்களும், அறக்கட்டளைகளும், தமிழகத்தை ஆண்டு வந்த மன்னர்களாலும், அடுத்தடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய முகமதிய மன்னர்களாலும், ஆங்கிலேய அரசாலும் பராமரிக்கப்பட்டு வந்ததுடன், அவற்றின் பாரமரிப்புக்கென நிரந்தர உறுதுணையாக நிலங்களை மானியமாக அளித்து, அன்றாட நிர்வாகத்தினை மேற்பார்வையிட்டனர். ஒரு காலகட்டத்தில், ஊரின் பொது நிர்வாக அமைப்பே, அந்த ஊரில் உள்ள திருக்கோயிலை நிலைக்களனாக வைத்து செயல்பட்ட பெருமைக்குரிய செய்திகளும் உண்டு. நம் முன்னோர்கள் ஊராட்சி அமைப்பை ஏற்படுத்தி செம்மையாகச் செயல்பட்ட வரலாற்றினை உத்திரமேரூர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், பல்வேறு சட்டங்களின் மூலமாக இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகத்தை ஓரளவு கட்டுப்பாட்டில்

வைத்திருந்ததுடன், அவர்களுக்கு முன்னர் ஆட்சி புரிந்தோர் இந்து சமய அறநிறுவனங்களின் பராமரிப்பிற்கென மானியமாக நிலங்கள் அளித்ததை உறுதிப்படுத்தி இனாம் சாசனங்கள் வழங்கி, இந்து சமய அறநிறுவனங்களின் சொத்துரிமையை நிலை நாட்டினர்.

திருக்கோயில்களின் அன்றாட நிர்வாகம், சொத்துக்கள் பராமரிப்பு ஆகியவற்றைக் கண்காணிக்க 1927-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் "இந்து சமய அறநிலைய வாரியம்" அமைக்கப்பட்டு, இந்து சமய அறநிறுவனங்களின் நிர்வாகம் ஒருமுனைப்படுத்தப்பட்டது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், இந்து சமய அறநிலைய வாரியம் கலைக்கப்பட்டு 1951-ஆம் ஆண்டு 19-ஆவது சட்டத்தின்படி இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஏற்படுத்தப்பட்டு இந்த சமய அறநிறுவனங்களின் அமைப்பு சீர்படுத்தப்பட்டது. அறங்காவலர்களின் செயல்பாட்டை மேற்பார்வையிட வட்டாரக் குழுக்களும் அமைக்கப்பட்டன. திருக்கோயில்கள் நிர்வாகத்தில், முழுமையான பலனுள்ள நிர்வாகக் கட்டுப்பாட்டினை இச்சட்டம் கொண்டு வர இயலாததால் குறிப்பிடத்தக்க மாறுதல்களுடன் 1959-ஆம் ஆண்டின் 22-ஆவது சட்டமாக தற்போதுள்ள சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்த அரசு, 1968-ஆம் ஆண்டின் 19-வது சட்டத்தின்படி வட்டாரக் குழுக்களை நீக்கிவிட்டு முழுப் பொறுப்புகளையும் ஆணையரிடமும் அவரது சார்நிலை அலுவலர்களிடமும் ஒப்படைத்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட அரசு மாற்றங்களுக்கேற்ப பல சட்ட திருத்தங்கள் 1976, 1978 ஆம் ஆண்டுகளில் கொணரப்பட்டு, இறுதியாக 1991 ஆம் ஆண்டு கொணரப்பட்ட திருத்தச் சட்டத்தின்படி அதிகாரம் முழுவதும் திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக் குழுக்களிடமும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த அரசு பதவி ஏற்றதும், இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகத்தைச சீர் செய்யும் முதற்கட்டப் பணியாக, திருக்கோயில் நிர்வாக வாரியத்தையும் மாவட்டக் குழுக்களையும் கலைத்து விட்டு இந்து சமய நிறுவனங்களின் நிர்வாகம் அரசு அலுவலர்களான ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும் வகையில் 1996-ஆம் வருடத்திய 39-வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டு 09-12-1996 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்படி





மாநில அளவில், அரசுக்கும் ஆணையருக்கும் ஆலோசனை கூறி வழி நடத்திட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பின்வரும் பெருமக்கள் அங்கம் வகிக்கின்றனர்:

**அலுவல்சார் உறுப்பினர்கள்:**

| | |
|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் | : தலைவர் |
| மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | : துணைத் தலைவர் |
| வணிகவரி மற்றும் அறநிலையத்துறைச் செயலர் | : உறுப்பினர் |
| அறநிலையத்துறை ஆணையர் | : உறுப்பினர்-செயலர் |

**அலுவல் சாரா உறுப்பினர்கள் :**

தவத்திரு குன்றக்குடி அடிகளார், குன்றக்குடி.

தவத்திரு திருப்பனந்தாள் மடாதிபதி, திருப்பனந்தாள்.

தவத்திரு திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருவாவடுதுறை.

தவத்திரு ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள், திருவரங்கம்.

தவத்திரு சாந்தலிங்க இராமசுவாமி அடிகளார், பேரூர்.

திருமதி. சௌந்தரா கைலாசம், சென்னை.

திருமதி உமாமகேஸ்வரி, மாநகராட்சி மேயர், திருநெல்வேலி.

திரு. கருமுத்து கண்ணன், மதுரை.

இவ்வாலோசனைக்குழுவின் முதல் கூட்டம் 04-03-1997 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், திருக்கோயில் நிலங்கள், காலிமனைகள் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் மூலம் திருக்கோயில் வருவாயைப் பெருக்குதல், தமிழகத் திருக்கோயில்களின் கலைச் சிறப்புக்கள் நித்தியப்படி பூசைகள், திருவிழாக்கள் முதலானவற்றை ஒலி, ஒளி பதிவு செய்தல், திருமுறை ஓதுவார்கள், அர்ச்சகர்கள், நாதஸ்வர இசைக் கலைஞர்கள் ஆகியோர்களுக்கு புத்தொளிப் பயிற்சி அளித்தல், ஒரு கால பூசைத் திட்டம் மற்றும் திருக்கோயில் நகைகள்

[1997 ஏப்ரல் 3

மற்றும் சிலைகள் பாதுகாப்பு ஆகிய இனங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

இச்சட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள் அமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. ரூபாய் பத்து லட்சத்துக்குக் குறைவான வருமானம் உள்ள திருக்கோயில்களின் அறங்காவலர்கள் இந்த மாவட்டக் குழுக்களின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படுவர்.

**சமய நிறுவனங்களின் எண்ணிக்கை:**

இத்துறையின் நிர்வாகத்தின்கீழ் சமண சமயம் மற்றும் இந்து சமய அற நிறுவனங்கள் 36,253 உள்ளன. அவற்றின் விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திருக்கோயில்கள் | 34,213 |
| 2. | மடங்கள் | 56 |
| 3. | மடத்தைச் சார்ந்த திருக்கோயில்கள் | 57 |
| 4. | குறிப்பிட்ட கட்டளைகள் | 1,721 |
| 5. | அறக்கட்டளைகள் | 189 |
| 6. | சமணத் திருக்கோயில்கள் | 17 |
| | | **36,253** |

மேலே கண்ட சமய நிறுவனங்கள் அவற்றின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன:

(எண்ணிக்கை)

(1) பட்டியலைச் சாரா நிறுவனங்கள்:

சட்டப்பிரிவு 49-ன்படி ரூ.10,000-க்கும் குறைவாய் வருவாய் உள்ளவை 33314

(2) பட்டியலைச் சார்ந்த நிறுவனங்கள்

(i) சட்டப் பிரிவு 46(i)-ன் படி ரூ.10,000-க்கு மேல் ரூ. 2 லட்சத்திற்குக்கீழ் ஆண்டு வருவாய் உள்ளவை 2529

(ii) சட்டப்பிரிவு 46 (ii)-ன்படி ரூ. 2 லட்சத்திற்கு மேலும் ரூபாய் 10 லட்சத்திற்குகீழும் ஆண்டு வருவாய் உள்ளவை 302



1997 ஏப்ரல் 3]

iii) சட்டப்பிரிவு 46 (iii)-ன்படி ரூ.10 லட்சமும் அதற்கு மேலும் ஆண்டு வருவாய் உள்ளவை 108

இச்சமய நிறுவனங்கள், இந்து சமய அறநிலையச் சட்ட விதிகளின்படி நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் மற்றும் செயல் அலுவலர்கள் ஆகியோரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாநிலத்தில் உள்ள திருக்கோயில்கள், அறக்கட்டளைகள் மற்றும் சமய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பசலி ஆண்டு 1405-ல் வரப்பெற்ற வருவாய் சுமார் 94 கோடி ரூபாய் ஆகும். பசலி ஆண்டு 1406-ல் பிப்ரவரி திங்கள் முடிய சுமார் 105 கோடி ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது.

**அறநிலையத் துறையின் நிர்வாக அமைப்பு :**

இத்துறையின் தலைவர் ஆணையர் ஆவார். இதன் நிர்வாகம் 10 இணை ஆணையர் மண்டலங்களாகவும், 21 உதவி ஆணையர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு மேலாண்மைப் பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. ஆணையர் அலுவலகத்தில் ஆணையருக்கு உதவியாக ஒரு இணை ஆணையரும், இரண்டு துணை ஆணையர்களும், ஒரு உதவி ஆணையரும், ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு தலைமைத் தணிக்கை அலுவலரும், வழக்குகளைக் கண்காணிக்க ஒரு உதவி ஆணையரும் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். துணை ஆணையர் நிலையில் எட்டு சரிபார்ப்பு அதிகாரிகளும் உள்ளனர். அத்துடன் திருக்கோயில் நிலங்களை கண்காணித்து முறையாகப் பராமரிக்க வருவாய் துறையிலிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவர் பணியாற்றி வருகின்றார். இத்துறையின் கணக்கு பிரிவில் ஆணையருக்கு உதவியாக கருவூலத் துறையிலிருந்து ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும், ஒரு இளநிலை கணக்கு அலுவலரும், சிலைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளின் பாதுகாப்பிற்கென காவல் துறையிலிருந்து கண்காணிப்பாளர் ஒருவரும் மூன்று ஆய்வாளர்களும் பணி புரிந்து வருகின்றனர். இத்துறையின் நிர்வாகத்தில் ஆணையர், சார்நிலை அலுவலர்கள், பொறியாளர்கள், தணிக்கை ஆய்வாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள், காவல்துறை பணியாளர்கள் ஆகியோர் மொத்தம் 2,175 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

[1997 ஏப்ரல் 3

## திருக்கோயில் செயல் அலுவலர்கள் :

இத்துறையின் கீழுள்ள திருக்கோயில்கள் மற்றும் அறநிறுவனங்கள் சட்டப் பிரிவு 45-ன் படி, திருக்கோயில்களின் ஆண்டு வருமான வரம்புக்கேற்ப கீழ்க்கண்ட ஏழு நிலைகளில் 493 செயல் அலுவலர்கள் பணிபுரிகிறார்கள்:

| | |
|---|---|
| இணை ஆணையர் நிலை | 8 |
| துணை ஆணையர் நிலை | 5 |
| உதவி ஆணையர் நிலை | 18 |
| செயல் அலுவலர் நிலை - 1 | 56 |
| செயல் அலுவலர் நிலை - 2 | 117 |
| செயல் அலுவலர் நிலை - 3 | 172 |
| செயல் அலுவலர் நிலை - 4 | 117 |

## திருமடங்களின் நிர்வாகம்:

தமிழகத்தில் தற்சமயம் 56 திருமடங்களும், அவற்றுடன் இணைந்த 17 குறிப்பிட்ட கட்டளைகளும் உள்ளன. திருமடங்களின் நிர்வாகத்தில் உள்ள சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் பேரில், திருமடங்களின் நிர்வாகக் குறைபாடுகளைக் களையவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும், ஆணையரின் நேர்முக உதவியாளர் தலைமையில் அவருக்கு உதவியாக மண்டலத் தணிக்கை அலுவலர் மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய பிரிவு ஒன்று செயல்பட்டு வருகின்றது. இந்த திருமடங்களும் கட்டளைகளும் முறையாக குறிப்பிட்ட காலமுறை இடைவெளிகளில் ஆய்வு செய்யப்பட்டு நிர்வாகம் சீர்படுத்தப்பட்டு வருகிறது.

## திருக்கோயில் நிலங்கள்-கட்டிடங்கள்:

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமாக 4.91 இலட்சம் ஏக்கர் பரப்புள்ள நிலங்கள் உள்ளன. அவற்றில் நன்செய், புன்செய் மற்றும் மானாவாரி நிலங்கள் அடங்கியுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு:



1997 ஏப்ரல் 3]

| நிலத்தின் தன்மை | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|
| நன்செய் | 2,08,224.56 |
| புன்செய் | 2,64,430.88 |
| மானாவாரி | 18,761.90 |
| மொத்தம் | **4,91,417.34** |

சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களில் 1,06,807 குத்தகைதாரர்கள் பயிர் செய்து வருகின்றனர். திருக்கோயில்களுக்குச் சொந்தமான 20,530 வீடுகள், 22,629 கட்டிடங்கள், 73,320 வீட்டு மனைகள் ஆகியன வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

நிலக்குத்தகைத் தொகை நிலுவை தொடர்பான வழக்கினை மேற்கொள்ள 11 வருவாய் நீதி மன்றங்கள் இயங்கி வருகின்றன. இவைகளின் மூலம் 28,452 வழக்குகள் ரூ. 263 இலட்சம் நிலுவைக்காக 1,428 திருக்கோயில்களால் தாக்கல் செய்யப்பட்டு ரூ. 818 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 12,693 வழக்குகளில் தீர்வு காணப்பட்டுள்ளது. குறைவான கட்டிட வாடகை பெற்று வரும் இடங்களை ஆய்வு செய்து நியாய வாடகை நிர்ணயம் செய்ய நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

மனை வாடகை நிலுவைகளை வசூலிக்கவும், குறைந்த அளவு வாடகை நிர்ணயங்களை நியாயமாக நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நியாய வாடகை நிர்ணயத்தை ஏற்றுக் கொள்ளாதோரை திருக்கோயில் மனைகளிலிருந்து வெளியேற்றத் தேவையான சட்டத் திருத்தங்கள் தமிழ்நாடு மாநகர குடியிருப்போர் பாதுகாப்புச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ளன. அதன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருக்கோயில்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ளோரையும் குத்தகைக் காலம் முடிவுற்ற குத்தகைதாரர்களையும் வெளியேற்றவும் அவர்களின் மீது குற்ற நடவடிக்கை தொடர்ந்து, தண்டனை பெற்றுத் தரவும் 1996-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

**திருக்கோயில் பணியாளர்கள்:**

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களில் சுமார் 50,000 பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் முதுநிலைத் திருக்கோயில்களில் 4,203 பணியாளர்களும், முதுநிலையல்லாத திருக்கோயில்களில் 45,797 பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு 12 ஊதிய விகிதங்களிலும், முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர்களுக்கு 18 ஊதிய விகிதங்களிலும் தற்போது ஊதியம் வழங்கப்படுகிறது.

(அ) திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம்

ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் மற்றும் அதற்கு மேலும் வருமானம் பெறக்கூடிய திருக்கோயில்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூபாய் பத்து லட்சம் கொண்டதான முதலீடு ஏற்படுத்தப்பட்டு மாதந்தோறும் ரூ. 20 வீதம் செலுத்தும் பணியாளர்களுக்கு ஓய்வுபெறும்போது அவர் செலுத்திய சந்தா தொகை வட்டியுடன் அவருக்கு வழங்கப்படுவதுடன் ரூ. 500 ஒருமித்த தொகையும் மேற்படி நிதி முதலீட்டின் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது.

(ஆ) திருக்கோயில் பணியாளர் நலத் திட்டம்

பழனியிலுள்ள அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் மூல நிதி உருவாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கின்ற வட்டித் தொகை, ஆண்டு உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூபாய் 40,000-க்கு குறைவாக உள்ள ஆலயங்களில் மாதச் சம்பளம் ரூ.400-க்கு குறைவாக வாங்கும் பணியாளர்களுடைய ஊதிய நிலுவைகளை கொடுக்கப்பயன்படுத்தப்படுகின்றது.

(இ) ஓய்வூதியத் திட்டம் :

திருக்கோயில்களில் பணியாற்றி மூப்பின் காரணமாக பதவி ஓய்வு பெறும் பணியாளர்களின் நலன் காக்க பல திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன்படி திருக்கோயில்களில் 20 ஆண்டு காலம் பணியாற்றி 60 வயதில் ஓய்வு பெற்ற ஓதுவார், அர்ச்சகர், வேதபாராயணர் மற்றும் இசைக்கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஓய்வூதியம் ரூ.500-ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அரசால் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட பூசாரிகள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1,500 கிராமக் கோயில் பூசாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.500- வீதம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



(ஈ) திருக்கோயில் பணியாளர்களுக்கான இதர நலத்திட்டங்கள்:

தற்போது திருக்கோயில் பணியாளர்களுக்கு அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும், சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகராட்சி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நகர ஈட்டுப்படியும் வழங்கப்பட்டு வருகிறது. முதுநிலைத் திருக்கோயில்களில் பணிபுரியும் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.525-வீதமும், இதரத் திருக்கோயில் பணியாளர்களுக்கு ரூ.475-வீதமும் கருணைக் கொடையும் வழங்கப்படுகின்றது. பணியாளர் அனைவருக்கும் ரூ.40 வீதம் மருத்துவப் படியும், 15 ஆண்டுகள் வரை பணி புரிந்தவர்களுக்கு தேர்வு நிலை ஊதியமும், பணியிலிருக்கும் போது உயிர் துறக்கும் பணியாளர் குடும்பத்திற்கு ரூ.30,000 குடும்ப நல பாதுகாப்பு நிதியும் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையை ரூ.60,000 ஆக உயர்த்தி வழங்குவது குறித்தும் பரிசிலிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்து ஊதியம் பெறுவதற்கும், பணியிலிருந்து ஓய்வு பெறும் போது இருப்பிலுள்ள ஈட்டிய விடுப்பிலிருந்து 15 நாட்கள் ஒப்படைப்பு செய்தும் ஊதியம் பெறுவதற்கும், பணிக்காலத்தில் 180 நாட்கள் மருத்துவ விடுப்பு துய்ப்பதற்கும், பெண் பணியாளர்கள் 60 நாட்கள் மகப்பேறு விடுப்பு துய்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. திருவிழாக் காலங்களில் கூடுதல் நேரம் பணி புரிகின்ற முதுநிலை திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் அல்லது ரூ.1,300 இதில் எது குறைவோ அதுவும், இதர திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியம் அல்லது ரூ.1,100 இதில் எது குறைவோ அதுவும் சிறப்பு ஊதியமாக வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ.50 வீதம் இடைக்கால நிவாரணத் தொகையும், இவர்களது மகனின் திருமணத்திற்கு ரூ.3,000-மும், மகளின் திருமணத்திற்கு ரூ.5,000-மும் திருமணக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது.

**திருப்பணியும் பழுது பார்த்தலும்:**

ஆகம விதிகளின்படி ஒவ்வொரு திருக்கோயிலிலும் 12 ஆண்டுகளுக்கொருமுறை குடமுழுக்கு விழா நடத்தப்படுதல் வேண்டும். திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய திருக்கோயில்கள் பொதுவாகக் கீழ்க்கண்டவாறு மூன்று வகைகளாகப் பாகுபடுத்தப்படுகின்றன:-

i) சைவ மற்றும் வைணவ பெரியோர்களால் பாடல் பெற்ற புகழ்பெற்ற திருக்கோயில்கள்

ii) உடனடியாக திருப்பணி மற்றும் பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டியதும், 12 ஆண்டுகாலம் முடிந்து குடமுழுக்கு விழா நடத்தப்பட வேண்டியதுமாகிய திருக்கோயில்கள்

iii) வரலாற்று புகழ்மிக்கதும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்ததுமான திருக்கோயில்கள்

பொதுமக்களின் நன்கொடை, அந்தந்த சமய நிறுவனத்தின் நிதி. உபரி நிதி உள்ள திருக்கோயில்களிலிருந்து நிதி மாற்றம், அரசு மானியம், பொது நலநிதி, திருக்கோயில் மேம்பாட்டு நிதியின் (ரூ.5 கோடி திட்டம்) வட்டி, கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி திட்டம் (ரூ.1 கோடி திட்டம்) நிதியின் வட்டி மற்றும் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணிகள் நிதி ஆகிய நிதி ஆதாரங்களிலிருந்து திருக்கோயில்களின் திருப்பணி, கட்டுமானம் மற்றும் இதர பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசு மானியம்

ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களின் திருப்பணிக்காக அரசு மானியமாக ரூ.45.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அத்தொகை தமிழ்நாட்டிலுள்ள திருப்பணி செய்யப்பட வேண்டிய முக்கியத் திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) பொது நல நிதி

தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் 97-ஆம் பிரிவின் கீழ் பெறப்படும் நன்கொடைகள், இந்திய ரிசர்வ் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு அத்தொகை திருக்கோயில்கள் திருப்பணி, பழுது பார்ப்புப்பணி மேற்கொள்ள நிதி உதவி தேவைப்படும் திருக்கோயில்களுக்கு வழங்கப்படுகின்றன. 1996-97-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 21 திருக்கோயில்களுக்கு ரூ. 12.56 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி ஆணையரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

(இ) ஆலய மேம்பாட்டு திட்டம்

போதிய நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களின் உபரி நிதியைக் கொண்டு ரூபாய் ஐந்து கோடி வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு, இவ்வைப்பு நிதியின் வட்டியிலிருந்து 20 விழுக்காட்டு தொகை ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்களால் பாடல் பெற்றதும், சரித்திரம் மற்றும் சுற்றுலா முக்கியத்துவ நிகழ்ச்சிகள் சார்புடைய திருக்கோயில்களுக்கும், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி மற்றும் இதரக் கட்டுமான மராமத்து பணிகளுக்காக மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 58 திருக்கோயில்களுக்கு ரூ. 289 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.



(ஈ) கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடி மூலதனத்தில் வைப்பு நிதி ஏற்படுத்தப்பட்டு இதன் வட்டியிலிருந்து, வசதி குறைந்த மற்றும் நிதி தேவையுடைய கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக, நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதி அறநிலையத்துறை ஆணையர், பழனி திருக்கோவிலின் செயல் அலுவலர், பழனி திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் அல்லது தக்கார் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழுவால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த குழு, நிதி தேவைப்படுகின்ற திருக்கோயில்களின் பெயர் பட்டியலைத் தேர்வு செய்து அரசின் முன் அனுமதி பெற்று ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் ரூ.25,000 வீதம் திருப்பணி வேலைகளுக்காக மானியமாக வழங்கி வருகிறது. இந்த நிதி பழனி திருக்கோயில் நிர்வாகத்தில் வைத்து பராமரிக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 1,248 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ரூ.203 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி

திருக்கோயில்களில் மற்றும் அறநிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருப்பணி, கட்டுமானப் பணி மற்றும் இதர பழுதுபார்த்தல் பணிகளை முழுமையாக நிறைவேற்றும் வகையில் திருக்கோயில் திருப்பணி மற்றும் அறப்பணி நிதி திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிதிக்கு ஆன்மீகப் பெரியோர்களும், பொது மக்களும் மனமுவந்து ரூ.595 இலட்சம் நன்கொடை வழங்கியுள்ளனர். இந்நிதி பல்வேறு வைப்பு நிதிகளாக முதலீடு செய்யப்பட்டு ரூ.300 இலட்சம் வட்டி பெறப்பட்டது. பல்வேறு திருக்கோயில்களின் திருப்பணிக்காகவும், ஒருகாலப்பூசைக்காகவும், கன்னியாகுமரி திருக்கோயில்களின் நிர்வாகச் செலவுகளுக்காகவும் இதுவரை ரூ.514 இலட்சம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலையில் அண்மையில் தீக்கிரையான பதினாறு கால் மண்டபம் கட்டவும், பெருவயல் அருள்மிகு ரணபலி முருகன் மற்றும் திருமாகாளம் அருள்மிகு மகா காளநாத சுவாமி திருக்கோயில்களின் திருப்பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதி உதவியும் இதில் அடங்கும். தற்போது இந்நிதியில் ரூ.382 இலட்சம் வைப்பு நிதியாக உள்ளது.

[1997 ஏப்ரல் 3

## வேத ஆகம பயிற்சி நிலையம்

வேதம், ஆகமம், இந்து சமயத் தத்துவம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் தமிழ்நாடு வேத ஆகம கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் அரசால் ஏற்படுத்தப்பட்டு திருச்சி-பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம், கம்பரசம்பேட்டையில் சென்ற ஆண்டு துவங்கப்பட்டது. முதற்கட்டமாக, வேத ஆகம பயிற்சி வகுப்பு ஆறு வார காலத்திற்கு திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்கள் பட்டாச்சாரியார்கள் மற்றும் தகுதி வாய்ந்த மாணவர்கள். ஆக மொத்தம் 30 நபர்களுக்கு 11-02-96 முதல் 30-03-96 வரை பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து இரண்டாம் அணியில 30 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 19-04-96 முதல் 13-07-96 முடிய உள்ள காலத்தில் ஆறு வார காலத்திற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

## உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையம்

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் 65,723 உலோகத் திருமேனிகள் உள்ளன. அவற்றுள் 39,139 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் துறை சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டியவை. இதுவரை 26,878 உலோகத் திருமேனிகள் தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 12,261 உலோகத் திருமேனிகளை தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள உலோகத் திருமேனிகளைப் பாதுகாத்திட திருவாரூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உலோகத் திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் இதுவரை 2,725 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டுள்ளன.

## கள்வர் எச்சரிக்கை மணி

திருக்கோயில்களிலுள்ள நகைகள் மற்றும் விலையுயர்ந்தவைகளைப் பாதுகாக்க 337 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணிகள் பொருத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 121 திருக்கோயில்களில் இவ்வெச்சரிக்கை மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. எஞ்சிய 216 திருக்கோயில்களில் கள்வர் எச்சரிக்கை மணி பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



1997 ஏப்ரல் 3]

## திருக்கோயில் பாதுகாப்புப் படை

திருக்கோயில்களிலுள்ள உலோகத் திருமேனிகள், நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காக 1,000 இரண்டாம் நிலை காவலர்கள் மற்றும் 3,000 முன்னாள் இராணுவத்தினரை நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டு இதுவரை காவல் துறையினரால் 1,000 இரண்டாம் நிலை காவலர்களும், 2,821 முன்னாள் இராணுவத்தினர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 179 முன்னாள் இராணுவத்தினர் விரைவில் நியமனம் செய்யப்படவுள்ளனர். சிறப்பு காவலர்களின் பணிகளைக் கண்காணிக்கவும், பாதுகாப்பினை தீவிரப்படுத்தவும், ஆணையர் அலுவலகத்தில் ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், மூன்று காவல்துறை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். திருக்கோயில் பாதுகாப்புப் படையினரின் கடமை மற்றும் பணிகள் குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## திருக்கோயில்களால் நடத்தப்படும் நிறுவனங்கள்

திருக்கோயில்களின் ஆன்மீகப் பணிகள் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் அதே நேரத்தில் அடித்தள மக்களின் நலன்களுக்காக திருக்கோயில்கள், கல்வி, மருத்துவம், இசை, ஆகமம், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் நலன்கள் ஆகிய சமூக நலப் பணிகளிலும் தங்களை ஈடுப்படுத்திக் கொண்டுள்ளன.

## சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து

பேரறிஞர் அண்ணா நினைவு நாள் மற்றும் சுதந்திரத் திருநாள் ஆகிய நாட்களில் ஏற்றத் தாழ்வின்றி அனைவரும் சரிசமமாகப் பங்குபெறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## கருணை இல்லம்

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உணவு, இருப்பிடம் கல்வி, கலைப்பயிற்சி முதலியன அளிக்கும் நோக்கத்துடன் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் கோயில்களில் கருணை இல்லங்கள் 1975-இல் துவங்கப்பட்டன. இந்த இல்லங்களை நடத்துவதற்காகும் செலவில் அப்போது 25 சதவீதத்தை அரசு வழங்க வகை செய்யப்பட்டது. ஆனால், 1977-78-ஆம் ஆண்டிற்கும் அதற்குப் பிறகும் அரசு மானியம்

[1997 ஏப்ரல் 3

வழங்கப்படவில்லை. தற்போது 22 கோயில்களில் 715 ஆதரவற்ற குழந்தைகளுடன் திருக்கோயில்களின் முழுச் செலவில் கருணை இல்லங்கள் செயல்படுகின்றன. இந்தக் கருணை இல்லங்களின் செயல்பாட்டை மேம்படுத்தவும், கூடுதலாகத் தேவைக்கேற்ப கருணை இல்லங்களை கோயில்களில் துவக்கவும் நடவடிக்கை மேற்கொள்வதுடன் அதற்காகும் செலவில் 50 சதவீதத்தை இனிமேல் அரசு ஏற்கும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கேற்ப நடப்பு ஆண்டில் மேலும் 875 சிறுவர், சிறுமியர்களைக் கொண்ட 25 கருணை இல்லங்கள் புதியதாக அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 15 கருணை இல்லங்கள் சிறுமியர்களுக்கானதாகும்.

## திருக்கோயில்களில் இலவசத் திருமணம்

அரசின் கொள்கைக்கேற்ப, இந்து சமயத்தைச் சார்ந்த ஆதி திராவிடர் மற்றும் பிற்படுத்தப்பட்ட இனங்களைச் சார்ந்த வசதியற்றவர்கள் திருமணத்திற்காக திருக்கோயில்களின் நிதியிலிருந்து திருமணம் ஒன்றிற்கு ரூ.3,000 வரை செலவிடப்படுகிறது. இவ்வகையில் 50 திருமணங்கள் இதுவரை நடந்துள்ளன. மேலும் 157 மணமக்களுக்கு இலவசத் திருமணங்கள் செய்வதற்கான பெயர்ப் பட்டியல் வரப்பெற்றுள்ளது.

## பக்தர்களுக்கு வசதிகள்

திருக்கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கத்தில் 14 திருக்கோயில்களில் 58 ஓய்வு விடுதிகள், 231 குடில்கள் மற்றும் 951 தனி நபர் அறைகள் கட்டப்பட்டுள்ளன. முக்கியத்துவம் வாய்ந்த சில திருக்கோயில்களில் இறைவனுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்களை இலவசமாக பக்தர்களுக்கு வழங்கும் முறை வழக்கத்தில் உள்ளது.

பக்தர்களின் காலணிகளைப் பாதுகாப்பதற்காக மருதமலை, திருச்செந்தூர், மதுரை, திருப்பரங்குன்றம், திருத்தணி, வடபழனி மற்றும் காரமடையிலுள்ள கோயில்களில் காலணிகள் பாதுகாப்புக் கட்டணமாக ஜோடிக்கு 25 பைசா வசூலிக்கப்படுகிறது. சில திருக்கோயில்களில் இதற்கு கட்டணம் [illegible] வசூலிக்கப்படுவதில்லை.

216827.



1997 ஏப்ரல் 3]

## [illegible]ரை

ஆலயம் என்ற சொல் அன்பின் முதிர்ச்சியையும், நிறைந்த ஒழுக்கத்தையும், உயரிய உணர்வுகளையும் உருவாக்கவல்லதும், புனிதம் போற்றப்படுகின்றதுமாகிய இடமாகும். திருக்கோயில்கள் உள்ளத்தூய்மைக்கு உதவுகின்றன, கலையை வளர்க்கின்றன. சமூக உணர்வைப் பேணுகின்றன. ஒழுக்க சீலமுள்ள உயிர்களின் கூட்டு வழிபாட்டின் நிலைக்களனாக அமைந்துள்ளன. இவ்வாறாகப் பெருமை வாய்ந்துள்ள தமிழகத் திருக்கோயில்களின் நலன்களைப் பேணிக்காப்பது தமது தலையாயக் கடமையென்பதை இவ்வரசு உணர்ந்து செயலாற்றுகிறது.

D
V211,31'N97
N97.273.
.14801.